# கைப்பிரதிப் பாட்டுகள்

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# அட்டவணை

அ ஆ இ உ எ ஏ ஐ ஓ

க கா கி கு கை கொ கோ

ச சா சி சீ சு சொ

த தா தி தீ து தெ தே

தொ தோ

ந நா நி நெ நே

ப பா பி பு பூ பெ பொ போ

ம மா மு மே

யா ர லோ

வ வா வி வே ஜீ ஜெ

# அகர வரிசை

## அ


1. அடைக்கலம் அடைக்கலமே ஏசுநாதா உன்---------- 200
2. அத்தன் மனுவானாரே –கிறிஸ்து நமதத்தன் ----------- 38
3. அத்தனே உன் திருநாமத்துக்---------------------- 303
4. அந்தரபானு சுந்தர ஜோதி அம்பரமே மங்களம் ------- 284
5. அந்தோ காண்கிறேன் எனதருமை ----------------- 118
6. அந்தோ சிலுவைப் பவனி பார் ஜோதி---------------- 74
7. அப்பா நின் சிந்தமென்று அருமை ------------------ 62
8. அமரர் எக்காள மூதினார் ------------------------ 226
9. அருவுருவே நரருருவாய்--------------------------- 65
10. அருளின் மாமழை பெய்யும் என்று ----------------- 142
11. அல்லேலூயா தேவனை அவருடைய--------------- 311
12. அன்பரே என்னுட தோழரே வாரும் ஆனந்தம்-------- 175
13. அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்------------ 129
14. அன்பின் ரூபம் நீ அரிய --------------------------- 53
15. அன்பே! அன்பே!! அன்பே!! ---------------------- 79
16. அன்று கிறிஸ்து மரித்திடச் சூரியன்------------------ 82
17. அன்னமே சீயோன் கண்ணே ---------------------- 60
18. அன்னமே சீயோனே எந்தன்---------------------- 230

19. அன்னமே நீ தூது போயேன் மன்னனை -------------- 230

20. அன்னே கண்ணே மின்னே ------------------------ 255

21. அனுக்கிரக காலமிதை அசட்டை செய்யாதே --------- 133


## ஆ


22. ஆ! நேசம் தனை அற்றவன் ஏன் பிறந்தான்? ---------- 277

23. ஆகா பூலோக வாழ்வே அநித்தியம் ----------------- 124

24. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே -------------- 169

25. ஆசீர்வாதம் வேணும் ஆவியான ஜீவ தேவ ----------- 143

26. ஆசைக்கிறிஸ்தரசே வாரும் ------------------------ 24

27. ஆண்டவர் வேதம் குறைவற்றதினால் ---------------- 272

28. ஆத்தும நேசர் ஆவலாய் ஓடி ---------------------- 250

29. ஆத்ம நாதன் திருவடியே நமக்காதாரம் -------------- 265

30. ஆதம்புரிந்த பாவத்தாலே மனுடனாகி ---------------- 68

31. ஆதாரம் நீதானையா என்துரையே------------------ 217

32. ஆதியாம் பரஞ்சோதியே அருளானந்த குருசாமியே ---- 29

33. ஆதியும் அந்தமும் இல்லா சரணம்------------------ 293

34. ஆயத்த ஜெபம் செய்ய பெலன் தாரும் சுவாமி --------- 141

35. ஆலயமே தஞ்சம்; என் ஏசு பொற்------------------- 198

36. ஆனந்தபரனைத் துதி செய்தால் வரும்--------------- 207

37. ஆனந்தம் ஆனந்தம் ஆச்சுதே – எங்கள்------------- 163

38. ஆனந்தம் ஆனந்தமே மகானந்தம் ஆனந்தமே -------- 179

39. ஆனந்தம் பாடிடுவோம் அமலாதிபர்க்கே ------------- 51
40. ஆனந்தமே பரமானந்தமே - இயேசு ---------------- 309
41. ஆனீரோ பாலகனே ஆதிபனே ஆனீரோ------------- 26

## இ

42. இத்தரையில் என்னை மீட்க ஏழையாக வந்தவா ------- 56
43. இது நல்விசேஷம் எவர்க்கும் சந்தோஷம்------------ 171
44. இதோ கிறிஸ்து மகாராஜன் வருகிறார் --------------- 95
45. இந்த வேஷம் உதவாதையா கிறிஸ்தவர்க்கு ----------- 206
46. இந்தவேளை வரவேணும் என் ஏசுநாதையா ---------- 240
47. இந்துதேச மாதர் நாமும், எழுந்திடுவோம் ------------ 291
48. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே --------- 154
49. இரக்ஷண்ய கூட்டம் ஜெயங்கொள்வோம் ------------ 139
50. இராக்காலம் கர்த்தருட நல் வீட்டில் நிற்குமவர்--------- 207
51. இலவசமாய் கிடைக்கும் இன்ப சதானந்த சுகம் -------- 280
52. இவராலேயல்லோ பரதேசியாகினேனையா ----------- 276
53. இவரே பெருமான், மற்றப்பேர் -------------------- 286
54. இன்பக்கானானுக்குள் ஏழை செல்ல---------------- 307
55. இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில் ------------- 70
56. இன்றேசுயிர்த்ததால் எக்காள ஓசையால் ------------- 86
57. இன்னம் நீ என்ன செய்கிறாய் -------------------- 119
58. இன்னம் வரக்காணேனடி ஏதோ தடை தூதுபோடி ------ 93

59. இன்னமும் தாமதித்தால் என்னமா ------------------ 92
60. இன்னமும் வரதாமதமுமேனோ - உந்தன்------------ 100
61. இனி நமக்கென்ன பயமேது ---------------------- 242

## உ

62. உத்தமியே மனம் மெத்தவும் வாடுது ---------------- 237
63. உயிர்த்தனரேசு மரித்த மூன்றாம் நாள்--------------- 89
64. உருகாயோ நெஞ்சமே நீ குருசினிலந்தோ பார் --------- 77
65. உலகமுன் சதமென்று எண்ணியிராதே -------------- 119
66. உலகையோர் நிலை என்றெண்ணாதே - க்ஷணம்------ 138
67. உன்னத வீட்டை சீக்கிரம் சென்று------------------ 310
68. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக்கூடுங்கள் -------- 191

## எ

69. எங்களன்புள்ள ஏசு தேகத்தை எடுத்துப் -------------- 85
70. எங்கே ஓடிப்போ யொளிப்பாய் ஏதுமற்ற ------------- 107
71. எங்கே தேடுவேன் - நான் ------------------------ 281
72. எங்கே நிற்பாய் பாவி - ஓ பாவி-------------------- 108
73. எத்தனையோ காட்சி - சீயோன் நகர் --------------- 114
74. எந்தன் ஆத்ம நேசர் எங்கே ---------------------- 299
75. எந்தன் நிர்பந்தம் பாரும் என் மக்களே!-------------- 135
76. எந்தன் பூமானைக் காண சிந்தை பெருகுதையோ ----- 289

77. எந்தா எந்நேரமிங்கு வந்தோம் முனது சேயர் ---------- 152

78. எப்போது சேருவேனோ! பரம நகர் ------------------ 111

79. எப்போதும் இன்ப வாழ்வே ------------------------ 232

80. எப்போதும் நாதனைத் தோத்திரி ----- **Error! Bookmark not defined.**

81. எம் நாதா வேதா போதா சற்பிரசாதா----------------- 177

82. எருசலேமின் மாதரே கேளீர் வீதிகள் ---------------- 150

83. எருசலேமே (4 தடவை) என் பிரிய சாலேமே----------- 289

84. எருசாலேம் குமாரியப்பெண்ணே------------------- 212

85. எல்லா ஜாதிக்காரரே ஏகபரனைத் துதியுங்கள் --------- 203

86. எலலோகீம் தாமே மனு வேலனாகினார் – குரு ---------- 48

87. எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார்----------- 101

88. என் அப்பா தாய் மேய்ப்பர் அன்பர் குரு தெய்வம் நீயே – 178

89. என் கண்ணே எனக்கென்னேரமும் நின் ஞாபகமே------ 257

90. என் செய்வேன் மகனே நான்------------------------ 71

91. என் பங்கு வீதம் சுவாமி என் பாத்ரப் பங்குமவரே ------ 193

92. எனதுள்ளமே உகந்த வரைத்தேடு ------------------ 210

93. என்ன ஆனந்தமோ பரலோக மேன்மை எத்தனை ------ 109

94. என்ன என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம்---------- 140

95. என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம் --------------- 294

96. என்ன சுகம் என் ரட்சகர் சமுகப்பேரானந்தம் ---------- 115

97. என்ன செய்வேன் சுவாமி என்ன செய்வேன் – சுவாமி -- 224

98. என்னா செய்குவேன் எனக்காய் ஏசுமைந்தன் ---------- 82

99. என்னேசு முருக்கித்தங்கம் என் நெஞ்சம் ------------ 192

ஏ

100. ஏசு சீக்கிரம் வரப்போகிறார் ----------------------- 296
101. ஏசு துரை சுவாமியைத் தினம் துதி மனமே ------------ 84
102. ஏசு நாமம் தேவ நாமம் இன்ப நாமமே - கன ---------- 220
103. ஏசு நாமம் நினை ------------------------------ 202
104. ஏசு மகாராஜனை என்றும் துதித்துப் போற்றுவோம்------ 28
105. ஏசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார் ----------- 297
106. ஏசு ராஜா இதென்ன கோலம் - நீர் ---------------- 287
107. ஏசுநேசா வாரும் ------------------------------ 144
108. ஏசுராஜனே ஆசிடை தாறீரோ --------------------- 26
109. ஏசுராஜனே கண்பாரும் ------------------------ 166
110. ஏசுவண்டை சேருவேன் ஒளியில் ஒளியில் ----------- 146
111. ஏசுவுக்கோசன்னா பாடிப்புகழ்ந்திட ----------------- 271
112. ஏசுவைப் பார்த்து நட என் நேசா ------------------ 188
113. ஏசையா நாங்களிப்போ இன்பமாக இங்குகூடி --------- 245
114. ஏதிம் மனுவேடம் தரித்தீர் ------------------------ 25
115. ஏதுக்கழுகிறாய் நீ ஏழை மாது நான் என்ன செய்வேன்--- 29
116. ஏதேன் வனத்தோட்டம் என்ன சிங்காரம் ஐயா --------- 227
117. ஏலி ஏலிலா மா சபக்தானி ------------------------ 72
118. ஏற்றுசிந்தம் ஏகாம்பர சருவேசுரனை --------------- 57

## ஐ


119. ஐங்காயத்தினடைக்கலம் காவே -------------------- 204

120. ஐயரே நீர் தங்கும் என்னுடன் ---------------------- 269

121. ஐயா கிறிஸ்து மகராஜா எனை --------------------- 258

122. ஐயா கிறிஸ்தையா அருளையா மேசையா ----------- 205

123. ஐயா கொல்கொதா மலை நாதா -------------------- 246

124. ஐயோ என் செல்வச்சீராள சிகாமணியை ------------- 70

125. ஐயோ, கோ! நான் என்ன செய்வேன் --------------- 261


## ஓ


126. ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே ---------------- 58

127. ஓடிவா ஏசுவண்டை நேசா நீ ---------------------- 126

128. ஓய்வுநாள் இது சபையே – தேவன் ----------------- 274

129. ஓர் வெண்ணங்கி ஓர் பொன்முடி-------------------- 111


## க


130. கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய்------------ 292

131. கண்டேன் பரமகாட்சி கார்மேகத்தில்----------------- 105

132. கண்ணுக்கு காணும் பூவுமல்ல – அது ---------------- 295

133. கண்ணையா கண்ணீர் பாரேன் -------------------- 208

134. கண்ணையா கண்ணையா உறவாலே தானே --------- 267

135. கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார் -- Error! Bookmark not defined.

136. கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய் கொண்டு வாரும் -- 182

137. கர்த்தாதி கர்த்தனின்று பெத்தலைப்பதி பிறந்தார் ------- 47

138. கருணாகரனே பதமே சரணம் --------------------- 225

139. கருணாலய பீடா – எமைக் ----------------------- 266

140. கல்லான நெஞ்சை இன்றே மாற்றுவீர் – ஐயா--------- 145

141. கல்வாரி சிலுவையில் தொங்கி ஜீவனை விட்டீர்-------- 80

142. கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும் ----------- 81

143. கன்னி வயிற்றில் கர்த்தர் பிறந்தார் காணவாருமே------- 49

144. கன்னிமரி பாலனே கருணைமனுவேலனே ------------ 60

145. கனஜோபனப்பதியே புஜபல பானி தபநேசா ---------- 173

## கா

146. காணக்கிடைக்காத தங்கம் – இவர் ---------------- 295

147. காலம் ஆதாயப்படுத்து உனது ஜீவன் -------------- 125

148. காலமே தேவு பஜி – அருணோதய ---------------- 268

149. காலில்லாத பந்தலை நான் காணக்காண ------------ 256

150. காவில்நீர்பட்ட ஆத்துமக்கஸ்தியை ----------------- 64

## கி

151. கிருபை வேண்டும் நாதா – இயேசுவே உம் திவ்விய ---- 225

## கு

152. குணப்பட இதுவே தருணமையா ------------------- 126
153. குருநாதா நீ ஆதரி என் குண மாதாவே ------------- 242

## கை

154. கை நிறைந்த கருவேலமே ------------------------ 252

## கொ

155. கொலைக்காவனம் போறார், அன்னமே – ஆதாம் ----- 288

## கோ

156. கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி------------------- 304

## ச

157. சகி, நாதகீதராணி; னோரஞ்சித பூரணி – தேவ -------- 282
158. சங்கீதங்கள் பாடிக்கொண்டு ஜல்தியாய் வாரும் -------- 90
159. சஞ்சலப்புவனமீது ரஞ்சித லோகமே ---------------- 238
160. சதா நித்ய தயைபுரி ததி இதோ -------------------- 176
161. சந்ததம் உந்தனையே எந்தனிருதயத்தில் வைக்க ------ 215

162. சந்ததம் சந்ததம் வாருமையா எங்கள் --------------- 198
163. சந்தோஷ தினம் சந்தோஷ தினம் சுவாமி-------------- 31
164. சந்தோஷமாகவே நீ போய் வா என் தங்கையரே-------- 170
165. சரணம் சரணமையா சருவேசா உந்தனுக்கு ----------- 195

### சா

166. சாமி இவர்க்கிதை மன்னியும் சாமி ------------------ 69
167. சாலேம் குமாரத்தியே உன் நாயகர் தாமதம்------------ 103
168. சாவெனக்காதாயம் ஜல்தி விளைக்கும் --------------- 247

### சி

169. சிங்கார ஒரேப் சார்பில் மங்கா தீச்சுவாலை ------------ 243
170. சிங்காரப்பண் கேளையா - சீராள ------------------ 190
171. சித்திரப் பூங்காவனமாம் ஜெருசலைமாநகரம் ---------- 155
172. சித்திரவர்ணப் பொற்சரிகை சேலையுடுத்தி - இரு ------ 164
173. சிலுவைதனில் உயிர் பிரிய திருமகனார் முகநோக்கி ---- 80

### சீ

174. சீயோனே மகிழ் மங்கையே சித்திரமே பொற்பதமே ------ 39
175. சீர் தங்கும் ஏக திருத்துவத்தைச் சிந்தைச்செய்து-------- 154

### சு

176. சுத்தம் தரவே மருந்தொன்றிருக்குது,---------------- 137
177. சுந்தரமேசையா உன் திரு நாமத்தை ---------------- 151
178. சுபஜெயமங்களமே நித்ய சுபஜெயமங்களமே----------- 88
179. சுய அதிகாரா சுந்தரக் குமாரா -------------------- 196
180. சுவாமி நின் பாதம் அல்லால் தாரகம் --------------- 134

## சொ

181. சொந்தமான வேந்தனாம் உங்கள் ------------------ 102
182. சொன்னகாலம் ஆச்சுதென்று சுவாமி---------------- 97
183. சொன்னாலும் தெரியலையே சுட்டி மனமே----------- 136

## த

184. தசம பாகங்களை நமக்குத் தா தா தா தா தா ---------- 186
185. தந்தை தந்தை தந்தை தேவனார்------------------- 181
186. தயா பரா சுயமாய் ஏ பரா இங்கு ------------------- 171
187. தருணத்தில் எனக்குதவி செய்யுமேன் --------------- 216
188. தற்பரனே எனது மேய்ப்பர் தாழ்ச்சியை -------------- 153

## தா

189. தாகமானீரோ ஏசுதற்பரா சுவாமி ------------------- 73
190. தாசர் போற்றும் நேசா – எம் வாடாதின்பமே ----------- 76
191. தாசரே, இத்தரணியை அன்பாய்------------------- 130

192. தாவீதின் ஊர்தனிலே சின்னப்பாலகா ----------------- 36

193. தாவீதின் புத்திரனை சாலோமின் மங்களனை ---------- 49


## தி


194. திரித்துவத்திரியேகருக்கு தோத்திரமையா ------------- 172

195. திரியேகா மரியோவா கருணை செய்வாய் ------------- 195

196. திருமுதலொரு பொருளாம் பரனே ------------------ 273


## தீ


197. தீம் தோமென நடனம் செய்குவோம் ------------------ 27


## து


198. துதி நித்தமும் முமக்கே தகும் ------------------------ 38

199. துதிப்பேன் துதிப்பேன் ஏசுதேவனே அல்லேலூயா ------ 189

200. துரை மகராஜனே ஜேசே --------------------------- 267


## தெ


201. தெய்வமே நீர் என் தெய்வமே - தெய்வமே ------------ 269


## தே


202. தேவ ஆசனத்தின் முன்னதாகவே ஜீவநாயகரின் ------- 110

203. தேவ கிருபை ஆசீர்வாதம் தினமும் எங்களில் --------- 209

204. தேவ சேயின் பால்யசேனையர் நாமே ---------------- 128
205. தேவ பால சிங்கம் மனுவாயினார் - ஜெகத்தில் ---------- 25
206. தேவசுதன் பூவுலகோர் பாவமெல்லாம் தீர --------------- 67
207. தேவன் மனிதனான விந்தையைச்-------------------- 54
208. தேவா இந்த நேரம் நின்னாசீர்வாதம் தா -------------- 164
209. தேவா உன் அன்பின் சத்தத்தைக் கேட்டு மீட்பை ------- 147
210. தேவா நீ கோபம் வைக்காதே - உந்தன் --------------- 233
211. தேவா நீரெங்கள் அடைக்கலமே - ஏசு --------------- 258
212. தேவா பரகிறிஸ்து தேவா பரதேவா - பர -------------- 134
213. தேவா மகாதேவா உந்தன் திருநாமத்தை புகழ்வோம் --- 211
214. தேவாசனப்பதியும் சேனை தூதரை விட்டு ------------- 59
215. தேவாதி தேவனுக்கும் தேவ குமாரனுக்கும் ------------ 302

## தொ

216. தொண்டு செய்வேன் என்றும் ---------------------- 300
217. தொழுகிறோம் எங்கள் பிதாவே--------------------- 302

## தோ

218. தோத்திரம் தோத்திரம் அல்லேலூயா ---------------- 112
219. தோத்திரம் தோத்திரமே ஏசுசுவாமிக்குத் -------------- 213
220. தோத்திரம் பாடிப் போற்றுவேன்---------------------- 301
221. தோழரே சேர்ந்து வாருங்கள் ----------------------- 214

## ந

222. நடப்போம் வாருங்கள் சீயோன் மலைக்கு ------------- 116

223. நம் கிறிஸ்தரசன் கல்லறையை விட்டுயிர்த் ------------- 88

224. நமக்கொரு பாலகனார் பிறந்திருப்பதை பாரும் ---------- 45

225. நமது மணவாளருக்கெதிர் கொண்டுபோவோம் ---------- 96

226. நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம் ------------------ 127

227. நம்மை ரட்சிக்கவென்று நாடி - நாதன் ---------------- 52

## நா

228. நாசலோக மீதிலே வாசஞ்செய் புறாவண்ணமே--------- 117

229. நாதப்பராபரன் தேவ மனோகரன் நரரூபமாகினார் ------ 56

230. நாதனேசு நலமிந்த திறவுகோலாமே ----------------- 294

231. நாதனேசையனை வாழ்த்துவோம் ------------------- 180

232. நாம் நற்சுகமாய் பெத்லேம் நகர் பொய் ---------------- 31

## நி

233. நித்தம் அருள்செய் தயாளனே! ------------------- 174

234. நித்திய மோட்சானந்த மகிமையை ------------------ 113

235. நித்திய ஜீவன் எனக்குண்டு நியாத்தீர்ப்பின்------------ 109

236. நித்தியனை நிதமும் துதி செய்திடுவாய் --------------- 194

237. நித்தியானந்தத்தை நாடு – பர -------------------- 121


## நெ

238. நெஞ்சமே கெத்சமேனக்கு நீ நடந்து ----------------- 78


## நே

239. நேச ஏசு பாலனை நித்தம் துதித்துப்பாடுவோம் --------- 30
240. நேச தோழரே எங்கள் ஊராரே – பேயின் ------------ 131
241. நேசமணி வாசமணி ஈசனென்னும் ஏசுமாமணி --------- 235
242. நேசமே எழுந்து ஏசுராஜனை அழைத்து ------------- 229
243. நேசரைக் காணாமல் என்முகம் வாடுதே -------------- 244
244. நேசிக்கும் பிள்ளையை நான் நித்தம் ---------------- 254


## ப

245. பட்டபாடு போதாதோடா – பேயே ------------------ 220
246. பந்திவிட்டெழுந்தார் பரம என் ராஜா ---------------- 66
247. பயமேது நமக்குப் பயமேது ------------------------ 241
248. பரமசீயோன் நகரதிபதி வருகிற -------------------- 104
249. பரமண்டலங்களிலிருக்கும் எங்கள் ----------------- 263
250. பரலோக தேவா நரலோக மக்களும் ---------------- 203
251. பரலோகமே பாக்கியர் வாழும் நாடே ----------------- 76
252. பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி ------------ 290
253. பரிசுத்தர் பரிசுத்தரே ஏசையா உம்மை--------------- 149
254. பல்லறங்க கனக சபை பானுவேலனே --------------- 239

255. பவனி செல்கின்றார் ராஜா – நாம் ------------------- 58

## பா

256. பாடுபட்ட ஏசையா பாட்டுபலன் தா ஐயா ------------- 62
257. பாதகனாய் நானலைந்தேன் பாவி------------------- 61
258. பார் பார் பார் தேவ ஜீவன் போகுதுபார் --------------- 83
259. பார்ப்பேன் என் ராஜாவை நான் நான் ---------------- 94
260. பாருமுந்தன் கிருபைக் கண்ணாலே ---------------- 161
261. பாலகர் எல்லாரும் கூடி பரமராஜனைத் ------------- 193
262. பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும் ------------------ 248
263. பாலர்களின் நேசர் ஏசைப்பாடி துதி----------------- 270
264. பாலா பாலனே சிறுபாலா பாலனே ----------------- 238
265. பாவஞ் செய்யாதே நீ பாவஞ் செய்யாதே ------------ 124
266. பாவத்தின் சாபத்தை தீர்த்தவரேசு ------------------ 120
267. பாவநாசகரேசு பாடுபட்டுயிர்த்தார் ------------------- 87
268. பாவப் பாசக்கயிற்றால் பாவி கட்டப் பட்டேனே--------- 224
269. பாவப்பிணி அகல ஜீவமருந்தீயுமேன் --------------- 264
270. பாவப்பிணி தீர்க்கும் பண்டிதனான ----------------- 218
271. பாவவினை தீருமையா ஏசையா ------------------- 199
272. பாவவினை நீக்குமையா காவின்வினை ------------- 227
273. பாவி ஓடிவா உன் பாவப்பாரம் தாங்க ஏசு ------------ 123
274. பாவி நான் செய்த பாவம் தீர்க்க – இந்த -------------- 63
275. பாவி பரமசுதன் தாவிஉனைத் தயவாய் கூவி ---------- 122
276. பாவிக்கு நேசராரே ஏசு மானுவேலரே---------------- 53

277. பாவிகளை மீட்க வந்த பரனிவர் தாமே -------------- 120

## பி

278. பிதாசுதா சுத்தாவியே நமோ நமோ நமோ ------------- 24
279. பிரதிஷ்டை செய்ய வாரும், பெரியோனே------------- 187

## பு

280. புகழ் புகழ் பாடுவோம் இந்தச் சபை மீதினில் ----------- 40
281. புத்தியில்லாக் கன்னியரே நீங்கள் போறவழி----------- 223

## பூ

282. பூச்சொரிவோம் புண்ணியரே மாப்பிள்ளை ----------- 160
283. பூசத்ரபதி கல்யாணி சபாமணி சிரசே – ஓ ------------ 275
284. பூதலமீதெழுந்து பாலனானார் அதிசயமே ------------- 28

## பெ

285. பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி ------------ 33
286. பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித்துதி ------------ 34

## பொ

287. பொன்னின் கிரீடம் வெண்ணங்கி ------------------ 105

## போ


288. போதாது நீ போதுமென்று எண்ணுவது போதாது-------- 236

289. போவோம் பரநகர்க்கு ஜல்தி, புறப்படுங்கள்------------ 200

290. போற்றவாரும் பெத்லேம் நகர் மீதினில் ---------------- 46

291. போற்றுவோம் ஏசுவுக்கே துதி சாற்றுவோம்------------ 286


## ம


292. மகராஜாவே பேரொளி வீசாயோ------------------- 205

293. மகிழ்வோம் யேசுவில் மகிழ்வோம் - பரன்------------- 184

294. மங்களங்கள் பாடிடுவோம் சங்கீத தியானத்தோடு------- 285

295. மங்களம் சுபமையா பூமாது மணவாளா-------------- 284

296. மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே--- 296

297. மங்களம் ஜெய மங்களம் கிருபாம்பர தேவர்க்கே-------- 283

298. மங்களமணி மங்களமணி மங்களமணியே------------- 157

299. மங்களமே மங்களமே மங்களமே மங்களமே ----------- 162

300. மங்கா சுபகன மங்களமே - மணம்------------------- 165

301. மணே ஸனே இன்னே நினதருள்புரி ------------------ 159

302. மரத்தின் மீதே கிறிஸ்து மரித்த பின்னே சேவகர் --------- 84

303. மலரெடுத்து பூ முடித்து ---------------------------- 156

304. மலையடி ஓரத்திலே மாடடையுங் கொட்டிலிலே--------- 40

305. மனமயங்காதே என் மானே மனமயங்காதே ----------- 251

306. மன்றாடி வேண்டினானாம் - தானியேல் -------------- 150

307. மன்னுருவானார், ஆதிமன்னுருவானார் - ஏதும் ------- 43

**மா**

308. மாட்சிமிகும் மோட்சநகர் மகிமை என்--------------- 112
309. மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான மல்லிகைப்பூ--------- 158

**மு**

310. முடிந்ததென்றீரோ ஐயா --------------------------- 74

**மே**

311. மேக மீதில் ஏசு சுவாமி வேகம் வாராரே-------------- 298
312. மேகமீது தூதரோடிதோ இதோ---------------------- 98
313. மேலோக ராஜன் வருங்காலமாகுது ------------------- 98

**யா**

314. யாரிவரோ யாரிவரோ யாரிவரோ யாரிவரோ ---------- 45

**ர**

315. ரட்சகர் பட்சம் எனக்கிருந்தால் --------------------- 43
316. ரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம் லோகமடங்க -------- 132

**லோ**

317. லோகநாதா லோகநாதா ------------------------- 221

## வ

318. வண்டி நல்ல வண்டி இது அன்னமே ---------------- 259
319. வந்தவர் ஆரையா இங்கே வந்தவர் ----------------- 41
320. வந்தாளிம் மண வீட்டிலே – மண------------------- 168
321. வந்தாளுமே எந்நாளுமே, உன் நாமமே -------------- 143
322. வருவார் வருவார் என்றன் மனதைத்----------------- 99
323. வல்ல ஆவியே எங்கள் மீதிலே -------------------- 146

## வா

324. வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்தில்-------------- 201
325. வாகனப்பவனி கொண்டார் முகில்மேலே ------------- 92
326. வாடி அம்மா வாடி ஒரு ஞானப்பாட்டைப் பாடி--------- 221
327. வாது செய்யாதே சீயோன் மாது மயக்கமேது ----------- 261
328. வாரீரோ சுகந்தமிட மகிமைக் கிறிஸ்துவின்ஜ ---------- 86
329. வாருங்கள் வாருங்கள் தோழிப் பெண்காள் ------------ 167
330. வாரும் பெத்தலை வாரும் வாரும் வரிசையுடனே ------- 44
331. வாருமையா போதகரே, வந்தெம்மிடம் -------------- 282
332. வாவா ஜெகதீசா வரந்தரவே வாவா ---------------- 204
333. வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி -------------------- 306
334. வானபரன் வந்துதித்தார் பாரினிலே------------------ 50
335. வானபிதா தந்த ஆஸ்தியிலே ஏழைகட்குன் ----------- 183

## வி

336. விச்சித்திரமென் குறியம்மே – பன்னிரு -------------- 278

337. விடுவேனோ நான் உம்மை விடுவேனோ ------------ 145

338. விண்ணோர் பிரானார் மகா மகிமை ----------------- 42

339. விந்தையில் விந்தையை வந்து பாராய் --------------- 36

## வே

340. வேதவசன விதைகளைப் புவியில்------------------ 219

## ஜீ

341. ஜீசஸ் விக்டராம் இன்றுயிர்த்தாராம் ----------------- 91

342. ஜீவ சுந்தர விலாசா மங்களம் ---------------------- 285

343. ஜீவநதியின் ஓரமாய் சீயோன் பட்டணம் ------------- 118

344. ஜீவநாயகரிதோ சிசுவாகப் பிறந்தார் ----------------- 35

345. ஜீவனுள்ள மட்டும் எனது தெய்வத்தைப்-------------- 253

346. ஜீவாதிபதி இதோ! ஜெயங்கொண்டே ---------------- 91

## ஜெ

347. ஜெக ஜோதிப் பராபரனே-------------------------- 50

348. ஜெகமதிலுதித்த ஜெய ஜோதியே ------------------ 308

349. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா---------------- 148

350. ஜெயம் ஜெயம் அல்லேலூயா --------------------- 132

# கைப்பிரதிப் பாட்டுகள்

## கடவுள் வாழ்த்து

**1. காம்போதி ஏகதாளம்**

**பல்லவி**

**பிதாசுதா சுத்தாவியே நமோ நமோ நமோ**

**அனுபல்லவி**

பேசருந் திரியேக தேவனே நமோ நமோ நமோ

1. அம்புவி படைத்தவா எம்பதம் தொலைத்தவா – பிதா
2. அரிய தேவநற்சகாயம்புரிந்த ரட்சகா – பிதா
3. சீடருள்ள மேவியே தேற்றுவீர் தேவாவியே – பிதா
4. முகில்மீதேறும் வாகனேமுத்தொழில் புரிவோனே – பிதா
5. கவிவரம் அளித்திட கடைவிழி விழித்திட – பிதா

**2. இராகம் (தேவா நீரெங்கள் அடைக்கலமே)**

**பல்லவி**

**ஆசைக்கிறிஸ்தரசே வாரும்**

**அனுபல்லவி**

உந்தன் ஆசீர்வாதம் அடியாருக்கே தாரும்

1. நீசமனுடனாக காசினி மீதினில்
   பாசமாயுதித்த பரமனாகிய – ஆசை

2. அற்புதமாகவே அன்னை மரியாளிடம்
   உற்பவித்துப் பிறந்த ஒரு மகனாகிய – ஆசை

3. காணாத ஆட்டையொத்த கன்மசண்டாளன் என்னை
வானாசனத்திலிருந்து வந்து ரட்சித்த எங்மள் – ஆசை

4. பேயின் கையிலிருந்து பிடுங்கி அன்பாக மீட்டு
ரட்சிக்கவந்த எங்கள் ரட்சண்ய மூர்த்தியான – ஆசை

5. சேர்ந்தனைத் திருகரத்தாலுமே எங்களை
பாந்தமாய் முற்றும் பரிவாய் ரட்சிக்கவந்த – ஆசை

**3. காப்பி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஏதிம் மனுவேடம் தரித்தீர்**

**அனுபல்லவி**

ஏசையா மேசையா ஆசையாய் சாமி

1. மாது ஏவை வாழவோ மருளலகை தாழவோ
ஏதன் வினை மாளவோ எம்மை அரசாளவோ – ஏதிம்

2. சுத்த தேவ பாலனே சுந்தரக்குமாரனே
நத்த துதியேகனே நேமியாள் செங்கோலனே – ஏதிம்

3. காயமில்லா நேயனே கருணைபொழி வாயனே
தூய தூய தூயனே தோத்திரம் நல்லாயனே – ஏதிம்

4. நீதி நிறைவேறவோ நீசர் கரை ஏறவோ
ஏது சாவு நேரவோ ஈனக்குரு சேறவோ – ஏதிம்

**4. இராகம் (ஐங்காயத்தின் அடைக்கலம் தாவே)**

**தேவ பால சிங்கம் மனுவாயினார் – ஜெகத்தில்**

2. வான சேனைகள் துதித்திடவே – பரத்தில்

3. பிசாசின் தலைவனான வேதாளத்தை – ஜெயித்திடவே

4. கானகத் தாட்டிடையர் பணிந்திடவே – சுதனை

5. கீழ்நாட்டு சாஸ்திரிகள் தொழுதிடவே – பரனை

6. எக்காள கீதங்கள் முழங்கிடவே – எங்கும்

**5. ரீதிகௌளை** **சாப்பு தாளம்**

**பல்லவி**

**ஏசுராஜனே ஆசிடை தாறீரோ**

**அனுபல்லவி**

ஆசிடை தந்து பாசமாய் காறீர்

1. ஏசென்னும் நாமம் காசினில் பூமா – தவி
தீசாயின் உயர்குல ராஜனே – ஏசு

2. ________க்கணம் ஓட சேய்க்கணம் பாட – இனி
________க்கணம் துதியுடன் பாடிட – ஏசு

3. உம்பர் ஜோதியே நம்பும் கதியே – அதி
சம்பிரம பூரண காரண – ஏசு

4. தேவசிங்காரா பாவ சங்காரா – மனு
வாகப்புவியில் வந்த ராஜனே – ஏசு

**6. இராகம் (திரியேகா மரியோவா)**

**ஆனீரோ பாலகனே ஆதிபனே ஆனீரோ**

சீராரும் கண்மணியே தேடரிய பரன் திருமுதலாய்

2. தீர்க்கருரைத்தபடி தாவீதின் ஊர்தனிலே
மார்க்கமாய் மரியாளின் மைந்தனாக வந்தீரோ

3. மகிமையின் ராஜான் திருமடியை விட்டு இந்த
மாடடையும் கொட்டிலிலே வந்தாயோ பரன் திருமுதலாய்

4. முன்னோர்கள் வாஞ்சித்த முன்னவனே முதலோனே
மன்னன் தாவீது குலமாவேந்தே பரன் திருமுதலாய்

5. வரைதிரை பூபடைத்த வாழ்பிதாவின் திருமடியில்
வரிசையுடன் சொகுசாக வாழ்ந்தாயோ பரன் திருமுதலாய்

6. ஆதிமனுடர் செய்த அரிய பாவம் போக்க இந்த
பூதலத்தில் பாலகனாய் பிறந்தாயோ பரன் திருமுதலாய்

7. ஆதிபிதாச்சுதன் ஆவி திரியேகர்க்கும்
அன்றின்றும் என்றென்றும் அல்லேலூயா துதிதோத்திரமே

**7. பிலகிரி ஏகதாளம்**

**பல்லவி**

**தீம் தோமென நடனம் செய்குவோம்**

தீம் தோம் தஜம்

1. தம்புரு கின்னரம் ஜாலர் வீணை மிர்தங்கம்
சாரங்கிச் சுரமண்டல சங்கீத மெட்டுடனே – தீம்

2. கெம்பீரத்தொனியாய் கிடுகிடெக்காளமாய்
கேரூபின் சேராபினோடு கிறிஸ்துவின் சமுகத்தில் – தீம்

3. சுத்தர் பரிசுத்தராய் தூதரோடு தூதராய்
ரத்தினத்தோடொத்துப் பார்த்து நாதனையே முத்தஞ்செய் – தீம்

## *கிறிஸ்து பிறப்பு*

**8. கலியாணி** **ஏகதாளம்**

**பல்லவி**

**பூதலமீதெழுந்து பாலனானார் அதிசயமே**

**அனுபல்லவி**

பொற்பரா தற்பரா சிற்பொரூபி அற்புதனே

1. ஆலேலம் ஆலேலம் ஏலோயி ஆலேலம்
   ஓசன்னா ஓசன்னா ஓம் திரியேக வஸ்து கிறிஸ்து –பூதல

2. வானோர்கள் பாட ஞானிகள் தேட மந்தையர் கூட ஏரோதுவாட
   வானவெள்ளி என்னுள்ளே வந்துதித்த ஸ்தம்பம் போலே

3. சரணடி உந்தன் தமியரின் சொந்தம் அவரவர் தம்தம் திருவருசொந்தம்
   சன்னகன் ஸ்நானகன் சொன்னான் அந்த மன்னவர் நீரோ

4. பரதேசி ரத்னம் துதிகீதம் பாட அரதேசியுந்தன் சமூகமே நீ____
   ஆரையா சொன்னாரையா தீரையா வினை தீரையா

**9. இராகம் (நேச ஏசுபாலனை நித்தம் துதித்து)**

**பல்லவி**

**ஏசு மகாராஜனை என்றும் துதித்துப் போற்றுவோம்**

**அனுபல்லவி**

நேசமுடன் எம்மை மீட்க நீசவடிவானோனை– ஏசு

1. சர்வேலோக நாதனை சகல பரிபாலனை
   அரூபரூப தேவனை அடியார்க்கனுகூலனை – ஏசு

2. எத்தனையோ இடர்கள் துன்பம் சித்தம் இரங்கி காத்தோனை
நித்தம் தயாபரனை முற்றும் கருணாகரனை – ஏசு

3. உன்னதத்திலேகமாய் ஒய்வில்லாத நாதமாய்
இன்னிசைந்த ராகமாய் இசைந்து பாடும் கீதமாய் – ஏசு

**10. பியாகு ஆதிதாளம்**

**ஆதியாம் பரஞ்சோதியே அருளானந்த குருசாமியே**
நீதியாய் ஒரு பாதி ராவினில் நீர் பிறக்கவும் ஆனீரோ

2. வனத்திலஞ்சுகள் பாடவும் நல்ல வாத்தியங்களை கேட்கவும்
மூன்று ராஜாக்கள் பாடவும் நல்ல பொன் தூபங்களை காட்டவும்

3. அந்த பெத்தலேமூரிலே மனுவானவா எனக்கானவா
கன்னிமாமரி பாலனே எங்கள் சுவாமியே ஏசுநாயகா

4. மார்கழிமாதப் பனியிலே வெல்லைமலையிலே ஒரு குகையிலே
கன்னிமாமரி வயிற்றிலே மனம் உருகவே மனம் கருகவே

**11. சங்கராபரணம் ரூபக தாளம்**

**ஏதுக்கழுகிறாய் நீ ஏழை மாது நான் என்ன செய்வேன்**
கூதலடிக்கிறதோ பாலா குளிரும் பொறுக்கலையோ

2. தந்தைக்கு தச்சு வேலை பாலா தாயும் எளியவளே
இந்த மாசங்கடத்தில் பாலா என்ன பெருமையுண்டு

3. மூடத்துணியில்லையோ இந்த மாடையயுங் கொட்டிலிலே
வாடையடிக்கிறதோ பாலா கலங்கித் தவிக்கிறாயோ

4. வான் தூதர் தாராட்டை கேட்டமாமணியே உனக்கு
நான் பாடும் தாராட்டு கேட்க நன்றாயிருக்கலையோ

5. ஜோதியே சுந்தரமே மனு ஜாதியை மீட்க வந்த
நாதனே நீ அழுதால் இந்த நாடும் சிரியாதோ

6. இல்லாத ஏழைகட்கு இன்பம் எல்லாம் அளிக்கவந்த
செல்வமே நீரழுதால் ஏழைமாது நான் என்ன செய்வேன்

7. அன்பற்றோர் தேசத்திலே அழுதால் யாரும் உருகுவாரோ
இன்பமே ரஞ்சிதமே மகனே ஏங்கி அழா அரசே.

## 12. இராகம் (ஏசுமகராஜனை என்றும்)

**பல்லவி**

**நேச ஏசு பாலனை நித்தம் துதித்துப்பாடுவோம்**

**அனுபல்லவி**

ஆசையோடு பாசமாய் அவர் பாதத்தை தேடுவோம்

1. காவில் ஏவை செய்தமா பாதகம் தொலைக்கவே
ஜீவ தேவ தேவனார் சிறுபாலனாயினர் - நேச

2. வான சேனை கூடுதே மங்களங்கள் பாடுதே
ஈனப்பேயும் ஓடுதே எங்கும் புகழ் நீடுதே - நேச

3. பாவிகளை மீட்கவே பரலோகம் சேர்க்கவே
ஆவியான ரூபனார் அற்பநரராகினார் - நேச

4. சங்கீதங்கள் பாடுவோம் சுவாமி ஏசுநாதர்க்கே
_கிதம் கொண்டாடுவோம் இஸ்ரவேலின் மீட்பர்க்கே-நேச

5. சத்தியம் தவறாத்தம் புத்திரரைத் தந்த நம்
நித்திய பிதாவுக்கே நீடித்துதி செலுத்துவோம் - நேச

6. சுவாமி ஏசு நாதனை சந்ததமும் போற்றுவோம்
நேமிவந்த ராஜன் மேல் நேசர் கவி சாற்றுவோம் - நேச

**13. செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**நாம் நற்சுகமாய் பெத்லேம் நகர் பொய் திரும்புவோம்**

**அனுபல்லவி**

இதோ வாரும் போவோம் ஜல்தி – நாம்

1. என்றும் கேளா வானகீதம் இன்று கேட்குதே – அது
இன்றுமுதல் எங்கள் துயர் என்றும் நீக்குதே – இதோ

2. யூதேயா தேசம் தாவீது வேந்தன் கிளையில் – இது
ஏதையா இதுவிசேஷம் இந்த நாளையில் – இதோ

3. வானபரன் கிருபையினால் ஞானமாகவே – நர
ரானமகா தாழ்மையைப் போய் பார்த்துவரவே – இதோ

4. ஆதிமனுடர்கள் புவிபாவம் தீர்ப்பதாய் – பரஞ்
ஜோதி புவி வந்தாரே இதன் பின் ஆழமே – இதோ

5. சங்கீதத் தொனியாய் வளர் பெத்லேம் ஓடுவோம் – மகிழ்
கெம்பீரத்தோடெக்காளமாய் கீதம் பாடுவோம் – இதோ

6. ஊக்கமிகும் திருச்சபையோர் குருக்கள் மார்களும் – இ___
நீக்கமில் சமாதானமாய் நிலைத்து வாழவே – இதோ

**14. செஞ்சுருட்டி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**சந்தோஷ தினம் சந்தோஷ தினம் சுவாமி பிறந்த நாள்**

**அனுபல்லவி**

சுந்தரதேவசுதன் கிறிஸ்தேசு சுவாமி பிறந்த நாள்

1. அந்தர பூலோகசுவர்க்கமனைத்தும் அமைத்த திருச்சுதன்
நிந்தைமிகும் குடில் வந்து கந்தைதனை நேரே போர்த்தனரே–சந்

2. தீர்க்கர் செப்பிய மொழிப்படியே செந்தாமரை மலர்
ஜெருசலைப்பதி அடுத்த பெத்தலைத்தீரத்திற் பிறந்தார் – சந்

3. பொன்னுலகத்தினில் தேவனுக்கே துதி பூலோகத்தினிலும்
மண்ணில் சமாதானம் மானிடர் மேல் பிரியமாய் வாழ்பவரே– சந்

4. தூதர்கள் சேனைகள் கூடி மகிழ்ந்து கொண்டாடு வதைப்பாரும்
சோபனம் சோபனம் இயேசு சுவாமியைத் தொட்டிலில் போய்
பாரும் – சந்தோஷ

5. சிமியோன் அன்னாள் செங்கரத்தேந்திய ஏசு ரட்சகரே
திருமுகப் பிரகாசமருளும் தேவ ரட்சகரே – சந்தோஷ

6. அலகை சிரசை மிதித்து வெற்றியை அளித்த ராஜாவே
பலகோடி நாவால் புகழ்ந்து முடியா பார்த்திபனிவரே – சந்தோஷ

7. எல்லாரும் வாரும் ஏசுசுவாமியை ஏற்றித் துதித்திடுவோம்
பொல்லாத பாவிகளாகிய நம்மைப்புரந்தவரிவரே – சந்தோஷ

8. இந்த ரட்சகரையல்லாமல் வேறொரு ரட்சகரில்லையே
எங்கள் பாவச்சுமை நீக்கிடவந்த இம்மானுவேலிவரே –சந்

**15. காம்போதி (அன்பரே என்னுட தோழரே) ஏகதாளம்**

**கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார் துத்தியம்
செய்வோமே–நாம் நாம்**
காவலவர் தாம் பாவிகள் நமக்கு களித்திடுவோம் நாமே

2. சத்தமிட்டு இதயம் மகிழ்ந்து சுவாமியைத்துதித்திடுவோம் – ஏசு
சகல பாவங்களையும் தீர்க்க தற்பரன் பிறந்தாரே

3. பெத்தலேகேம் ஊரில்வந்து பிள்ளையாய் பிறந்தாரே – எளிய
பேயின் தலையை நசுக்கவென்று பேதை போலானாரே

4. தேவதூதர் வணங்கி நிற்க ஜெயமாய் பிறந்தாரே உலகில்
தேவகோபம் தீர்க்கவென்று சிறியவரானாரே

5. இடையர் வந்து பாதம் பணிந்தார் எழுந்திருப்போம் நாமே
– இப்போ
இஸ்ரவேலின் மகிமை இவரே இவரைத் தொழுதிடுவோம்

6. சாலேம் நகரில் மேலோர் கூட்டம் தவித்துப் படுத்திருந்தார்
–ஆகா
திருச்செந்தூரின் ஜனங்கள் நாங்கள் சுவாமியை அறிய வந்தோம்

7. வீட்டையும் விட்டு நாட்டையும் விட்டு தொழுவத்திலே பிறந்தார்
– மாட்டு
மேன்மை நமக்குக்கொடுக்கவென்று விரும்பிப் பிறந்தாரே

8. சீலையுமின்றித் துணியுமின்றிச் சிலிர்த்துப்படுத்திருந்தார்
– பாலன்
கோலாகோலம் கந்தை மூடி குளிரை அனுபவித்தார்

9. பாவிகள் நமக்கு பாக்கியம் தரவே பரனார் கருவமைத்தார்
கூவி அழுதும் எடுப்பாரின்றிக் குளிரை அனுபவித்தார்.

**16. சங்கராபரணம் ஏகதாளம்**

***பல்லவி***

**பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி**

**அனுபல்லவி**

கர்த்தன் இயேசு பாலனுக்கு துத்தியங்கள் பாடி
பக்தியுடன் **உத்தமியே வாடி** – பெத்தலேகேம்

1. காலம் நிறைவேறினபோ திஸ்திரியின் வித்து
சீலகன்னி **கற்பத்தாவியாலே** உற்பவித்து
பாலனான **ஏசு மேசியாவே** – பெத்தலேகேம்

2. எல்லை இல்லா ஞானபரன் வெல்லை மலையோரம்
புல்லனையிலே பிறந்தார் **வெல்லையின் கெம்பீரம்**
தொல்லை மிகும் அவ்விருட்டு நேரம் – பெத்தலேகேம்

3. வான் புவி **ஆள்ராஜனுக்கு** மாட்டகந்தான் வீடோ
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல் பூண்டோ
**தானே பழம் கந்தையல்லோ மானே** – பெத்தலேகேம்

4. அந்தரத்தில் பாடுகிறார் தூதர் சேனை கூடி
மந்தை மேய்ப்பர் ஓடுகிறார் பாடல் கேட்கத் தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி – பெத்தலேகேம்

5. ஆட்டிடைய ரஞ்சுகிறார் அவர் மகிமை கண்டு
**திட்டமுடன்** காபிரியேல் சொன்ன செய்தி **கேட்டு**
நாட்டமுடன் ரட்சகரைக் காண – பெத்தலேகேம்

6. இந்திரியோடு கண்டரசர் மூவர் நடந்தாரே
சந்திர தூப போளம் வைத்து சுதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா **ஓடி** – பெத்தலேகேம்

**17. சரசாங்கி திஸ்ர ஏகதாளம்**

**பல்லவி**

**பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித்துதி, மனமே – இன்னும்**

**சரணங்கள்**

1. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக – இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே – பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார் – இங்கே
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் – பெத்

3. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் – இங்கே
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார். – பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்–இங்கே
ஆக்களுடை சத்தத்துக்குள் அழுது பிறந்தார் – பெத்

5. இந்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை – நாம்
எண்ணமுடன் போய் துதிக்க ஏகிடுவோமே – பெத்

**18. இராகம் (பாவநாசகரேக பாடுபட்டு)**

**பல்லவி**

**ஜீவநாயகரிதோ சிசுவாகப் பிறந்தார்**
ஜெயமங்களம் பாடி துதிகொண்டாடுவோம் – ஜீவ

1. மாசில்லா மெஞ்ஞான மாசிரோமணியை
மனமகிழ்ச்சியாக மகிழ்ந்து போற்றுவோம்
மங்களப்பதம்பாடி மகிழ் கொண்டாடுவோம்

2. அதிசயமான ஏசு ரட்சகரை
ஆவியினால் கண்டு அறிந்துகொள்ளுவோம்
ஆகா இதுவும் இதுவும் மெத்த அதிசயந்தானே – ஜீவ

3. மாட்டுக்கொட்டிலில் தேவ ஆட்டுக்குட்டியார்
எமை மீட்டு ரட்சித்திட தேட்டம் கொண்டாரே
ஆகா மெத்த அதிசயம்தானே – ஜீவ

4. தேவன் மனுஷனான சிறப்பைக்கண்டிட
சிறந்த பெத்லேம் நகர் பறந்து போய் வருவோம்
ஆகா மெத்த மெத்த ஆச்சரியமே – ஜீவ

5. இன்று பெத்லகேமில் உதித்த ஏசுவை
இன்று நெஞ்சில் ஏற்றுக்கொள்வீர் நேசரே
ஆகா இதுதான் மெத்த ஆசீர்வாதமே – ஜீவ

**19. உசேனி ஆதி தாளம்**

**தாவீதின் ஊர்தனிலே சின்னப்பாலகா**
சத்திரத்தின் பக்கத்திலே

2. மாட்டுத்தொழுவத்திலே சின்னப்பாலகா
மாடடையுங் கொட்டிலிலே

3. சேலை துணியுமின்றி சின்னப்பாலகா
சிலிர்த்து நீர் தூங்கையிலே

4. சாஸ்திரிமார்கள் வந்து சின்னப்பாலகா
சாஷ்டாங்க தொண்டனிட்டார்

5. காணிக்கை வைத்தனரே சின்னப்பாலகா
கண்டு நின்று ஆர்ப்பரித்தார்

6. தூதர்கள் பாடினாரே சின்னப்பாலகா
தோத்திர கீதங்களை

7. நாங்களும் கண்டோமையா சின்னப்பாலகா
நாட்டிலில்லா ஆச்சரியம்

**20. இராகம் இங்கிலிஷ்**

**விந்தையில் விந்தையை வந்து பாராய் – மா**
சுரந்த வேந்தனார் தேவமைந்தன்
கந்தை பொதிந்து சிசுவானார்

**பல்லவி**

அற்புதம் அற்புதம் அற்புதமே – திகழ்
பொற்பரா தற்பரன் அற்பமான
கற்பத்தி லுற்பத்தியானது பார்

2. பண்டு முறை உரைவிண்ட படி – பூ
மண்டலத் தொண்டர்கள் கண்டிடவே – விண்
மண்டலமிறங்கி உதித்தனரே – அற்புதம்

3. ஜெகத்தில் பெத்தலைப் புல்லணையில் – மா
மகத்தவமான மனுவேலனார்
அமுதுக்கமுத கோலத்தைப் பார் – அற்புதம்

4. தாவினில் பாவிகளானவரை – ஆ
தாவி மீட்கவென்று தாவீதினூர்
ஆவிடைப் பிறந்தார் சேவியுங்கள் – அற்புதம்

5. துங்க தூதர் சங் கம்களித்து – சுப
மங்கள தீங்கவி எங்கெங்குமே
இங்கிதம் முழங்க ஆர்ப்பரித்து – அற்புதம்

6. ________கள் நாயனைக் காணவென்று
______தமாய் விரைவாகுகின்றார்
_____தாயின் தூயசேனையே – அற்புதம்

7. சாஸ்திரிமார்கள் தம் ஆஸ்தியுடன் – பிர
வேசித்து கிறிஸ்து சமஸ்தனையே
நமஸ் கரித்தார் ஈசாயின் வேரை – அற்புதம்

8. _____தம் வந்தனம் ஏசையர்க்கே
_____ந்தத வந்தனம் வந்தனமே
வந்தார் இயேசு மகாராஜனே – அற்புதம்

**21. செங்சுருட்டி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**துதி நித்தமும் முமக்கே தகும்**
துதி நித்தமும் முமக்கே தகும்
துரை ஏசெனு நாமா

1. அதி உன்னத பரம் விட்டிந்த
பதிபெத்தலை மேவு கர்த்தனை – துதி

2. நீதியாடையினாலெமை மூட
நீதனே பழங்கந்தை சூடினீர் – துதி

3. மாது தீவினை நீக்கவே மரி
மாதினுந்தியில் வந்த சுந்தரா – துதி

4. பசாசின் செய்கையழிக்க வந்த
பராபரனின் குமாரனே ஏசு – துதி

5. வல்லராஜரின் மாடம் நீக்கியே
புல்லணை வந்த போத நாதனே – துதி

**22. ஆனந்த பைரவி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அத்தன் மனுவானாரே -- கிறிஸ்து நமதத்தன் மனுவானாரே**

**அனுபல்லவி**

அத்தன் நமது மத்தியஸ்தன் மரியகன்னி வித்தனான – அத்தன்

1. காலம் நிறைவேறினதால் – முன் சொன்னபடி
காலன் சத்தியவேத நூலன் நமது மரி பாலன்
ரட்சிப்பின் செங்கோலன் நல் பாலனான – அத்தன்

2. தந்தைக்கிணையானாரே – குமாரனே
தந்தை நின் பரம குழந்தை ஒருசிறு குழந்தை எனவருதல்
விந்தை விந்தை விந்தை இதோ – அத்தன்

3. குற்றம் சுமந்த ஆடே – பிணையான தோடே
குற்றம் சுமந்து பவமுற்று மொழிய உதிரத்தைச் சிந்திட
மத்தியஸ்தத்தைப் பாரென்று – அத்தன்

4. பட்ச மிகவானாரே – தவீது வேரே
பட்சம் பரமசபை மெச்சும்படி யன்பாக வச்சிரமணி கவியின்
லட்சம் லட்சம் லட்சம் துதி – அத்தன்

**23. பியாகு சாப்பு தாளம்**

**பல்லவி**

**சீயோனே மகிழ் மங்கையே சித்திரமே பொற்பதமே**

1. சேயவதாரங் கொண்டுனின் நேய தூயா – ஒரு
துரைராஜன் மரிபாலன் புவிமீது பிறந்தார் – சீயோனே

2. அண்டங்கள் உருவாமுன் அதிசித்ர ஒளியாய்
அகிலத்து நடுமத்தியினிலுற்றுப் பிறந்தார் – சீயோனே

3. ஜெகஜோதி நவரத்ன மகுடாகி மனுவோன்
சிசுவாகத்தையோடு புவிமீது பிறந்தார் – சீயோனே

4. இசரேலர் கொண்டாட யாக்கோபியர் மகிழ
இதமாகத் தவிதாது புவிமீது பிறந்தார் – சீயோனே

5. வாக்குத்தத்தங்கள் தவறாது சொற்படியே
மடமாது இடமேவி புவிமீது பிறந்தார் – சீயோனே

6. பூலோகம் பரலோகம் பொருள் யாவும் படைத்தார்
புவிமீதில் ஒரு மாதினிடமாகப் பிறந்தார் – சீயோனே

7. ஆயர்கள் கொண்டாட சாஸ்திரிகள் பணிய
அனைமரியினெளிய முன்னணையிற் பிறந்தார் –சீயோனே

8. சீயோனின் பவமறச்சாலேமியர் மகிழ
ஜெகராஜன் நரர் நீசருருவாகிப் பிறந்தார் – சீயோனே

## 24. இராகம் (ஜெயம் கொள்ளுவார்)

**புகழ் புகழ் பாடுவோம் இந்தச் சபை மீதினில்**
புல்லணையிற் பிறந்தவரை போற்றிப்போற்றி பாடுவோம்

2. மகிழ் மகிழ் சபையே மன்னன் ஏசு நாதரில்
மானிடரை மீட்க வந்த மன்னவனை ஸ்தோத்திரி

3. ஓடிவா ஜனமே ஒசியன்னா ஜெயமே
ஓசையாகப் பாடி நாம் ஒன்றாகத் துதிப்போமே

4. பாட்டைப் பாடி ஜெபத்தைக் கூறு
பரமகிருபாசனத்தில் பக்தியாய் சேரு

5. அஞ்ஞானம் அகற்றி மெஞ்ஞானம் புகட்டி
ஆரும அறியாத ஆறுதளியும்

6. சாவு நோவு யாவுமின்றி
சந்தோஷம் ஜீவதண்ணீரில் வாழ

7. நாடி ஓடி நம் கர்த்தனை அடைய
நல்ல போராட்டம் நாம் போராடுவோமே.

8. அந்தி சந்தி நாம் ஜெபங்கள் பண்ணி
ஆண்டவரின் நாமத்தை ஏகோபித்துப் பாடுவோம்

9. வாரும் ஏசுவாரும் இந்தக் கூட்டமீதினில்
வந்துமதாவி தந்து எங்களைக்காரும்

## 25. செஞ்சுருட்டி ஆதி தாளம்

**மலையடி ஓரத்திலே மாடடையுங் கொட்டிலிலே**

கானப்புல் மெத்தையிலே ஏசுகாரணமாய்ப் பிறந்தாரே

காரணராக இத்தாரணி மீதில்
பூரணராக பிறந்தாரே என் சுவாமி
ஆரணம் பாடி அடிபணிந்தேற்றி
தோரணம் கட்டித் தொழுதிடவே வாரும்

2. சாட்சியாய் கூறவந்த சர்வவல்லவர் தூதன்
மாட்சிமையாயுரைத்த வார்த்தையது கேட்கிறீரோ
நாச்சியார் கன்னிமரியம்மாள் வயிற்றில்
மாட்சிமையுள்ள மதலையாய் பிறந்தார்
காய்ச்சின பாலும் கடையாலுமே கொண்டு
காட்சி காணவே கருதினாரே மேய்ப்பர்.

3. வானத்திலே யுதித்த வழிகாட்டி வெள்ளியதால்
ஞாலத்தின் சாஸ்திரிகள் நடந்தாரே காட்சி காண
ஞானத்தினாலே கண்ட சாஸ்திரிமார்கள்
தானத்திலே யுதித்த தற்பரனைக்காண
மேனத்தின் காணிக்கை கொண்டார்ப்பரித்தேவந்தார்
தானத்திலுள்ள சகோதரரே வாரும்

## 26. செஞ்சுருட்டி — ஆதி தாளம்

**பல்லவி**

**வந்தவர் ஆரையா இங்கே வந்தவர் ஆரையா**

1. சுந்தரப்பரன் சொரூபமாய் – பரி
சுத்தமோடு பெத்தலையில் உற்ற குடிலுக்குள்ளே – வந்தவர்

2. தேவனும் மனிதனுமாய் – தம்
சிந்தையில் மகிழ்ந்து மாட்டு விந்தைத்தொழுவத்தினில்–வந்த

3. பராபனொரு மகனோ – கெட்ட
பாவிகளை ஆவலுடன் பூவிலெங்கும் தேடிக்கொண்டு –வந்த

4. பரனுக்கும் மனிதனுக்கும் – பிணைப்
பட்டு நடுப்பட்டு வினைப்பட்டுப் பரிதபிக்க – வந்தவர்

5. தூதர்கள் அதிபதியே – தீர்க்கர்
சொன்னபடி உன்னதமாய் முன்னணையிலே படுக்க – வந்தவர்

6. இயேசுக் கிறிஸ்தனரே – உலக
ரட்சகனாம் ரட்சகனென்றுச் சிதநாமத்தைக்கொண்டு – வந்தவர்

**27. செஞ்சுருட்டி ஆதி தாளம்**

**பல்லவி**

**விண்ணோர் பிரானார் மகா மகிமை**
விளங்கும் வஸ்து இன்றுதித்தாரே

**அனுபல்லவி**

மண்ணோர் புரிந்த பொல்லாப் பறவே
மாடடை வீட்டில் சேயாய் வந்தாரே

1. சீராரிஸ்ரவேல் ஜெயத்தின் மீட்பும்
திரள் யாக்கோபின் வெற்றியுமான
பேராரும் யூதாவின் சிங்கமானோர்
பெத்லேக மூரில் பக்தர்கள் துள்ள – விண்ணோர்

2. முன்னோர்கள் வாஞ்சையா யெதிர் பார்த்த
மூவா முதல்வன் தானமிவரே
மன்னன் தாவீது கோத்திர பூபன்
மாமரி யன்னை பாலனிவரே – விண்ணோர்

3. மரண அந்த காரத் தமிந்த
மாந்தர்க்கு விந்தையான மன்னாவே
கருணைமுந்த காட்சியா யிந்த
காலத்தில் சந்தித்தாரன் பாகவே – விண்ணோர்

4. வெல்லையருகில் மேய்ப்பர் தமக்கு
மேன்மையாய் ஜோதிதான் தென்படவே
நல்ல ஆய்ர்கள் கண்டு மருள
நற்றூதன் வந்து தேறுதல்கூற – விண்ணோர்

5. விண்ணோர்கள் ஏகமாகப் பண்பாட
பண்பாயிடையர் வந்தன் பாய்தேட
விண்ணிலோர் வெள்ளி மேன்மையாய் தோன்ற
வேந்தர் காணிக்கை மின்கழல் பூண – விண்ணோர்

**28. இங்கிலிஷ் ஏக தாளம்**

**மன்னுருவானார், ஆதிமன்னுருவானார் – ஏதும்**
தன்னிகரிலாத ஆதி மன்னுருவானார்

1. மன்னன் தாவீது வம்சக்கன்னியாமாது – அந்தக்
கன்னியென்னும் அன்னைமரி தன்னிடமாக
தன்னிடமாக, ஆதி தன்னிடமாக – ஏதும்

2. வல்லமைத் தேவன் தீர்க்கர் சொன்னமெய் ஜீவன் – சிறு
வெல்லைமலைக் கல்லுறுத்த புல்லணையிலே
புல்லணையிலே, ஆதி புல்லணையிலே – ஏதும்

3. எப்பொருள் மேலா நின்ற விற்பன நூலான் – ஆதி
பொற்பரர் சுரர் பணிய அற்புதமாக
அற்புதமாக, ஆதி அற்புதமாக – ஏதும்

4. ஆயர்கள் கூட உயர் ஞானிகள் தேட – யூத
ராயனென்ற தாலே ஏரோதேயுமே வாட
ஏரோதேயுமே வாட, ஏரோதேயுமே – ஏதும்

**29. செஞ்சுருட்டி ஆதி தாளம்**

**பல்லவி**

**ரட்சகர் பட்சம் எனக்கிருந்தால்**
நிச்சயம் தீமை பறந்திடுமே

**அனுபல்லவி**

எச்சாதியோருக்கும் ரட்சாபெருமானாய்
இந்நிலம் தன்னில் மனுவாகத் தோன்றின

1. ஆரணியந்தனியில் தீயலகை யாருண்டு
வெருண்டோடச் செய்தனரே
மாறத பூரண வல்லமையுள்ள மெய்யான
பராபர வஸ்துமகவான

2. ஐந்தப்பம் கொண்டு ஐயாயிரம்பேர்
அன்று போஷிக்கப்பட்டனரே
சிந்தை கலங்கித் தியங்காதே மனமே
தேவசுதனுனைப் போஷிப்பார் தினமே – ரட்சகர்

3. வேலையலை மிஞ்சி மோதிடவே வீசிய காற்றை யமர்த்தினரே
பேலியாள் மக்கள் பெருத்ததினால் வரும் பீடைகள்
துன்பங்கள் யாவுமே போக்குவார்

**30. இராகம் (தோத்திர பாத்திரனே)**

**வாரும் பெத்தலை வாரும் வாரும் வரிசையுடனே வாரும்;**
வாருமெல்லாரும் போய் வாழ்த்துவோம் மேசுவை
வாரும் விரைந்து வாரும்.

2. எட்டி நடந்துவாரும் அதோ சற்றே நிமிர்ந்து பாரும்
பட்டணம்போல் சிறு பெத்தலை தெரியுது வாரும்
விரைந்து வாரும்.

3. ஆதியிலத மேவை அந்நாள் அருந்திய பாவவினை
ஆதி திரித்துவ தேவமகத்துவராயினர் இது புதுமை

4. விண்ணுலகாதிபதி தீர்க்கர் சொன்னதிலுள்ளபடி
மண்ணுலகில் மரிகன்னி வயிற்றினில் மானிடனாயுதித்தார்

5. சொல்லுதற்கரிதாமே ஜோதிசுந்தர சோபனமே
புல்லணையில் பசு முண்ணணையில் ஆபூ வதிபன்
பிறந்தார்

6. மந்தை மாடடையில் மாது மரியவள் மடிதனிலே
கந்தைத் துணிமீது விந்தைத்திருமகன் காரணரா யுதித்தார்

7. தூதர்கள் பறந்து வந்து தேவ துத்தியங்கள் பாட
மாதவ ஞானிகள் ஆயர்கள் பணிந்து மங்களமொடு நாட

8. உன்னத மதிலுண்டாம் பிதாவுக்கோசியன்னா மகிமை
இன்னிலமதிலுள்ள மன்னுயிர்க்குண்டாம்
எழில்பிரியம் பொறுமை

**31. நீலாம்புரி ரூபக தாளம்**

**பல்லவி**

**யாரிவரோ யாரிவரோ யாரிவரோ யாரிவரோ**

**அனுபல்லவி**

யாரோ இவர் யாரென்றுரைக்க அறிகிலேன் ஐயா

1. கண்மணியோ பொன்மணியோ கற்பகமோ பொற்பகமோ–யாரோ
2. அற்புதனோ விற்பனனோ ஆண்டவனோ மீண்டவனோ–யாரோ
3. தூதராட கீதம்பாட ஜோதி நக்ஷத்திரங்களோட – யாரோ
4. இடையர்கூட நடனமாட தோத்திர சங்கீதம்பாட – யாரோ
5. ஏசையனோ மேசையனோ ராசையனோ பாசையனோ – யாரோ

**32. இராகம் (இந்தக் குழந்தையை நீர்)**

**பல்லவி**

**நமக்கொரு பாலகனார் பிறந்திருப்பதை பாரும்**

**அனுபல்லவி**

கர்த்தத்துவத்தையுமே தோளில் அணிந்தவராய்

1. அதிசயமானவராய் அந்த லோகத்தை விட்டு
ஆதி வாக்குப்படியே அன்னை மரியாளிடம் – நமக்கொரு

2. ஆலோசனைக் கர்த்தாவாய் அந்த லோகத்தை விட்டு
பூலோகத்தினிடத்தில் புனித மரியாளிடம் – நமக்கொரு

3. வல்லமையுள்ள தேவன் வயங்கி மண்டலம் விட்டு
புல்லணை மீதினிலே புனித மரியாளிடம் – நமக்கொரு

4. நித்திய பிதாவென்றும் நிறைந்த நீதியணிந்த
சத்திய வாசகராய் சங்கை மரியாளிடம் – நமக்கொரு

5. சமாதானப் பிரபுவாய் சங்கை மிகுந்த தேவன்
சார்ந்த இப்பூவுலகில் தாயார் மரியாளிடம் – நமக்கொரு

6. நீதிமான்களை யல்ல நீசப் பாவிகளைத்தான்
புதிதாய் சிருஷ்டிப்பதற்கு புனித மரியாளிடம் – நமக்கொரு

7. பங்கப்படும் பாவியைப் பாதுகாக்கும் அந்த
சங்கை மிகுந்த தேவன் சாந்த மரியாளிடம் – நமக்கொரு

8. தேவ தன்மையுடனே மனுஷ தன்மையும் கூடி
ஜீவ தண்ணீர் சுரக்க சிறந்த மரியாளிடம் – நமக்கொரு

**33. செஞ்சுருட்டி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**போற்றவாரும் பெத்லேம் நகர் மீதினில்**

புல்லில் பிறந்த மாவல்லமைத் தேவனை

**அனுபல்லவி**

ஏற்ற தீர்க்கன் ஏசையா உரைப்படி
இருளோடவும் அருள் நீடவும் மரிபாலுதித்தோரை– போற்ற

1. ஆதியிலிஸ்திரி வித்தென்னு மேவைக்கு
அன்புடன் வாக்கருளப்பட்ட நாயனார்
ஜாதியாம் யூதர் குலமதில் தோன்றினார்
சமாதானம் சமாதானம் சமாதானம் பூமியில் –போற்ற

2. விண்ணுலகத்திலிருந்து ஏராளமாய்
வெண்ணுடை போர்த்து நல்தூதர் இறங்கியே
மண்ணுலகில் வந்த புண்ணிய நாதர்க்கு
மங்களம் மங்களம் மங்களம் பாடியே – போற்ற

3. தங்கச் சிம்மாசனம் பொன்னகர் வீதியும்
தள்ளிவிட்டு இந்தப் பாவியைத் தேடியே
மங்கை எளிய கன்னியிடம் வந்ததோர்
மனுவேலர் திருநாமம் ஒருபோதும் மறவாதே –போற்ற

4. கல்லணையோ கட்டில் வெல்லை நகரிலே
காட்டுமட முமக்கேற்ற அரண்மனை
புல்லணையோ மெத்தை செல்லக் குமாரனே
புதுமையிது புதுமையிது புதுமையிது புதுமையிது – போற்ற

5. நித்தியபிதாச்சுதன் ஆவியும் வாழ்கவே
நீனிலம் தன்னில் சபை தழைத்தோங்கவே
சத்தியவேத விரோதிகள் மங்கவே
தாசனின் கீதம் இதயத்தில் தங்கவே – போற்ற

**34. இராகம் (ஆனந்தப் பண்டிகையை ஆசரிப்போம்)**

**கர்த்தாதி கர்த்தனின்று பெத்தலைப்பதி பிறந்தார்**

கானகத்தின் மேய்ப்பர் காண வானுலக சேனைபாட
தற்பரன் அற்புதன் இப்புவியிலே உதித்தார்

2. தங்க லோகம் விட்டு இங்கு சத்திரத்தில் தாழ்ச்சியுற்றார்
தங்கவிடம் அற்றவராய் மந்தை ஆவிதனிலுற்றார்
விந்தையாய் கந்தை பொதிந்தன்னை கற்பமுற்யவித்தார்

3. பாவியை ரட்சைசெய்ய பார்த்திபன் பட்சம்கொண்டார்
பட்சம் கொண்டார் பட்சம் கொண்டார் பாலன் மிக
பட்சம் கொண்டார்
தாவியே ஓடிப்போய் நம்பாலன் பதம் பணிந்திடுவோம்

4. கெம்பீரம் இங்கிதமாய் எங்குமிக கேட்குதின்று
கேட்குதின்று கேட்குதின்று கிறிஸ்தேசு பிறந்தாரென்று
இங்கிதம் பாடிடுவோம் ஏசுமஹாராஜருக்கே

**35. இராகம் இங்கிலிஸ்**

**பல்லவி**

**எலலோகீம் தாமே மனு வேலனாகினார் – குரு**
பாலனாகினார் ஜெயம் அல்லேலூயாவே.

**அனுபல்லவி**

இது என்ன அதிசயமிது என்ன புதுமை
இருதயக் கம்பீரமதால் ஏற்றுத் தொழுவோம்
இங்கிர்தம் இங்கிர்தம் சங்கீதம் சங்கீதம்
ஏசு பகவானை என்றும்
இறைஞ்சித் தொழுவோமே நாம்

1. முட்டைகளெல்லாம் திரண்டு இட்டமாய்க்கூடி – ஏசு
கட்டழகன் வருகையை திட்டமாய்க் கூறி – ஆ! இது

2. பூத சர்ப்பத்தைக் குருசில் மோதி அடிக்க – பர
வேதிய னுயிர்த்தெழுந்தார் மா துரிதமே–ஆ! இது

3. பந்து போலவே வெள்ளி அந்தோ தோன்றுதே – அதை
சிந்தையில் மகிழ்ந்துணர்ந்த சந்துஷ்டி கொள்வோம்
–ஆ! இது

**36. இராகம் (இம்மானுவேலரசே)**

**பல்லவி**

**தாவீதின் புத்திரனை சாலோமின் மங்களனை**
சுவாமி என் ஆண்டவனை தாம் தாம் தாம்

**அனுபல்லவி**

பாடினேன் தினம் தேடினேன் – தாவீதின்

1. பரமண்டலாதிபனை பாவியின் ரட்சகனை
பரிசுத்தரூயியனைப் பார் பார் பார்
பாடுவேன் தினம் தேடுவேன் – தாவீதின்

2. பொன்னகர் மன்னவனை பூமியில் வந்தவனை
என்னேரமும் துதிப்பேன் நான் நான் நான்
ஏற்றுவேன் புகழ் ஏற்றுவேன் – தாவீதின்

3. ஆட்டுக்குட்டியானவனை ஆண்டவர் தன் மகனை
ஆத்தும ரட்சகனை ஆம்! ஆம்! ஆம்!
அண்டினேன் பதம் அண்டினேன் – தாவீதின்

4. இம்மானுவேலரசை ஏழை மரிசுதனை
இத்தரை மீட்டவனைத் தான் தான் தான்
ஏற்றுவேன் துதி ஏற்றுவேன் – தாவீதின்

5. நித்திய சத்தியனை நீதியின் சூரியனை
நேசனாம் ஏசையனை யான் யான் யான்
நேத்திரமுடன் நோக்குவேன் – தாவீதின்

**37. செஞ்சுருட்டி ஆதி தாளம்**

**கன்னி வயிற்றில் கர்த்தர் பிறந்தார் காணவாருமே**
எங்கள் பாவம் போக்கவந்த இயேசு ராஜனுக்கு ஜே
எங்கள் பாவம் போக்கவந்த ஏசுராஜனுக்கு ஜே ஜே ஜே

2. மூவரொருவரான தேவன் முன்னணையிலே
மாட்டுக்கொட்டிலில் பிறந்த தேவசுதனுக்கு ஜே
மாட்டுக்கொட்டிலில் பிறந்த தேவசுதனுக்கு ஜே ஜே ஜே

3. ஏதேன் வனத்தில் ஏவை செய்த தீதகற்றவே
யூத வங்கிஷத்துதித்த மேசியாவுக்கு ஜே
யூத வங்கிஷத்துதித்த மேசியாவுக்கு ஜே ஜே ஜே

4. கந்த தூப வர்க்கத்தொடே மங்களம் பாட
சுந்தரம் சேர் எந்தன் மகா ஏசு ராஜனுக்கு ஜே
சுந்தரம் சேர் எந்தன் மகா ஏசு ராஜனுக்கு ஜே ஜே ஜே

**38. பியாகு** **ஆதி தாளம்**

**வானபரன் வந்துதித்தார் பாரினிலே**
வல்லபேயைக் கொல்ல வந்து
வந்துதித்தார் மனுவேலன் – ரீ ரீ ரீ

1. ஓய்வு நாள் தினமதையே
ஒய்யாரமாய்த் தந்த தேவே – ரீ ரீ ரீ – வானபரன்

2. கன்னி மரியம்மாளிடம்
கைக்குழந்தையான பாலன் – ரீ ரீ ரீ – வானபரன்

3. கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட
கிருபை தந்தார் ஏசுநாதன் – ரீ ரீ ரீ – வானபரன்

**39.** **(202)**

**பல்லவி**

**ஜெக ஜோதிப் பராபரனே**
ஜீவகுல ஜோபிதமணியே

1. பெத்லேகம் பதியே புதரசிகாமணியே
அத்தன் கிருபாநிதியே – வெகு
தத்துவமாகவே இத்தரை மீதினில்
கர்த்தர் வந்தார் பதியே

2. மாளிகையிலையோ மாட்டுக்கொட்டிலிலே
மகிமையின் யூதா சிங்கமே – நீர்
மாது கன்னியிடம் தாமே பிறந்ததும்
மானிடர் பாவந்தானே

3. அண்ணலார் சேனை ஆசனத் துறந்து
அடிமை ரூபமெடுத்தார் – அவர்
வெண் மலர்சீடர் தன்மலராகவே
அத்தன் வந்தார் பதியே

4. உலகில் பாவத்தை துலையறவே துறந்த
உன்னத தேவ ஆடே – பற்
றறத்துலைவிக்கு மெந்தன் பழகிய பாவத்தை
இப் பாவிக்கு நேசர்தாமே

5. அச்சம் விடுங்கள் மெய்ச்சுதன் பிறந்தார்
அகிலத்திலுள்ளோரே – இப்போ
நிச்சயம் ரட்சகர் தீர்க்கிறார்
பாவத்தை நீசகுலத்தாரே

6. சங்கைக்குருவே இங்கிதம் மொழியே
எங்கள் தாவீதையனார் – நீரும்
பொங்கிப் புகழ்ந்து சந்ததம் நீள
துங்கனருள் செய்வாரே

**40. இராகம், இங்கிலிஷ் (251)**

**ஆனந்தம் பாடிடுவோம் அமலாதிபர்க்கே**
ஆனந்தம் பரமானந்தம் கொண்டாடிடுவோம்
ஆம் ஆம் இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம் இத்தினம் மகிழ்வோம்

2. சங்கீதம் பாடிடுவோம் சுவாமி ஏசுவுக்கே
சங்கீதம் ஓர் இங்கிதம் பாடிடுவோம்
ஆம் ஆம் இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம் இத்தினம் மகிழ்வோம்

3. தூதரோடு கூடி துதி செய்வோம்
சுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரெனவே
ஆம் ஆம் இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம் இத்தினம் மகிழ்வோம்

4. ஆமென் அல்லேலூயா ஏசுபரர்க்கே
அல்லேலூயா அல்லேலூயா பாடிடுவோம்
ஆம் ஆம் இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம் இத்தினம் மகிழ்வோம்

**41. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (252)**

**நம்மை ரட்சிக்கவென்று நாடி – நாதன்**
மானிலத்தில் வந்தார் இங்கு தேடி – மோட்ச
பாக்கியங்கள் ஆனந்தம் கோடி – இந்த
மானிடர் மேலே அன்பு நீடி

2. பெத்தலையில் பிள்ளையானாரென்று – வான
ஜோதி வழி நடத்தச் சென்று – தூதர்
மேய்ப்பர் சாஸ்திரிகளும் வந்து – இங்கு
காணிக்கையோடவரைக் கண்ட

3. சத்தியவேதத்தை ஆய்ந்து தேடும் – நம்
நித்தியபரனை என்றும் நாடம் – தினம்
சுத்திகரிக்க எமைச்சேரும் – தேவ
சுத்த சுவிசேஷ சபை நீடும்

4. வந்த நண்பர் யாவருமே களிக்க – நம்
டக்கரம்மாள்புரம் சபையாரும் செழிக்க – தேவ
காணிக்கை யாவையுமே படைக்க – என்றும்
சத்ய சுவிசேஷ சபை செழிக்க

**42. இராகம், மோகனம் ஏக தாளம் (253)**

**பல்லவி**

**பாவிக்கு நேசராரே ஏசு மானுவேலரே – ஆ நரர்**

1. மாசற்ற தேவனார் மைந்தப்பிரதாபரே
ஏசுக்கிறிஸ்து நாதரே ஆசை மானுவேலரே

2. பிரயாசத்தோரே பாரஞ்சுமந்தோரே
கிருபைப்பிதாவாரே இயேசு மானுவேலரே

3. நெரித்த நாணல் முறியார் பொரித்த திரி அவியார்
நிர்ப்பந்தரைத் தள்ளாரே இயேசுமானுவேலரே

4. கெட்ட குமாரர்க்கு கிருபைப் பிதா வந்தார்
இட்ட பிரசாதத்தோரே இயேசு மானுவேலரே

**5. சத்துரு செய்வதென்ன சர்ப்பம் பொரிவதென்ன**
**ஸ்திரீவித்தார் வந்தாரே இயேசுமானு வேலரே**

**6. சீயோன் குமாரியரே சிங்காரக்கன்னிமாரே**
**நாயகன் வந்தாரே இயேசு மானுவேலரே**

**7. நித்திய விவாகமே நீடிய சிநேகமே**
**பத்தினி மாதராரே இயேசு மானுவேலரே**

**43. இராகம், ___ர்பார் ரூபக தாளம் (254)**

**பல்லவி**

**அன்பின் ரூபம் நீ அரிய**
அன்பின் ரூபம் நீ

**அனுபல்லவி**

இன்பலோக ராஜாவின் ஏசுமைந்த ஜேசே – அன்பின்

1. சுத்தர் சுத்தர் சுத்தர் என்னத்துதிக்கும் சேனை ஜொலித்துமின்ன
நித்தியக்ருபைப்ரசன்ன நேயஜீவனே
பக்தியற்றோர் பவம் போக்கி பரிசுத்த பிரான் கோபம் நீக்கி
மத்தியஸ்தம் செய்யநோக்கி மனுடனான மகிமைத்தேவா

2. வானம், புவி, வாக்கினாலே, மானிட உடல் கரத்தினாலே
ஞானமாய்ச் செய் தருளினாலே நடத்தும் சுவாமியே
நானிலத்தைப்புரக்க ஈண்டு தாம் அடியவர் உருவம்பூண்டு
மான ஈன வறுமை சூழ்ந்து மாட்சிமை யெலாம் மறந்த
உன தன்பின்

3. மாறாத கருணைவாயா, வறியமக்களுக்கருள் சகாயா
சேராபீம் பணியுந்தூயா சிறுமைதீர் மெய்யா
மீறாத மறைவிலாசா வேதியர் புவியரசர் நீச
ரீறாக எவர்க்கும் நேசா, ஏசுவே தாசரேம் எமதன்பின்

## 44. இராகம் (தருணத்தில் எனக்குதவி செய்யுமேன்) (255)

**பல்லவி**

**தேவன் மனிதனான விந்தையைச்**
சிந்தித்துக்களிகூருங்கள் – ஒரு
சிறிய பாலனாக வந்ததை
சேரவந்திதோ பாருங்கள்

**அனுபல்லவி**

தூதருமே உற்றுப்பார்க்கிறார் – ஒன்றுந்
தெரிந்திடாமலே திகைக்கிறார் – மிகு
தேசுறு மேலோக வாசமகன்று இந்
நீச உலகினில் மேவியே – தேவன்

1. பெத்தலேகேம் நகர் வாருங்கள் – அதில்
சத்திரத்தண்டையில் சேருங்கள்
பத்தியத்தை உற்றுப்பாருங்கள் – யேசு

படுத்திருப்பதைப் பாருங்கள் – கந்தைத்
துணிகளை உடுத்திருக்கிறார் – கனி
பாலகனாய் பெயர் தரிக்கிறார் – என்றும்
கர்த்தத்துவங்கள் பெற்றிடும் நித்திய
சுத்த திரித்துவத்தொன்றவர் – தேவன்

2. சங்கீத கீதங்கள் முழங்குதே – விண்ணில்
எங்கும் எதிரொலி துலங்குதே – அருள்
திங்கள், புவி கதிர் மங்குதே – தூதர்
சங்கம் துதி மொழி வளங்குதே – விண்ணில்
துங்கனுக்கு புகழ் ஸ்தோத்திரமே – புவி
யெங்குமிகு சமாதானமே – மனு
சந்ததி சந்ததமுந் தயவடைந்து
தழைத்துப் பெருகி வாழவே – தேவன்

3. சந்தோஷத்துடன் ஆடுகள் – மிகு
கெம்பீரத்துடன் பாடுங்கள் – நல்ல
சகல வாத்தியம் முழங்கவே – சங்
கீதமெட்டுகள் விளங்கவே – ஓகோ
பாவிகளே கலங்காதேயும் – பவ
பாரம் தீர்ப்பவா இவரல்லோ – அதி
பட்சமுற்ற கிறிஸ்து யேசுவின்
பாதத்திற் களிகூறுங்கள் – தேவன்

4. சுருதிமொழிகள் பகர்ந்து – ஒரு
சோர்வுமின்றியே நேர்ந்தது – திரு
அருமைத் தேவன் ரூபமாகிய
அன்புமே பெரிதானது – அந்த
காரம் நீக்கின ஒளியல்லோ – அனை
வருக்குமே தகுமொளியிது – நம
தாண்டவர் சன்னிதியில் நின்று
தோன்றிய பரவொளியிது – தேவன்

45.

**இத்தரையில் என்னை மீட்க ஏழையாக வந்தவா**

பெத்தலையில் பிறந்த மன்னவா!

**பல்லவி**

பாடுவேன் பாடுவேன் உன் திரு நாமத்தை
தேடுவேன் தேடுவேன் தேடுவேன் உன திவ்ய நாமத்தை
என்னைத் தேடிவந்த ஏசு நாதனே (2 தடவை)

2. பெற்றதாயும் தந்தையும் எனின் பிரிய ஏசுவே
பேணி என்னைக் காப்பவரும் நீரல்லோ – பாடுவேன்

3. ஆடையாபரணங்கள் ஆகாரமும் நீர்தானல்லவோ
ஆஸ்தியும் சம்பாத்தியமும் நீரல்லோ – பாடுவேன்

4. நித்தம் நித்மும் நினைக்கும் சத்தியமும் நீரல்லோ
பித்தனைப் பிரபாக்குவோரும் நீரல்லோ – பாடுவேன்

5. ஏழை என்னைப் போதிப்பிக்கும் உபாத்தியாரும் நீரல்லோ
பாடங்கள் படிப்பதுவும் உம்மிலே – பாடுவேன்

**46. இராகம் (ஜெகஜோதிப் பராபரனே) (303)**

**பல்லவி**

**நாதப்பராபரன் தேவ மனோகரன் நரரூபமாகினார்**

**அனுபல்லவி**

ஆதம் ஏவை செய்த பாதகம் போக்கிட அன்னையிட மேவினார்

1. விண்ணுலகம் விட்டு மண்ணுலகம் தொட்ட விந்தை மகானந்தமே
பண்ணிசை பாடியே என்னேசு ரட்சகர் பாதம் பணிந்திடவே

2. தூயர்கள் போற்றவும் ஆயர்கள் ஏற்றவும் தோன்றின அச்சயனே
நாயனே நல்ல சகாயனே முற்பவ நாசனாம் ரட்சகனே

3. கைத்தாளம் சீரடி மத்தளம் பேரோலி கண் கண் கணீரெனவே
அத்தனே உன்னருள் சித்தமே வைத்தருள் ஆனந்தம் பாடிடவே

4. பெத்தலேகம் பதி சத்திரத்தில் கனி பெண்மடிமீதிடமே
சித்தம் உவந்து நீர் நித்திரை செய்கிற செய்தி நல் அற்புதமே

5. பக்தர்களும் பரிசுத்தர்களும் புகழ் பட்ச தயாபரனே
சித்தமுடன் வானமுத்தர்களும் மகிழ் செப்பும் நல் அற்புதமே

## 47. இராகம் (போற்றவாரும் பெத்லேம் நகாமீதினில்)

**பல்லவி**

**ஏற்றுசிந்தம் ஏகாம்பர சருவேசுரனை**
போற்றுமுக்தர் சுயாம்ப்ர கிருபாகரனை

**அனுபல்லவி**

சாற்றுமாமறை நூலதார் பேசிய
ஜகநாதன், குருபாதம் ஒருபோதும் மறவாமல்

1. பாலரை மார்போடணைத்த சித்திரக்கரன்
பாங்குபுரிய ஜலமீதில் நடனப்பதன்
செம்பொன் விளக்கேழின் மத்தியில் நடனம் செய்த
திருநாதன் திருப்பாதம் திரிகாலம் மறவாமல்

2. உம்பராயர்கள் புகழும் சிம்மாசனன்
ஓசன்னாவென்ற சற்பாலர் பண்ணின் பரன்
செம்பொன் விளக்கேழின் மத்தியில் நடனம் செய்த
திருநாதன் திருப்பாதம் திரிகாலம் மறவாமல்

3. கானகமதிற் பசித்தோர்க் கமுதளித்தவன்
கஸ்தியுற்றோர்கள் நோய் தீர்த்து ரட்சித்தவன்
ஞான உபதேசம் புரிந்து நேசித்த நம்
ராஜமகி டேசுரசிகாமணி இயேசரசை

4. தேவர்கள் எக்காளம் ஊதச் சுப்ரமேகத்
தேரேறி விண்ணூடு சென்று சம்பிரமாக
யாவருக்கும் சிங்காசனம் வீற்றுத் தீர்வைசெய்யும்
ரட்சகனை வச்சிரமணி மெச்சிப்பொரு ளர்ச்சனைசெய்

## கிறிஸ்துவின் பவனி

**48. பியாகு ஆதிதாளம் (39)**

**பல்லவி**

**ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே**
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னா

**சரணங்கள்**

1. சின்னமறி மேலே ஏறி அன்பர் பவனி போனார்
இன்னுமவர் என்னகத்தில் வந்து அரசாளுவார் – ஓசன்னா

2. முன்னும் பின்னும் சாலேம் பாலர் இன்பமாகப் பாடினார்
அன்று போல இன்றும் நாமும் அவர் துதி பாடுவோம்.
– ஓசன்னா

3. குருத்தோலை ஞாயிறில் நாம் குருபாதம் பணிவோம்
திரு அருள் ஆவி பெற்று திரியேகரைப் போற்றுவோம்.
– ஓசன்னா

**49. யமுனா கலியாணி ரூபக தாளம்**

**பல்லவி**

**பவனி செல்கின்றார் ராஜா – நாம்**
பாடிப்புகழ்வோம் நேசா.

**அனுபல்லவி**

அவனிதனிலே மறிமேலேறி ஆனந்தம் பரமானந்தம் – பவனி

1. எருசலேமின் பதியே சுரர் கரிசனையுள்ள நிதியே
அருகில் நின்ற அனைவர் போற்றும் அரசே எங்கள் சிரசே!
–பவனி

2. பன்னிரண்டு சீஷர் சென்று, நின்று பாங்காய் வஸ்திரம் விரிக்க
நன்னயஞ்சேர் மனுவின் சேனை நாத கீதம் ஓத. – பவனி

3. குருத்தோலைகள் பிடிக்க, பாலர் கும்புகும்பாகவே நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று போற்ற மனந்தேற்ற
– பவனி

4. பெரியோர்களும் தடுக்க, நல்ல வறியோர்களும் அடுக்க
தெரியாதோறும் ஆவியாலே தேட அருள் நீட - பவனி

5. வேதபாரகர் மயங்க தம் வேத சாஸ்திரம் இலங்க
பாதகமதைத் தொலைக்கும் யேசுபாலன் தேவசீலன் - பவனி

**50. காம்போதி ஆதி தாளம் (41)**

**தேவாசனப்பதியும் சேனை தூதரை விட்டு**
தேவர் குலமாய் வாரதாரையா? இவர் தேவனுரைப்படி
பாவ வினைப்படி
ஏவை மனப்படி, ஆவல்மிகப்படி வணங்கும் ஜெகஜோதிப்
பொருள் தானையா

2. முன்னணி பின்னணியிலோசன்னா! ஓசன்னாவென
ஓர் மறியின் மீதில் வாரதாரையா? இவர் உத்தமனேசனாம்
சத்திய போசனாம், பக்தரின் வாசனாம், நித்திய ஈசனாம்
உன்னதத்தின் மேன்மைத் தெய்வம் தானையா

3. வழியில் மரக்கிளைகள் வரிசையதாய்ப் பரப்ப
வஸ்திரமீதில் வாருவதாரையா? - இவர்
வல்லவராங்குரு, சொல் தவறாக்குரு, நல்லவராங்குரு,
துல்லிப சற்குரு, வரமிகுந்த சற்குருநாதனையா

4. பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திடவும்
பாவலருடன் வாரதாரையா? - இவர்
பசியற்றிருந்தவர், புசிப்பற்றிருந்தவர், வசையற்றிருந்தவர்,
அசைவற்றிருந்தவர்,
பாவ விமோசன ராஜன் தானையா

5. சீயோன் குமாரியிடம் நேயமதாகத்தேடிச்
சிங்காரமாய் வாருவதாரையா? - இவர்
சீருற்றதிபனாம், பேர்பெற்றிறைவனாம் பாருற்றதிபனாம்,
வேருற்றெழுந்தனாம்,
சீவ வழி சொல்வரிவர் தானையா!

6. எருசலேம் வீதி வழி பெரிய திரளுடனே குருத்தோலை வீச
வரதாரையா? – இவர்
அரிவை பவமற, பெருமை நிதந்தர, கிருபை துரந்தர,
அருமை நிரந்தர
ஏசுக்கிறிஸ்தென்றவர் தானையா

## கிறிஸ்துவின் பாடு

**51.** **(42)**

**கன்னிமரி பாலனே கருணைமனுவேலனே**
எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும் சுவாமி

2. குருசிலறையுண்டவா சிலுவையில் மாண்டவா
எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும் சுவாமி

3. ஐந்து திருக்காயனே அண்டினோர் சகாயனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி

4. உதிரப் பிரவாகனே உலகோர் பவநாசனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி

5. பரிசுத்த ஏசுவே பரலோக ராஜனே
பாவம் மன்னித்தோம் என்பீர் சுவாமி

6. தன்னுயிர் தந்தவா சாவா உயிர் தந்தவா
சரணம் சரணமே ஆமென் சுவாமி

**52. பியாகு** **ரூபக தாளம் (43)**

**அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போறாரடி**
மன்னவனார் நமக்காக தம்மை பலியிடப்போறார்.

2. இன்னும் என்ன செய்யப்போறார் கன்னியரே சோரி சிந்த
என்னருமை ஏசுபரன் சின்னப்படப் போறாரடி.

3. பன்னிரு சீடர்களில் பண ஆசை கொண்ட யூதாஸ்
மன்னர் புகழ் தேசிகரை காட்டிக்கொடுக்கத் துணிந்தான்.

4. ஆகடிய யூதர் கூடி அண்ணல் திருக்கரத்தைக் கட்டி
தேகம் நொந்து துடிக்க ஓங்கி ஓங்கி அடித்தார்.

5. பித்தனென்று வெள்ளை அரைச்சட்டை ஒன்று தானுடுத்தி
பேதக ஏரோதே அவன் பேசிப் பரிகாசம் செய்தான்.

6. குப்புற விழுந்தே துயர் அற்புதனடைந்தாரடி
எப்பொருளான திரியேக வஸ்து நமக்காக

7. கொல்கதா மலைதனிலே குருசதிலே தான் மரிக்க
கோதில்லா நீதிபரன் போறார் அதோ பார் சதியே

8. பாரச்சிலுவை சுமந்து பாதகரோடே நடந்து
போற துயரறிய பொங்கி மிக மனம் நொறுங்கி

9. வாசகன் ஏசு திருபாடுகளைத் தானுணர்ந்து
நேசமதாய் தாசர்களும் சாற்றித்துதி பாடிடவே

## 53. சிங்கள இராகம் (44)

**பாதகனாய் நானலைந்தேன் பாவி என்றுணராதிருந்தேன்**
தத்தளிக்கும் ஏழை வந்தேன் சத்தியரே யாவும் தந்தேன்

2. மன்னா உந்தன் விண்ணைவிட்டு மண்ணில்வந்து பாடுபட்டு
மரித்தடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தீர் என்னை மீட்டு

3. உந்தன் பாடு கஸ்தியாலாம் வந்ததெந்தன் பாக்கியமெல்லாம்
இம்மை செல்வம் அற்பப்புல்லாம் உம்மைப்பெறவிட்டே
னெல்லாம்

4. சிரசுக்கு முள்ளால் முடி அரசின் கோல் நாணல் தடி
நீர் குடிக்கக் கேட்டால் ஒடி ஒர் பாதகன் தந்தான் காடி

5. கெத்சேமனே தோட்டத்திலே கஸ்திப்பட்ட என் அண்ணலே
சொந்த ஜனம் நாங்களாக வந்துபட்டீர் பாடுமிக

**54. காப்பி** **ஆதி தாளம் (45)**

**பல்லவி**

**பாடுபட்ட ஏசையா பாட்டுபலன் தா ஐயா**

**அனுபல்லவி**

கேடுகெட்ட மானிடர் மேல் கிருபை பரிபாலித்தாய்

1. கள்ளனைக் கண்பார்த்து விண்ணில் சேர்த்த கருணகரா
சொல்லி முடியாத பாவம் செய்த கள்ளன் நானையா

2. மறுதலித்த சீடனுக்கு மாப்புச் செய்த ஆண்டவா
பொறுதிவைத்தென் பாவமுற்றும் போக்கியருளப்பனே

3. கொன்ற பொல்லா யூதருக்காய் மன்றாடினையே மெய்யாய்
நன்றிகெட்ட பாவி எந்தன் ரண்டகங்கள் தீரையா

4. முட்கிரிடம் தாங்கி ஜீவ பொற்கிரீடம் வாங்கினாய்
துட்டனெனக்கும் ஒர் சிறு பொற்கிரீடம் தா ஐயா

**55. இராகம் (இராக்காலம் காத்தருட)** **(46)**

**அப்பா நின் சிந்தமென்று அருமை மகன் கூவினதும்**
அப்பா நின் சித்தமென்று அரும்பாடடைந்ததுவும்

2. வானத்திலேயிருக்கும் வல்லவரின் தூதனவன்
வையகத்தை மீட்க வந்த வல்லவரைத் தேற்றினதும்

3. நெற்றியினால் வேர்வை சிந்தும் நீசராம் எங்களுக்காய்
நித்தியனார் பொன் மேனி ரத்தமதாய் பொங்கினதே

4. ரத்தமதாய் பொங்கி நிற்கும் நேசர் முகம் பாராயோ
பார்த்தால் உன் பாவமெல்லாம் பஞ்சாகுமென்றாரே

5. பாதகராம் நாங்கள் செய்த பாதகத்தை நீர் சுமந்து
தேவ கோபாக்கினையின் செக்காட்டப்பட்டீரோ

6. செக்கதிலே ஆட்டப்பட்டீர் சென்னீர் வடியவிட்டீர்
தேவ கோபாக்கினையின் தீயை அணைத்துவிட்டீர்

7. தீயை அவித்ததினால் தீபாவி மோசமற்றேன்
மோட்சத்துக்காளானேன் முதல்வா உனின்கிருபை

8. உன் கிருபை எண்ணி எண்ணி உன்மேல் நிதம் உருகி
என் பாவத்தைத்தள்ள இறைவா துணைபுரியும்

9. பாவத்திலே நிலைக்கும் பாவியே உன்னுடைய
பாடு பரிதாபம் பாழ் நரகுன்பங்காகும்

10. பாழ்நரகில் பங்கடைய பாருலகில் ரட்சகரும்
பாடுபட வந்ததில்லை பார்த்துணர்ந்து கொள்வாயே

11. பார்த்து மனதுணர்ந்த பாவமதை நீ வெறுத்தால்
பார்த்திபனார் தன்வலத்தில் பாக்கியமாய் ______

12. வாழ்ந்திருக்கவென்று வருவார் திருச்______
வாழ்ந்திருக்கும் வெளைதனில் வாழ்த்______

13. வாழ்த்திப் புகழ்ந்திடுவார் வானோர்______
வாழுவாய் நீடுழிகாலமெல்லாம் வா______

**56. தன்யாசி** **ஆதி தாளம் (47)**

**பாவி நான் செய்த பாவம் தீர்க்க – இந்த**
பாரிலொர் ஏழைரூபம் தேவன் எடுத்தாரே

2. காவிலே ஏவை செய்த பாவம் – இந்தக்
காசினியெல்லாம் பரவக்கண்டதே மாசாபம்

3. மேவியே தேவனுட கோபம் – தலை
மேற்சுமந்து தீர்க்க மடிந்தாரே பரிதாபம்

4. மோதியே ரத்தவேர்வை ஓட – காவில்
மும்முறை முழந்நாள் நின்று கெஞ்சியே மன்றாட

5. ஜாதியோர் மூர்க்சங்கொண்டு மைத்தேட–தஞ்ச
மென்று எண்ணியேயிருந்த சீஷர்முகம் வாட

6. மெய்யெல்லாம் புண்களாக நோக–சாலேம்
வீதிவழி ஏகுதே ஓர் ஆடெனக்காய் சாக

**57. நாதனாமக்கிரியை** **சாப்பு தாளம் (48)**

**காவில்நீர்பட்ட ஆத்துமக்கஸ்தியை**
கலகத்தால் பாய்ந்த குருசின் வேர்வையை
தேவரீர் சின்னமாயங்கே பாவிபோல்
சிறந்ததை அறிவேன் என் நேசரே இறந்ததை மறவேன்

2. வனங்குமிறிட பூமி யதிர்ந்திட
மன்னனாலயத்திரை ரண்டாய்க் கிழிந்திட
மரித்த பக்தர்கள் கல்லறை திறந்திட
மானுவேல் மரித்தார் நமது ராஜன் ஜீவனை விடுவித்தார்

3. கள்ளன்போல் திருவள்ளலைக் கட்டியே
காவல்செய்து கற்றூணின் சேர்த்திறுக்கியே
வெள்ளம்போல் ரத்தம் பீறிடவே தேகம்
வேந்தனையடித்தார் அவர் வெகு சாந்தமாய் பொறுத்தார்

4. தீதற்றவர் பெருஞ்சிலுவையைத் தூக்கியே
சீரற்றவரால் கொலைக்களம் மேவியே
மாசற்றவர் பாதம் மாதம் புலம்பவே
வல்லவன் நடந்தார் பலபுத்தி சொல்லியே விரைந்தார்

5. கரங்களாணி கடாவிய காயமும்
கரமும் சிதைத்திட புதைத்த முண்முடியுடன்
விலாவில் ஈட்டியால் துளைத்த வதையோடு
விமலனே ஏங்கினார் சிலுவையில் கவலையாய்
தொங்கினார்

**58. சங்கராபரணம் ஆதி தாளம் (49)**

**அருவுருவே நரருருவாய்**
என்னிமித்தம் இது தருணம் ஏன் வருத்தமாம்
எனதேசுவே ஐயா – நீர்
அவஸ்தையுறக் காரணமேன் ஆதிமொழியாலோ

2. பொற்கிரீடம் அணி சிரசில் என்னிமித்தம்... ஐயா – நீர்
போதநொறுங்குண்ட தேவை பொற்கொடி செய்வினையோ

3. அருட்கரங்கள் இரண்டிலேயும் என்னிமித்தம் ஐயா – நீர்
ஆணி அறையுண்ட தேவைஅறுத்த கனி வினையோ

4. தீருவிலாவில் ஈட்டியினால் என்னிமித்தம்... ஐயா – நீர்
திறக்கமனங்கொடதேனோ தேவனுரைதானொ

5. பங்கையப் பூபாதமதில் என்னிமித்தம்... ஐயா – நீர்
படுகாயமான தாதி பகர்ந்த மொழியாலோ

6. சோரி சிந்தும் வேர்வையதலால் என்னிமித்தம் ஐயா – நீர்
சோர்ந்து விழுந்ததென்ன சேரார் பவச்சுவமையோ

7. துய்யதிருமேனி யெல்லாம் என்னிமித்தம் ... ஐயா – நீர்
நொய்ய உழப்பட்டதென்ன துய்ய உரைப்படியோ

8. வண்மையுடன் உடல்கிழிய என்னிமித்தம் ... ஐயா – நீர்
வாரடிகள் பட்டதேனோ வஞ்சகி செய்வினையோ

9. தேவனுமாய் மனுஷனுமாய் என்னிமித்தம் ... ஐயா – நீர்
தேடிவந்த காரணமேன் தேவனுரைதானோ

10. ஆவியிலே தேவனையாய் என்னிமித்தம் … ஐயா – நீர்
அழுது கெஞ்சும் காரணமேன் ஆதி மொழியாலோ

11. கன்னியர்க்குள் நானோருபெண் என்னிமித்தம்… ஐயா– நீர்
கஸ்தியுறக் காரணமேன் கருணையினாலோ

**59. இராகம் (ஏசு துரை சுவாமியை) (50)**

**பல்லவி**

**பந்திவிட்டெழுந்தார் பரம என் ராஜா**

**அனுபல்லவி**

பன்னிரு சீடருக்கும் பணிவிடை செய்யவென்று

1. வஸ்திரம் கழற்றி மறு சேலையை எடுத்து
அரையிலே கட்டிக்கொண்டு அவர் செய்த செய்கைகளை
– பந்தி

2. பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு சீஷரண்டை வந்து
சீஷருட கால்களையும் சீக்கிரம் கழுவினாரே – பந்தி

3. கட்டியிருந்த தமது சேலையால் துடைத்தார்
கடந்த பேதுருவையும் கழுவவும் நின்றார் – பந்தி

4. நானுன்னைக் கழுவாவிட்டால் அருமைப் பேதுருவே
என்னிடத்தில் பங்குமில்லை என்றுனக்குச் சொல்லுகிறேன்
– பந்தி

5. மெய்யாகவே மெய்யாகவே உங்களிலொருவன்
என்னைக் காட்டிக்கொடுப்பானென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன் – பந்தி

6. பன்னிருசீடர்களும் நானோ நானோ வென்றார்
காட்டிக்கொடுக்கும் யூதாசும் நானோரபி என்றான் – பந்தி

## 60. இராகம் (சரணம் சரணம் அனந்தா) (51)

**தேவசுதன் பூவுலகோர் பாவமெல்லாம் தீர**
திரு மரணமான செய்கை சிந்தை செய் என்னுள்ளமே

2. எருசலையில் ஈராறு சீஷருடன் பஸ்கா
திருவிருந்தை ஆசரித்துச் சென்றவா செத்சேமில்

3. கெத்சேமில் சீஷர் பதினொருவருடன் சென்று
கெஞ்சி ஒரு ஜெபமுறையை மிஞ்சி அவர் செய்ய

4. செய்த நமதாண்டவரின் திருமேனி எல்லாம்
செந்நிறமாய் சிவந்துடலில் சோந்த ரத்தமெல்லாம்

5. ரத்தமெல்லாம் வேர்வையதாய் புற்றரையிலோட
ரட்சகனார் அயர்ந்துடனே குப்புறவே விழுந்தார்

6. கண்டவுடன் சீஷரோடு கர்த்தர் எதிர் வரவே
கன்னமதில் முத்தமிட்டுக் காட்டினான் யூதாசே

7. யூதாசு காட்ட அந்த யூதர் பிடித்துடனே
யுகம் வனைந்த கரமயையோ மிக நெருங்கக்கட்டி

8. கட்டிவரும் வழியிற் செய்த நிஷ்டூரமெல்லாம்
கண்டு கல்லும் உருகிடும் அதை சொல்லவும்
நாவில்லையே

9. நாவினாற் சொலற்கரிய நடபடிக்கை நடந்த
நாயனைக் காய்பாமனையில் நாட்டமாய் சேர்த்தாரே

10. சேர்த்த பின்னன்னா காய்பா தேவசுதன் தன்னை
செய்து நிந்தை மிகுதியல்லோ செருசலையோர் காண

**61. கெவுளி பந்து** **அட தாளம் (52)**

**ஆதம்புரிந்த பாவத்தாலே மனுடனாகி**
வேதம் புரிந்தென் சிறை விடுத்தீரோ பரனே

2. ஏவை பறித்த கனியினால் வளைந்ததெல்லாம்
பாவத்துக்காக பலியானீரோ பரனே

3. வேதகற்பனை யனைத்தும் மீறி நரர் புரிந்த
பாதகம் தீரப் பாடுபட்டீரோ பரனே

4. தந்தைப் பிதாவுக்கும்மை தகனபலியளித்து
மைந்தரை மீட்க மனம் வைத்தீரோ பரனே

5. சிலுவை சுமைபொறாமல் தியங்கித் தரையில் விழ
கொலைஞர் அடர்ந்து கோட்டிகொண்டாரோ பரனே

6. வலிய பவத்தை நீக்கி மனுடரை ஈடேற்ற
சிலுவை சுமந்திரங்கித் திகைத்தீரோ பரனே

7. சென்னியில் தைத்த முடி சிலுவையின் பாரத்தினால்
உன்னியமுந்தத்துயர் உற்றீரோ பரனே

8. வடியும் ரத்தங்களோடு மறுகித் தவித்து வாடி
கொடிய குருசில் கொலையுண்டீரோ பரனே

9. வானம் புவி படைத்த வல்லமைப் பிதாவின் மைந்தா
ஈனக்கொலைஞர் கையால் இறந்தீரோ பரனே

10. சங்கையின் ராஜாவே சத்ய அனாதி தேவே
பங்கப்பட்டு மடியப்பட்டீரோ பரனே

**62. (இராகம்: வாரா வினை வந்தாலும்)** **(53)**

## 1-ஆம் வார்த்தை

### பல்லவி

**சாமி இவர்க்கிதை மன்னியும் சாமி**

1. சாமி எனவறியாமற் செய்தார்கள்
சற்றுமிரக்க மற்றேறிருந்தார்கள்

2. தாங்கள் செய்வதின்ன தென்றறியார்கள்
தற்பரனும்மை இங்காரறிவார்கள்

3. முள் முடி சூட்டி எனைப் பழித்தார்கள்
மூங்கிலெடுத்ததன் மெலடித்தார்கள்

4. நீசச் சண்டாளரென கண் கட்டினார்கள்
நீ சொல்லிப் போடெனவே சூட்டினார்கள்

5. கன்னத்தடித்து கதிக்க வைத்தார்கள்
மன்னனே என்று பகடி செய்தார்கள்

6. எந்தன் முகத்தினிலே துப்பினார்கள்
எத்தனை எத்தனையோ செப்பினார்கள்

7. பொய்யான சாட்சிகளைக் கூட்டினார்கள்
போதனை செய்து குற்றஞ் சாட்டினார்கள்

8. வாரதினாலெனையே அடித்தார்கள்
வாதை அநேகஞ் செய்தே முடித்தார்கள்

9. பாதகஞ் செய்தவனை விடுத்தார்கள்
பாழ்மரத்தை எனின் மேலே கொண்டார்கள்

10. கால்கரத்தாணி கடாவி வைத்தார்கள்
கள்ளர் நடுவில் மரிக்க வைத்தார்கள்

11. வஸ்திரமெல்லா முரிந்து கொண்டார்கள்
கஸ்திப்படுத்தி வதைத்துக் கொன்றார்கள்

**63. இராகம் (இந்துஸ்தானி) (இம்மணர்க்குன்னருள் ஈபரவாசா) (54)**

**2-ஆம் வார்த்தை**

**இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில்**
என்ற நல்வாக்கு இப்பாவிக்கு ஈந்தருள்

கர்த்தா நும் ராச்சியத்தில் சேரும் போதென்னையும்
கருத்தாய் நினைத்திடுவீர் என்ற கள்வனைப் போல்

**64. செஞ்சுருட்டி** **சாப்பு தாளம் (55)**

**3-ஆம் வார்த்தை**

**ஐயோ என் செல்வச்சீரா ளசிகாமணியை**
சிலுவையில் மடிய விட்டு – ஓகோ
கொடுமையாய் அடிமை நான் குவலயமீதினில்
கூவென்றலறி நிற்கின்றேன்

2. பெற்றதில்லையென்று பெண்கள் நகைத்தாலும்
பேதை துயரில்லையோ – ஓகோ
பெற்றதினால் மெத்தப் பெருந் துயர் வாதைகள்
பெரிதாயடையலாச்சோ

3. பாரினில் உள்ள பெரியோரின் பெண்களும்
பார்த்தெதிர் காத்திருக்க – ஓகோ
பாவி என் வயிற்றினில் பெரும்பாடடைவோ
பரனார் வந்துதித்தார்

4. அன்று சம்மனசு கிருபை பெற்றவளென்றார்
இதுவோ கிருபையம்மா – ஓகோ
அன்று சிமியோன் சொன்ன மொழி தவறாமலே
வந்து பலித்ததுவே

5. மூன்றரை ஆண்டாக முக்கிய நன்மைகள்
மிகப்பெற்ற யூதாசே – ஓகோ
முப்பது வெள்ளிக்காய் முத்தமிட்டு அங்கே
மூர்க்கரைக் கூட்டி வந்தாய்

6. ஐயோ பிலாத்துவே அநியாயத் தீர்ப்பிட்டாய்
ஆறுமோ என் மனது – ஓகோ
பரபாசை விட்டுப் பின் பரனைக் குருசறையக்
கரமது கழுவினையோ

7. எருசலேம் வீதியில் குருசோடு சென்ற என்
செல்வக் குமாரனெங்கே – ஓகோ
எருசலேம் மாதரே என் இயேசு நாதரை
இங்கு வரக் கண்டதுண்டோ

**65. காப்பி** **ஆதி தாளம் (56)**

**பல்லவி**

**என் செய்வேன் மகனே நான்**

இதற்கோ உன்னைப் பெற்றெடுத்தேன்

**அனுபல்லவி**

இறையோ பவச் சோதனையோ இப்படி முடிந்திட

1. இப்போ நான் வாடிநிற்க இக்கட்டு வந்ததையோ
சிலுவையின் மீதினிலோ ஜீவனும் போகுதையோ
அன்பே முன்பே ஆதரவில்லை ஐயா - என்

2. நேசன் யோவானையுமே நியமித்தாய் என் மகனே
நின்னையும் நான் நினைத்த நெஞ்சமோ ஆறுதில்லை
நினைவே கனவே நிலையில்லா தலைவேனே - என்

3. சாவுரு வேளை தனில் சான்றோர்களை நினைந்து
சற்குருநின் போதனையைச் சரிவர சாற்றிவைத்தாய்
கர்த்தா கர்த்தா காரும் என்னையே - என்

4. ஐயையோ பாலகனே அதிசயமாய் வந்துதித்தாய்
அருமையாய் வளர்ந்திங்கு அவதிக்குள் அமைந்தனையே
அருமைத்திருமைந்தனே வயிரெறியுதையோ - என்

5. யூதருந்தன் கன்னத்திலடிக்க நீர் துடி துடிக்க
கண்ணினால் பார்த்திருக்க கன்னியோ நானிருக்க
கருவாய் உருவாய் எனில் வந்துதித்தவனே - என்

6. பாவிகளைத் தேற்ற பாவக்கறை அகற்ற
படுகிற பாடுகளை நான் பார்ப்பேனோ என் மகனே
பலமாய் உரமாய் அடிகள் விழுகுதையோ - என்

7. கன்னத்திலடிபடவும் கனத்த சிலுவை தூக்கவும்
கள்ளரோடடிபடவும் காலமோ என் மகனே
கருத்தாய் உரித்தாய் கரத்தால் எடுத்தேனே - என்

**66. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (57)**

**4-ம் வார்த்தை**

**பல்லவி**

**ஏலி ஏலிலா மா சபக்தானி**

சால மெஞ்ஞானி சர்வத்தைத் தியானி

**சரணங்கள்**

1. நேச குமாரன் என்று சொன்னீரே
பாசமில்லையோ பரம செங்கோலா - ஏலி

2. பலர் படும் பாட்டை ஒருவர் சுமந்தால்
நிலைக்குமோ தேகம் நிமிஷ நேரம் - ஏலி

3. இறுக்குது தொண்டை இடிக்குது மண்டை
நொறுக்குது நோவு பொறுக்க ஏலாது - ஏலி

4. மகனையும் மறக்க மனமும் வந்ததுவோ
ஜெகத்தோர்க்காய் வந்த தன் பலனிதுவோ - ஏலி

5. பாவிகள் படும்பாடு போதாதோ
காவலனீரும் கைவிடலேதோ - ஏலி

## 67. இராகம் (உந்தன் ஆவியே சுவாமி)

**5-ம் வார்த்தை**

**பல்லவி**

**தாகமானீரோ ஏசுதற்பரா சுவாமி**
தாரணியோர் மேல் கடும் தாகமானீரோ

**சரணங்கள்**

1. நித்திய ஜீவநதி நீரூறுணியே
நீசக்குருசில் சுவாமி தாகமானீரோ - தாக

2. கடற்காளானோ கடும் காடியே உமக்
கான மானுகும் நல்ல கர்த்தனே சுவாமி - தாக

3. பாவியடியேன் உம்மில் பாச நேசமாய்
ஞான தாகத்தில் வெகு நாட்டங்கொண்டீரோ - தாக

4. நாவும் வறண்டு மெல்நாவோடே ஒட்டி
யாவும் இருண்டுவரத் தாகமானீரோ - தாக

5. பாவிகள் திவ்விய மோட்ச பாக்கியம் சேர
பாடுகள் பட்டு சுவாமி பாரக்குருசில் - தாக

6. தேவ வசன ஞான திவ்விய பாலில்
தேட்டமாய் நானும் என்றும் தின்று பருக - தாக

7. உந்தன் மாமிசம் ரத்தம் போஜன பானம்
எந்தன் ஜீவனுக்கென்றும் ஏற்றதாய்க் கொள்ள - தாக

**68. செஞ்சுருட்டி** **ரூபக தாளம் (59)**

**6-ம் வார்த்தை**

**பல்லவி**

**முடிந்ததென்றீரோ ஐயா**
முன்னாள் வினையான தெல்லாம்

**சரணங்கள்**

1. தேவப்பிதா சித்தமதைத் திட்டமாகவே
செய்து நிறைவேற்றி இப்போ சிலுவை மீதேறி நின்று

2. பூரணரான ஏசு புண்ணியக்கிரியை
பூர்த்தியாய் செய்து இப்போ பூமி விட்டேகுமுன்னே

3. வேண்டிய பாடனைத்தும் வேதனே தீரும்
தாண்டியே உத்தரித்து தாரணி விட்டேகுமுன்னே

4. தேவ கற்பனைகளெல்லாம் திடமாகவே
செய்தேன் மரணவாயில் செப்பவே இந்த வார்த்தை

**69.** **(257)**

**சரணங்கள்**

**அந்தோ சிலுவைப் பவனி பார் ஜோதி**
ஆண்டவர் படுந்துயர் ஆறுமோ
நான் அழுதாலுந்தான் தீருமோ
குருசன்றி மீட்பு ஒப்பேறுமா - சகி, சகி

2. தோளில் பாரம் அழுத்தவே – அவர்
தொய்ந்து கீழே விழுகிறார் – ஐயோ
தூக்கிவிடுவாரில்லையோ – மாதா
என்னால் வந்த தொல்லையோ – சகி, சகி

3. தூக்கென்றவரை அதட்டுறான் – ஒரு
தோஷி முறுக்காய் பிதற்றுறான் – அங்கே
துடுக்காய் சவுக்கை சுழற்றுறான் – ஒருவன்
தொந்தரவு செல்தலட்டுறான் – சகி, சகி

4. மெள்ள ஏசு நடக்கிறார் – வேர்த்து
மெய்சோர்ந்து மிக சடைகிறார் – தம்மை
விருப்போடு பலியாய்ப் படைக்கிறார் – என்
அடைந்த பாவக்கடன் அடைகிறார் – சகி, சகி

5. மாதா ஏங்கித் தேம்கினாள் – நன்மை
வாங்கினோர் புலம்பி ஏங்குறார் – சீமோன்
மனம் சோர்ந்து குருசை தாங்குறான் – ஐயோ
மறுகி யோவான் முகம் வீங்குறான் – சகி, சகி

6. சோலையில் வந்த பாவத்தால் – இதோ
சாலைவழியே போகிறார் – அலங்
கோலமாகி என்னால் சாகிறார் – தேவ
கோபாக்கினையில் வேகிறார் – சகி, சகி

7. கல்வாரி மலையில் ஏறுகிறார் – மிக
கருகி அன்னம் பருகிறார்– துயர்
காதல் மறுகியே சாகிறார் – பின்னும்
காருண்ய மொழிகள் கூறுகிறார் – சகி, சகி

8. பாறை சூடோ எரிக்குதே – திரு
பாதம் நெய்யாய் பொழியுதே – வான
பரனார் கிளைகள் தெரிக்குதே – கண்டு
பரதேசி ரத்னம் கண் கரிக்குதே – சகி, சகி

**70.**

**பல்லவி**

**பரலோகமே பாக்கியர் வாழும் நாடே**

நரலோகமே நான் உனை நாடுவேனோ

1. ஏசு என்னும் பரலோகமேயல்லாமல்
ஏது பரலோகம் ஏழைக்கு உண்டு
இன்பலோகம் என் ஏசு முகத்தில்
இலங்குதல்லோ சொர்க்க நாட்டின் வளம் – பரலோக

2. கிறிஸ்தவ ஜீவிய சொர்க்கமே உன்னை
கிருபையினாலடைந்த மகிழ்கிறேன்
சோர்ந்திடும் மக்கள் உன்னில் சுகபெலனடைந்து
ஜோதிப் பிரகாசமாய் ஜொலித்திடும் நாடே – பரலோக

3. ஆனந்தமே பரமானந்தமாச்சே
_____னியில் துயர் நீங்கச் சமயமுமாச்சே
_____ன் ஏசு வருகை அடுத்திடலாச்சே
_____இச்சந்தோஷங்கள் அடியேனுக்காச்சே – பரலோக

**71.**

**பல்லவி**

**தாசர் போற்றும் நேசா – எம் வாடாதின்பமே**

**அனுபல்லவி**

பாசத்தால் பரிசமிட்ட ஆசை மணவாளா
நாசவுலகில் எந்தனை அதரிக்கும் நாதா – தாசர்

1. நாதனும்மை நானிலத்தில் நாடிப்பின் செல்வேன்
மாயமான யாதுமின்றி அண்டிக்கொள்ளுவேன்
சாகரத்தில் நாதனும்மை நான் மறந்திடேனே
நாயகனாய் நடப்பதால் நன்றி மறவேனே – தாசர்

2. இன்பரின் இனிய சத்தம் இன்பமீயுமே
நிர்மலனே இன்பமொழி இன்று கூறுமே
இவ்வுலகம் ஈயுமின்பம் இதற்கிணையில்லையே
திராட்ச ரசத்திலும் இன்பம் தித்திக்குமென்தேனே – தாசர்

3. இன்ப துன்ப நேரத்திலும் இன்பமவரே
இன்றுமென்றும் மாறாச் செல்வம் நல்ல ஏசுவே
விண்ணின்பம் இங்களித்தார் என்ன இன்ப பாக்கியம்
ஈயுமோ இம்மாய வாழ்வு இவ்வித சலாக்கியம் – தாசர்

4. மாய லோகம் ஆஸ்தி செல்வம் மாறிப் போய்விடும்
வல்லரசு எனக்கென்றும் நல்ல தாரகம்
எல்லாவற்றும் எல்லாமாக ஏற்றுக்கொள்ளுவேனே
நாயகனும் நண்பனுமென் நாவிற்கு நல்தேனே – தாசர்

5. மன்னா உம்மைக் காணுததற்கு வாடுதே மனம்
எண்ணி எண்ணி நேசத்தினால், சோகமடைந்தேன்
தன்னைத் தந்து என்னை மீட்ட எந்தன் ஜீவநாதா,
மண்ணதிலும் விண்ணதிலும் அன்பின் ஜீவா வாவா– தாசர்

**72. இராகம் (இங்கிலீஷ்) (260)**

**பல்லவி**

**உருகாயோ நெஞ்சமே நீ குருசினிலந்தோ பார்**
கரங்கால்களாணி யேறித்திருமேனி நையுதே

1. திண்டுபோல எண்டிசையின் தொண்டர் பாவம்
ஆண்டான் மேலே
நின்றதே ஒ பண்டு ஏவை தின்ற சாபம் மண்டுதே

2. தாகம் மீறி நாவறண்டு தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து, எத்தனையாய் ஏங்குறார்

3. நித்தியகாலம் பாத்திரராய் நீசர் வாசஸ்தலம் உய்ய
சத்தியவாசன் சித்தமேவும் சங்கைராஜன் இங்கு பார்

4. மன்னுயிர்க்காய் தன்னுயிரை மாய்க்க வந்த மன்னவனார்
இந்நில மெல்லாம் புரக்க, ஈனக்குருசேறினார்

5. மூவுலகைத் தாங்கும் தேவன் மூன்று ஆணி தாங்கிட
சாவுவேளை வந்திப்போது சிலுவையில் தொங்குறார்

**73.** **(304)**

**கண்ணிகள்**

**நெஞ்சமே கெத்சமேனக்கு நீ நடந்து வந்திடாயோ**
சஞ்சலத்தால் நெஞ்சுருகி தயங்குகின்றார் ஆண்டவனார்

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவாரிங்காருமின்றி தியங்குகின்றார் ஆண்டவனார்

3. தேவகோபத் தீச்சூளைபில் சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய் தரையில் வீழ்ந்து அழுது ஜெபம் செய்கின்றாரே

4. அப்பாபிதாவே இப்பாத்ரம் அகலச்செய்யும் சித்தமானால்
எப்படியும் நின்சித்தம்போல் எனக்கா கட்டும்
என் கின்றாரே

5. இரத்த வேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க்கிவ் வாதைஏனோ

6. வானத்திலிருந்தோர் தூதன் வந்தவரைப் பலப்படுத்த
தானதிகச்சஞ்சலத்தால் முழந்தாளிட்டு வேண்டுகிறார்

7. தாங்கொணா நித்திரைகொண்டுதன் சீஷர்கள் உறங்கிவிழ
அங்கவர் தனித்திருந்து அங்கலாய்த்து வாடுகின்றார்

8. சுத்த நீதியுள்ளவரை சொற்ப பண ஆசையாலே
முத்தமிட்டு வாழ்கவென்று முன்னோனை விற்றானேயூதாஸ்

**74.**

**பல்லவி**

**அன்பே! அன்பே!! அன்பே!!**
ஆருயிர் உறவே
ஆனந்தம்! ஆனந்தமே!

**சரணங்கள்**

1. ஒருநாள்ந் தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா – என்மேல்
உம் தயை பெரிதையா – அன்பே!

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரிலன் பேனையா
ஆழம் அறிவேனோ – அன்பின்
ஆழம் அறிவேனோ – அன்பே!

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே – எனையும்
அணைத்தீர் அன்பாலே – அன்பே!

4. பூலோகத்தின் பொருளில் மகிமை
அழியும் புல்லின் பூவைப்போல
வாடாதே ஐயா – அன்பு
வாடாதே ஐயா – அன்பே!

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ – பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ – அன்பே!

75. (60)

**7–ஆம் வார்த்தை**

**ஒப்பாரி**

**சிலுவைதனில் உயிர் பிரிய திருமகனார் முகநோக்கி**
தேவ அன்னையும் கூவி அழுதாள் – வெகுவாய்

2. உலகமதிலிருசோரரர் நடுவாக மரமீதில்
உறங்குவதும் சுகமாச்சுதோ – மகனே, மகனே

3. ஐயாயிரர் பசியை அமர்த்தி அரவணைத்த
அருட்கை அயர்ந்து சோர்ந்ததுவோ – மகனே, மகனே

4. பல பல பேரவமாக சரசமோடு தாராட்ட
பாங்குதனில் நித்திரையானீரோ – மகனே, மகனே

5. சங்கிலி துரட்டி கசைவார்முள் பிரம்படியால்
சரீர பெலவீனமானீரோ – மகனே, மகனே

6. ஆங்குமுன் சொற்படி சோர்வை எல்லாம் திரண்டு
அம்புவியில் வெம்பினேனே – மகனே, மகனே

7. காவைதனிலே யேவைகனிதின்ற பாவமதால்
காடியோ குடித்தீரையா – மகனே, மகனே

**76. இராகம் (இங்கிலிஷ்)** (61)

**கல்வாரி சிலுவையில் தொங்கி ஜீவனை விட்டீர்**
மானிடரிதயத்தில் நன் மாறுதல் செய்ய நீர்
மாசற்ற ஜீவநதி பாவம் போக்கத் திறந்தீர்
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில்

**பல்லவி**

அக்கல்வாரி அக்கல்வாரி எனக்கேசு மரித்தார்
கல்வாரி சிலுவையில்

2. இந்த அன்பின் பாசத்தால் மீட்பருக்கு எந்தனை
முழுதத்தம் செய்யத்தான் ஆவி ஆத்துமா தேகத்தை
சர்வாங்க பலியாக சுவாமியெ படைக்கிறேன்
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில் – அக்கல்வாரி

3. நானுமக்குச் சொந்தமாய் என்னை ஏற்றுக்கொள்ளுமேன்
நேச மீட்பர் தயவாய் என்னில் வாசம் பண்ணுமேன்
பாவத்தை வெல்ல நெஞ்சை ஸ்திரமாக்கிவிடுவேன்
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில் – அக்கல்வாரி

**77. செஞ்சுருட்டி** **ரூபக சாப்புத்தாளம் (62)**

**பல்லவி**

**கல்வாரி மலையோரம் வாரும் பாவம் தீரும் – ஜோதி**

**அனுபல்லவி**

செல்வராயன் கிறிஸ்து தியாகேசன் தொங்கினாரே – ஜோதி

**சரணங்கள்**

1. லோகத்தின் பாவமெல்லாம் ஏகமாய்த் திரண்டு
நொம்பலப்பட வைக்க ஐயன் மேலுருண்டு
தாகத்தினால் வாடிக்கருகியே சுருண்டு
சடலமெல்லாம் உதிரப்பிரளயம் புரண்டு
சாகின்றாரே நமது நாதா ஜீவநாதா – ஜோதி

2. பொன்முடி மன்னனுக்கு முண்முடியாச்சே
உபகாரம் பரிகாரம் சிதையவுமாச்சே
விண்ணிலுலாவும் பாதம் புண்ணாகலாச்சே
மேனியெல்லாம் வீங்கி விதனிக்கலாச்சே
மேசையனப்பன் கோபம் மேலே இதற்குமேலே – ஜோதி

3. மலர்ந்த சுந்தரக் கண்கள் மயங்கவுமேனோ
மதுரிக்கும் திருநாவு வறண்டது மேனோ
தளர்ந்திடாத கரங்கள் துவண்டதுமேனோ
ஜலத்தில் நடந்த பாதம் சவண்டதுமேனோ
சண்டாளர் நம்மால்தானே நம்மால்தானே – ஜோதி

**78. மலையாமி** **சாப்பு தாளம் (63)**

**பல்லவி**

**என்னா செய்குவேன் எனக்காய் ஏசுமைந்தன்**
ஈனக்குருசிலுயிர் விட்டனர்.

1. கண்ணினால் யான் செய்த கர்மம் தனைத்தொலைக்க
முண்முடிதனை அந்த முன்னேன் சிரசில் வைத்து
மூங்கில் தடியைக் கொண்டு ஓங்கியடிக்கும் துயர்
பாங்குடன் நோக்கையில் ஏங்குதே என துள்ளம் – என்னா

2. பாவப்பாரம் நிறைந்த பாவி எத்தனை மீட்க
ஜீவபரன் நீசச்சிலுவையில் மாண்டனர்
ஆவிதுடிக்குதையா அங்கம் உருகுதெந்தன்
தேவன் எனக்குச் செய்த செயலை நினைக்கும் போது – என்னா

3. கையிலறைந்த ஆணி கடினமாய் நரம்பினில்
ஐயோ உருவிச் சென்று அப்புறம் பாய்ந்ததே
ஐயோ இது என்பாவம் அடியேன் நான் என்செய்வேன்
துய்யன் நீர் வாதைப்பட்டு துஷ்டனை மீட்டிரே – என்னா

4. எந்தனை மிட்க நீர் இப்பாடுபட்டதால்
இதற்கு பதிற் செய்ய என்னாலேயாகாது
சிந்தையோடெனை இப்போ செய்கிறேன் முழுத்தத்தம்
வந்தெனை ஆட்கொள்வாய் மகத்வ மனுவேலா – என்னா

**79. செஞ்சுருட்டி** **ரூபக தாளம் (64)**

**அன்று கிறிஸ்து மரித்திடச் சூரியன் அப்போதே மறைய**
**ஐயையோ**
ஆண்டவர் பாதகரோடு சிலுவையதுதனில் தொங்கிடவே

2. குன்று உலகும் நடுங்கிடக் கல்லறை குன்று திறந்திடவே
ஐயையோ
கொற்றவன் ஏசுகிறிஸ்து மரித்ததைக் கூற முடியாதே

3. மைந்தனே என்று புலம்பி மரியாள் தன் மார்பில்
அறைந்திடவே – ஐயையோ
மாசணுகாத கிறிஸ்துவின் ரத்தம் வழிந்து ஒழுகினதே

4. இட்டமுடனே யான் பெற்று வளர்த்திட்ட என்னுட
கண்மணியே – ஐயையோ
ஏசுக் கிறிஸ்துவே இத்தனை பாடுகள் ஏதுமக்கையாவே

5. பட்டமரம் போன்ற நீசருக்காகவே பாடுபட்டீர் பரனே
ஐயையோ
பாராமலும்மைக் கனியாமல் யூதர்கள் பற்றிப்பிடித்தனரே

**80. செஞ்சுருட்டி** **சாப்பு தாளம் (65)**

**பல்லவி**

**பார் பார் பார் தேவ ஜீவன் போகுதுபார்**

**சரணங்கள்**

1. கண்விழி வீழ்ந்திட கைகளயர்ந்திட கால்கரம் சாய்ந்துவிழ
விண்ணொளி மங்கி ஆவி பிரிந்து திருமேனி குளிர்ந்திடுதே பார்

2. கல்வாரி வெற்பிலே காரிருட்டிலே காணுது செவ்வானம்
நல்வாரி வீசுது செவ்வாரி பெய்யுது நாடு செழித்திடவே – பார்

3. பஞ்சகாயங்களில் செஞ்சுனை பாயுதுபாவி நெஞ்சைக்கழுவ
சஞ்சீவி பஞ்சப்பிரளயம் சாவது தற்பரன் பக்கத்திலே – பார்

4. பாவநாசத்திலே புண்ணிய கன்மலை பார்முனி ஓங்கிய கோல்
கோபதாபத்திலே வீசினவீச்சிலே குமிழிவிட்டோடுது பார் – பார்

5. ஐந்து மண்டபத்தாறு பெதஸ்தா ஆங்கு கல்வாரி வெற்பில்
ஐந்து மடையுமே உடைந்து அருள் சாடுது பார் – பார்

6. ஜீவநதியிலே ஏழுதரமுங்குதீரும் உன் பாவக் குஷ்டம்
ஆவலுடன் சொன்னேன் சொல்லச் சொன்னார் ஐயா அதோ
பார் – பார்

7. பார்த்தால் கேட்ட மனுப்படிக்காகும் ஓ பாவி சிலுவையைப்பார்
தீர்த்தார் பாவம் தீர்த்தபடி தகை தீர்த்திடலாம் ஓடி வா – பார்

**81. இராகம் (கழுத்தில் விழுந்த மாலை) ஆதி தாளம் (66)**

**மரத்தின் மீதே கிறிஸ்து மரித்த பின்னே சேவகர்**
மார்பில் வாளிடரத்தம் நீர் வரவே
மரித்தவ ரென்றுடம்பை மரத்தின் கீழிறக்கினார்
முழங்கால் கரங்களை முறித்தனரோ

2. அரிமத்தியா ஊரானெனும் அலங்காரனாம் யோசேப்பு
அருகில் பிலாத்து துரையிடம் வேண்டி
அமலனேசுவின் தேகமடைந்த கந்தபோளங்கள்
அங்கமுழுதுமிட்டே அகமகிழ்ந்து

3. மெல்லிய தும்பட்டி ஒன்றால் மேனிமுழுது மறைத்து
மேடைக கல்லறைக்குள்ளே இறக்கிவைத்து
மங்கையருங்கூடி அங்கே மனம் பதறிப் புலம்ப
மேற்புறம் பெரிய கல்லைப்புரட்டி வைத்தான்

**82. இராகம் (பந்திவிட்டெழுந்திருந்தார்) ஆதி தாளம் (67)**

**பல்லவி**

**ஏசு துரை சுவாமியைத் தினம் துதி மனனே**
தினம் துதி மனமே தினம் துதி மனமே

2. தன்னுருவில் நன்னயமாய் உன்னை வரைந்தாரே
மன்னுயிர் பிழைக்கத் தமதின்னுயிர் ஈந்தாரே – ஏசு

3. வீம்பு செய்யும் பாம்புதலை தாம் சிதறினாரே
நாம்பிழைக்க நாம் தழைக்க தாம் பலியானாரே – ஏசு

4. தியாக பலியாக நரர்க்காக இறந்தாரே
மாகருணையாக ஜீவவாசல் திறந்தாரே – ஏசு

83. (83)

**எங்களன்புள்ள ஏசு தேகத்தை எடுத்துப் பூமியிலடக்கவே**
சங்கத்தான் யோசேப்புடன் நிக்கோதேமும் தாசரிருவர்
தோன்றினார்

2. சனகரீம் சங்கத் தலைவன் யோசேப்பு சற்குணன் மகா நற்குணன்
அவன் பொந்தியுப் பிலாத்துவிடம்போய் அங்கத்துக்காக
மனுக்கேட்டான்

3. ஆரம்பத்திலே ஒருநாள் ராத்திரி வந்தானந் நிக்கோதேமுவே
நூறு ராத்தல் கரியபோளமும் வெள்ளைப்போளமும்
கொண்டுபோய்

4. உத்தரம் பெற்றுக் கொண்டுமே அந்த உத்தமன் எங்கள் ஏசுவை
மெத்தப் பத்திரமா யிறக்கியோர் மெல்லிய புடவை சுற்றினார்

5. பாரிலோரிட மில்லையே உமக்கு படுக்கக் கல்லறை இரவலோ
சீருள்ள யோசேப்புடை கல்லரை தேவனே உமக்கேற்றதோ

6. கன்மலையிலே கெட்டியாய் தோண்டி வெட்டப்பட்ட
நற்கல்லரை
இன்னும் ஓர்வனும் ஓர்காலும் வைக்கப்பட்டிராப் புதுக்கல்லறை

7. தனவான்கள் பெரியோர்களைத்தான் அடக்கஞ்
செய்முறைபோல
கனவான் யோசேப்பும் நிக்கோதேமுவும் அங்கத்தை
அலங்கரித்தார்கள்

8. தெய்வத்தின் திருமடியிலே செல்லப்பிள்ளையாய் நீரிருந்தீரே
வையகத்தை மீட்க மூன்றுநாள் மண்ணறைக்குள் இருந்தீரே

9. உத்தரம் பெற்றுக் கல்லறையிலே சங்கத்தார் முத்திரை போட்டார்
பத்திரமாக கையில் வாளுமாய் சேவகர்நின்று காத்தாரே

10. தேசமெங்கும் நன்மை செய்யவே சென்ற உம் கரங் கால்களும்
மாசற்ற திருமேனியுமிந்த மண்ணில் தங்கிற்றோ தெய்வமே

**84. இராகம் (மேலோகராஜன் வருங்காலமாகுது) (69)**

**இன்றேசுயிர்த்ததால் எக்காள ஓசையால்**
விண்மண்ணின் ராஜனானவரைப் போற்றிப்பாடுவோம்

2. கிறிஸ்துவுடன் நாம் மரித்ததுண்டானால்
அவருடன் எழுந்திருப்போம் என்று நம்புவோம்

3. சம்மனசோர் போற்றும் துங்கள் ஏசுவுக்கென்றும்
இகமீதிலிருந்துமே புகழ் ஓங்குவதாக

4. என் சேனாதிபதியாய் என் முன் செல்வதற்காய்
உயிர்த்து முத்தரித் தோரில் முகற் பலனானார்

5. இந்த நம்பிக்கை என் இருதயந்தனில்
நடத்திச் சீர்படுத்தி நேராய் உம்மில் சேர்க்கவும்

6. ஜெகநாதனின் வார்த்தை இகம் பொய்யாகும்படி
யூதரடக்கி முத்தரித்தும் உயிர்த் தெழுந்தாரே

7. பொன்முடியணிந்த இம்மானுவேலிவரே
நின்போல் யானோர் கிரீடம் தரிக்க கிருபை அளியும்

**85. (70)**

**பல்லவி**

**வாரீரோ சுகந்தமிட மகிமைக் கிறிஸ்துவின்ஜ டலமதை**

**அனுபல்லவி**

யாரோ நமக்கென்று திறந்திடுவான்
சீராய் சுகந்த மீடுவதற்கு

1. வாரத்தின் முதல்நாள் காலையிலே மரியாள் கல்லறைக் கேகினளே
கல்லறையை யுற்றுப்பார்க்கையிலே ஏசுவின் ஜடலத்தைக் காணவில்லை

2. காணாமலழுது கொண்டிருக்கையிலே இரண்டு தேவதூதர் தோன்றினார்
யாரைத் தேடுகிறீர் என்றுரைத்தார் தேவதூதர்கள் மரியாளிடம்

3. எங்களேசுவைக் கண்டீரோ என்று மரியாள் பதிலுரைத்தாள்
ஏசு உயிர்த்தெழுந்தாரென்று தேவதூதரில் ஒருவன் சொன்னான்

4. இப்படி ஏங்கி நிற்கையிலே இயேசு மரியாளென்றாரே
இம்மொழி கேட்டமாத்திரத்தில் ரபூனியென்றாள் மரியாளே

### 86. இராகம் (ஜிவநாயகரிதோ சிசுவாக) (71)

**பல்லவி**

**பாவநாசகரேசு பாடுபட்டுயிர்த்தார்**
பாதாளம் விட்டேறி பரத்துக்கேகிட

**அனுபல்லவி**

தேவசமுகம் கண்டு சிறப்பாய் வீற்றிட

1. பாவிகளுக்காக பரனிடத்திலே பரிந்துபேசி பாக்யம் பகிர்ந்தளிக்கவே
விரைந்துவாரும் போவோம் விமலனைப் பார்க்க – பாவ

2. எல்லாம் ஜெயங்கொண்ட ஏகசக்ராதிபதி
நல்லார் மனதைத் தேற்ற நாதன் உயிர்த்தாரே
பொல்லாங்கோனை மீட்கப் பொறுமையாயிருந்து – பாவ

3. மண்ணிலிருந்தெழுந்து விண்ணுக்குச்செல்ல
மகிமையான தேவன் ஜெயமாக உயிர்த்தார்
ஆ என் நேசா நீயும் ஆயத்தமாகு – பாவ

4. சாவின் பள்ளத்தாக்கைத் தாமாக ஜெயித்து
பேயின் தலையை வென்ற பிதாசுதன் உயிர்த்தார்
பூவின் மனுடோர்க் கெல்லாம் புண்யமளித்திட – பாவ

5. வானமண்டல வீட்டின் லோகத்திற்கு வர
கோனான் ஏசுராஜன் ஆயத்தமாகிறார்
அதால் நேசா நீயும் ஆயத்தமாகாயோ – பாவ

6. அதோ பார்க்கும் யாரும் பயந்து நடுங்கிட
இதோ சீக்கிரம் ஏசு வருவேன் என்கிறார்
அதால் பாவி அவர் அருகில் ஓடிவா – பாவ

**87. முகாரி அகவல் ஆதி தாளம் (72)**

**பல்லவி**

**நம் கிறிஸ்தரசன் கல்லறையை விட்டுயிர்த் தெழுந்தாரே**

**அனுபல்லவி**

உயிர்த்தெழுந்தாரே உயிர்த்தெழுந்தாரே – நம்

1. தாமெழுந்தார் ஞாயிறிலே ஆதித்தன் போலே – நம்

2. கேருபீன்கள் சேராபீன்கள் கெம்பீரித்தாட – நம்

3. மாணிக்க வதனமதில் மகிமை வீசிட – நம்

4. ஏவை பாவம் முற்றுமற தத்தமானவர் – நம்

**88. சங்கராபரணம் சாப்பு தாளம் (73)**

**பல்லவி**

**சுபஜெயமங்களமே நித்ய சுபஜெயமங்களமே**
சுகமேதரவே புவிமீதுயிர்த்த சுதனேசு நாதருக்கே

1. தீர்க்கருரைத்தனரே இன்று ஏசு உயிர்த்தனரே
ஜெகதீஸ்பரனார் சுதனார் கிறிஸ்து ஜெயமாய் எழுந்தவர்க்கே

2. தூதர் சங்கமுழங்க வான ஜோதிகளுமிலங்க
துரிதாய் பரனார் களிகூர்ந்திடவே தொனியாய் எழுந்தவர்க்கே

3. அங்கங்குளித்திடவே உலகெங்கும் மகிழ்ந்திடவே
அடியாருட சாவின் கூரொடித்து ஆறுதல் தந்தவர்க்கே

4. சாத்தான் நடுங்கிடவே அவன் சக்தி ஒடுங்கிடவே
தலையே படுகாயமதாய் ரத்தம் சாட மிதித்தவர்க்கே

5. கல்லறை காத்திருந்த காவல்காரர்களும் வருந்த
கருணைபரதூதனுமே திறக்கக் கனமாயெழுந்தவர்க்கே

6. நித்திரையே அடைந்து வாழ்ந்த சுத்தர் உயிரடைந்து
நேராக சாலேமேகிடச் செய் நித்தியானந்தருக்கே

7. மகதலனாள் மரியும் கூடவந்த மற்றோர் மரியும்
வழியேகிடும் வேளையில் வாழ்கவென வார்த்தை
பகர்ந்தவர்க்கே

8. பயமெனக்கென்பயமே ஏசுபரனைத் துதி மனமே
பரமேகிடவே விசுவாசிகட்கு பாதை காட்டுவர்க்கே

**89. பியாகு** **ஆதி தாளம் (74)**

**உயிர்த்தனரேசு மரித்த மூன்றாம் நாள்**
உன்னதத்தோர் இந்நிலத்தோர் நன்னயம் கொண்டாட

2. பண்படுவினை நீங்க மண்டலத்தோர்ஓங்க
மண்டலத்தில் வந்திறங்கி தொண்டர் நமக்காக

3. ஆதிபவம் மாற எம் வினை நீங்க
ஆதியோடந்தமாய் அருள் நமக்கீய

4. வினையாவும் நீங்க வேந்தர்கள் ஓங்க
வேகமாய் பாவத்தை நீக்கிட மீட்பர்

## 90. இராகம் (நாம் நற்சுகமாய் பெத்லேம் நகர்) (75)

**பல்லவி**

**சங்கீதங்கள் பாடிக்கொண்டு ஜல்தியாய் வாரும்**

**அனுபல்லவி**

சுவாமி ஏசு இன்றுயிர்த்தார்

1. ஏதோ சத்தம் கேட்குதே ஏசு உயிர்த்தெழுந்தாரே – மா
இங்கித காலையிலவர் சங்கை சமுகம்
போவோம் வசரும் விரைவாகவே – சங்கீதங்கள்

2. வேதாளம் கலங்கிடவே பாதாளங்குலுங்க – மா
வேந்தன் துரைராஜனிதோ வெற்றி சிறந்தார்
போவோம் வாரும் விரைவாகவே – சங்கீதங்கள்

3. கல்லறை திறந்திடவே கர்த்தர் எழுந்தார் – கண்
கண்டுகளித்த மங்கையா அண்டை நிற்கிறார்
பார்ப்போம் வாரும் விரைவாகவே – சங்கீதங்கள்

4. பேதுருவும் யோவானும் பிரியமாய் போறார் – அவர்
பிறகாலே ஓடிக்கல்லறையைப் பார்த்து வருவோம்
வாரும் போவோம் விரைவாகவே – சங்கீதங்கள்

5. தூதர் பறந்திடவே துதிமுழங்க – மா
ஆதரவு சொல்லும் நேசர் அண்டையிற்போவோம்
இதோ வாரும் போவோம் ஜல்தி – சங்கீதங்கள்

6. பார்த்தவர் பயந்திடவே கேட்போர் கலங்க – மா
பார்த்திபனார் ஏசுராஜன் நேத்திரனுயிர்த்தார்
இதோ வாரும் போவோம் ஜல்தி – சங்கீதங்கள்

**91. இராகம் (இங்கிலீஷ்) (76)**

**ஜீசஸ் விக்டராம் இன்றுயிர்த்தாராம்**
என்று தம்புரடிச்சத்தம் கேட்குதே

1. தரை மண்டலம் பரமண்டலம் சாத்தான் மண்டல
மட்டும் எட்டவே

2. இங்கிலீஸ் நாட்டிலும் இந்த நாட்டிலும் திவ்விய
ஏட்டிலும் ஞானப்பாட்டிலும்

3. சாதாரண நாட்டிலும் சாஸ்திரி பாட்டிலும்
தேவகோட்டிலும் திருப்பாட்டிலும்

4. தேவ நாட்டிலே ஜெப வீட்டிலே எந்தன் பாட்டிலே
நம் கொண்டாட்டிலே

**92. இராகம் (பூசத்ரபதிகல்யாணி சபாமணி)**

**பல்லவி**

**ஜீவாதிபதி இதோ! ஜெயங்கொண்டே எழுந்தார்**
தேவாதி தேவன் பாத திருவடி பணிவோம்

**அனுபல்லவி**

பக்தாள் யாரும் வாரும் பாடிப்போற்றுவோம்
உத்தம இயேசு பாதம் பக்தியாய் பணிவோம்

1. கல்லறை தனைவிட்டு வல்லவர் எழுந்தார்
நில்லாமல் அவர் சாட்சி சொல்லியே சாற்றுவோம்

2. எத்தன் என்றவர் ஓடபக்தர் துதிபாட – நம
தத்தன் எழுந்தானின்று துத்தியம் செய்வோமே

3. முச்சத்துரை மிதித்து ரட்சகர் எழுந்தார்
அச்சம் பயம் நீக்கி நிச்சயமே தந்தார்

4. சத்ய சசையின் வித்தே! சபையின் நாயகமே
பக்தர் அகத்தின் முத்தே பாவியின் தாரகமே

5. ஆசீர்வாதம் தாரும் அருமை யேசுநாதா
வாசமலர் சூடி வாழ்த்தியே போற்றுகிறோம்

**93. இராகம் (நேசமே எழுந்து ஏசுராஜனை)**

**பல்லவி**

**வாகனப்பவனி கொண்டார் முகில்மேலே – ஏசு**

1. தேகமிசை ஐந்துவடு சிறந்திலங்க
சீடர்கள் குன்றின்மேல் நின்று சிந்தை கலங்க

2. வாழ்த்தி வரம் வாங்கிச்சீடர் பார்த்து நிற்கவே
வஞ்சகப் பேய் அருண்டு பஞ்சாய் பறக்கவே

3. தாளங்களிட்டுப் பெருமெக்காளங்கள் தொட்டு
சம்மனசோர்கள் வீணையில் சங்கீதம் கொட்ட

4. தூதர் எதிர் கொண்டு சீடர் சோபகமற்ற
சோமனருணன் உடுக்கள் மண்டலந்தாண்டி

5. வல்லமைப் பிதா மகவை வந்தழைக்கவே
வாசலுயரப் பரலோகம் செழிக்கவே

6. ஜாதிகளெல்லாரும் மோட்சவீடு தரவே
சற்குண தாசன் மேல் சுத்த ஆவி வரவே

**94. பியாகு** **ரூபக தாளம் (78)**

**பல்லவி**

**இன்னமும் தாமதித்தால் என்னமா யான் பிழைப்பேன்**

**அனுபல்லவி**

மன்னவா பிராண நாயகா – இன்னமும்

1. மானிடரை மீட்க வந்த வானராஜனே
எனதபிமான நேசனே - இன்னமும்

2. பார்த்த பார்வையாலென் கண்களும் பூத்துப்போச்சுதே
வருகைக் காயத்தமாச்சுதே - இன்னமும்

3. பூமியெங்குமிகுந்த யூதரை சாமி தேடுகிறார்
அவர் சாலேமுக் கோடுகிறார் - இன்னமும்

4. ராட்சிய மறை நாற்றிசையிலும் சாட்சி கூறுதே
புதிய காட்சி நேருதே - இன்னமும்

5. பஞ்சம் யுத்தம் நியாயக்கேடுகள் பறந்துலாவுதே
உலகின் நிறைதுலாவுதே - இன்னமும்

6. அன்பு குளிர்ந்தாவியின் அனல் ஆறிக் காணுதே
மனம் வேசாரிக் காணுதே - இன்னமும்

7. ஆதிசர்ப்பம் பொரிந்தென்மேல் தன தம்பை எய்யுதே
உலகம் கெம்பி வையுதே - இன்னமும்

8. காதல்கொண்ட மங்கைக்குன் முகம் காட்டுமேனையா
மங்கில்யம் பூட்டு மேசையா - இன்னமும்

**95. இராகம் (பாவவினை நீக்குமையா) (79)**

**பல்லவி**

**இன்னம் வரக்காணேனடி ஏதோ தடை தூதுபோடி**

**அனுபல்லவி**

பொன்னகருக்கெழுந்து சென்ற
புகழ் நாசரேத்தையர் மன்றல்

1. தந்தை தமதொரு மகவைத் தாரணியிந் போய்வரவே
சிந்தை மகிழ்ந்துரைக்கலையொ தெரிந்துவாடி என் புறாவே

2. சீக்கிரமாய் வாறேனென்று செப்பிய சொல் மறந்திருக்க
போக்கெதுவு முண்டோ கேட்டுபுகலடி என் மனதுமெய்க்க

3. சீக்கிரம் சொல் ஒலிவகிரிதேவசுதன் போனவழி
நோக்கிலது சுருக்கவழி நொடிக்குள் போகலாமே தோழி

4. ஆபரணமணிந்திருக்க ஆசையுள்ளம் மகிழ்ந்திருக்க
கோபமேதோ தெரிகிலேன் போய் கூட்டிவாடி சேர்ந்திருக்க

5. வந்தெனது கதவும் தட்டி பாசமாய் ரவாசஞ் செய்ய
எந்த நேரம் வருகிறரோ இன்சொல்லுடன் கேட்டு வாடி

6. பொற்பரமலோகம் விட்டு புகழ்பெற மங்களமுடிக்க
சற்குணரும் தேடுவதாய் சாற்றடிபோய் சகியே மானே

**96. இராகம் (கண்டேன் பரமகாட்சி) (80)**

**பல்லவி**

**பார்ப்பேன் என் ராஜாவை நான் நான்**

**அனுபல்லவி**

பல பக்தருக்காய் நீருரைத்துச் செப்பியமுறைப்படியே

1. என்னைச் சேர்த்து மகிமை சூட்டும்... சீயோனின் மன்னவரை

2. கரர் தூதர்களோடு வரும்... மூதாக்கள் வாசகரை

3. வடுஜந் தடையாளத்தோடு... செந்தாமரை பூப்போல

4. மணக்கேருபின் வாகனத்தில் ... ஆரியன் போலவரை

5. பல பத்தினிமார்களெல்லாம்... கொத்தாபரணம் பூண

6. ஞானக்கன்னிகை யாவரையும்... மன்னர் மணம் முடிக்க

**97. இராகம் (ஓ! தாகமிகுந்தவரே அமர்ந்த)** **(81)**

**பல்லவி**

**இதோ கிறிஸ்து மகாராஜன் வருகிறார்**

எச்சரிப்பாய் நடங்கள் – மகா

1. கர்த்தரின் நாளைப் பரிசுத்தம் பண்ணாத கண்மூடி ஜாதிகளே
கணக்கொப்புவிக்கும்போது தப்புவித்துக்கொள்வதை
தேடிக்கொள்வீர்களோ

2. அருமைத் தகப்பனார் நமக்கென்று ஆறுநாள் அன்பாகத்
தந்திருக்க – பின்னும்
அவருடைய நாளை அபகரித்துக்கொள்ள
ஆசைப்படலாமோ

3. இந்த நாள் எந்த நாள் என்று உணராத
இருமனமுள்ளவரே – நமது
ஏசு வரும்பொது எதிர் நிற்கக்கூடுமோ என் செய்தவீர்
மானிடரே

4. வேதத்தை மேல்போட்டு மிரட்டித் திரிகின்ற
பேதைகளானவர்கள் – நமது
மேசியா வருகையில் வெட்கமடைந்து
வெருண்டோடிப்போவார்கள்

5. அடைக்கலப்பட்டணம் கன்மலைக்கோட்டையும்
கேடகமுமவரே – அந்த
அடைக்கலக் கன்மலைக்கோட்டைக்குள்ளே வர ஆசை
தானுமில்லையோ

6. சத்தியம்பண்ணித் தவறி விழுகின்ற சண்டாள
மானிடரே – அவர்
தயவாயழைக்கையில் தாமதம் செய்யாமல் ஜல்தியாய்
வாருங்களேன்

7. அல்லை தொல்லை எல்லாம் அன்றைக்குப் பார்க்கிற
அறிவில்லா மானிடரே
அதாருடைய நாளென்றுணர்ந்து பாரங்கள் அகன்று
போகாதேயுங்கள்

8. நிலையான பட்டணமங்கே இருக்குது நிச்சய
மென்றெண்ணுங்கள் – இந்த
நிலையில்லாப் பூமியின் வாழ்வைச் சதமென்று எண்ணி
அலையாதே

9. நித்தம் நித்தம் நமதேசுவின் பாதத்தை பக்தியாய்
பூஜியுங்கள் – நமது
கஸ்திகள் துன்பங்கள் எல்லாம் நீக்கி நித்ய கரை
சேர்ப்பவரவரே

10. அத்தனின் சிலுவையை அண்டிக்கொண்டோமானால்
அச்சமும் பயமுமில்லை – மனக்
கெச்சிதமாகவே அச்சமில்லாமலே உச்சிதமாயிருப்போம்
– இதோ

**98. இராகம் (இந்த குழந்தையை) (82)**

**பல்லவி**

**நமது மணவாளருக்கெதிர் கொண்டுபோவோம் வாரும்**

**அனுபல்லவி**

தமது மணவறைக்குள் வாழ்ந்து சுகித்திருக்க – நமது

1. ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்தருந்த
அணையாத தீவட்டியும் குறையா எண்ணையுங்கொண்டு

2. செங்கோல் கையிற் பிடித்து சிம்மாசனத்தில் வாழும்
சங்கையதிபதியை கண்டு சந்தித்திடுவோம் – நமது

3. வெள்ளை அங்கி தரித்து வெள்ளோலை கைப்பிடித்து
செல்லநடை நடந்து சீக்கிரம் போவோம் வாரும் – நமது

4. மனையாட்டி கைப்பிடிக்க மயங்கித்தியங்குகிறாள்
நினையாத நேரம்தனில் மணவாளன் வந்திடுவார் – நமது

5. தங்கக்கிரீடம் வைத்து தமது பத்ராசனத்தில்
இங்கிதமாக வாழும் இம்மானுவேலருக்கே – நமது

**99. செஞ்சுருட்டி** **ஆதிதாளம் (83)**

**சொன்னகாலம் ஆச்சுதென்று சுவாமி ஏசுக்கிறிஸ்து**
தூதர் திரளோடெழுந்துவாறபோது

2. செத்தவரெல்லாம் உயிர்க்க ஜீவனுள்ள பேர்களெல்லாம்
சீக்கிரம் மறுரூப மாகுங்களென்பார்

3. இரண்டு நினைவாயிருந்து ரண்டகம் செய்தோர்களை
மண்டை நொறுங்கப் பிடித்துக் கூட்டுமென்பார்

4. சாபதுவை மீறிவிட்ட சண்டாளப் பாதகரை
கோபத்தோடே பிடித்துக்கூட்டுமென்பார்

5. குருத்துரோகம் செய்த கொழுத்த உடல்களையும்
கூசாமலே பிடித்தக்கூட்டுமென்பார்

6. குன்றுகளே மலைகளே இன்றெமை மூடுங்களென்று
கூக்குரலிட்டே யழுவார் கோடிப்பேர்கள்

7. தாயாலே கெட்டேனென்பார் வாயாலே கெட்டெனென்பார்
சத்துருப் பசாசல்லோ கெடுத்தென்பார்

8. பெண்டாலே கெட்டேனென்பார் கொண்ட கணவனோடு
பேயாடியும் கெடுத்து பொட்டானென்பார்

**100. இராகம், இங்கிலீஷ் (இன்றேசுயிர்த்ததால்)** **(84)**

**மேலோக ராஜன் வருங்காலமாகுது**
சாலோக மகிமை பெறலாம்பாவி ஓடிவா!

2. பாவம் நித்தமும் மனம் நோகச்செய்யுது
பரிசுத்தரித்தரையில் வந்தால் முற்றும் நீங்கிடும்

3. இரவுபோயிற்று பகல் சமீபமாயிற்று
இருளின் செய்கை தள்ளி ஒளியின் கவசம் தரிப்போம்

4. குடிவெறி வேண்டாம் கோள் குண்டணி வேண்டாம்
பகலின் பிள்ளைகள்போல் சீராய் நடக்கக்கடவோம்

5. எருசலேம் நகர் மகா அரசர் மாளிகை
அதை ஏறிட்டுப் கண்ணாலே பார்த்தால் ஏக்கம் தீருமே

6. ஏழுடுகையில் மார்பருகே பொற்கச்சை
வெண்பஞ்சு நிறமாம் சிரசு ஏசுவுக்குண்டு

7. தூதர் சேனைகள் துதி பாடும் ஓசையால்
இப்பூதலம் திடுக்கிட வானோர்கள் மகிழ

8. ஆசனங்களில் ஏசு தாசரிருப்பார்
அதன் மத்தியிலோர் ஆசனம் இம்மானுவேலர்க்கு

9. பார்க்கக் கூடாத பரிசுத்த ஜோதியாய்
பரலோகராஜன் வீற்றிருப்பார் தூதர்கள் சூழ

10. ஒப்பார்சின் தங்கக் கச்சை இடையிற் கட்டியே
உம்பர்கள் ஒழுங்காக நின்று கீதம் பாடுவார்

**101. செஞ்சுருட்டி** **ஆதிதாளம்** **(85)**

**மேகமீது தூதரோடிதோ இதோ**
மேசையா கிறிஸ்தேசையா என் தாசை நேசையா
வாரார் வாரார் மகிழ் கெம்பீரமாய்

2. மேகத்தோடு போனவரிவர் இவர்
திரும்பவும் பதினாயிரம் பரிசுத்தர் சூழ்ந்திட
சீக்கிரம் சீக்கிரம் ஜெகத்தை நோக்கியே

3. ஆரவாரம் கேட்குதே அதோ அதோ
ஆட்டுக்குட்டியின் பாட்டோ டெக்காளம் மதிர்ந்
தொலிக்குதே
அல்லேலூயா அருமைரட்சகா

4. ஒலிவ மலைவிட்டேகினார் அப்போ அப்போ
உருவத்தோடவர் திரும்பி வாரதை உற்று நோக்குவோம்
ஓடிப் பாடி உவந்து போற்றுவோம்

5. மனுவேலன்ராஜன் வருகிறார் ஒரே ஒரே
மலை அதிர்ந்திட புவி குலுங்கிட கடல் கலங்கிட
வானோர் பூவோர் வணங்கி நிற்கிறார்

6. இயேசுராஜன் புறப்பட்டார் ஜெய ஜெயா
ஜெக மலைகடலுள் நல்லோர் உயிர்த்தெதிர்த்
சென்றேகினார்
நாடி நாடி பாரத்தை நோக்கியே

7. ஏதேன் பரதீசு பார் அதோ அதோ
இயேசுவும் அவர் தேவியும் அங்கு கூடி வாழுகிறார்
இல்லை தொல்லை என்றும் பாக்கியம்

**102. சகரனா** **ரூபக தாளம்** **(86)**

## இராகம் (ஜயா தெய்வமே இந்த)

**பல்லவி**

**வருவார் வருவார் என்றன் மனதைத் தேற்றிடுகின்ற**
வாக்கியம் எனது பாக்கியம்

**அனுபல்லவி**

திருவார் சகிமாரெல்லாம் சீயோன் மகனென்னோடு
தினமு முன்னோடிருக்க அனவாதம் சுகிக்க

1. கண்ணின் கருவிழிபோல் என்னைக்
காத்தவா திருக்கரத்தில் பதித்த காதலன்
எண்ணிமுடியாதெனின் ஏதமகற்றி நலம்ஈயும் சம்பன்னமாதலன்
விண்ணிலிருந்து தாழ வெகு கோடி சுரர்சூழ
மேகவாகன மேறி தோகை மேலவர் மீறி – வருவார்

2. மறவேன் மறவேன் என்னை மறந்தால் தன் வலதுகை
மறக்குமென்றாணை விண்டவன்
தருவேன் தருவேன் ஜீவதண்ணீர் தந்துனின் தாகம்
தணிப்பேன் என்றெனைக் கொண்டவன்
மறலியைச் சிறைகொள்ள மகராஜன் தனைக்கொண்ட
விரைந்து தூதுபோய் வந்து விண்ணவருரை தந்து – வருவார்

3. கனவோ நினைவோ என்ன காரணமோ அறியேன்
காணுது அவர் காட்சி
தினமும் என் மனமந்தச் சீரானன் தனை நோக்கி
செல்லுவது என்ன சூட்சி
எனதுயிர்க்குயிரான இறைவர்க்கிறைவரான
இகபரமும் துதிசெய் இம்மானுவேல் மணியை – வருவார்

**103. சங்கராபரணம் ஆதி தாளம் (86)**

**பல்லவி**

**இன்னமும் வரதாமதமுமேனோ – உந்தன்**
இரக்கமும் காட்டத்தடைதானோ

**அனுபல்லவி**

கண்ணின் விழிபோல என்னைக்காக்குமணி முத்தரசே–ரீ–ரீ
கண்விழியாக் குஞ்சுகளை கருணையுடனே இருசர
முடனணையும்
கரமுடனணைத்த அருள் வரம் கொடுத்து
பரகதி அளித்திட பட்சமிகுந்தவா –இன்னமும்

1. ராஜ ஏசுராஜ பாலகனே–எந்த ராஜாவுக்கு மேலான
ராஜாவே – ஐயா
இந்திர நீல ரத்தினம் பதித்த மகா ஈஸ்வரனே–ரீ–ரீ
இந்தவேளை வந்துனது இரக்கமும் தயவும் பெருக்க மாயளித்து
சுரமுடனணைத்து அருள்வரம் கொடுத்துப்
பரகதி அளித்திட பட்சமிகுந்தவா – இன்னமும்

2. பூமியிலே நானோர் பரதேசி ஒரு புத்தியுமற்றலையுமா
தோஷி – ஐயா
சத்தியவழிதனிலே சார்ந்துநின்று உம்மைப்போற்ற–ரீ–ரீ
தற்பரனே தக்கவகை தருவாய் வருவாய்தயா சுரமருள்வாய்
தயாகரமனித்து அருள்வரம் கொடுத்து
பரகதி அளித்திட பட்சமிகுந்தவா – இன்னமும்

3. பொன்னகரை நோக்குமென்னைப்பாரும் – மகா புத்திபக்தி
பூரணமாய் தாரும் – ஐயா
தேவதூதரோடு நானும் சேர்ந்து நின்று உம்மைப் பாட–ரீ–ரீ
தேவ வரம் கொண்டுவந்து தினமும் எந்தனைக் கரத்தா
லணைத்திட
சுரமுடனணைத்து அருள்வரம்கொடுத்து
பரகதி அளித்திட பட்சமிகுந்தவா – இன்னமும்

**104.**

**பல்லவி**

**எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார்**

1. இயேசுவின் வருகை மிக சமீபமாகுதே – இனி
மோசந்தான் அசதியாக ஜீவித்துவந்தால் – பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும்போது – வேகம்

2. பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்துப் பார்த்து லோகத்தை வெறு – இது
மாயலோகமே உன்னை மோசம் போக்குமே – வேகம்

3. பாவங்கள் இருதயத்தில் ஏதேனுண்டோ – சிறு
பாரங்கள் உன்னைக்கீழே தள்ளிவிடுமோ – உந்தன்
இருதயத்தை நீ பரிசுத்தமாக்காயோ? – வேகம்

4. லௌகீக கவலையோடு பெருந்தீனியும் – வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே – உனை
மோசம் போக்குமே உந்தன் ஆசை அழியுமே! – வேகம்

5. மேகத்தில் இயேசுராஜன் வேகம் வரவே – பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் – அன்று
மேகமேறிட நீயும் ஆயத்தந்தானா – வேகம்

6. ஆகாயத்தில் நடக்கும் கல்யாணத்திலே – சுத்தர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து – அப்போ
அங்கிருப்பாயோ பூவில் ஓடி ஒளிப்பாயோ? – வேகம்

7. அந்திக் கிறிஸ்து அரசாட்சி செய்யும் வேளையில் – கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் – நீயும்
அகப்படாமலே இன்று தப்பிக்கொள்வாயோ – வேகம்

## 105. இராகம் (டரிடம்டிடாரறி) (89)

**சொந்தமான வேந்தனாம் உங்கள் தந்தனேசையா – மனு**
சந்ததம் பிழைக்க இதோ சொந்தனார் வாரார்

2. சுத்தமான பக்தருக்குள் நித்யமாளிகை – பரி
சுத்தனேசு துத்யராஜா துத்யனிதோ வாரார்

3. மோட்ச சேனையாம் பரிசுத்த சாட்சியார் தொழவேரத்தச்
சாட்சிகளானோர் எழும்பி சூட்சிகன் வாரார்

4. கானாட்டுக்கரசான எங்கள் கோனார் ஏசையா – இப்
பூனாட்டாரைக் கூட்டிச் சேர்க்க அவ்வானாட்டார் வாரார்

5. வானதூதர் சேனையோடு மானிடர் நாமும் – பர
ஞானன் ஏசு சுவாமியாரிதோ வானமேறினார்

6. அந்திக்கிறிஸ்தெனும் பொல்லாத தொந்தி
பெருத்தோனை நூறு
சந்தாகக் கிழித்துவிடச் சொந்தனார் வாரார்

7. ஆயிர வருஷமாக ராயனேசு சுதன் – நல்
ஆயரோடு ஆண்டுபோக ராயர் இதோ வாரார்

**106. இராகம் (எத்தனையோ சாட்சி) (90)**

**பல்லவி**

**சாலேம் குமாரத்தியே உன் நாயகர் தாமதம் செய்வாரோ**

1. கோலமிகும் ஏசுராஜன் கொற்றவா குலத்துவாசன்
ஞாலமெங்கும் புகழ்நேசன் நடுத்தீர்வை தருமீசன் – சாலேம்

2. கன்னியெ சீயோன் குமாரி காலமடத்துதே நாரி
உன்னையே அவர்க்குப்பாரி ஒக்குமொன்றவனைவர் வாரி–சா

3. சிக்கிரம் வந்துனைக்கூட்டி செல்வமென்றன்பு பாராட்டி
வாக்குரைத்தபடி கிட்டி வருவதுண்மையே சீமாட்டி – சாலேம்

4. சாட்சிகள் பழியை வாங்கி தாருமெங்கட்கு வெண்ணங்கி
மாட்சிசேரக்ஷாயிரங்கி வாருமென்கிறோரே சிங்கி – சாலேம்

5. விற்பனர் கவி விண்ணேற வேலர் துரை களி கூர
சற்குணன் சங்கீதம் கூற சபையே உன் மனம் தேற – சாலேம்

## 107. இராகம் (எத்தனை திரள் என் பாவம்) தன்யாசி (91)

**பல்லவி**

**பரமசீயோன் நகரதிபதி வருகிற**
பவனியைப் பார்க்க வாகும்

1. ஆரவாரத்தினோடு தூதர்களெக்காள ஆர்ப்பரிப்
போடு வாராரே
வீரமாய் சிரமத்தில் ஏசுவின் மண்டலம் வெண்
கொடிகள் பிடிக்கவே
பார்க்கப் பயங்கரம் யார்க்கும் பயங்கரம்
படபட மடமட திடுதிடு எனவரும் – பரமசீயோன்

2. முன்பு ஒரு பவனி எருசலேமுக்கு வந்தார் முற்றிலுமா விசேஷம்
பின்னும் ஒலிவலை மேகவெண் பரியேறிப்
போனதுமா விசேஷம்
அன்னமே இப்பவனி அதிலும் மகா முக்கியம்
கன்னி சீயோன் மக்களைக் கலியாணம்கட்ட
வாரார் – பரமசீயோன்

3. காதில் பொன்தோடு கையில் காரணப்
பொற் சரிகை கண்ணில் கலிக்கம் போடு
வாயினில் பூட்டுப்போடு பூட்டைத் திறந்து வேத
மகதத்துவங்களைப் பாரு
சூது வாதுகள் பேசி தோஷியாய்ப் போகாதே
தூதுகள் வருகுது தூங்காதே தூங்காதே – பரமசீயோன்

4. அரையில் சத்தியக் கச்சை மனதினில் மறைவிளக்கு
அணையாமல் வைத்துக்கொள்வாய்
குறையாமல் ஆவியின் எண்ணைதனை நீ
கூடி எடுத்துக் கொள்வாய்
நிறைவான ஞானாகாரம் மறைவான மன்னா கொண்டு
நேசராம் ஏசு வாரார் ஆசையுடன் ஓடி வா – பரமசீயோன்

5. புத்தியில்லாத கன்னியாஸ்திரி தன்னைப்போல புறம்பே
நின்று விடாதே
அத்தத்தின் வாழ்வை நம்பி நித்திய மோக்ஷானந்த
ஆசையைப் போக்கிவிடாதே
கர்த்தரின் சேனைகள் ஆயத்தப்படுகிறார்
காலம் கடத்தினால் மோசம் பெரிய மோசம் – பரமசீயோன்

**108. இராகம் (பார்ப்பேன் என் ராஜாவை) (283)**

**பல்லவி**

**கண்டேன் பரமகாட்சி கார்மேகத்தில்**
கண்டேன் பரமகாட்சி

**அனுபல்லவி**

1. வானம் மடமடெனவே தாழ்ந்த வைய கிடுகிடெனவே
முதல் தூதரும் மும்முரமாக செற்றார் வூர் புகமும்
துந்துமி தாளங்களுடன் விஞ்சையர் இரங்கி வர

2. சூரியன் மறைந்திடவே சிறிய சந்திரன் சிவந்திடவே
உயர் நட்சத்திரக்கணங்கள் நடுங்கி அதிர்ந்து விழ
திம் திம் திம் திம் திம் திம்மென தேவசங்கம் சாய்ந்துவர

3. சேனை அதிபதிமுன் சகல சேராபீன் கூட்டங்களும்
வெகு வீரமாக வெற்றிச் சிலுவைக்கொடி பிடித்து
பும் பும் பும் பும் பும் பும்மென மேளதாளத்தோடு வர

4. காபிரியேல் மிகாவேல் அவருட தூதர் குழாங்களோடு
கனக மகுடமுடி கெம்பீர கீதமுடன்
டிண் டிண் டிண் டிண் டிண் டிண்ணோசையோடு
ஜீவ புஸ்தகம் ஏந்தி வர

**109. ஆனந்தபைரவி (காலமாதாயப்படுத்து) ரூபக தாளம்**

**பல்லவி**

**பொன்னின் கிரீடம் வெண்ணங்கி–வென்றோனுக்கல்லோ**
பூட்டுவார் சீயோனின் பாங்கி – நல்ல

**அனுபல்லவி**

மன்னன் கிறிஸ்து மணவாளராம் ஏசுராஜன்
மின்னல் ஒளியாய் வரும் வேளை சமீபிக்குதே

1. போராட்ட நாட்களிதல்லோ – பகைஞரெல்லாம்
பொல்லாப்பாய் நிற்கிறாரல்லோ
மாறாட்டக்காலமிதல்லோ–அன்பு குறைந்து
மாய்மாலம் பெருகுமல்லோ
வாறார் கிறிஸ்து இருவாளாயுதம் வீசி
பேராசைப் பாவிகளை நீற்றுமன்பரின் வாசர்

2. காலம் கடத்திவிடாதே கண்ணீர் விட்டாலும்
காண்பாயோ சென்ற நாட்களை
ஜாலங்கள் செய்து நில்லாதே – மரணம் வந்தால்
தாமதம் சொல்ல ஏலாதே
வாலவயதும்மாய்கை மண்ணின் பொருளுமாய்கை
சீலமுடனே வேத ஆகமம் அதை எடு

3. துன்பம் முடியப்போகுதே – சுற்றத்தார் செய்யும்
தொல்லை முடியப்போகுதே
வம்புகள் நீங்கப்போகுதே – பாவங்கள் யாவும்
விண்ணில் முடியப்போகுதே
இன்பம் துவக்கப்போகுதே எங்கும் மகிமையாக
துங்காதி துங்கர் தொழும் ஜோதியரைப் புகழ்வோம்

4. முந்தின ஆதாம் மரித்து – கிறிஸ்துவேனும்
பிந்தின ஆதாம் பிறந்து
சிந்தின ஜோதியாலே – நம்மை முழுதும்
திட்டற சுத்திகரித்து
அந்தி சந்தி மதியம் எந்த நேரமும் ஜெபம்
புத்தியுடனே செய்து கெஞ்சி மன்றாடி நிற்போம்

**110.** **(92)**

**பல்லவி**

**எங்கே ஓடிப்போ யொளிப்பாய் ஏதுமற்ற பேதையே நீ**

**அனுபல்லவி**

சிந்தித்துப் பார் மெய்யான வாக்கை ஜீவமானிடர்
எல்லாரும் சேர்வார்
ஜீவியநரர் எல்லாரும் வருவார் ஏது செய்வாய்
எவ்விடம் போவாய்
லோகமனுவேல் லோகத்தின் பிரபுவே

1. ஆதாமுதலிவரை அனைவரும் மெய்யாகவே வருவார்து
வேதவார்த்தை பொய்யாகுமோ கேள் வெந்தழிந்தோர்
யாவரும் வருவார்
வெள்ளத்திலழிந்தவர் யாவரும் வருவார்
ஜீவியர் வருவார் வாசினர் வருவார் – ஏது செய்வாய்

2. சிங்கம் போல ஜெயம் கூறிக்கொண்டு தேகரை நியாயம்
தீர்க்க வருவார்
தேவதூதர் சேனையோடு வருவார் மேகவாகனம்
ஏறியே வருவார்
தேகமானிடர் காணவே வருவார்
பாவிகள் புலம்பி பாதகர் துடிப்பார் – ஏது செய்வாய்

3. சிங்காசனமீதிலிருப்பார் தேவதூதர் ஆர்ப்பரிப்பார்
பூமியிலுள்ளோர் இருபோகமாவார் நன்மை செய்தவர்
ஓர் திரளாவார்
தீமை செய்தவர் ஓர் திரளாவார்
ஜாதி மேன்மை யாவும் ஒளியும் – ஏது செய்வாய்

4. உன்னுடைய பாவமெல்லாம் கண்ணின் முன்னே
நிற்கக் காண்பாய்
உன்னதரின் முன்னே நடுங்கி எண்ணி எண்ணிப்
பார்த்து அலறி
ஏசுதேவன் சொல்லைக்கேட்டுத் துடிப்பார்
கூவி அலறிக் கூக்குரலிடுவார் – ஏது செய்வாய்

5. தேவனுட புத்தகங்கள் ஆனதின்படியே தீர்ப்பார்
ஜீவபுஸ்தகம் தன்னிலே ஜீவவாசிகள் பேர்கள் துலங்கும்
பாவிகள் பேரதில் காண்பதே இல்லை
தேவகோபத்தீயில் விழுவார் – ஏது செய்வாய்

## 111. இராகம் (சீயோனே மகிழ் மங்கையே) (262)

**பல்லவி**

**எங்கே நிற்பாய் பாவி – ஓ பாவி**
எங்கே நிற்பாய் பாவி

**அனுபல்லவி**

துங்கன் கிறிஸ்தேசு துரை வரும்போது – எங்கே

1. விசித்திரமான நல் விசுவாசி தானே
ரட்சிக்கப்படுவதும் ரகசியமானால் – எங்கே

2. திருமொழியால் மனந்திரும்பாத பேரை
எரிநகரத்தில் அமிழ்த்திடுவாரே – எங்கே

3. நீதி வஸ்திரம் கட்டி நிற்பவரோடோ
வேதனை நகரத்தில் வேகுவாரோடோ – எங்கே

4. வஞ்சகமில்லா விஸ்வாசிகளோடோ
பஞ்சபாதகம் செய்த பாவிகளோடோ – எங்கே

5. ஆராதனை செய்யும் ஆலயத்தோடோ
சாராயக்கடை தேடும் சந்ததியோடோ – எங்கே

6. கொஞ்சமும் துயரில்லா ரஞ்சகரோடோ
சஞ்சலப்பட்டு தவிப்பாரோடோ – எங்கே

**112. இராகம் இங்கிலீஷ் (93)**

**நித்திய ஜீவன் எனக்குண்டு நியாத்தீர்ப்பின் நாளிலே**
என் பயமெல்லாம் நீங்கிற்று – விசுவாசித்தபோதே

**பல்லவி**

துன்பமெல்லாம் சகிப்போம் இன்னும் கொஞ்சக்காலந்தான்
மோட்சம் போவோம் சீக்கிரத்தில்
பேயின் தந்திரங்களுக்கு பயப்படமாட்டோம்
அவன் காலம் கொஞ்சம் தான்

2. உலகம் என்னைப் பகைத்தால் பயமின்றிப் போர் செய்வேன்
சோதனை எல்லாம் வெல்லுவேன் மீட்பரின் பலத்தால்

3. நீ உன் பாவத்தை உணர்ந்து மீட்பரின் பலத்தால்
அவர் உன் பாவம் போக்குவார் பரிசுத்தமாக்குவார்

4. துன்ப துக்க மிகுத்தாலும் அவரை விட்டு நீங்கேன்
என் மீட்பரை நான் சந்தித்து மோட்ச கரை ஏறுவேன்

**113. காமாஸ் ரூபக தாளம் (94)**

**பல்லவி**

**என்ன ஆனந்தமோ பரலோக மேன்மை எத்தனை**
மாட்சிமையோ
சீயோன் கண்ணே என்ன ஆனந்தமோ

1. தேவதூதர்கள் கூடி பெண்ணே சிங்காரக்கவி பாடி
தேவாதி தேவன் பரிசுத்தர் சுத்தரென்று
ஓயாமல் எப்போதும் உன்னதமாய் பாடுவார்

2. ரத்தினத்தாலிழைத்த கண்ணே ரஞ்சித மாளிகையொ
கர்த்தாதி கர்த்தன் கருணை கிறிஸ்தரசன்
இன்பமுடன் கூடி இருக்கும் ஸ்தலமிதுவோ

3. மாணிக்கத்தால் சமைத்த கண்ணே ரஞ்சிதமாளிகையோ
கண்ணினால் நானதை காணுவதெப்போது
என்றென்றும் ஏசுவோடு மாறாமல் வாழ்க

4. இன்பச் சீயோனின் கண்ணே நாமிருவரும் சேர்ந்து போவோம்
இன்பமுடன் காதால்கேட்ட செய்தி எல்லாம்
இக்ஷணமே நாம் பார்க்க எட்டி நடந்திடுவோம்.

**114. செஞ்சுருட்டி ஆதி தாளம் (95)**

**தேவ ஆசனத்தின் முன்னதாகவே ஜீவநாயகரின்** சந்நிதியிலே
ஓயாப் புகழ் தூயர் தூயரெனவே ஒன்றாய்ப் பாடுவோம்

2. பாவரோகம் கண்ணீர் யாவற்றோடுமே பாடுநோய் துயரம் பறந்திடுமே
தேவ கிருபா நதிதீரத்தில் நின்றே தினமும் பாடுவோம்

3. எண்ணமுடியாத ஏக கூட்டமாய் ஏசுரட்சகரின் சாயல் தரித்தோர்
வெண்ணுடைதரித்து வேந்தர் எனவே என்றும் பாடுவார்

4. பூவோர் கண்டிராத மேன்மையுள்ளதாய் பொங்கும் நீர் பளிங்குபோல் துலங்குமாம்
ஜீவநதியென்னும் ஆற்றின் அழகாம் தீரத்தில் நின்றே

5. வீதிதன்னில் விளையாடுவோம் நாமே ஜாதிவித்தியாசச் சாபம் நீங்குமே
நீதிமான்கள் வாழ்வு நித்யமாமங்கே நிதமும் பாடுவோம்.

**115. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (96)**

**பல்லவி**

**எப்போது சேருவேனோ! பரம நகர்**
எப்போது சேருவேனோ?

1. துப்புரவாம் பளிங்குக் கொப்பான ஜீவநதி
அப்புக் குளித்துக் களித்துக் சுகித்திருக்க – எப்போது

2. ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்தருந்தி
பாட்டுப்படித்துக் களித்து சுகித்திருக்க – எப்போது

3. பல்லிசை தாளம் தம்பூர் பஜனை மேளங்களோடு
அல்லும் பகலும் அல்லேலு அல்லேலு சொல்ல –எப்போது

4. தித்திக்கும் தேவாமிர்த ஜீவதருக்கனியை
தின்று மகிழ்ந்து கனிந்து சுகித்திருக்க – எப்போது

5. துங்காதி துங்கன் சீயோன் மங்கை மணாளர்க்கு
சங்கீதலங்கிர்த மங்களமும் படிக்க – எப்போது

**116. இராகம் (இங்கிலிஷ்)** **(97)**

**பல்லவி**

**ஓர் வெண்ணங்கி ஓர் பொன்முடி**
ஓர் வாத்தியம் ஓர் மேல் வீடு
ஓர் ஜெயக்கொடி ஓயா இன்பம் எனக்குண்டு சொர்க்கத்தில்

1. ஏசு என் ரட்சகர் பாவம் தீர்த்தார், கல்வாரி மலையினில்
கடன் தீர்த்தார்
அவரன்பில் நான் மூழ்கி என்றும் வாழுவேன் வாழுவேன்
ஜீவ ஊற்றில் வாழுவேன் – ஓர்

2. பாவிகள் நடுவில் போகிறேன் போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் சென்ற பாதைதனில் போகிறேன் நான் போகிறேன்
– ஓர்

3. வீண் பக்திக்காரர் நகைத்தாலும் போகிறேன் நான்
போகிறேன்
பூரண அன்பு பயம் தீர்க்கும் போகிறேன் போகிறேன் நான்
போகிறேன் – ஓர்

4. சிலுவைக்கொடியுடன் போகிறேன் போகிறேன் நான்
போகிறேன்
மீட்பரின் நேசத்தைக்காட்ட நான் போகிறேன் நான்
போகிறேன் – ஓர்

**117. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (98)**

**மாட்சிமிகும் மோட்சநகர் மகிமை என் சொல்வேன் – அந்த**
மங்களம்சேர் மாளிகைக்குள் என்று சேருவேன்

2. பட்டணத்து வீதியெல்லாம் சுத்தப்பொன்னாமே – அங்கு
பாடுவோரும் ஆடுவோரும் கோடாகோடியே

3. முத்துமயமாயிலங்கும் பட்டணமது – நமது
முன்னோரெல்லாம் போயிருக்கும் பட்டணமது

4. ஜீவநதி பாயுகின்ற பட்டணமது – நிதம்
சித்திரமுடனிலங்கும் பட்டணமது

5. நாமெல்லோரும் நாடுகின்ற பட்டணமது – நமது
நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது

6. சாவுதுக்க மேயில்லாத பட்டணமது – நிதம்
சங்கீதமுடனிலங்கும் பட்டணமது

**118. பியாக்** **ஆதி தாளம் (99)**

**பல்லவி**

**தோத்திரம் தோத்திரம் அல்லேலூயா**
துதி செய்வார்கள் யாத்திரையோர்
கீர்த்தனம் கீர்த்தனமல்லே லூயா
கீதமுழங்குவார் யாத்திரையோர்

1. பரமகானான் ஓரத்திலே பாய்விரித்தோடும் கப்பலைப் பார்
ஏழைகள் மகாராஜர்களும் ஏகமாய் ஏறிப்போவதைப்பார்

2. ஆயிரங்கோடி ஜனங்களெல்லாம் ஆர்ப்பரிப்பார்கள் மோட்சத்திலே
ஆனந்தக் கோடாகோடிகளெல்லாம் ஆயத்தமாகிறார் பூதலத்தில்

3. சுத்தசுவிசேஷ ஒளி சுற்றிச்சுற்றி ஒடுது பார்
பக்தியுள்ள பரிசுத்தர்கள் பரமகானான் சேர்வதைப்பார்

**119. செஞ்சுருட்டி** **சாப்பு தாளம் (100)**

**நித்திய மோட்சானந்த மகிமையை நினைத்தாலு** முடியாது – அதை
மெத்தச் சுருக்கமதாய் வேதத்தோடொத்துப் பார்த்தால் தெரியும்

2. பக்தர்காயாதி முதல் ஆயத்தம் பண்ணின மோட்சநகர் – மகிமை
கர்த்தரின் வேதத்தினால் அறிந்திட கண்ணே எழுந்துவாவே

3. கண்ணினால் கண்டிடாத மகிமை காதினால் கேட்டிராத – ராகம்
மண்ணின் மனுப்புத்திரருக்கு எட்டிடாத மங்களமான நகர்

4. மங்கள நகரத்துக்கு மதில் வச்சிரக்கல்லாலே போட்டிருக்கும் – மிகு
தங்கத்தைப்போல் பளிங்காய் துலங்கிடும் சாயுச்சித பட்டணமே

5. பன்னிருவாசல்களாம் அஸ்திபாரம் பன்னிருவிதக் கற்களாம் – அதின்மேல்
பன்னிரு அப்போஸ்தலர் நாமங்களும் பதியப்பட்டிருந் ததுவாம்

6. பன்னிரு முத்துக்களாம் அதின்முன் பன்னிரு
தூதர்களாம் – காவல்
பன்னிருகோத்திரத்தார் நாமமும் பதியப்பட்டிருந்ததுவாம்

7. தேவனும் ஆட்டுக்குட்டியிருவரும் தேவாலயமதற்கு–அந்த
தேவருலாவுகின்ற நகரமும் தெளிவுள்ள சுத்தப்பொன்னாம்

8. சூரிய சந்திரனின் ஒளியங்கு தோன்றிடக்கூடாது – அவர்
நீதியின் சூரியனாய் பிரகாசிப்பார் நிச்சயம் நிச்சயமே

9. தெய்வத்தின் ஜோதிமயம் இலங்கிடும் தெய்வத்தின்
புஸ்தகத்தில் – பெயர் பெற்ற
தெய்வ பக்தர்களாய் பிரவேசிக்கும் தெய்வ நகரமிதே

10. மெத்த பளிங்குக்கொப்பாய் தெளிவான சுத்தஜலங்
கொடுக்கும் – ஜீவநதி
கர்த்தரின் ஆசனத்திலிருந்துமே அத்தலம் எங்கும் பாயும்

## 120. தமிழ் இராகம் (101)

**பல்லவி**

**எத்தனையோ காட்சி – சீயோன் நகர்**
எத்தனையோ மாட்சி

**அனுபல்லவி**

அத்தனார் வாழும் அபரஞ்சிமேடையும்
துத்தியங்கள் நீடும் தூதர்கள் வீணையும்
பக்தியாகப்பாடும் பாவலரோசையும் – எத்தனை

1. பன்னிரண்டு வாசல் அதோரமாய் பளிங்கு நதியோடுது
மின்னொளிக்கற்கள்போல – வீதியெல்லாம் மின்னித்
திகையுது பார்
வச்சிரக்கோட்டையும் வர்ணச்சிறப்பான உச்சிதப்
பேட்டையும் உத்தமர் பாட்டையும்

பேச்சுக்கடங்காத பேரின்பக் காட்சியும்
கண்ணாலே கண்டிடவே என் மானே காதல்கொள்வாய்
மெய்யே - எத்தனை

2. ஜீவநதியோடுது பளிங்குபோல் சிங்காசனத்தின் முன்னே
ஜீவ விருட்சமொன்று ஈறாறுவித ஜீவகனியுமுண்டு
உச்சித தேசத்து ஓங்கு சூரியனும் பச்சுப் பச்சென்னும்
பளிங்கு தீபங்களும்
நிச்சயமாகவே நிலாவும் வேண்டாமங்கே
மாமனுவேலனங்கே பரஞ்சோதியாய் வீசுகிறார்
- எத்தனை

**121. அம்சத்தொனி** **ஆதி தாளம் (102)**

**பல்லவி**

**என்ன சுகம் என் ரட்சகர் சமுகப்பேரானந்தம்**
பரமானந்த மோட்ச சுகானந்தம் அதைப்
பெற்று அனுபவித்தால் என்னசுகம்

**அனுபல்லவி**

பொன்னகர் வீதியில் எந்நேரம் பாடலாம்
கின்னரம் தம்பூர் வீணை இன்னிசை கேட்கலாம்

1. ஜீவநதியில் களித்துக்குளிக்கலாம்
ஜீவகனியைப் புசித்துச் செழிக்கலாம் - என்ன

2. வெற்றி பொன் வெண்ணங்கி தரித்துக் கொள்ளலாம்
சுத்த பொன்னால் சொகுசாயிருக்கலாம் - என்ன

3. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
சிங்காசனத்தில் சொகுசாயிருக்கலாம் - என்ன

4. கர்த்தனை எப்போதும் தரிசித்து வாழலாம்
அத்தனின் சமுகம் சேவித்து ஆளலாம் - என்ன

5. வாட்டம் பசி தாகம் பட்டினி சாவில்லை
கேட்டின் மகனுமங்கே கூடியிருப்பதில்லை – என்ன

6. நேசரின் ரத்தத்தால் மீட்பை அடைந்தவர்கள்
ஆசனமீதிருந்து ஜெயகீதம் பாடுவார்கள் – என்ன

**122. சங்கராபரணம் ஆதி தாளம் (103)**

**பல்லவி**

**நடப்போம் வாருங்கள் சீயோன் மலைக்கு**
நாமனைவரும் போய்வருவோம்

**அனுபல்லவி**

சிங்காசனங்களை சுற்றிப்பார்த்து
சந்தோஷங் கொண்டாடியே களிகூர

1. தேவாதி தேவன் தூதர்கள் சூழ சிறந்த மகிமையில் வீற்றிருக்க
லோகதி மீட்பர் லோகத்துக் கொளியாய் வலது
பாரிசத்தில் கொலுவிருக்க
நாலாறு மூப்பர் ராஜாவைச் சுற்றி ஆசனங்களில் வீற்றிருக்க
தூதர் சேனைகள் ஓயாத்தொனியாய் தேவனைத்
துதிக்கும் அவ்விடத்துக்கே – நடப்போம்

2. வீதிகளெல்லாம் பொன்மயமாக வைர ரத்தினங்கள் பதித்து
நீதியின் சூரியன் நிறைந்த ஒளியாய் அவைகளின் மேலே
இலங்கையிலே
ஜோதியின் மயமாய் சம்மனசோர்கள் சூழ்ந்துலாவும் சமயத்திலே
பாவிகட்காக தேவாட்டுக்குட்டி பரிந்து பேசுவதை
நாம் பார்க்க – நடப்போம்

3. தற்பரதேவன் வெற்புச்சீனாயில் கற்பனை பத்தும் தந்திருக்க
அற்பமாயெண்ணி நிர்ப்பாக்கியராகி சற்பனை செய்த
தருணத்திலே
விற்பன கிறிஸ்து அற்புதமாய்மரி யாளுதிரத்தினில் உற்பவித்து
ஆடுகட்காகப் பாடுகள் பட்டு வீடு போய்ச் சேர்ந்து
நாடுவதாலே – நடப்போம்

**123. செஞ்சுருட்டி** **ஏகதாளம் (104)**

**நாசலோக மீதிலே வாசஞ்செய் புறாவண்ணமே**
ஏசுநேசர் உன்னைத் தேடுகிறார் – அதி ரூபியே
என்னோடே எழுந்துவா ஓடி நடந்துவாவே

1. வாசலிலே நிற்கிறார் பாசமாயழைக்கிறார்
நாசமில்லா லோகமதற்கு – அதி ரூபியே

2. பரமண்டலம் சேரலாம் சுரமண்டலம் பாடலாம்
தரைமண்டலத்துள்ள நேசரே – அதி ரூபியே

3. தங்கரூபமாகலாம் அவர் தங்கள் ரூபமாகலாம்
மங்களங்கள் பாடலாமே – அதி ரூபியே

4. வெண் துயிலுடுப்போம் வெண்கொடி பிடிப்போம்
கண்திறந்து பார்க்கமாட்டாயோ – அதி ரூபியே

5. மேகமீதிலோடுவோம் சங்கீதமாகப் பாடுவோம்
தாகமல்லையோ அதின்மேலே – அதி ரூபியே

6. ஜீவகிரீடம் தரிப்போம் நித்ய ஜீவனோடே யிருப்போம்
ஜீவவாக்கு உரைக்கவில்லையோ – அதி ரூபியே

7. ஞானமணவாளனின் கலியாண விருந்துண்ணலாம்
வானவரின் கூட்டம் கூடலாம் – அதி ரூபியே

8. ஜீவமன்னா புசிப்போம் ஜீவதண்ணீர் குடிப்போம்
சாபமெல்லாம் தொலைக்கப் போறாரே – அதி ரூபியே

9. தங்கரத்தினக் கோட்டைகள் சிங்காரமான ஆலயம்
மங்காமல் துலங்குது பார் – அதி ரூபியே

**124. பியாகு** **ஆதி தாளம் (105)**

**பல்லவி**

**அந்தோ காண்கிறேன் எனதருமை ரட்சகர் சமுக சன்னிதி**
ஆ! பார் போவோம் வா வா நேசா

1. சுந்தரசீலமும் சுகந்த வாசமும் இந்திர நீலமும்
இதர கோலமும், கலந்த காட்சி கலந்த காட்சி – அந்தோ

2. கேரூபின் கூடுது சேராபீன் பாடுது பேரோசையோடு
பேரோசையாகுது, சிறந்தகாட்சி சிறந்த காட்சி – அந்தோ

3. பன்னிருவாசலும் பளிங்கு வீதியும் மின்னொளி கற்களும்
மூப்பர் சூழ்தலும், என்னபகட்டு, என்னபகட்டு – அந்தோ

4. இரத்தச் சாட்சிகளும் நன்முனிவர்களும் சுத்தர்கள் தீர்க்கரும்
தூயசீடரும், பந்தி பந்தியாய், பந்தி பந்தியாய் – அந்தோ

**125. இராகம் (களிக்குதென்றன் உள்ளமே)** **(282)**

**பல்லவி**

**ஜீவநதியின் ஓரமாய் சீயோன் பட்டணம் தெரியுது**

**அனுபல்லவி**

நித்தியம் நித்தியம் நித்தியமாக
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமாக – ஜீவ

1. பாவம் நிறைந்த லோகமே – உன்
பாக்கியம் எனக்கு வேண்டாமே – நித்தியம்

2. கண்ணிறைந்த லோகமே – உன்
கஸ்தி எனக்கு வேண்டாமே – நித்தியம்

3. எருசலேமின் ஓரமாய் – கிறிஸ்து
சத்தம் கேட்குது – நித்தியம்

4. வயல் வெளியின் பக்கத்தில் – தூதர்
சத்தம் கேட்குது – நித்தியம்

**126. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (106)**

**பல்லவி**

**உலகமுன் சதமென்று எண்ணியிராதே**

பலவித பாதாள வலையிற் சிக்காதே

1. மாதா பிதா மற்றுஞ் செல்வமிருந்தாலும்
மரணம் வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும்– உலகமுன்

2. நரகத்தின் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோக கீதங்களும் உன்னை வதைக்கும் – உலகமுன்

3. சாவின் கோரக் காட்சி நெஞ்கையில்
பாவிநானென் செய்வேனென்று திகைப்பாய் – உலகமுன்

4. பாவ விமோசனமிப்போதே பெறுவாய்
தாவி உன் மீட்பரின் பாதத்தைத்தேடு – உலகமுன்

**127. முகாசி** **ஆதி தாளம் (107)**

**பல்லவி**

**இன்னம் நீ என்ன செய்கிறாய்**

குணப்படாமல், தாமதமென்ன – ஓ பாவி

1. உன்னதத்திருந்த இயேசு இந்நிலத் தவதரித்து
உன்னை மீட்க வந்தாரல்லவா – ஓ பாவி

2. அண்டபகிரண்டந்தனை ஆளுகின்ற வல்லசுதன்
தொண்டருக்காக மரித்தாரே – ஓ பாவி

3. வல்லபிதா தம்மகனை உள்ளத்தில் நினைப்பவர்க்க
சொல்லரும் பதவி ஈவாரே – ஓ மனமே

4. சிங்கம்போலவே பிசாசு அங்குமிங்கு முன்னைச்சுற்றி
பங்கப்படுத்தப் பார்க்குதே – ஓ மனமே

5. வல்ல பஞ்சபட்டயமும் கொள்ளை நோயு முன்னுடைய
வல இடபக்கம் செல்லுதே – ஓ மனமே

6. தோழர்கள் தூஷிப்பாரென்று தூரமாக நில்லாதே
ஆவலோடெழுந்து வாராயோ – ரட்சிப்படைய

7. ரட்சண்ணிய செய்திகொண்டு தேவதாசர் வந்து நின்று
ஓதுவார்கள் நீதியைத்தானே – ஓ பாவி

8. ஒவ்வொரு நாளும் உன் காதில் ரட்சிப்பின் தொனி
தொனிக்க
இன்னமும் நீ தாமதிப்பதேன் – ஓ பாவி

**128. செஞ்சுருட்டி ஆதி தாளம் (108)**

**பல்லவி**

**பாவத்தின் சாபத்தை தீர்த்தவரேசு**
தீர்த்தவரேசு தீர்த்தவரேசு

1. கைலாச தூதர்கள் கீதங்கள் வெறுத்து
வையகந்தனிலிவர் மனிதனாய் திரிந்தார் – பாவத்தின்

2. பாவியின் கடனை சாவினால் தீர்த்து
தாவிவரும் ஏழைப்பாவியின் பதவி – பாவத்தின்

3. முண்முடியை இவர் பூண்டார் தம் சிரசில்
புண்யம் செய் பாதையும் திறந்தோருமிவரே – பாவத்தின்

**129. செஞ்சுருட்டி ஆதி தாளம் (109)**

**பல்லவி**

**பாவிகளை மீட்க வந்த பரனிவர் தாமே**

1. தேவ அன்பை கொஞ்சமேனும் தாவித்தேடாமல்
சிற்றின்ப வலைதனிலே சிக்குண்டலையும் – பாவிகளை

2. நேச பிதா அன்பின் சத்தம் நீசர் கேட்காமல்
நான்தானெனும் ஆணுவத்தால் துன்பத்துள்ளான
–பாவிகளை

3. கல்வி பணம் லோக மேன்மை செல்வமென்றெண்ணி
ஐயனாரின் தாசர்களை வைது திரியும் – பாவிகளை

**130. தேசிககாபி** **ஆதி தாளம் (110)**

**பல்லவி**

**நித்தியானந்தத்தை நாடு – பர**
நின்மலசுகம் தேடு – ஓ மனமே – நித்தி

**அனுபல்லவி**

சத்தியமார்க்கம் தன்னிலே கூடு
சற்சனர் சங்கத்துடனுறவாடு – நித்தி

1. இந்திரஜாலம் உலகவைபோகம்; இன்றைக்கிருப்பதுவோ
சந்தேகம்
அந்தரமின்னல் போலழியுமித்தேகம் ஐயோ அதனுடன்
உனக்கென்ன சிநேகம் – நித்தி

2. தனதானிய முதலான சம்பத்து சாஸ்வதமோ அதற்காயிரம் தந்து
தினமுங்கவலையை விளைத்திடும் வித்து சீச்சி அதனை
விரும்பல் விபத்து – நித்தி

3. மெய்யே ஒன்றுக்கும் உதவாப்பண்டம் மிருகாதிகள் சூழ்
மாமிச கண்டம்
பொய்யோ இதற்கிங்கு நித்யகண்டம் புண்யஞ் செய்யும்
உனக்காயிரம் தண்டம்– நித்தி

4. காண்பதெல்லாம் நிலையல்ல அநித்தியம், காயம் இறந்திட
வேணுமகத்தியம்
வீண்பொருள் மீது உனக்கென்ன பைத்தியம் வேதநாயகன்
சொல்வதே சத்தியம் – நித்தி

**131. தமிழ் இராகம்** **(111)**

**பல்லவி**

**பாவி பரமசுதன் தாவிஉனைத் தயவாய் கூவி**
அழைக்கிறார் இதோ வாராயோ – ஓ

**அனுபல்லவி**

பூவின் பாவப் பாரத்தை மேவிச் சுமந்து தீர்த்த
தேவாட்டுக்குட்டி இதோ பார் பார் பார் – ஓ பாவி

1. ஜென்மபாவத்தினோடு கன்மபாவமு முன்னை
சின்னப்படுத்திதைப் பார் பார் பார் – உனின்
நன்மை ஏதுமில்லாத தன்மை அதை அறிந்து
நன் மணவாளனேசுவைச் சேர் சேர் சேர் – ஓ பாவி

2. சிற்றொளி தீபம் சுற்றிப்பறந்து நிற்கும்
சிற்றுயிர் புட்கள் தனைப்போலவே – உனைச்
சுற்றி உலகளிக்கும் சிற்றின்பமான சுகம்
தொற்றிப் பாவி நீ கெட்டாய் சாலவே – ஓ பாவி

3. எத்தனை தானதர்மம் நித்தம் பூசைபலிகள்
அத்தனையாலும் பாவம் தீராதே – பரி
சுத்தன் ஏசுவின் திருரத்தம் பாவக்கறையை
சுத்திகரித்திடும் நீ சேராயோ – ஓ பாவி

4. தந்தைப் பிதா தமது சொந்தக் குமாரன் தனை
தந்து உலகினை புரந்தாரே – நீயும்
சொந்த சேயனாகவே உந்தன் விசுவாசத்தால்
சொந்தம் உண்டாகுமென்று பகர்ந்தாரே – ஓ பாவி

5. நீடிய பாவமன்னிப்போடுமே பரிசுத்தம்
நித்திய ஜீவனுமுன் பங்காமே – இன்பம்
நாடி ஜீவகிரீடம் சூடிப் பராபரனைப்
பாடி மகிழ்வதுமுன் பங்காமே – ஓ பாவி

**132. இராகம் இங்கிலீஷ்** **(112)**

**பல்லவி**

**பாவி ஓடிவா உன் பாவப்பாரம் தாங்க ஏசு**
பார்த்து நிற்கிறார் பரிதபித்து நிற்கிறார்

1. தாமதமென்ன, உன் சுவாமி ஏசு நாதரழைக்கும்
சத்தம் கேளாயோ
அவர் தஞ்சம் தேடாயோ

2. பின்னிடாதே நீ, உன் தன்மை இன்னதென்று
அவர் முன்னறிவாரே
தம் நன்மை ஈவாரே

3. காலம் போகுது, மாய் மாலம் செய்து வஞ்சியாமல்
மந்தை சேர்ந்துகொள்
கிறிஸ்தன்பை சார்ந்துகொள்

4. தேவபாலனாம், இம்மானுவேலரே உன் காவல் தேவை
வேறென்ன
உனதாவல் வேறென்ன

5. சுத்தஜோதியே தம் ரத்தத்தாலே உன்னை மீட்க
சித்தம் கொண்டிட்டார்
ஆ! சிலுவை தொங்கிட்டார்

6. நொந்த பாவியே, இவ்வந்தகார லோகந்தனில்
தொந்தரை மெய்யே
பல நிந்தைகள் மெய்யே

7. ஜீவ அப்பம் நான் நீ தின்று மகிழ்கொண்டு
ஜீவன் கண்டடை என்றார்
எனைவந்தடை யென்றார்

**133. இராகம் சங்கராபரணம்** **(133)**

**பல்லவி**

**பாவஞ் செய்யாதே நீ பாவஞ் செய்யாதே**

பாவஞ் செய்யாதே நீ பாவஞ் செய்யாதே

1. தேவன் சொன்ன கற்பனை மீறித் தீமை செய்யாதே
காவல் நின்று பார்ப்பாரென்று கருத்தாய் மனதில்
நினைத்தே இரு நீ

2. பெற்ற தாலந்துக்களை நீ பேணாமற் போனால்
குற்றவாளி என்றே தேவன் கோபங்கொள்வார் லாபம்
பண்ணு

3. நித்தம் நித்தம் நீ புரிந்த நின் பாவமெல்லாம்
கர்த்தரெழுதி வைத்திருக்கும் கணக்கில்

4. எப்பொழுது சாவு வரும் என்றறியாயோ – அதால்
இப்பொழுது நீ திரும்பி இயேசுமேசியாவை நம்பு

**134. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (114)**

**பல்லவி**

**ஆகா பூலோக வாழ்வே அநித்தியம்**

**அனுபல்லவி**

சாகா வரங்கொண்டு யார்தான் புவிவந்தார் – ஆகா

1. கதைபோல் வருஷங்கள் கழியுதெ வீணாய்
அதை யோசித் துனது ஆத்துமம் பேணாய் – ஆகா

2. புகை போல் பறக்குதே புகலற்ற வாணாள்
திகையாதேசு பதம் தேடிக்கொள் இந்நாள் – ஆகா

3. புல்லோ புல்லின் கண் பூவோ இவ்வாணாள்
கல்லோ அதையுற்றுக் கவனிப்பாயானாள் – ஆகா

**135. துசாவந்தி** **ஆதி தாளம் (115)**

**பல்லவி**

**காலம் ஆதாயப்படுத்து உனது ஜீவன்**
கடலின் அலையின் துரும்பு சிநேகிதா

**அனுபல்லவி**

வாலவயது மங்கைப்பருவம் நடுவயது
சாலச்சிதைக்குமந்தச் சங்காரன் வருமுன்னே – காலம்

1. இந்தவருடமெவர்கள் பிழைத்திடுவர் எவர்கள் மரித்திடுவர்கள்
தொந்தமாம் நரைதிரையோ துளிரோ எனச்சொல்லும் செயலெனக்கில்லை
அந்தந்த வருடம் அநேகர் மடிந்தனர்கள்
இந்தச் சத்தியமொன்றே எனக்குத்தெரியுமப்பா – காலம்

2. குற்றவாளியைப்போல் இவ்வருடத்தில் குறித்த தினமொரு நேரம்
சற்றே தாமதமுமின்றி உந்தன் முடிவு சடுதியாயிருக்குமென்றால்
அவற்றை நான் வருவதற்கு காயத்தம் பண்ணினாயோ
சிற்றின்பத்தில் மகிழ்ந்துஜீவனைப் போக்கிடாதே – காலம்

3. ஜீவன் முடிந்தபிறகு மனந்திரும்பச் செயலிருக்குமென் றெண்ணாதே
ஆவென்று திறந்திருக்கும் அகலக்குழி அப்புறம் திறவாதே
யாவரையுமெழுப்பும் எக்காள சத்தமொன்றே
நல்லார் பொல்லார்களை நியாயத் தீர்ப்புக்கெழுப்பும் – காலம்

4. செங்குத்து மலைமேலே நடக்கிறவன் சிரித்து விளையாடுவானோ
சிந்தை மயங்கியேனோ உந்தன் காலத்தை ஜெபமின்றிப் போக்குகிறாய்
சங்கவானவரோடு சங்கீத ராகம்பாடி
சிங்காசனத்திருக்கும் ஜேசுடன் வாழவென்றால் – காலம்

5. இப்போதே இரட்சண்ணியநாள் இது தவறில் எப்போதும்
கிடையாது
அப்புறங்கடந்தவெள்ளம் அணுகிவர அழுதும் திரும்பாது
தப்பாது ஏசுபதம் தாழ்ந்து சரண்புகுந்தால்
ஒப்பற்ற மோட்சவாழ்வு உனக்கும் கிடைக்குமப்பா – காலம்

**136.** **தமிழ் இராகம் (116)**

**பல்லவி**

**குணப்பட இதுவே தருணமையா**
கோபாக்கினை நாள் கொடிதாமே

1. க்ஷணத்தில் இவ்வுலகமும் அதிலுள்ள பொருள்களும் குணப்பட
தசிக்கப்படுமே படுமே படுமே – குணப்பட

2. இன்றைக்கிருக்குமுயிர் நாளைக்கிருக்குமோ யென்
றெண்ணியே மனங்கசந்து – குணப்பட

3. ஆஸ்தி கல்வி உத்தியோகம் அதிகரித்தாலகந்தை
ஆகி அழிம்பு செய்யாதே – குணப்பட

4. ஆவியுன் கூடுவிட்டேகுமுன் தேவனை
அறிந்த வணங்கு மனமே – குணப்பட

5. கனிகொடா மரங்களை விழுத்தும் கோடரி ஐயன்
கரத்திலிருக்குதையையோ ஐயையோ – குணப்பட

**137. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (117)**

**பல்லவி**

**ஓடிவா ஏசுவண்டை நேசா நீ**

**அனுபல்லவி**

மா உண்மையை அறிந்த மிக வாழ்வாயே

1. கும்மாளம் போடாதே பாவத்தினில் – உனக்
காய்மரித்த ஏசுவை நோக்கிப்பார் – ஓடிவா

2. சாவாய் நீ பாவ வழி ஓடாதே – கெட்ட
சாத்தானின் ஆசைகொண்டு அலையாதெ – ஓடிவா

3. கொண்டு நீ வந்ததென்ன ஒன்றுமில்லையே – நாளைக்
கூடக்கொண்டு போவதென்ன ஒன்றுமில்லையே – ஓடிவா

**138. இராகம் (இங்கிலீஷ்) (118)**

**நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம்**
இந்தப் பொய்யுலகை நம்ப வேண்டாம்
நேசம் காட்டித் துரோகம் செய்யும்
இந்தப் பாழுலகை நம்ப வேண்டாம்

2. உன்னைப் பெற்ற மாதா எங்கே?
போஷித்த உன் தந்தை எங்கே?
போய் விட்டாரோ போய் விட்டாரோ
உன்னை விட்டுப் போய்விட்டாரோ

3. அண்ணனெங்கே தம்பி எங்கே?
அக்காளெங்கே தங்கை எங்கே?
ஆசையாகத் தேடி வைத்த
ஆஸ்தி செல்வம் தானுமெங்கே

4. திருடனைப்போல் சாவு வரும்
திடுக்கிடுவாய் நீயுமப்போ
பாம்பின் வாயில் தவளை போலப்
பரிதவிப்பாய் பரிதவிப்பாய்

5. பிரேதமாக பாவியுன்னை
தூக்கிப்போவார் கல்லறைக்கு
அங்கே உன்னை அடக்கஞ்
செய்வார் நம்புவாயோ உலகைப்பின்னும்

6. இயேசு நாதர் பாதம் தேடு
மீட்பை இன்றே பெற்றுக் கொள்வாய்
குருசில் தொங்கும் நேசர் பாரும்
குணமாக்குவார் இப்போ வாரும்.

**139. இராகம் (இங்கிலீஷ்)** **(119)**

**பல்லவி**

**தேவ சேயின் பால்யசேனையர் நாமே**
தேவ வேலை சற்று செய்வோம் வாருமே

**அனுபல்லவி**

தேசமெங்கும் போகச்சற்று சிறுவராயினும் பின்னும்
செய்ய சிறு வேலையுண்டு செய்தாலதில் ஜெயமுண்டு

1. பாரில் வந்தெமக்காய் பாடுபட்டோனை
பாவிக்காய் மரித்த பரிசுத்தனை
பாசத்தோடென்றும் நினைத்து பணிவாகவே துதித்து
பட்சமிக பொக்கிஷமாக பாலர் நம் நெஞ்சில் பதித்து– தேவ

2. ஏசு பாலன் செய்கைக்கேற்க நடப்போம்
என்றும் தேவ தயவிருக்கப் பார்ப்போம்
எங்கள் சிற்றொளி இருண்ட இருதயங்களில் வீச
ஏசு ஞானோதய வொளி என்றென்றும் மிலங்கிடுவோம்
– தேவ

3. பாலர்க்கேற்க ஏசுபாதம் பணிவோம்
பண்போடுட்கருத்தாய் பாடிப் புகழ்வோம்
பாலர் நேசர் ஏசு நம்மேல் பட்சமுள்ளோரென்றந்து
பள்ளித்தோழர்க ணண்பரைப்பற்றி என்று நாம்
சொல்லுவோம்– தேவ

4. நல்ல போர்வீரராய் நாடோறும் நின்று
நாதன் கட்டளையை நன்கு மதித்து
நானா திசை வீசச் சத்துரு நடுங்கி மிரண்டு ஓட
ஞானாயுதம் கையிலேந்தி நன்றாயுபயோகிப்போமே– தேவ

5. மீட்பரோடு மோட்சவீடு நமதே
வெண்ணுடை நமதே வேதம் நமதே
வெற்றியால் சிறந்தமுடி வேந்தரா யாசாரியராய்
மேன்மை பெற்று ஏசு மடிமீதில் விளையாடுவோமே– தேவ

**140. இராகம் (அப்ப தேவப்பிதா) (120)**

**பல்லவி**

**அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்**
எம்பரன் இயேசுவை என்றென்றும் நாடுங்கள்

1. நல்லநாளிதிலே நாதனைப் பணியுங்கள்
செல்வ பாக்யம் தரும் சீமானைத் தேடுங்கள்

2. சுவிசேஷப் பண்டிகை சோபன தினமதில்
கவி பாடிப் போற்றியே கர்த்தனைக் கொண்டாடுங்கள்

3. வல்லதேவன் நம்மோடு வந்திட மன்றாடுங்கள்
தொல்லை அணுகாமலே சுத்தனருள் செய்குவார்

4. கர்த்தரின் கட்டளை கைக்கொண்டு திட்டமாய்
உத்தமரின் திவ்விய ரட்சிப்பைக் கூறுவோம்

5. பக்தியாய் ஜெபித்து பாடியே பூரிப்போம்
நித்தனார் நம்மையே நீடூழி வாழ்விப்பார்

6. ஆத்தும ஆதாயம் அன்புடனே செய்குவோம்
பாத்திரராக்கியே பரனாசீர் புரிவார் - அன்பரே

### 141. சங்கராபரணம் ஆதி தாளம் (121)

**பல்லவி**

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்.

**அனுபல்லவி**

நேசமாய் இயேசுவைக் கூறுவோம்
அவரைக் காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்
வெளிச்சம் வீசுவோம்

**சரணங்கள்**

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை
வருந்தி அன்பாய் அழைத்திடுவோம்
உரித்தா யேசு பாவப் பாரத்தை, நமது துக்கத்தை
நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே - தாசரே

2. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள் நிஷ்டூரத்துக்குள்
படுகுழிக்குள் விழுந்தனரே - தாசரே

3. பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும்
பட்சமாக உதவி செய்வோம்
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து
ஏசு கனிந்து திரிந்தனரே - தாசரே

4. இந்துதேச மாது சிரோமணிகளை
விந்தை ஒளிக்குள் வரவழைப்போம்
சுந்தரக்குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து சிறந்திலங்கிட – தாசரே

**142. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (122)**

**நேச தோழரே எங்கள் ஊராரே – பேயின்**
ஆசாபாசம் விட்டுவர மாட்டீரோ

2. சாத்தான் துள்ளுறான் மாற்றான் பொங்குறான் – அதி
சீக்கிரத்தில் புறப்படுங்கள் தப்பிக்கொள்வீர்கள்

3. கும்பிடவேண்டாம் கும்பிடவேண்டாம் – இந்த
பேய்பசாசை ஒருநாளும் கும்பிடவேண்டாம்

4. கொடை கொடு என்று கூத்தாடிதிரிந்தாலும் – ஒரு
செம்புக் காசும் கூட நீங்கள் கொடுக்க வேண்டாம்

5. கோமரத்தாடி வந்து கொக்கரித்தாலும் – இந்தக்
குணங்கெட்ட பேய்களை நீங்கள் கும்பிடவேண்டாம்

6. பேய்க்குச் செலவு செய்யும் பணத்தை – உங்கள்
பெற்றோருக்கு சேலை துணி வாங்கிக்கொடுங்கள்

7. பெற்றார் உற்றாரும் சீறி விழுந்தாலும் – இந்தப்
பேய் பசாசை ஒரு நாளும் கும்பிடவேண்டாம்

8. பாவஜீவியம் நரசு பாதையே – பாவம்
போனால் இப்போ மீட்கப்படுவீரே

9. சுத்த ஜீவியம் மோட்ச பாதையே – யுத்தம்
செய்து கிரீடம் பெற வரமாட்டீரோ

10. பாவி ஓடிவா என்று அழைக்கிறார் – உந்தன்
பாவப்பாரம் தாங்க ஏசு காத்துநிற்கிறார்

**143. இராகம் (இங்கிலீஷ்)** **(123)**

**ரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம் லோகமடங்க**
நரகாக்கினியைச் சொல்லுவோம் பாவமடங்க
பூர்வகால தேவதாசர் விஸ்தரித்தாற்போல்
மோட்சலோகம் போகுமுன்னே

**பல்லவி**

செல்வோம் செல்வோம் ஆர்ப்பரிப்புடனே
செய்வோம் செய்வோம் போர்பலத்துடனே
ஓ நானாஜாதி பாஷைக்காரர் ரட்சிப்படைய
மோட்ச லோகம் போகுமுன்னே

2. தீதாய் சத்துருக்களென்ன சொன்னபோதிலும்
சுத்த ஆவியின் பெலத்தைப் பெற்று யாவிலும்
உண்மையாகப் போர்புரிந்தால் வெல்வோம் சாவிலும்
மோட்ச லோகம் போகுமுன்னமே

3. சேனையாரின் யுத்த சத்தம் பூமியெங்கும் கேள்
மீட்படைந்த பேதைகளின் சாட்சிகளுங்கேள்
முழுலோகத்தையும் வெல்ல இன்னும் கொஞ்ச நாள்
மோட்சலோகம் போகுமுன்னே

**144. இராகம் (இங்கிலீஷ்)** **(124)**

**ஜெயம் ஜெயம் அல்லேலூயா**
ஜெயம் ஜெயம் எப்போதும்
பிராண நாதர் நாமத்துக்கு
ஜெயம் ஜெயம் எப்போதும்

1. பாவஞ் சஞ்சலத்தை விட்டு நாளை வரக்காத்திராதே
ரட்சகரே அழைக்கிறார் பாவிகளே வாருங்கள்

2. உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நான் நிற்பேன்.

3. பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரவா
பரம கிறிஸ்துவண்டை பாவியே ஓடிவா

**145. இராகம் (பாவிகளை மீட்கவந்த பரனிவர்தாமே) (125)**

**பல்லவி**

**அனுக்கிரக காலமிதை அசட்டை செய்யாதே**

**அனுபல்லவி**

மனுக்குலமோ அணுக்குலைய வொண்ணாதே

1. ஏசு பகவன் வருகை காலமாகுதே
எங்குமவர் சத்ய ஒளி வீசலாகுதே

2. இரவு சென்று பகல் வரவு சமீபமாகுதே
இப்போதே கோடரி வேரருகே தங்குதே

3. யுத்தம் சத்தம் நித்த நித்த மிச்சமாகுதே
லோகமெங்கும் பூகம்பங்கள் ஓசையாகுதே

4. பஞ்சம் பசி பட்டினியும் மிஞ்சிக்காணுதே
பாரிலெங்கும் கொள்ளை நோய்கள் மீறித்தோணுதே

5. யூதரேசு நாதர் பாதம் தேடலாகுதே
யூகமுள்ளோர் ஜீவன் தப்ப ஓடலாகுதே

**146. இராகம் (இங்கிலீஷ்)** **(126)**

**பல்லவி**

**தேவா பரகிறிஸ்து தேவா பரதேவா – பர**

தேவா பரகிறிஸ்து தேவா பரதேவா

1. ஜீவா தற்பர யோவா அற்புத சிந்தைப் பரநேசா – ஆகா
மூவாளொத்த சொரூபா வாவா காவா நசரேசா கிறிஸ்து தேவா

2.வானத்திறைவன் மேன்மைப்பரமன் சேனைத் திரளோனே–ஆகா
பக்தரை உத்தம சித்தமிகுத்தே வைத்தாதரி நயமே

3. நித்திய ஜீவன் நீயே பாதையும் நீயே சத்தியமும் – ஆகா
ஆசைக்கண்ணாளா அன்பா தோழா நண்பா மணவாளா

4. நித்தா ஞானப்பத்தா கர்த்தா நித்திய பரிசுத்தா – ஆகா
அத்தா வேதத் தாசீர்வாதந்தாவா பரிசுத்தா

5. மட்டில்லாத வானசேனையும் பூதல பாதாளரும் – ஆகா
சிட்டும் பாடுது திருநெல்லைப்பதியாரும் பாடுகுறோம்
கிறிஸ்துதேவா

**147. இராகம் (இங்கிலீஷ்)** **(127)**

**பல்லவி**

**சுவாமி நின் பாதம் அல்லால் தாரகம் வேறில்லையே**

**அனுபல்லவி**

தாரகம் வேறில்லையே தாரகம் வேறில்லையே

1. பூமியின் வாழ்வகன்று போம் உயிர் போம்பொழுது

2. கஷ்ட உலகமதில் காணேன் ஒரு சுகத்தை

3. ஜீவன் கொடுத்தனையே தீயோன் பிழைப்பதற்காய்

4. ஆவி துணைவனும் நீ ஆசைமணாளனும் நீ

5. ஏசுக்கிறிஸ்தரசே என்னருமை ரட்சகரே

**148. இராகம் (பாவம் போக்கும் ஜீவநதியை) (212)**
**செஞ்சுருட்டி பிலந்தி தாளம்**

**பல்லவி**

**எந்தன் நிர்பந்தம் பாரும் என் மக்களே!**
இரங்க மனமில்லையோ?

**அனுபல்லவி**

இந்துமா சமுத்திரம் தொடங்கி
இமயமலை வரைக்கும் ஐயோ!

1. உந்தன் சோதரர் எண்ணிறந்த பேர்
உருக்குலைந்தனர் பாரீர் – என்றன்
சொந்தப் பிள்ளைகள் சோர மார்க்கத்தில்
தொலைந்து கெட்டுப் போனாரே – ஐயோ! – எந்தன்

2. பஞ்சம் பசியுற்றோரைப் பார்க்கப்
பதறுதே என் உள்ளம்! – யாரும்
அஞ்சும் பாழ் கொள்ளை நோயின் வாளினால்
அறுப்புண்டவர் எத்தனை? – ஐயோ! – எந்தன்

3. ஜாதி என்னும் பேயும் நுழைந்து
சகலரையும் கலைத்தான் – அவன்
வாதினால் பல ஜாதிகள் எழ
வம்புகள் மிக வந்ததே! – ஐயோ! – எந்தன்

4. அருமையாகப் பெற்ற என் பெண்மக்கள்
அந்தகாரச் சிறையில் – சிக்கிச்
சிறுமையடைந்து தவித்து நிற்பதைச்
சிந்தையில் வைப்பார் இல்லையோ? – ஐயோ! – எந்தன்

5. ஏசு என்னும் உலக ரட்சகர்
எனக்காகவும் மரித்தார் – பல
தேசம் அவரைப் பெற்றிருக்க அந்த
நேசா எனக்குமில்லையோ? – ஐயோ! – எந்தன்

**149. இராகம் (இங்கிலீஷ்) (216)**

**சொன்னாலும் தெரியலையே சுட்டி மனமே**

சொன்னாலும் தெரியலையே – யாரென்ன சொன்னாலும்
வேதமென்ன சொன்னாலும் தெரியலையே

**அனுபல்லவி**

ஜோதியண்டை ஓடிவர

1. கைக்கூலியும் வேணுமோ – கரும்பு தின்னக்
காருண்ய தாரகரின் காரம் சாரம் யாவும் பார்க்க

2. நெய்யென் றிட வேணுமோ – வெண்ணை இருந்தும்
நிரந்திர சுதந்திர நேரே வந்து வாரி உண்க

3. மன்னன் கிறிஸ்தையல்லால் வேறுமுண்டோ
மனங்கெலியாதுமல்லோ மாளிகை சிங்காரம் செய்ய

4. முத்தைப்போல் வேறுமுண்டோ – ரத்தின ஆணி
மோசவலை வீசுகிறான் மோசம் போனால் நாசமென்று

**150. இராகம் (எந்தன் நிர்ப்பந்தம் பாரும் என் மக்களே) (306)**

**செஞ்சுருட்டி பிலந்தி தாளம்**

**பல்லவி**

**சுத்தம் தரவே மருந்தொன்றிருக்குது,**

சித்திக்கும் பக்தருக்கே

**அனுபல்லவி**

மற்ற மருந்துகள் தின்றாலும் உள்ளத்தை
மாற்றலாகா நாற்றம் போகா

1. பாதாதிகேச பரியந்தமும் பாவப் பாச விஷமுள்ளவன்
பாதக ஜென்மியாய்ப் பாதாள லோகத்தின் பாத்தியத்தை
உள்ளவன்
பாமரமாகவே பாராமல் மந்திர பக்குவமுள்ளவன் – வீணாய்
பாரதமும் ராமாயண விசுவாசம்
பாரில் பரிசுத்தம் தராதிது சத்தியம் – சுத்தம்

2. சரியை கிரியை இருபத்திநாலையும் சரியாய் அனுசரிப்பாய்
அறியாமல் நாலெட்டறங்களையும் அனுஷ்டானித்துமே
வருவாய்
சரிதை சிவ சைவ தத்துவ வேதங்கள் சர்வம் தெரிந்துரைப்பாய்
– உனை
மருவுமிருதய மாயமதையிருள்
அறுதியானாலல்லோ உறுதியாகும் நல்ல – சுத்தம்

3. ஆண்ட பொருளை அறியாதார் நற்கிரியை மாண்டமர
மணைமண்
ஆன்றோர் இருதய ஆற்றலை மெச்சிய சான்றுமநேக முண்டே
வெண்கல ஓச்சத்தால் பொன் பிரகாசத்தால் அன்னதற்கென்ன
பயன் – உனை
ஆண்டு நடத்தும் அகமருளற்றிட
வேண்டும் நற்குணம் தாண்டும் துர்க்குணம்

4. நீக்கமறா மனத்தீக்குணத்தை முதல் நீக்க வழி பாராய்
வீக்கமுறு உளச்சீக்கை அகற்றிட ஏக்கமுற்றே திவாய்
ஊக்கமுறு வேதம் தூக்கி ஆராய்ந்திடும் தேக்கும் சுகம்
பெறுவாய் – அப்போ
நோக்கும் கிரியையில் ஆக்கமுளதென்றும்
போக்கும் மன இருள் பேராக்கம் தருமருள்

5. எத்திசையோரும் வந்தித்து நின்றுமே சிந்தித்திடும் மருந்தாம்
பந்தவினைகள் பறந்தோடச்செய்ய தகுந்த மருந்திதுவாம்
சிந்தை மெலிந்து தினந்திரிவோர்க்கிது தேன் போன்ற
தினமருந்தாம் – தினம்
அந்தரம் பூமியடங்கலும் மாந்தர்கள்
தின்றாலும் கொஞ்சமும் குன்றாது ரஞ்சிதம்

6. ஆனந்த லோகத்தமர்ந்த பேரின்ப ஆண்டகையின் மருந்து
தானத்தில் வந்து தழைத்துப் பழுத்த தயையினருள் மருந்து
கானகத்தில் வந்து கருத்திலே நின்றுகனிந்திடு நன் மருந்து – தீய
கன்மத்தால் தீராத குன்ம வியாதியை
இக்கணமே துரத்தும் இயேசென்னும் மருந்து.

**151. இராகம் (காலமே தேவனைத் தேடு)** **(124)**
**மோகனம்** **ரூபக தாளம்**

**பல்லவி**

**உலகையோர் நிலை என்றெண்ணாதே – க்ஷணம்**
ஒழிந்துபோம் உன்னோடோரடியும் வராதே

**அனுபல்லவி**

பலமாக பொக்கிஷம் பரத்திலே நாடு
பத்திரமாயங்கு இருக்குதே வீடு

1. நிலையாது செல்வம் எந்நாளும் – அவை
நீர் குமிழிகள் போல நிமிஷத்தில் நையும்
உலையின் மெழுகுபோல் உருகுமே மெய்யும்
உந்தனின் ஜீவனைப் பிரிக்குமே வீயும்

2. தீரம், புகழ், கீர்த்தி நாசம் – மற்றும்
சேயர் மனைவி சிநேகிதர் வேஷம்
தாரணி முற்றுமே தவிர்த்திடு மோசம்
சார்ந்திடில் ஆன்மாவுக்கென்றுமே தோஷம்

3. வானத்தின் கீழ் யாவும் பண்டு – சால்மோன்
மாயை என்றுரைத்ததை மறவாதே கண்டு
தானத்தோ டேசுவைத் தப்பாமல் அண்டு
சாலோக நித்திய பேரின்பமுண்டு.

## 152. இராகம் (இங்கிலீஷ்)

### இரக்ஷண்ய கூட்டம் ஜெயங்கொள்வோம்

இராஜ பெலத்தால் போர்புரிந்தால்
அன்பின் தேவாவியின் பட்டயம்
சேர்க்கும் பாவியை ஏசுவிடம்

**பல்லவி**

நம்புவோம் ஜெயிப்போம் ராஜபலத்தின் போர்புரிந்தால்
செல்வோம் வெல்வோம் ராஜபலத்தில் போர்புரிந்தால்

2. சென்ற காலமெல்லாம் ஜெயமே
எங்குமெதிரியின் கோஷ்டமே
நாள் முடியு மட்டும் போர் செய்வோம்
ஆவியின் பலத்தால் வெல்லுவோம்

3. எதிரிகள் பலம் கொண்டாலும்
வீம்பர் கூட்டங்கள் மோதினாலும்
ஏசு மன்னவர் ஜெயங்கொள்வார்
அவரே வழி நடத்துவார்

4. ஜெயக்கொடியை நாம் உயர்த்தி
தேவ நாமத்தில் போர் புரிவோம்
லோகம் பேயை முற்றும் ஜெயிப்போம்
மீட்பருக்காய் நாம் போர் புரிவோம்

5. உண்மையாய் மீட்பர் சேனையினில்
தேவ நாமத்தில் போர் புரிந்தால்
தீயும் ரத்தமும் ஜெயங்கொள்ளும்
அவர் பாதத்தை லோகம் சேரும்

### 153. செஞ்சுருட்டி ஆதி தாளம்

**என்ன என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம்**
சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தையெல்லாம்
மன்னித்து விட்டாரே

1. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய் மகிழ்
கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த நாதனைப்
போற்றிடுவோம்.

2. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம் பரிகரித்தாரே
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து தேற்றியே
விட்டாரே

3. அட்சயன் பட்சமாய் ரட்சிப்பை எங்களுக்கருளின தாலே
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி பகர வேண்டியதே

4. வெண்ணங்கி பொன் முடி வாத்தியம் மேல் வீடு
ஜெயக்கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற மன்னனைத்
ஸ்தோத்தரிப்போம் – என்ன

**154. இராகம் (இம்மணர்க்குன்னருள்) (179)**

**ஆயத்த ஜெபம் செய்ய பெலன் தாரும் சுவாமி**
அடைக்கலமாயுந்தன் துணை வேணும் நேமி

2. காயத்தால் குணக்கேடு தடைகள் வராமல்
காப்பாற்றக் கேட்கிறேன் கிறிஸ்துவே தேவா

3. சுருக்க நாளானதால் கொதிக்கிறான் சீறி
சுடரொளிப் பட்டயத்தூதரால் காரும்

4. ஏழு முறை ஜெபத்துக்கு தடைகள் வராமல்
இரக்கமாய் தயவுடன் நடத்துமேன் சிவாமி

5. கருத்தான மனதுடன் ஒருமித்துப்பாடி
களிப்புடன் மன்றாட அருள் செய்யும் தேவா

6. வருகையின் நாள் மிக நெருங்குதே சுவாமி
மருரூப ஆவிக்காய் தவிக்கிறேன் பாவி

7. கிருபையின் கரத்தினால் தாங்குமேன் சுவாமி
மருரூப ஆவியை அளியுமேன் சுவாமி

8. இம்மானுவேலர்க்கு எதிர் கொண்டு போக
எண்ணையும் தீபமும் தாருமேன் சுவாமி

9. கேட்கிற வரமெல்லாம் கிருபையாய் தாரும்
கேடான மனமொன்றாய் பொருந்திட வாரும்

10. மறுபடி பிறந்த தற்பெருமையைக் களைந்து
மனத்தாழ்மை அணிந்திட படிப்பியும் சுவாமி

11. இப்படியாகவே கேட்கும் மன்றாட்டை
ஏசுவின் மூலமாய் ஏற்றுக்கொள் ஐயா

**155. இராகம் (அருள் ஏராளமாய் பெய்யும்) (180)**

**அருளின் மாமழை பெய்யும் என்று வாக்களித்தோரே**
மாரியாய் பெய்திடச் செய்யும் லோகத்தின் ரட்சகரே

**பல்லவி**

தேவன்பின் வெள்ளம் தேவன்பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம் கெஞ்சுதே இன்னும்
தேவை

2. கற்பாறைபோல் பாவி உள்ளம் கடினப்பட்டதையோ
பரிசுத்தாவியின் வெள்ளம் கரைக்க வல்லதையோ

3. வெட்டாந்தரை நிலம் தானும் ஏதேன்போல் மாறுமென்றீர்
சாபத்துள்ளான முற்பூண்டும் கேதுருவாகுமென்றீர்

4. தேசத்தின் இருளைப்பாரும் லோகத்தின் மெய்த்தீபமே
ஆவியின் அருளைத்தாரும் மனமாற்ற வல்லவரே

5. சபையின் குறைகள் யாவும் தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன்செல்ல ஏவும் எங்கள் தளகர்த்தரே

**156. காப்பி** **ஆதி தாளம் (184)**

**வந்தாளுமே எந்நாளுமே, உன் நாமமே என் தாபமே**
இந்நேரமே கண்பாருமே

2. தேவாவியே வரந்தாரும், இப்பாவியின் பாவம் தீரும்
உம் ஜோதியின் ஒளி வீச

3. சத்துருக்கள் சதிசெய்ய நித்தம் என்னை நெருக்கிறார்
அத்தன் நீர் தான் அடைக்கலம்

4. இப்பாரிலே நின் பேரையும் தப்பாமலே யான் பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

5. என்மேசையா உன் ஆசையைக்கொண்டோசையாய் நான்பேசவே
நின்னாசி தா நன் நேசமாய்

6. நாதனுன்னை என்நேரமும் ஓதும் ஏழைப்பாவியேனை
ஆதரித்தே ஆண்டருள்வாய் – வந்தாளுமே

**157. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (185)**
**இராகம் (ஏசுநேசா வாரும்)**

**பல்லவி**

**ஆசீர்வாதம் வேணும் ஆவியான ஜீவ தேவ**

1. தேசிக மேலோகமதில் தேவதிருப்பாதமதில்
செல்ல வல்ல வெல்ல நல்ல – ஆசீர்வாதம்

2. கண்மணிபோலன்புடனே காண்பி தயை நண்புடனே
காவா மூவா தேவா வாவா – ஆசீர்வாதம்

3. அத்தனுனின் பாடுகளை அன்புடனே சிந்தை செய்ய
ஆசையுள்ள ஆவல்கொள்ள - ஆசீர்வாதம்

4. பன்னிரண்டு சீஷருக்கும் பரிசுத்தாவி கொடுத்த தேவா
பத்தா கர்த்தா நித்தா வாவா - ஆசீர்வாதம்

5. ஆலயந்தனிலுமது வசனமதைப் போதிக்கின்ற
போதகர் அனைவருக்கும் - ஆசீர்வாதம்

6. பத்தமுடன் கூடி சுவிசேடமலர் சூடிக்கவி
பாட ஆட தேட நாட - ஆசீர்வாதம்

7. பூரண விசுவாச ஜெபம் பூததயை தியான தவம்
புரிய அரிய வரிய பெரிய - ஆசீர்வாதம்

8. தாதாவே தாள் பணியும் தானடியேன் ஞானமணி
தாசனுக்கு சீஷருக்க - ஆசீர்வாதம்

**158. இராகம் (ஆசீர்வாதம் வேணும்) (186)**

**பல்லவி**

**ஏசுநேசா வாரும்**
பாசமாகத் தேடி வந்த

1. ஐந்தப்பம் இருமீன்கள் கொண்ட ஐயாயிரம் பேர்களுக்கு
பந்தி போஜனமளித்த - ஏசுநேசா

2. பொன்னான மேனியுள்ள ரட்சகரின் பிள்ளைகளை
துன்பமில்லாமலே காத்த - ஏசுநேசா

3. பல பல விதமாய் நாங்கள் செய்துவந்த பாவங்களை
சிலுவைதனில் சுமந்து தீர்த்த - ஏசுநேசா

4. பதினொருவர் கூடி நிற்க ஒலிவ என்னும் மலைஉச்சியில்
மேகரதம் ஏறிச்சென்ற – ஏசுநேசா

5. அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா கர்த்தருக்கு
அல்லேலூயா ஆமென் ஆமென் – ஏசுநேசா

**159. இராகம் (மகனே உன்னெஞ்செனக்கு) (187)**

**பல்லவி**

**கல்லான நெஞ்சை இன்றே மாற்றுவீர் – ஐயா**
கல்வாரி அன்பை என்னில் ஊற்றுவீர்

1. கற்பாறை போன்ற எந்தன் கல் நெஞ்சே – அது
பற்பல தீமைகளைச் செய்யுதே – கல்லான

2. கீழ்ப்படியாத என் கல்நெஞ்சை – ஐயோ
கீழ்ப்படியப் பண்ண மாட்டீரோ – கல்லான

3. என்ன போதனை கேட்டும் கல் நெஞ்சில் – சுவாமி
ஒன்றும் தங்கி பலன் காணேனே – கல்லான

4. தினமும் திரு வசனத்தை வாசித்து – நெஞ்சில்
அனலும் அருளும் பெறவில்லையே – கல்லான

**160. (188)**

**பல்லவி**

**விடுவேனோ நான் உம்மை விடுவேனோ**

1. ஆசீர்வதிப்பேனென்று ஆணையிட்டீரே துரையே
ஆசீர்வதித்த எந்தன் ஆசா நேசா பாசா உம்மை
– விடுவேனோ

2. பாவியான எந்தனுக்காய் பாடுபட்டீரே துரையே
பங்கில்லையோ உம்மிடத்தில் பட்சமாய் என்முகம் பாராய்
– விடுவேனோ

3. பங்குதர மாட்டேனென்றால் பட்டபாடு வீணாகுமே
பார்த்திபனே உம்மை ஒருக்காலும் விடமாட்டேனையா
– விடுவேனோ

4. என் பாவம் பொறுக்காவிட்டால் ஏன் தானையா
பாடுபட்டீர்
உந்தன் பாட்டாலென்ன பயன் உண்டு அதைச்
சொல்லுமையா – விடுவேனோ

**161. இங்கிலீஷ் மெட்டு ஏக தாளம் (189)**

**பல்லவி**

**வல்ல ஆவியே எங்கள் மீதிலே**
வந்திறங்கி வரம் தாரும் தேவ ஆவியே

1. பெந்தே கோஸ்தென்னும் நாளில் வந்த ஆவியே
எங்கள்மேலே வந்திறங்கும் சுத்த ஆவியே – வல்ல

2. பாந்தமுடனே பரிசுத்த ஆவியே
சார்ந்தெங்களை யுத்தத்திற்கு உயிர்ப்பியுமேன் – வல்ல

3. சென்ற காலத்தில் ஜெயம் பெற்றிடச்செய்த
ஜெபத்தின் ஆவியை எங்கள் அகத்திலூற்றும் – வல்ல

4. அன்புடன் தாழ்மை சமாதானம் பொறுமை
இன்பமும் எங்களுக்குள்ளே பெருகிடவே – வல்ல

**162. இராகம் இங்கிலீஷ் (235)**

**பல்லவி**

**ஏசுவண்டை சேருவேன் ஒளியில் ஒளியில்**
ஏசுவோடே நடப்பேன் திவ்ய ஒளியில்

**அனுபல்லவி**

நாம் தேவனோடே நடப்போம் ஒளியில் ஒளியில்
நாம் தேவனோடே நடப்போம் திவ்ய ஒளியில்

2. சாபம் நீங்கிச் சுகிப்பேன் ஒளியில் ஒளியில்
பாவம் முற்றும் வெறுப்பேன் திவ்ய ஒளியில்

3. மீட்பர் பேரில் சாருவேன் ஒளியில் ஒளியில்
சாட்சி சொல்லி ஜீவிப்பேன் திவ்ய ஒளியில்

4. தூய நாதர்க்காகவே ஒளியில் ஒளியில்
தீயோன் என்னைத் தொடானே திவ்ய ஒளியில்

5. சாவை வென்று வாழுவேன் ஒளியில் ஒளியில்
ஜீவ கிரீடம் சூடுவேன் திவ்ய ஒளியில்

6. மோட்சம் வீட்டில் வசிப்பேன் ஒளியில் ஒளியில்
மீட்பர் அன்பைப் போற்றுவேன் திவ்ய ஒளியில்

**163. இராகம் இங்கிலீஷ் (265)**

**தேவா உன் அன்பின் சத்தத்தைக் கேட்டு மீட்பை**
பெற்றுக் கொண்ட நான், ஆவலாயிதோ நம்பிக்கையோடே
கிட்டிச் சேர நான் வாறேன்.

**பல்லவி**

எனதுள்ளம் உள்ளம் உள்ளத்தை இழும்
நீர் மாண்ட குரு சண்டை

2. தேவாசனமுன்னேழை நான் நின்று பிரார்த்திக்கும்
பேரின்பத்தை
இங்கே ருசிக்க ஆவியாலிப்போ உயிர்ப்பியும் என்
உள்ளத்தை

3. மாண்டுயிர்த்தவா மானிட நாளில் நீர் ஜெபித்த ஆவியெனில்
பாவிகட்காக ஜெபப்போராட முற்றாயாளும் உள்ளத்தில்

4. தேவா உம் ஈவின் ஆழம் நீளமும் என்றுமெட்டாதா மல்லோ
என்றாலும் சுவாமி விஸ்வாசப்போரில் வெற்றியும் கீர்த்தியாமல்லோ

5. சுத்த ஆவியால் என்னிதயத்தை முற்றுமறக்கழுவி
முற்றுமுடிய உம்மை சேவிக்க என்னிச்சை நீர் மாற்றும்

### 164. இராகம் இங்கிலீஷ் (266)

**ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா**
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

**பல்லவி**

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தையெல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர்

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக்கொள்வோம்

4. இடை விடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்

**165. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (267)**

**பல்லவி**

**பரிசுத்தர் பரிசுத்தரே ஏசையா உம்மை**
பாடுவேன் பாடுவேன் நானே

**அனுபல்லவி**

கடைக்கண்ணால் பாரும் என்னை
படைத்த பராபரனே – பரி

1. திசை அறியாமல் தியங்கி ஏசையா சுவாமி
தெருக்களெல்லாம் அலைந்தேன் நான்
மனங்கசந்தழுகையில் மாளிகை காட்டினாரே

2. பாவச்சுமைகள் சுமந்தேன் ஏசையா சுவாமி
பாரினிலே வெகு நாளாய்
பாவி நான் வந்தேன் எந்தன் பாரம் குறைத்து விடும்

3. கட்டுகளோடே வந்தேன் நான் ஏசையா சுவாமி
திட்டி வாசல் திறவுமேன்
பட்டதுயர் நினைத்தால் எட்டினதற்புதமே

4. விரைவுடன் வழிநடக்க ஏசையா சுவாமி
உலகிடர் படு நடுவானேன்
எதிர்த்தால் இனி விடுமோ ஏகன் கிருபை தந்தால்

**166. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (268)**

**பல்லவி**

**மன்றாடி வேண்டினானாம் – தானியேல்**
மன்றாடி வேண்டினானாம் – மிக மிக
மன்றாடி வேண்டினானாம் – பணிந்து
மன்றாடி வேண்டினானாம் – தினம் தினம்

1. சொந்த ஜாதிக்காக சிந்தை துயரோடு
நொந்து மனம் வாடினானாம் – தானியேல் மன்றாடி

2. சாம்பலிலிருந்து சுவாமியைத் தேடி
பந்தம் கொண்டாடினானாம் – தானியேல் மன்றாடி

3. உபவாசம் பண்ணி ஓர் முகமாகி
கவனல் மிகுந்தவனாம் – தானியேல் மன்றாடி

**167. இராகம் (சமயமாம் இரத்தில் யான்)** **(269)**

**எருசலேமின் மாதரே கேளீர் வீதிகள் தோறும் கீதசத்தம்**
அருமணாளர் ஆத்தும நேசர் இவரே வாறார் அதோ சத்தம்

2. எழுந்து கூடு எழில் சீயோனின் இளமணாளர் ஏசுவாறார்
மகிழ்ந்து சூழ்ந்து கொடிகள் தூக்கும் மன்னவர் ராஜ மகிபனார்

3. இவர் என் சொந்தம் இவர் என் தங்கம் இவர் என்
இன்பம் இவரெல்லாம்
இவரே பள்ளத்தாக்கின் லீலி இவர் நற்பாதம் விடி வெள்ளி

4. சாரோனின் நல்ல ரோஜாவே ரோஜா நமது
மந்தைகளைத் தொகை
சேரீரோ பார்த்து ஆயிரம் பேரில் மெத்தச் சிறந்த பர்த்தாவே நீர்

5. மன்னர் சிங்காரம் மாதளத்தோட்டம் மலர்கள்
மற்றும் தளதளங்கள்
வண்மையாய்க்கூவி வாரி இறைப்போம் வாழ்த்தி
உரைப்போம் சோபனங்கள்

6. விருந்து சாலைக்கழைத்துப் போனார், பரமணாளர்
கொடி என்மேல்
பரமணளர் பாதமே அந்த சிறந்தகொடி பாருங்களேன்

**168. இராகம் (ஆனந்தமே சரமானந்தமே, இயேசு) (270)**

**சுந்தரமேசையா உன் திரு நாமத்தை**
எந்த நாளும் போற்றிக்கொண்டாடுவேன்
நின் இன்ப சன்னதி முன் நின்றாடுவேன்

**அனுபல்லவி**

அந்தி சந்தி மத்தியானங்கள் சாமங்கள்
அல்லும் பகலும் கூடி மன்றாடுவேன்

1. இவ்வுலகத்தினில் பங்கப்படாமல்
இருந்து தவம்செய்து அஞ்சலிப்பேன்
அந்தர மானுவேல் என் செல்வமே என
தாசீர்வாதம் பெற பஞ்சரிப்பேன்

2. ஆவி தேகம் இரண்டு தாவி உனைத்தேடி
ஆறுதல் நாடுதே கரையனே
பாவி என்று தள்ளிக்கோபிக்காதே எனில்
பட்சம் வைத்தன்பாய் ரட்சியும் என்னை

3. உன் திரு புண்ணியம் ஆனந்தக் காருண்யம்
உறுதி விசுவாசம் எனக்கதுவே
என் தவம் கவனம் ஜெபம் என்றென்றுமே
உன் சமுகத்திற்குள் வந்ததுவே

169. (301)

## கண்ணிகள்

**எந்தா எந்நேரமிங்கு வந்தோம் முனது சேயர்**
இற்றைவரைக்குமே பெற்றதயைக் களவற்ற விதத்துடன்
நற்றுதி செய்கிறோம் வந்தாசீர்வாதமருள் சந்தோஷ
வேளையிதில் வானவர்கள் கோமானே

2. எந்தா எமதிதயம் தந்தோமுன தகமாய்
இத்தரை மீதினில் விந்தையினோடு பிறந்துருவான
பரன் சுதனே இங்கு உந்தனடியாரின் நிர்பந்தம்
அகற்றியருள், ஒரே யோவாவே

3. இந்த சமயத்தில் வந்தே உதவிசெய்யும்
விந்தையுடன் பரமண்டலமீதிருந்துமதாவி
சொரிந்தருள் பெய்திடும் மைந்தருடைய நாவில் நின்று
நடனம் புரியும், வல்ல பரஞ்சுடரே

4. பேதை அடியார் நித்ய ஜீவன் அடையவென்று
பாதகரோடுறவாடிடவும் பல போதனையா
லீடேறிடவும் செய்த பட்சமுடைய பரிசுத்தா
துணையருளும், பரமசுயாதிபனே.

5. வேதம் விரித்துரைக்க நாதா கிருபை செய்யும்
ஆதரவாயருகே வரவேணும் என் ஆதித் திருச்
சுதனே பரனே என தச்சம் தவிர்த்து நிமிஷத்தில்
இறங்கி வாரும் ஆசைக்கிறிஸ்தரசே

6. தாசரடியாரும்மைக் கூவி வருந்துகிறோம்
ஆசையுடன் விசுவாசமுடன் மிகு பாசமுடன் உனை
நேசமுடன் தொழ ஆவி வரமெனது நாவில்
துதி பெருக அருளும் பரஞ்சுடரே

170.

**பல்லவி**

**தற்பரனே எனது மேய்ப்பர் தாழ்ச்சியை நானடையேன்**

**அனுபல்லவி**

மெய்ப்பரன் புல் தரையில் என்னை மேய்த்துக்
காப்பாரே – மகா

1. ஊற்றின் சுத்த தண்ணீரண்டை சேர்த்திடுவாரே – என
தாத்துமத்தின் தாகமெல்லாம் அமரச் செய்வாரே

2. தம்நாம நிமித்தமெனில் தயவுவைப்பாரே – வெகு
செம்மையுள்ள வழியிலென்கால் செல்லச்செய்வாரே

3. மரணநிழல் பள்ளத்தில் நான் வழி நடந்தாலும் – என்னை
பரன் காப்பார் மோசத்துக்கு பயப்பட்டஞ்சேனே

4. எனது துணையாகவிருந்தென்னைக் காப்பாரே – ஆமாம்
தமது தண்டக்கோலாலென்னைத் தாங்கியாற்றுவாரே

5. என் தலையிலபிஷேக மிதமாய் செய்தாரே – எனின்
சந்தோஷபாத்திரம் நிரப்பி சௌக்கியம் பெற்றேனே

6. தேவ நம்மை கிருபையென்றசெல்வ பாக்கியங்கள்– எந்தன்
ஜீவனுள்ள நாளிலெல்லாம் சேர்த்துச் செல்லுவாரே

7. கர்த்தருட நல்வீட்டில் காதலுடனே – நான்
நித்த நித்த காலமெல்லாம் நிலைத்திருப்பேனே

**171. (இராகம் நாதநாமக்கிரியை) சாப்பு தாளம்**

**இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே**
நேசமுசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்

1. என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் ஏசிருக்கையில்

3. வியாதியால் எந்தனது காயங்கெட்டுப்போயினும்
மாய தோற்றத்தை ஏசு நாயகன் மாற்றிடுவார்

4. லோகம் என்னை எதிர்த்துப் போவென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க

5. என்னென்ன மாயலோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாயேசு என்னை நடத்திடுவார்

6. பாவத்தால் என்னில் வந்த சாபக்கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

7. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக் களித்தார்

**172. (126)**

**அகவல்**

**சீர் தங்கும் ஏக திருத்துவத்தைச் சிந்தைச்செய்து**
பார் தங்கும் யாவும் படைத்த பரனைத் தொழுது
நீதிசுரன் பொற்பதத்தை நித்தியமும் போற்றிசெய்து
ஆவி அருள் நற்பரிசுத் தாவிதனை ஸ்தோத்தரித்து
கானக் கலிலேயா காவலனை முன்னடவாய்
சீயோன் மலைமேலே தேவாட்டுக் குட்டியற்கு
தூயோன் மனைவியெனும் துய்ய திருச்சபைக்கு

கொண்ட கலியாணக்கோலமெல்லாம் கூர்ந்தறிந்து
கண்ட பெரியோர் கருத்துக்கிசைவாக
வையமீது மன்றல் வளர்ந்தோங்க வாழ்த்துதற்கு
துய்ய சுதனின் துணைச்சிலுவை முன்னடக்க

2. தேவ கிருபையுண்டாம் தேவாசீர்வாதமுண்டாம்
தேவசமாதானம் தினமுமுமக்குண்டாகும்
ஆபிரகாங்கோத்திரத்தை போலே அரசாள்வீர்
எப்ராயீம் கோத்திரத்தை போலே செழித்திருப்பீர்
மானமனாசேயின் வங்கிஷம்போல் வாழ்ந்திருப்பீர்
ஞானசாலோமோன் அதிபன்போற் சீர்பெறுவீர்
துங்கோன் தாவீது சுமுகனைப்போலே துலங்கி
எங்கும் மணக்கும் எலிசபெத் இறைவியைப்போலே
வாழ்வீர்

3. பதினாறு ஆண் பெறுவீர் பதினாறு பெண் பெறுவீர்
மதிவதன்னீ யோவைப்போலே வளர்ந்திருப்பீர்
மெய்ப்புகழீதென்பதற்கு விண்ணுலகோர் தான் வாழி
தப்பில்லை யீதென்பதற்கு தாரணியோர்தான் வாழி
வாழி பரிசுத்த சமுசாரமெனுமார்க்கமிது
ஊழியுள்ள கால முலகமதிலே வாழி

**173. இராகம் (அள்ளி அள்ளித் தருமமெல்லாம்) (129)**

**சித்திரப் பூங்காவனமாம் ஜெருசலைமாநகரம்**
தேவரெல்லாம் வீற்றிருக்கும் சீயோன் மலைச்சிகரம்

2. சீயோன் குமாரியற்கு திருமணக்கலியாணம்
ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயம் ஜெயமென முழங்குதே
திரிகோணம்

3. ஆட்டுக்குட்டிக்கு கலியாணம் கப்பலிலே பரிசம்
ஆயிரம் தாலந்து தங்கம் வருகுதையா பரிசம்

4. சீதனங்களொன்றுமில்லை வரிசைகளுமில்லை
தேவமணவாளனுட திருக்கிருபை செல்ல

5. பட்டணத்து வீதியெல்லாம் சுத்தப் பொற்கண்ணாடி
பளிங்கொளிவர யஸ்பியைப்போல துலங்குதேஅதன்கோடி

6. சகலவித ரத்தினத்தால் சமைத்த அஸ்திபாரம்
தற்பரனார் பட்டணத்தின் மகிமையின் சிங்காரம்

7. பன்னிரண்டு திருவாசல் ஒவ்வொன்றொரு முத்து
பட்டணத்து அதிபதியோ ஸ்திரீயின் வித்து

8. ஆசனத்திலிருந்துவரும் ஜீவநதிப்பெருக்கம்
அக்கரையுமிக்கரையும் கனிகள் தரும் விருட்சம்

9. கன்னியர்கள் நீராடி காதலியும் குளித்து
கலியாண மணவறையில் வாழ்ந்திருப்போம் களித்து

10. செய்ய வெள்ளைத் துயிலுடுத்து ஜீவமுடி சூடி
ஜெபத்தினிலே தரித்திருப்போம் கிறிஸ்துவைக் கொண்டாடி

11. பரமண்டலம், பூமண்டலம் படைத்த திரியேக
பராபரனைப் பாடும் வேதநாயகன் நன்றாக

12. ஊழியோடூழியே ஊழி சதாகாலம்
வாழியே வாழி மணவாளன் மணக்கோலம்.

**174. பியாகு** **ஆதி தாளம் (130)**

**பல்லவி**

**மலரெடுத்து பூ முடித்து**
மணமக்கள் மேல் சொரிவோம் தங்கை

**அனுபல்லவி**

குணமகள் மாது மங்கை குலுங்க
கொன்னைப்பூ தென்னைக் கன்னிப்பூ நன்னிப்பூ

1. சந்ததமும் வாழ்த்திருக்க இந்த மணப் பந்தலிலே
விந்தையாக வாழ்ந்திருக்க
வேந்திப்பூ சேந்திப்பூ காந்திப்பூ லாந்திப்பூ - மலரெடுத்து

2. காலாகாலமா யிவரைக் கண்மணிபோல் பாதுகாத்து
ஆதிரையில் வாழ்ந்திருக்க
ஆலம்பூ வேலம்பூ வேலம்பூ ஞாலம்பூ - மலரெடுத்து

3. வேதவிழும் பூமலரில் விண்மலர்தான் பொறுக்கி வாழ
இத்தரையில் சுகித்திருக்க
தாழம்பூ ரோஜாப்பூ பிச்சிப்பூ வேதன்பூ - மலரெடுத்து

4. அம்பரத்தில் வாழ்ந்திருக்க அமலாநீர் கிருபை செய்யும்
அனவரதம் சுகித்திருக்க
ஆளன்பு மெய்யன்பு வேதன்பு ஏசன்பு - மலரெடுத்து

**175. இராகம் (மங்களம் ஜெயமங்களம் கிருபாம்பர) (131)**

**பல்லவி**

**மங்களமணி மங்களமணி மங்களமணியே**
மங்களமணி பாடநேசா இங்கு ஓ ஜனமே

1. ராஜ ஏசுபாலனுக்குத் துதி என்றுமே
ராஜாதி ராஜனுக்குப் புகழ் என்றுமே

2. கானாவில் சென்று அங்கே நன்மையளித்தாய்
அதுபோல் இங்கேயும் எழுந்தருள்வீரே

3. இன்று மணம்புரியும் இவ்விருவருடனே
இறைவனே என்றுமிவர் இதயம் நில்லுமே

4. அன்புநிறைந்த (மாப்பிள்ளை.... பெண்பேர்)
ஆரணா காரணா உமதன்பில் நிலைக்கவும்

5. உந்தனருள் பெற்றவராய் வாழ்க வாழ்கவே
புத்திரசந்தானம் பெற்று வாழ்க வாழ்கவே

6. உற்றார் பெற்றார் யாவரும் களித்திடவே
உரிமையான நேசர் கூடிப் பதம் பிடிக்கவே

**176. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (132)**

**மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான மல்லிகைப்பூ**
பூப்பூ புனிதம்பூ பூமான் தாவீது வங்கிஷப்பூ

2. ஜோதியாய் வந்த பூ ஜொலித்து வழங்கும் பூ
நீதியாய் நிறைந்த பூ நித்தம் நம்மைக் காக்கும் பூ

3. ஆதியாயிருந்த பூ ஆதிரையில் வந்த பூ
தேவ தேவ தேவன் பூ தேசிகர்கள் புகழும் பூ

4. சின்னப் பூ சிறிய பூ தேசத்தார் புகழும் பூ
அன்னப் பூ ஆசைப் பூ அண்டினோரைக் காக்கும் பூ

5. வானுலகை விட்டப் பூ வந்த மண்ணில் உதித்த பூ
யாவரும் வைக்கும் பூ பாசத்தால் நிறைந்த பூ

6. தேசியர் அணியும் பூ தேசத்தோர் மொய்க்கும் பூ
வாசமாய் நிறைந்த பூ வன்மையுடன் காக்கும் பூ

7. கானாவூருக்கு வந்த பூ கலியாணத்தில் புகழ்ந்த பூ
கனிரசத்தைக் கொடுத்த பூ களங்க மில்லா ஞானப்பூ

8. நீடூழி வாழும் பூ நித்தியமாய் காக்கும் பூ
காலை மாலை துதிக்கும் பூ கர்தத்துவ முள்ள பூ

9. பிச்சிப் பூ பிள்ளைப் பூ பின்னால் வரும் சொர்ணப் பூ
எத்திசைக்கு மேற்ற பூ ஏகமாய் நிறைந்த பூ

10. கர்த்தத்துவமுள்ள பூ களங்கமில்லா ஞானப் பூ
கர்த்தரே அந்தப் பூ கருத்தாய் நீ தேடும் பூ

11. நித்தம் நித்தம் நிலைக்கும் பூ பக்தர் பேரில் பாசப் பூ
விசித்திரமாய் மரியிடம் விந்தையாய் வந்த பூ

12. இந்த மணமக்களை சொந்தமாய்க் கைக்கொண்ட பூ
என்று மிவரை ஆளும் பூ ஏசுக்கிறிஸ்தென்ற பூ

**177. இராகம் (அன்னே கண்ணே மின்னே) (133)**

**பல்லவி**

**மணே ஸனே இன்னே நினதருள்புரி**
சுகிர்த மணே ஸனே பொன்னே

1. ஜோடி இலை என வாடினான் அதம் தேடினான் சும்மா பாடினான்
நீடி அவனிடம் ஒடினை துணை சூடினை கூத்தாடினான்
மோடி மங்களம் பாடுகிறோம்

2. கானா ஊர் கல்லியாண நாய நீதானா வரமனந்தானா காண்
சோனாரசம் பொழிபானா எம்மொடுதானா தனதாயிருஞானா
மீனா ஒம்பிரதானா அடியார்குல

3. ஒலிவக் கன்றுகளொப்பப் பின்னடி பலுகப் பெருக அருள் கூறே
ஒலுகா தொலிமுக வாயிலெதிர் ஜெயமொலிக்கக் கெலிக்கப் பலன் தாரும்
பலியாய் சோபன தோத்ரமே

4. வாசன் பக்தியின் நேசனின் சகவாசன் தொண்டு செய் சீஷனாம்

பாசன்................ பாரி ....................

ஆசீரோடு வாழ்க சுந்தர

5. தந்தை இவரனை சோதரரும் இன் பந்து உறவினர்
யாபேரும் பந்தலிதிலே அமர்ந்து காண்கின்ற
எந்த நேசரும் எந்நாளும் கந்தமாக வாழ்க சுந்தர

**178. இராகம் (பாவிகளை மீட்க வந்த)**

**பல்லவி**

**பூச்சொரிவோம் புண்ணியரே மாப்பிள்ளை பெண்மேல்**

**அனுபல்லவி**

பூமகளாம் .................. மகிழ்ந்து வாழவே

1. காலா காலமாயிவர்க்கு கருணை செய்யவே
ஞாலமதில் வாழ்ந்திருக்க ஞானம் தரவுமே

2. கானாவூர் கல்யாணமதில் கனிரசம் தந்த
வான் ஆகாரம் தந்துமே வரம் தரவுமே

3. வரம் மிகுந்த .......... மங்கை ............................
இங்கு வந்த நம்முடைய நண்பர் மகிழ

4. இத்தரையில் பக்தியாய் நித்தமும் வாழ
உத்தமனே உம்மை உறுதியாய் சொல்லவே

5. இந்த மணப் பந்தலிலே ஏகன் வரவே
இங்கு உள்ளோர் என்றும் அவரைப் போற்றவே

6. இந்த மங்களஞ் செழிக்க ஏசையாவே
இங்கு கூடிப் பாட்டுப்பாடும் பாடகர் வாழவே

**179. இராகம் (போற்ற வாரும் பெத்லேம் நகர்) (135)**

**பல்லவி**

**பாருமுந்தன் கிருபைக் கண்ணாலே – உன்**
பக்தரிருவரை பாலிய தோழரை

**அனுபல்லவி**

சேரும் நின்னருள் பெற்று சுகித்திட, ஜெகத்தினில்
உம்மையே போற்றித் துதித்திட

1. ஆபிராம் ஈசாக்கு யாக்கோபின் தேவனே
அன்று ஏதேனில் இணைத்த இறைவனே
இன்று தாசரிருவர் இந்நிலைக் குட்பட
ஏசுவே உம்மையே ஏற்றித் துதித்திட – பாருமுந்தன்

2. ஆரஞ்சு புஷ்பத்தின் மணமோ அல்லதிது
அழகான மல்லிகைப் பூவின் மணமோ இவர்
சூடியிருக்கும் இந்த பிச்சியின் மணமோ
ஜொலிக்குது ... அம்மாள் ஜோதிப்பட்டாடையே
– பாருமுந்தன்

3. பச்சை நவரத்ன முத்து இலங்கிடும்
பாலிய அழகிய ...................... அம்மாளும்
மெல்லநடையதை சிங்காரமாக்கிட
சேர்ந்து தம்பதிகளை ஆசீர்வதித்திட –பாருமுந்தன்

4. கோத்திரத்திலிவர் எப்ராயீம் போலவும்
வாய்திறத்தில் ஆரோன் ஆரியர் போலவும்
நீதி நெறி தவறாது நடக்கவும்
நித்திய பாக்கியம் என்றும் கிடைக்கவும் –பாருமுந்தன்

5. சொல்லின் கற்புள்ள ................ அவர்களும்
ஜேசருளால் நல்ல புத்திர பாக்கியம்
பெற்று மகிழ்ந்திட உற்று வளர்ந்திட
இத்தருணம் வரவேண்டி மன்றாடுகிறோம் –பாருமுந்தன்

6. மணவாளன் .................. அவர்களும்
மணவாட்டி .................. அம்மாளும்
இவர்களிருவரும் இணை பிரியாப்படி
என்றும் கனிந்து மகிழ்ந்து சுகிக்கவும் -பாருமுந்தன்

7. சந்ததம் சந்ததம் அம்மர்ன ஏசுநாதர்க்கே
மங்களம் பாடகர் மற்றும் சபையோர்க்கே
தாசன் ...... ஐயர்க்காவி உண்டாகவே
தாசரிருவர்க்கும் ஆவி உண்டாகவும் -பாருமுந்தன்

**180. செஞ்சுருட்டி ஆதி தாளம் (136)**

**பல்லவி**

**மங்களமே மங்களமே மங்களமே மங்களமே**
மங்களமே மங்களமே சுபஜெய மங்கள மங்களமே

1. சீர்வளர் தயாபரவரனேவர ஏர்வளர் பரமசுத்தாவியே வா
ஓர்முகம் காட்டிட பாட்டொலி கேட்டிட
நன்முடி சூட்டி நல்வரம் காட்டிவா – மங்களமே

2. அன்று கானாவில் சென்றது வண்ணமே
இந்தநாள் மணம் செய்யுமிவர்க்கருள்
வாழ்த்தித் துதித்திட ஏற்றிப்புகழ்ந்திட
போற்றி மகிழ்ந்திட சோபனம் செழித்திட – மங்களமே

3. எள்ளினுள் எண்ணெய் இசையும் வண்ணம்
மன்னன் ...... மங்கை .....
பண்பதாய் கூடி அன்பினில் நாடி
உன் தயை தேடி இன்பமாய் வாழ்ந்திட – மங்களமே

4. உற்றோர் பெற்றோர் மணமக்கள் வாழ்ந்திட
சுற்றோர் மற்றோர் யாவரும் ஓங்கிட
வற்றா உனினருள் பெற்றுத் திருவடி
கற்றுத்திருமொழி களிக்கச் செழித்திட – மங்களமே

**181.** **(137)**

**பல்லவி**

**ஆனந்தம் ஆனந்தம் ஆச்சுதே – எங்கள்**

அண்ணா அண்ணி கலியாணம் வாய்த்தது

**அனுபல்லவி**

ஆனந்தம் ஆனந்தமென்று அனைவர் கொண்டாட இன்று

1. தேவாதி தேவர்கள் பார்த்திட – புகழ்
மேவும் பந்துக்கள் பலர் போற்றிட
பாவலரும் பெரியாரும் பல்லோரும் ஆசிகூற – ஆனந்தம்

2. மங்கள வாத்தியங்கள் முழங்கவே – சீர்
சங்கீத வாத்தியங்கள் துலங்கவே
மங்கையர் பாடிட மறையோரும் வேதம்கூற – ஆனந்தம்

3. அண்ணா மணமகனானாரே – எங்கள்
அண்ணி மணமகளானாளே
இவ்வுலகில் இவ்விருபேருமே நன்மை பெற – ஆனந்தம்

4. சந்தன புஷ்பங்கள் ஏந்தியே – பாரில்
பத்து மித்திரர்களும் வந்தாரே
வந்தவர்க்கு விருந்துகள் சந்தோஷமாகச்செய்ய
– ஆனந்தம்

5. விண்ணவர் மலர்களைத் தூவியே – கருதும்
கண்ணுள்ளவரைக் கண்டு களித்திட
எண்ணமறிந்தோர் புகழ் தேவரை ஏற்றிப்பாட – ஆனந்தம்

182. (138)

**சித்திரவர்ணப் பொற்சரிகை சேலையுடுத்தி – இரு**
செவ்விழிக்கு மையுமின்னும் மஞ்சள் குளித்து

2. ரத்தின மூக்குத்தி புல்லாக்கும் தரித்து
இன்பமாய் முருகு கம்மல் காப்பும் தரித்து

3. முத்துச் சரப்பளி பதைக்கங்களுடனே
மோகன மாலை வைரத்தாலி அழகும்

4. கட்டிய இடைதனிலே ஒட்டியாணமும்
காலிலிடும் பாதரசம் தண்டை கொலுசும்

5. வைத்திருக்கும் ஜடை பின்னல் மயிர் மாட்டியும்
வன்மை மிகும் நெற்றிப்புரை யாவும் தரித்து

6. இவர்கள் இஷ்டர் பந்துக்கள் எல்லாரும் வாழ
இவர்கள் பெற்றுப் பெருகி என்றும் வாழவே

183. **இராகம் (தேவா பரகிறிஸ்து தேவா பரதேவ)** (139)

**பல்லவி**

**தேவா இந்த நேரம் நின்னாசீர்வாதம் தா**

1. அன்று கானாவூர்க் கலியாணம் சென்று சிறப்பித்தார் ஆ! ஆ!
நன்று மிகவே இன்றிங்கே கூடி மன்றல் சிறந்திடவே – கிறிஸ்து

2. ஆதிமூலனே நீதிகுணாளனே ஜாதிகள்நேசனே ஆ! ஆ!
தீதில்லாமலே மாது மணாளனும் சேதமொன்றின்றி
வாழ–கிறிஸ்து

3. இன்று இம்மணப் பந்தலில் நாங்கள் இனஜனபந்துக்களாய்
– ஆ! ஆ!
இங்கிதமாகவே இஷ்டரும் கூடி மங்களம் கொண்டாட– கிறிஸ்து

4. ஈந்திட உந்தன் ஆவி நிறைவாய் ஆடவர் மங்கையர்க்கு
- ஆ! ஆ!
பகர்ந்திடும் இகபர நன்மை பாக்கியம் சகல சம்பத்துடன்-கிறிஸ்து

5. பெற்றோர் வாழ்க உற்றோர் வாழ்க மற்றோர்களும் வாழ்க
ஆ! ஆ!
எத்திசையுள்ள வெற்றி கிறிஸ்தோர் மிகவே
தழைத்தோங்க - கிறிஸ்து

**184. பியாகு** **ஆதி தாளம் (249)**

**மங்கா சுபகன மங்களமே - மணம்**
நீங்கா திம்மணர் தாம் பெறவே ... நிறை
சிங்கா தனபதி நீ அருளே
மங்களம் மங்களம் மங்களமே

**பல்லவி**

ஓங்கா உனதருள் பொங்கா
உனதொளி தாங்கா
சகலமும் வாங்கா - திருவொளி

2. கானாவூர்க் கலியாணக்குறைவை நீக்கி - நல்
சோனாரசமது பொழிந்தவர் நீர் - இம்
மணமக்கள் இருவர் மேலுமே நீர்
உம்மாசீர்வாதம் இன்றருளும் - ஓங்கா

3. ஈசாக்கு ரெபேக்காள் போலிவர்கள் - நல்
ஈசனருள் வரம் பெற்று வாழ - நம்
ஈசாயின் கிளையை அண்டினோர்ராய் உம்
நாம மகிமைக்கென்றுழைக்க - ஓங்கா

4. தந்திவர் தமதகம் உமக்கென்றுமே - அதி
உந்தனின் ஜெபத்தகம் பதித்தென்றுமே - வரும்
தந்திர சோதனை ஜெயித்தென்றுமே
சந்ததம் சந்ததம் சந்ததமே - ஓங்கா

5. பாடகர் பாடலின் கவி பலிக்க – தூதர்
துத்திய கீதங்கள் நிதமுடிக்க – மண
மாப்பிள்ளை பெண்மேல் பதம் படிக்க
நித்திய நித்தியமே செழிக்க – ஓங்கா

6. மங்களம் சோபனம் உமக்கென்றுமே – எம்
மங்கள கீர்த்தனம் துதி உமக்கே – தூதர்
துத்திய ஸ்தோத்திரம் என்றென்றுமே
ஆவி பிதா சுதனானவர்க்கே – ஓங்கா

**185. சகானா** **ஆதி தாளம் (293)**

**பல்லவி**

**ஏசுராஜனே கண்பாரும்**
இருபேரையும் இதயத்தில் காரும்

1. கானக்கலிலேயா சென்றாயே
கதிதருமிகும் அதிரசம் நீயே

2. ஆறுதலடைவதற்காக
ஏவை ஆதமோடிருந்ததால் நீயே

3. எலும்பில்லிருந்து படைத்தாயே
இவர் அன்பைப் பொருத்தி வைப்பாய் நீயே

4. மாசற்ற மாமிசமாக
மக்கள் மாளும்வரையும் இசைவாக

5. பலுகிப் பெருகி இவர் வாழ்க
திருப்பரமகன் சீர்பதம் சேர

6. சோதனையாக இராமல்
பாதி நாளதிலே பிரியாமல்

7. தேவ சகாயத்தைத் தாரும்
தேவ திருமகனுனதடி சேரும்

8. திருச்சபையோரைக் காண்பாரும்
திருமணமக்கள் கலியாணம் சேரும்

9. நல்ல (மாப்பிள்ளை பேர்) வாழ்க
நலமான (பெண் பேர்) வாழ்க

**186.**

**வாருங்கள் வாருங்கள் தோழிப் பெண்காள்**
வாழ்த்தி நம்தோழிக்குப் பூமுடிக்க

1. ஆதாமுக்கேவையை அலங்கரித்து
அழகிய சோலையி லமைத்துவைத்து
நாதக்கடவுளை நமஸ்கரித்து
நலமுடனவர்துணை நாடியின்று - வாருங்கள்

2. பூச்செண்டு, பூமாலை புனுகு பன்னீர்
புதுப்பட்டுப் புடவைகள் பொன்நகைகள்
உச்சிதவச்சிரகற்களுடன்
உவப்புடன் உற்றாரெல்லாருங்கூடி - வாருங்கள்

3. மணம் புரிய வரும் மணவாளன்
மங்கை மலர்ந்தமுகம் பார்த்து
குணமான கண்மணி தானுமிவள்
கூடியமனையாளுமென்றறிய - வாருங்கள்

4. அன்புள்ள நம்முடதங்கையரும்
அருமைத்தம் நேசமணவாளனுடன்
இன்புற்றென்னாளும் இப்புவிதனிலே
ஈசன் கிருபையில் வளர்ந்தோங்க - வாருங்கள்

**187. இராகம் (நித்தம் அருள் செய் தாயாளனே) (295)**

**பல்லவி**

**வந்தாளிம் மண வீட்டிலே – மண**

வாளரில் அன்பு பாராட்டியே, சுவாமி

1. ஏதமில்லாத காலத்திலே, ஆதம்
ஏவையைப் பூங்கா வனத்திலே
ஆதரவாயிருபேரும் சிநேக
மாயிருந்துனைத்துதித்தார்களன்பாக
நாதனே இம்மணர் இருவரையும் காரும்
நலமுடன் உனதருள்புரி – பரிவாக – வந்தாளிம்

2. சுந்தரச்சீயோன் குமாரியை, உனை
துதித்தகமகிழுஞ் சிங்காரியை
கந்த மணமுடிக்க என் மனந்தேறி
கலியாணம் செய்துகொண்ட கருணையின் வாரி
இந்த மணருக்குந்தன் அருள் வரம் சூடி
ரட்சிக்கவேண்டும் பர உபகாரி – வந்தாளிம்

3. உத்தம (தகப்பனார் பெயர்) பெற்ற
புத்திரன் (மாப்பிள்ளை பேர் அலுவல்)
உத்தமி மணமகள் (பெண் பேர்)
உரிமை பெருமையுடன் உறுதியாய் வாழ
அத்தனெ உனதருள் கரம் இவர்மேலே
அனுதினம் அமர்ந்திட அருள்செய்யும் சுவாமி –வந்தாளிம்

4. பூமகன் பூமகள் வாழ்கவே, இவர்
புத்ர சந்தானத்துடன் வாழ்கவே
கலியாணத்திற்கு வரும் யாவரும் வாழ்க
கலியாண காரியம் கைகூடி வாழ
தாமணம் தேவகுமாரனின் நாமம்
சங்கீர்த்தனம் பெற்று சந்ததம் வாழ – வந்தாளிம்

**188. இராகம் (இங்கிலீஷ்)**

**ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே**

நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

**பல்லவி**

வீசீரோ வானஜோதி கதிரிங்கே
மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர்வதித்திடும்.

2. இம்மண வீட்டில் வாரீரோ, ஏசுராயரே
உம்மணம் வீசச்செய்யீரோ, ஓங்கும் நேசமதால்
இம்மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விருபேரையுங் காக்கவே
விண் மக்களாக நடக்கவே
வேந்தா நடத்துமே – வீசீரோ

3. இம்மணமக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பிச்சென்றும் ஓங்கச்செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத்தோடென்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித்தரிக்க
ஊக்கமருளுமே – வீசீரோ

4. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும்மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றிபெற்றோங்குமே இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏசுராஜனாம்
உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே. – வீசீரோ

5. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந்துதுதித்தும்மை என்றும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன். – வீசீரோ

6. ஞான விவாகம் எப்பொழுதும் ஞாபமாகவே
வானமணாளன் வாஞ்சித்து வாழ்க மனையாளை
ஆனந்தமாகவே தூயத்தன்மையைதை
ஆடையாய் நீர் ஈயத்தரித்து
சேனையோடே நீர் வரையில்
சேர்ந்து நீர் சுகிக்கவே. – வீசீரோ

**189. இராகம் (இன்னமும் தாமதிகதால் என்னமா)**

**பல்லவி**

**சந்தோஷமாகவே நீ போய் வா என் தங்கையரே**

**அனுபல்லவி**

சந்தோஷமாகப் போய்வாயே – சந்தோஷ

1. எந்தன் பரனருளால் என்றென்றும் நீ செழித்து
சந்ததம் வாழ்ந்திருப்பாயே – சந்தோஷ

2. கோடான கோடியாய் நீ குவலய மேற் பெருகி
நீடாயுள் பெற்றிருப்பாயே – சந்தோஷ

3. சத்துருக்களை ஜெயித்து சந்ததியாய்க் கெலித்து
இத்தரையில் வாழ்ந்திருப்பாயே – சந்தோஷ

4. கர்த்தருக்குப்பயந்துன் காலங்களைக் கடத்தி
உத்தமப்பெயர் எடுப்பாயே – சந்தோஷ

5. சாந்தம் பொறுமை தயை சற்குணம் தானதர்மம்
ஈந்து சுகித்திருப்பாயே - சந்தோஷ

6. பக்தன் ................. க்கு பண்பாய் கீழ்ப்படிந்து
நித்தம் வாழ்ந்திருப்பாயே - சந்தோஷ

7. தாதிமாரோடு உந்தன் சாமான்களை எடுத்து
நீதியாய் போய் வருவாயே - சந்தோஷ

8. ஏசுபரன் சுதன்தன் திருக்கரத்தாலுங்களை
ஆசீர்வதிப்பாராகவே - சந்தோஷ

**190. நாதநாமக்கிரியை** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தயா பரா சுயமாய் ஏ பரா இங்கு**

**அனுபல்லவி**

தயா பரா சுயமாய் எல்லோரையும்
தபமே சுபமே புரிய வருவாய் - தயா

1. இந்த வருஷம் மிகுந்த சந்தோஷம்
தந்துகா ஜீவசுவி சேடா வருவாய் - தயா

2. பதினொருபேர் நடு அதிகிருபையோடு
தயவுடன் உதித்தபடியே வருவாய் - தயா

3. மனமகிழ் தினமதில் மைந்தன் ஏசுவையே
கனமாய் கனிந்து போற்றிடுவோமே - தயா

**191. பியாகு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**இது நல்விசேஷம் எவர்க்கும் சந்தோஷம்**
புது வருஷமிதினாம் புகுந்தப்பிரவேசம்

1. அதிசயமாக ஆண்டிதனிலேக
ஆசிதரும் ஏசுவையே பூசிப்போம் நன்றாக - இது

2. பலவிதநாசம் பயங்கரமோசம்
பறந்திடச் சிறந்து இறைவனின் நேசம் - இது

3. மெல்லியர் முன்னோங்க கல்விப்புகழ்தாங்க
வல்லபரன் நல்ல உரை சொல்வாராக வாங்க - இது

4. கனம் ..... ஐயர், கண்ய .... அம்மாள்
குடும்பங்கள் என்றும் வாழமனன் செய்வாராக - இது

5. உற்ற உபாத்திமாரும் மற்றும் சபையோரும்
முற்றிலும் பேர் பெற்று நிதம், சுற்றத்தோடு வாழ - இது

6. தோத்திரமல்லேலூயா துத்யம் புகழ் ஓயா
ஊழி காலம் வாழும்திரி யேகருக்குண்டாக - இது

**192.**

**பல்லவி**

**திரித்துவத்திரியேகருக்கு தோத்திரமையா - ஆகா**
விருப்பமாய் இவ்வாண்டைக் காண திருக்கிருபை
செய்ததாலே

1. ஆண்டவர் கிருபையாய் தந்த வருடமுமிதே - புது
ஆரம்ப ஜனுவரி முதல் நூதன நாளுமிதே
பாவிகளாம் நாங்களிதில் பங்கு பெற்றுக் கொண்டதாலே
- திரி

2. அநேகர் காணக்காத்திருந்தார் காணவில்லையே – இப்போ
அடியார் மெய்யாய் கண்டு கொண்டோம் ஆச்சரியமே
அநித்திய உலகைத் தாண்டி ஆனந்தம் நிலைக்கச்
செய்யும் – திரி

3. கதையைப்போலே நாட்களெல்லாம் கழிந்து விட்டதே ஏசு
கர்த்தனின் வருகை மிக அடுத்துவிட்டதே
காலை மாலை ஜெபத்துடனே விழித்திருக்கத் தயைபுரியும்
– திரி

4. மகிழ்ச்சியும் சிலருக்குண்டு இந்த வருஷமே – மன
மயக்கமும் பலருக்குண்டு இந்த வருஷமே
புகழ்ச்சியாய் கீதங்கள் பாடிப் போற்றவரம் தாருமையா –திரி

5. வேதத்தைத் தினம் வாசிக்க விருப்பம் தாருமே – எந்த
வேளையும் ஜெபங்கள் செய்ய விழிப்பைத் தாருமே
நாதனாம் கிறிஸ்தின் ரத்தம் பூசி நன்றாய் கழுவுமையா–திரி

6. நாட்களை எண்ணுமறிவைத் தாருமையாவே – முன்னே
நரகமோட்ச முண்டெனவே கூறுமேசையா
வானராஜன் வரக்காலம் அடுத்திடுது புது வருஷம் – திரி

7. பரிசுத்த பிதாவுக்கென்றும் ஸ்தோத்திரமையா – எங்கள்
பாக்கியராம் ஏசுவுக்கு ஸ்தோத்திரமையா
தரிசனம் கொடுக்கும் வல்ல ஆவிக்கெங்கள்
தோத்திரமே – திரி

**193. பியாகு** **ஆதி தாளம் (143)**

**பல்லவி**

**கனஜோபனப்பதியே புஜபல பானி தபநேசா**
கருணாகரப்பரமே மனோகரகாந்தி ஜெகதீசா

1. எமதாயுளைக் கிருபையால் ஜெயமுடி சூடி இலங்க வைத்தாய்
இக வாழ்விலு மொரு தாழ்வில்லா ததி ஜோபிதமாக வைத்தாய்

2. சேயர் பால்யராய் நடுப்பிராயராயுயிர் நீங்கின ரெத்தனை பேர்
ஜெகமீதினில் எமைப் பாதுகாத்தருள் கோதனை எத்தனைசீர்

3. புது ஆண்டில் பெறவேண்டும் நன்மைக்ள ஈந்தருளே தாங்கி
பூ பதியில் நேரிடும் சதியறுத்திடும் திருக்கரமோங்கி

4. தனதாயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தா
மாண்டு கண்டோம்
தயை மேசையன் பதன் பாசமாய் பணிந்தாசிடையும்
கொண்டோம்

5. சுரமண்டலம் தம்பூர் வீணை பிடில் மிர்தங்கம் ஜாலர் முழங்க
சொந்தத் தோழர்கள் நாங்கள் யாவரும் கெம்பீரமாய் துலங்க

6. எட்வர்ட் ராஜ்ரத்தினம் தாசருக்கவி ஓசையாகப்பாடி
இதமாகவே நடனம் புரிகிறோம் இன்னமும் என்னமோடி

**194. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (144)**

**பல்லவி**

**நித்தம் அருள்செய் தயாளனே! – எங்கள்**
நேசா ஏசு மணாளனே! – சுவாமி

**அனுபல்லவி**

உத்தம சற்குண தேவகுமாரா உம்பர்கள் சந்ததம்
போற்றும் சிங்காரா
சத்தியவேத வினோதலங்காரா சதி செய்யும் பேய்தலை
சிதைத்த சிங்காரா

**சரணங்கள்**

1. பட்சப்பரமகுமாரனே எங்கள் பாவம் தீரும் மாவீரனே –
சுவாமி!
அச்சய சவந்தர ஆத்தும நாதா அடியவர் துதிசெய்யும்
ஆரணவேதா
இரட்சண்யச் சுப சுவிசேட பிரஸ்தாபா ராஜ கெம்பீர
சங்கீத பொற்பாதா

2. சென்றாண்டெமை முகம் பார்த்தவா ஒரு சேதவிக்கின
மின்றி காத்தவா – ஸ்வாமி
இன்றோர் புதுவருஷாரம்பங்கண்டோம் ஏக
சந்தோஷமாய்ச் சந்தித்துக்கொண்டோம்
குன்றாதுமதுட ஆவியை ஈந்து கூடவே இருந்தடியார்
ஜெபம் கேட்டு.

3. சத்தியவேதமதோங்கி வாழவே சாற்றுமேசுவின் நாமம்
வாழ்கவே – எங்கள்
உபாத்திமார் தேசிமார் குருக்களும் வாழ்க வளர்சபையோடு
மாணாக்கரும் வாழ்க
துத்திய இந்திய துரைத்தனம் வாழ்க
சேயனத்தியட்சரவர்களும் வாழ்க

**195. இராகம் (கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார்) (145)**

**அன்பரே என்னுட தோழரே வாரும் ஆனந்தம்**
**பாடிடுவோம் – நாம் நாம்**
ஆண்டவர் நமக்கு ஈந்த கிருபைக்காய் ஆனந்தம்
பாடிடுவோம்

2. ஆயிரத்தொளாயிரத்து எழுபத்தைந்தாமாண்டில்
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆபத்து நாளை அடியார் கழித்தோம் ஆனந்தம்
பாடிடுவோம்

3. பேயினை ஜெயித்து வாயை அடைத்தோம் ஆனந்தம்
பாடிடுவோம் – நாம் நாம்
தீயனின் சோதனை தீவினை கழித்தோம் ஆனந்தம்
பாடிடுவோம்

4. பஞ்சங்கள் பசிகள் நோய்களை ஜெயித்தோம் ஆனந்தம்
பாடிடுவோம் – நாம் நாம்
சஞ்சலப்படுத்தும் தீயனை மிதித்தோம் ஆனந்தம்
பாடிடுவோம்

5. இன்பசுகங்கள் யாவையும் கண்டோம் ஆனந்தம்
பாடிடுவோம் – நாம் நாம்
துர்சனப்பசாசின் துர்க்குணம் விட்டோம் ஆனந்தம்
பாடிடுவோம்

6. பிதாவுக்கும் சுதனுக்கும் தேவாவிக்கும் தோத்திரம்
செய்திடுவோம் – நாம் நாம்
ஆதி முதலான காலத்தின் படியே தோத்திரம் செய்திடுவோம்

**196. இராகம் (நாம் நற்சுகமாய் பெத்லேம் நகர்) (146)**

**பல்லவி**

**சதா நித்ய தயைபுரி ததி இதோ**

**அனுபல்லவி**

தாமதமோ சீமோன் என்மேல்

1. ஆசை என்ற மூன்றுதனில் நேசமாகுதே – முழு
மோசமான நீசனானேன் வாருமேசையா – சதா

2. பூவின் தன்மை போலொழியும் பாவ உலகில்– யான்
ஜீவவழி தேட சுத்த ஆவி ஈவாய் – சதா

3. மாதா பிதா உன்னையன்றி ஆதாரமில்லை – நின்
பாதாரவிந்தமே கதி பாதுசாரையா – சதா

4. சத்தியவாசனே உம்மை எத்தினம் பாடும் – மா
சித்திரச்சீயோன் மணாளா எங்களை ஆள்வாய் – சதா

5. கடந்த வருஷம் எமைக்கண்மணியைப்போல் – வெகு
உடந்தையாய் தற்காத்தாயே உன்னத தேவா – சதா

**197. இராகம் (இங்கிலீஷ்) (147)**

**பல்லவி**

**எம் நாதா வேதா போதா சற்பிரசாதா**
நவகுணநீதா நாதா தூதா தினசரணம்

**அனுபல்லவி**

அதீத சுதந்தர இமையவர் கூடி அல்பா ஒமேகா ஜெய ஜெய
அல்லலு அல்லலு அல்லேலூயா ஓசன்னா பாடுவோம்

1. வந்தோம் வந்தோம் வந்தோம் திருவடி ஏசையா வந்தோம்
தந்தோம் தந்தோம் இங்கிதமாயிதோ தந்தோம் வந்தனமே
சந்தோஷ நாளிதிலே கிறிஸ்தாண்ட ஜனவரி முதலாம் நாள்
– இன்று
மங்கள சந்தோஷ இன்சொல் விளங்கிடும் சகோதரரின்
திருநாள் – எம்

2. அத்தா கர்த்தா பக்தா ஓம் பரிசுத்தா சுரர் பதியே ஆ
நித்தா நித்தா முக்தி சித்தா ஸ்திரி வித்தரசர் துதியே
அரூப ரூப அன்புர ஞான ஆரண காரணனே உம்மை
அண்டிய தொண்டரை மண்டலமீ தருள் கொண்டு
நடத்திடுமேன் – எம்

3. நேசா பரிமளவாசா மறையுபதேசா திருக்குமரேசா
ரஞ்சித ரோஜாநரர் பாவநாசா ஒரு சருவேசா
ஸ்தோத்திரமே
சுவாமி தாசருக்குத் தாரகம் நீயே சகலமும் நீதானே
என்றும்
தராதலமே புகழ் ராஜகுமரர் சகாய மனோன்மணியே – எம்

**198. இராகம் (இங்கிலீஷ்)**

**பல்லவி**

**என் அப்பா தாய் மேய்ப்பர் அன்பர் குரு தெய்வம் நீயே**

1. கண்விழி போலென்னைத் காத்தோனும் நீயே
கடந்த காலமெந்தன் காவலும் நீயே
கருணைக் கடலே கடலே கடலே
மண் எனைக்கையில் வரைந்தோனும் நீயே
மட்டில்லாப் புகழ் உமக்கே - என்

2. விண் இறை நீயே வேந்தனும்நீயே
மேதினி யாவுக்கும் மேல்ராஜன் நீயே
விண்ணோர் வீழ்ந்து போற்றும் நாதா
மண்ணுலகோரும் வான்ஜோதி கடரும்
வகுத்தவா வான் நாடா - என்

3. தூதர்கள் போற்றும் சுயா திபன் நீயே
ஆதங்கம் நீக்கினோன் அருள் ஊற்றும் நீயே
வேதம் நிறைவான கோனா
கோதலின்றியே குறைவில்லா ஒன்றே
குறைவில்லா நீதி நிறைவே - என்

4. அன்பர்க்கு கிருபை அளிப்பவர் நீயே
அருணோதய ஒளி ஆனோனும் நீயே
அன்பர்க்கன்பர் நண்பர் நண்பா
என்பரன் நீயே ஏகோவாவும் நீயே
ஏழை அடியேன் எனக்கே - என்

5. அல்பா ஒமெகா ஆதி அந்தம் நீயே
அதிசய மீட்பரை அனுப்பினேன் நீயே
அருமை வேதம் அருள் செய்தோனே
அருமைப்பிதாவே அடைக்கலம் நீயே
ஆதரவற்றோர்க்கு - என்

6. துயர்காலம் என்பக்கத் துணையாவோன் நீயே
துவண்டு விழுகையில் தூக்குவோன் நீயே
தூயா ஓயா சேயா நேயா
துன்பத்திலின்பம் துயர்காலத் தன்பா
சுத்தக் கண்ணாளா தயாளா – என்

**199. பியாகு** **ஆதி தாளம் (149)**

**பல்லவி**

**ஆனந்தம் ஆனந்தமே மகானந்தம் ஆனந்தமே**
பேரானந்தம் ஆனந்தமே மோட்சானந்தமே

**அனுபல்லவி**

மணியாரமலன் நனியாரருளால்
இனிதாய் மனமகிழ் தினமிதிலே

1. அனுதின ஆகாரமும் எனக்கினிய நற்சீருடையும்
திறமான நல்லுடல் சுகமும் எனக்கென்றும் நீர்
அருளினதால் – மணியா

2. நித்திய ஜீவனுடன் ஓர் முத்தொழி ராஜ்ஜியமும்
மாகர்த்தன் கருணையினால் தர சத்யவாக்கருளினதால்
– மணியா

3. காசினி மீதினிலே எம்மாயுசு காலமெல்லாம்
வெம் தோஷி மாபாவி எனக்கும்வாசிடையருளியதால்
– மணியா

4. சீருடனுலகில் நாங்கள் – என்றும்
பேருடன் வாழச் செய்யும் – எங்கள்
அருமையாம் ஆண்டவராம் – உந்தன்
காரூண்யத்துடன் வாழ்ந்திட – மணியா

5. அற்புத சுதந்தரமே – உந்தன்
அற்புத போதனைகள் – உயர்
விண்டலமீதிருந்தும் – நீர்
எண்டிசையாளுவீரே – மணியா

## 200. இராகம் (பருந்து நீண்ட பாம்பொன்று) (291)

**பல்லவி**

**நாதனேசையனை வாழ்த்துவோம்**
நல வருடமும் தோன்றிற்றே

**அனுபல்லவி**

சென்ற நாட்களெல்லாம் செம்மையும் நன்மையும்
என்றும் நம் ஜீவியம் தன்னில் தொடர்ந்ததே

1. புதிய ஆண்டினில் புதிய நல்
ஜீவியம் செய்திட ஏசுவே
கிருபை நதியை கடாட்சம் செய்திட
அருள் ஆவி ஊற்றும் ஆசீர்வதித்திடும்

2. தோத்திரம் தோத்திரம் தோத்திரம்
துய்ய சிம்மாசன ராஜனே
துதியும் கனமும் தேசங்கள் யாவிலும்
தோன்றுமுமக்கே தேவாதி தேவனே

3. அருள் பொழியவும் அஞ்ஞான இருள்
ஒழியவுமெஞ்ஞான வொளி
சுடர்ச்சி நம்முடன் ஜோதிப்பிரகாசமாய்
தாசர்மேல் நேசமாய் வீசவும் வேண்டுவோம்

4. ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி
ஐந்தாம் ஆண்டையும் காணவே
அனுக்கிரகித்த நம் அன்புள்ள கர்த்தனை
ஆவலுடனே ஏகமாய்த் துதித்து

5. இத்தனை நாட்களாய் கர்த்தனார்
ஈந்தனர் வேண்டிய சகலமும்
இன்னொரு ஆண்டையும் இன்பமாய்க் காணவே
இரக்கம் வைத்த நம் ரட்சண்ய பெருமான்

**201. இராகம் (எந்தை எந்தை முந்தும் திருமகன்) (292)**

**தந்தை தந்தை தந்தை தேவனார்**
விந்தை விந்தை விந்தையொடு நமக்
கிந்த இந்த நவ வருடம்
தந்தனர் வந்தனமே

ஆ! அதிசய புது வருடமிதில்
அனந்தம் புகழ் கொள்வோம் மனதில்
ஆ! இது சமயம் குணப்படுவோம்
அமலனடி பணிக்கேற்றிடுவோம்

2. சிந்தை சிந்தை சிந்தையதனிலும்
சொந்த சொந்த சொந்த நாவிலும்
கந்தை கந்தைச் செயலிதுவே
கன்மிகளாயினோமே

ஆ! கொடிதான சாபமுற்றோம்
அலகை விஷயமெய்யகமு முற்றோம்
மா கொடிதாம் நகரமதில்யாம்
மாய்ந்திடாமல் கிறிஸ்தன்பு பெற்றோம்

3. மிக்க மிக்க மிக்கத் துதி சொலத்
தக்க தக்க தக்க வரந்தரப்
பக்க பக்கமது தனிலே
பரனை மன்றாடுகின்றார்

ஆ! கனம் பிதா சுதனாவியர்க்கும்
அகமகிழோடு பாடுவோ மென்றைக்கும்
ஆ! மனம் வாய் செய்கையதனிலும் யாம்
அம்பரன் மறைக்கிசைந் தொழுகிடுவோம்

4. வாழி வாழி எம்தேசத் தலைவனும்
மாறாம் வாழி மந்திரிமார்களும்
வாழி பாளமென்ற் கவர்ன்மென்றுமே
வாழி திருச்சபை வேதியரும்

வாழி கிறிஸ்தவ கல்லூரிகளும்
வாழி வைத்திய ஸ்தாபனமும்
வாழி பிரபுக்கள் ஏழைகளும்
வாழி யாரும் என்றுழி ஆமேன்

**202. இராகம் (உனக்கொத்தாசை வரும்) (200)**

**பல்லவி**

**கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய் கொண்டு வாரும்**
அத்தன் கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பார் நித்தம்

1. திருச்சபையோரே நீங்கள் தேவ சன்னிதி தனில்
வரும்போது வெறுங்கையாய் – வர வொண்ணா
தென்றுணர்ந்து

2. தசம பாகங்களெல்லாம் சுவாமி பண்டசாலைக்கு
நிசமதாகவே கொடும் நன்மை மிகப்பெறுவீர்

3. சிறுக விதைக்கிறவன் சிறுகவே தானறுப்பான்
பெருக விதைக்கிறவன் பெருகவே தானறுப்பான்

4. அவனவன் விசனமும் அலட்டுதலோடுமல்ல
அமலன் அன்புகூரவே அகமகிழ்வோடுதானே

5. நெல் கம்பு கேப்பை சோளம் புல் காடைக்கண்ணி சாமை
வெல்லம் பருத்தி வற்றல் வெங்காயம் பயறுகள்

6. தேங்காய் கிழங்கு மல்லி தேன் நெய் காய் கனிகளும்
பாங்காய் நீ செய்துவரும் பல வேலைப் பொருள்களும்

7. துட்டு ரூபாய் நகைகள் பட்டு நெசவுப் பொருள்
முட்டை கோழி புறாக்கள் மாடு கிடாயாடுகள்

8. யாவிலும் மேலானதாய் தேவனுக்கேயுமது
ஆவி ஆத்துமா சரீரம் யாவும் படைத்தே இப்போ

9. மனுசர் உங்கள் நற்கிரியை மதித்து மகாதேவனை
மகிமைப்படுத்த உங்கள் வெளிச்சம் பிரகாசிக்க.

**203. செஞ்சுருட்டி** **ஏக தாளம்**

**வானபிதா தந்த ஆஸ்தியிலே ஏழைகட்குன் மனம்**
கோண வேண்டாம்
வாங்குவதைவிட கொடுப்பதுவே நல்லதென்று
கர்த்தர் சொல்லுகிறார்

**பல்லவி**

தானஞ்செய்ய ஏசு கேட்கிறாரே
கேட்கிறாரே கேட்கிறாரே – உங்களை

2. ஏழைகள் நம்மோடெக்காலமுமே இருப்பதை நாமும்
காண்கிறோமே
ஏழைக்கிரங்குவோர் கர்த்தருக்கு கடன் கொடுப்பவர்
ஆகுவரே

3. பூமியில் பொக்கிஷம் என்னத்துக்கு கன்னமிட
அதுகள்ளருக்கோ
வானத்தின் பொக்கிஷம் சேர்த்துவைத்தால் ஏகோவா
உன்னை ஆசீர்வதிப்பார்

4. ஆலயத்தூழியர் காணிக்கையை ஆண்டவர்
காணிக்கையாக எண்ணு
நல்மன தோடதை ஈயவேண்டும் நாயனுன் மனதைப்
பார்க்கிறாராம்

5. மரம் நட்டுப்பலன் நோக்குவானே மந்தை மேய்த்ததன்
பாலுண்ணுவானே
தேவ சபையின் நல்வேலை எல்லாம் ஆதரிப்பாரின்றிப்
போகலாமோ

6. பொன் வெள்ளி ரத்தினம்தான் கொடுத்து
உன் நெஞ்சைக் கொடாததென்னத்துக்கு
பொன் வெள்ளித் தட்டோடுன் உள்ளத்தையே
பூர்த்தியாய் சாஷ்டாங்கம் செய்குவையே

7. மனுஷர் உங்கள் நற்கிரியை கண்டு பரம நாதர்
மகிமை விண்டு
தினமும் வீசவே உங்கள் ஒளி கொடுங்கள் பொன்
வெள்ளி காணிக்கையாய்

**204.**

**மகிழ்வோம் யேசுவில் மகிழ்வோம் – பரன்**
மகிமையுற்றுமே மகிழ்வோம்

**அனுபல்லவி**

மகிழ்வோம் மகிழ்வோம் மகிழ்வோம் மகிமையில்
மகிழ – மகிழ்

**சரணங்கள்**

1. வானில் யாவரும் மகிழ – யேசு, வாரும் என்றுமே பகர
மானுவோர்க்கொரு சிகரம் – மன, தாரத் தற்பரனருள்
மகிமை கனமும் மகிமையில் மிகவும் மகிழ – மகிழ்

2. சுத்த ஜீவியமுடைய – தேவ, புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருஷ்டிகளுடைய – மா, கர்மங்களகன்றகல
மகிழும் தினமும் மகிபரின் தினமும் வரவே – மகிழ்

3. அடிமையானவர் கூடி – பரன், அளித்த பொன் முடி சூடி
ஆயிரமாண்டுகளாகக் – கடன், மாறியே அரசாள
மயிலும் குயிலும் ஆடும் புலியுடன் வாழ – மகிழ்

4. வானம் பூமியுமகல – நவ, வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல – கடும் ரோகமோடியே விலக
சுகமும் ஜெபமும் சகலரும் சகித்து மகிழ – மகிழ்

5. பொன்னால் வீதிகளுடைய – அரும், சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர ஒளியே – நரர் கண்டு களித்திடுமருளே
கண்ணீர் கவலையும் நண்ணா நகரினில் மகிழ – மகிழ்

6. பளிங்குபோல் ஜீவநதியே – இரு, கரையும் ஜீவனின் மரமே
பசியும் தாகமுமில்லையே – அங்கு புசிக்க ஜீவனின் கனியே
புசிப்போம், ருசிப்போம் யேசுவில் நித்தியம் மகிழ – மகிழ்

7. சுத்த ஆவியும் சுதனும் – செய்த மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும் – அங்கு, உற்று உள்ளம் மகிழ
போற்றிப் புகழ்வோம், நூதன செயலில் மகிழ – மகிழ்

**205. இராகம் (ஏசுநாதனைத் துதிசெய்)**

**பல்லவி**

**தசம பாகங்களை நமக்குத் தா தா தா தா தா**

1. அசதியும் தளர்ச்சியும் வேண்டாமதிலே
அனைத்தையும் தந்த கடவுளார் நாமே
நிசமுனை யாசீர்வதிப்போம் பக்தா
நீ நீ நீ, நீ நீ - தசம

2. ஆத்தும சரீரசுக மெதினாலே
ஆயுள் மக்கள் சுகமெதினாலே
தோத்திரக்காணிக்கை நமக்கேதுமிலையோ
சொல் சொல் சொல், சொல் சொல் - தசம

3. மனிதரை வஞ்சிக்கும் வண்ணம் நமையும்
வஞ்சிக்கப்போமோ வேண்டா மறிவாய்
தினமுதல் விளைவாய் நமது கடமை
செய் செய் செய், செய் செய் - தசம

4. வானமும் புவியும் மாரியும் எனதுன்
வாழ்வுக்குத் தக்க காணிக்கையுடனே
நீர் நமதாலயமதனுள் வந்தீர்
நில் நில் நில், நில் நில் - தசம

5. பிள்ளைகளாரால் பிழைத்தது பெற்றோம்
பிழைத்தனர் யாரால் விபத்துகளின்றி
எள்ளளவுமிதை நினையா திருப்பது
ஏன் ஏன் ஏன், ஏன் ஏன் - தசம

6. ஆக நம் வீட்டில் தசம பாகம்
ஆகாரமாக சேர்த்து வைப்பாக
வாகுடனுந்தன் மனதுடன்கொண்டு
வா வா வா, வா வா - தசம

7. அப்போ வானபலகணி திறந்து
அளவில் லாசீர் வாதங்கள் பொழிவோம்
செப்பாய் நமக்குத் தோத்திரம் சொல்லி
தின் தின் தின், தின் தின் - தசம

8. வருஷிக்க மாட்டேனோ ஆசீர்வாதம்
பட்டளவில்லா வகையாயுனக்கு
பரீட்சித்தென்னை சோதித்தறிந்து
பார் பார் பார், பார் பார் - தசம

**206. இராகம் (உனக்கொத்தாசை வரும் நல்) (263)**

**பிரதிஷ்டை செய்ய வாரும், பெரியோனே இந்த வீட்டை**

**அனுபல்லவி**

நரரான நாங்கள் தினம் துதி பாடி ஜெபித்திட

1. நாச உலகமதில் வாசம் செய்கிறபோது
நேசா நீர் கிருபையா யீந்தீரே இவ்விடத்தை

2. கர்த்தர் வீடுகட்டாராகில் கட்டுவர் பிரயாசம் வீண்
மெத்தநேரம் வேலைசெய்து போஜனம் புசிப்பதும் வீண்

3. தமக்குப்பிரியமான தாசர்க்குச் சுகமுள்ள
நித்திரையும் கொடுத்து நிதமும் ஆசீர்வதிப்பார்

4. இந்த மனையில் வாசம் செய்யும் பிள்ளைகள் மேலே
சந்ததமும் கிருபை கூர்ந்திடும் அன்பினாலே

5. அக்கினி புசல் காற்று ஆபத்துத் துன்பம் தொல்லை
சீக்கு மரணம் மோசம் செய்யாமல் காருமையா

6. தங்கி ஜெபிக்கும் ஜனம் சத்திய ஆவியினால்
பொங்கிப்பூரித்து புதுப்பிறவியாய் மாறச்செய்யும்

7. தண்ணீரை சுத்தம்செய்து தாராளமாய் பெருக்கி
புண்ணியரே நீரெல்லாம் பொற்கரம் வைத்துத்தொடும்

8. மன்றாட்டுக்கெல்லாமுடன் மறுமொழி அருளியே
ஒன்றாகச் சேருமையா உம்மோடு எங்களையே

9. தேவா காரும் தேவதூதர் துணையுமிங்கே
காவலாய் நிற்கவேணும் கலக்கமில்லாமல் காரும்

10. நித்தியவீடு பரலோகத்தில் எமக்குண்டு
பக்தியுள்ளோர்க்காயேசு வைத்தாரதையே மீண்டு

11. பிதாச்சுதனாவியர்க்கும் தோத்திரம் தோத்திரமே
ஆதிமுதலே எல்லாக்காலமு முண்டாகவே

**207. சுருட்டி** **ஆதி தாளம் (150)**

**பல்லவி**

**ஏசுவைப் பார்த்து நட என் நேசா**

1. நமது பாவங்களுக்காக மரித்து – நாம்
நடந்திட வழிகாட்டி முன்சென்ற – ஏசுவை

2. தீமைக்குத் தீமை செய்தாரோ? – தமைச்
சிலுவையிலறைந்தோர்க்காய் ஜெபித்தாரே – ஏசுவை

3. சண்டை கூக்குரல் செய்யாரே – தம்
சத்தத்தை வீதியில் காட்டாரே – ஏசுவை

4. நெரிந்த நாணலை முறியாரே – மங்கி
எரிந்த திரியை அவியாரே – ஏசுவை

5. உருக்க விரக்கங்களுள்ளாரே – அவர்
செவிடுமை குருடர்களை தள்ளாரே – ஏசுவை

6. நன்மை செய்வதில் ஓய்ந்ததுமில்லை
நாட்களை வீணிலே கழித்ததுமில்லை– ஏசுவை

**208.** **(151)**

**பல்லவி**

**துதிப்பேன் துதிப்பேன் ஏசுதேவனே அல்லேலூயா பாடி**
துதிப்பேன் துதிப்பேன் ஏசுதேவனே

**அனுபல்லவி**

துதிப்பேன் லோகத்தின் பாவத்தை நீக்கிட
தூயவனாய் வந்த தேவகுமாரனை – துதிப்பேன்

1. கருணை நிறைந்த கண்ணுள்ளோரவர் தம் ஜனத்தின் கூக்குரல்
கருணைகூர்ந்து கேட்கும் காதுள்ளோர்
லோகப்பாவச்சுமைதனை சிரசுகொண்டு சுமந்தளிக்க வென்றே
குருசெடுத்துக் கொல்கதாவில் சென்றோரை – துதிப்பேன்

2. பொற்குத்து விளக்கு ஏழு மத்தியிலே எங்கள் ஏசுநாயகர்
பொற்கச்சை மார்பினில் கட்டி நிற்கிறார்
நிலை அங்கி தரித்தோராய் கற்பிக்கும் காரியம் கவனமாய்க் கேட்டு
சொற்படி செய்வோரை தப்பாமல் மீட்போரை – துதிப்பேன்

3. வழியும் சத்தியமும் ஜீவனுமவரே அவரருகில் வருவீர்
வழியில் ஆறுதல் செய்பவரவரே
லோகபாவத்தைச் சுமந்தார் பழைய சுபாவங்கள் ஒழித்து
முற்றுமாய்
அழித்து பக்தரை மோட்சத்தில் சேர்ப்போரை – துதிப்பேன்

**209. பியாகு ஆதி தாளம் (151)**

**பல்லவி**

**சிங்காரப்பண் கேளையா – சீராள – செல்லத்துரை**

**அனுபல்லவி**

ஜீவாதிகாரா தியாகராஜனே குபேரா

1. எம் காரணா இசைதோரணா மங்காப்பரிபூரணா
மனம் பொங்காத சங்காரணா எனக்குன் காதல்
விஸ்தீரணா, நானா
நீரெங்கள் பாவ நிவாரணா வானா திருச் –சிங்காரப்

2. நீயும் நானும் நேசமானோம் நித்ய ஜீவனுன்னோடு வாழ
சத்யா நீ வரங்கொடு, இருள்பற்றாது ஜோதியோடு
அன்போடு
திவ்ய பாக்கிய வரம் பங்கிடு தெம்மோடு – சிங்காரப்

3. ஆண்டானுனை அடுத்ததினால் வெண்டாமுலகசுகம்
இனி விண் நாடே என் ஞாபகம் உனைவிட்டாலதே
பாதகம்
ரத்னப்பாவுன் வேதானந்தம் ஜதம் அன்றோ ராஜா
– சிங்காரப்பண்

**210. சங்கராபரணம்** **த்ருபட தாளம் (153)**

**உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக்கூடுங்கள்**
மன்னன் ஏசு நாதருக்கு வான்முடி சூட்டுங்கள்

2. நாலா தேசத்திலுள்ளோர்களே நடந்து வாருங்கள்
மேலோன் ஏசு நாதருக்கு மெய்முடிசூட்டுங்கள்

3. ரத்தச்சாட்சி மார்களே உங்கள் சாட்சியம் சொல்லுங்கள்
முத்தமிட்டு ஏசுவுக்கு மேல்முடிசூட்டுங்கள்

4. குற்றமில்லாப் பாலகரே கூடிக்குலாவுங்கள்
வெற்றிவேந்தன் ஏசுவுக்கு வெண்முடி சூட்டுங்கள்

5. வாலிபரே கன்னியரே வந்து மகிழுங்கள்
சாலேம் மக்கள் கூட்டத்தோடே போய்முடி சூட்டுங்கள்

6. நல்மனதோடே சொல்கிறேன் நாட்டார்களே நீங்கள்
புன்னகைகொண்டு நிற்பானேன் பூமுடி சூட்டுங்கள்

7. இந்தியாதேசத்தார்களே ஏகமாய் கூடுங்கள்
பூந்தனங்கள் அற்பமொன்றே பொன்முடி சூட்டுங்கள்

8. துஷ்டராமரபிகளே தோத்திரம் செய்யுங்கள்
இஷ்டரான ஏசுவுக்கு எம்முடி சூட்டுங்கள்

9. சகலதேசத்துள்ளோரே சாஷ்டாங்கம் செய்யுங்கள்
மகாராஜரிவரே மாமுடி சூட்டுங்கள்

**211. இராகம்** **தெம்பாங்கு (154)**

**பல்லவி**

**என்னேசு முருக்கித்தங்கம் என் நெஞ்சம் குலுக்கித் தங்கம்**
மன்னா நீர் எனக்குச் சிங்கம் மகிழாதோ எந்தனங்கம்
சுவாமி

1. பூங்குயிலே தேங்குயிலே பூமானே தேங்குயிலே
வான்குயிலே மான்குயிலெ ஏங்குகிறேனுனை நினைந்து

2. ஆங்காரத்தையடக்கி ஐம்புலனையுமடக்கி
பூங்கா விஷமடக்கி புண்ணியனைத் தேடுகின்றேன்

3. இனத்தை விட்டேன் ஜனத்தை விட்டேன் கனத்தை
விட்டேன் தனத்தை விட்டேன்
உனக்கென்றனைக் கொடுத்துவிட்டேன் உள்ளதெல்லாம்
சொல்லிவிட்டேன்

4. போய்வருவேன் என்று மேலே போன உன்னை இன்னும்
காணேன்
நாயகனே உன்னைத் தேடி நானிலத்தில் வாடுறேனே

5. எத்தனை நாளாயுனக்கு இத்தரையில் விழித்திருந்து
தத்தளித்துக் காத்திடுறேன் சிதைந்து மனமுடைந்து
போனேன்

6. உன்னாவல் கொண்டடிமை என்னாவி தேகமெல்லாம்
கண்ணாளன் உனக்களித்தேன் கண்மணியே
மறந்திட்டாயோ

7. ராஜா பரதேசி நாடாம் ரத்னபுரியே உன் வீடாம்
சீஷனானேன் உனது ஜோடாம் திருவாக்கு மாறுவாயோ

**212. இராகம் இங்கிலீஷ்** **(155)**

**என் பங்கு வீதம் சுவாமி என் பாத்ரப் பங்குமவரே**
என்னுட வீதமவரால் என்றென்றும் காக்கப்படும்

2. இன்பமாம் சுதந்திரம் எனக்கிங்கே உண்டாயிற்று
எங்கெங்கும் முக்யமான இடத்தில் என் வீதமாச்சே

3. எனக்கு நல்சிந்தை அருளும் ஏகோவாவைத் துதி
செய்வேன்
அதுக்கென்னை இரவிரெனது ஆத்துமம் ஏவிக்கொள்ளும்

4. கர்த்தரை எப்போதுமென் கண்முன்னே வைத்துக்
கொள்வேன்
கர்த்தர் என் வலது பக்கம் காண்பதால் அசைய மாட்டேன்

5. என்னிதயம் பூரிப்பாகி என் மகிமை களி கூறும்
என்னுடல் தானும் வசமாய் இங்கே படுத்திருக்கும்

6. ஆண்டவரென் ஆத்மாவை ஆதேசில் விடமாட்டார்
மீண்டதம் பரிசுத்தர் மேன்மையை அழியவொட்டார்

7. ஜீவனின் வழி எனக்குத் தெரிவித்தீர் அறியச்செய்தீர்
தேவனின் சமுகத்தினில் செழிப்புண்டு நிறைவுமுண்டு

8. தேவனின் வலபக்கத்தில் செல்வத்தின் பாக்கியங்கள்
மேவியே என்றென்றைக்கும் விளைந்து கொண்டமைந்தே
நிற்கும்

**213. காபி** **ஆதி தாளம் (156)**

**பாலகர் எல்லாரும் கூடி பரமராஜனைத் தேடி**
ஆடிப்பாடி அவர் நமத்தைப் போற்றுங்கள்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தா உந்தனுக்கு
வந்தனமனந்தம் எங்கள் சுவாமியே

3. மூவரிலொருவருமாய் முத்தொழில் புரிவோருமாய்
ஆவியாயிருப்பவர்க்கு தோத்திரம்

4. மன்னுயிரை மீட்கவென்று தம்முயிரை ஈயவந்த
பொன்னுலகாதிபதிக்கே ஸ்தோத்திரம்

5. ஆதியிலே ஆதாம் ஏவை அடைந்த பாவக்குணத்தை
அகற்றிப்போட வந்தவர்க்கு ஸ்தோத்திரம்

6. சுந்தரப்பிதா குமாரன் ஜோதி பரிசுத்தாவிக்கே
வந்தனம் அனந்தம் எங்கள் சுவாமியே – பாலகர்

**214. இராகம் (சுவாமி நீ வந்தாளவேணும்) பியாகு (159)**

**பல்லவி**

**நித்தியனை நிதமும் துதி செய்திடுவாய் மனமே**

1. அந்தி சந்தி மத்தியானம் ஆபத்து வேளையிலும்
எந்தெந்த நேரத்திலும் ஈடேற்றிக் காத்துவந்த

2. வானத்துக் கிரகங்கள் வகைவகையாய்ச் சுற்றிவர
மண்ணின் மனிதருக்கு சுடரொன்று செய்தவல்ல

3. கானாவூர்க் கலியாண வீட்டிலெல்லாரும் காண
தண்ணீரை ரசமாக அற்புதங்கள் செய்தவல்ல

4. அத்திமரத்திலேறி ஆண்டவா முகத்தைப்பார்க்க
சந்தோஷமாக வந்த சகேயுக் கருள்புரிந்த

5. நாலு நாள் கல்லறை மீதடக்கி வைத்திருந்த
சீலன் லாசருவை உயிரோடு டெழுப்பிவைத்த

6. கங்குல் பகல் நாற்பதுநாள் கனத்த மழை பெய்தழிக்க
நோவாவின் குடும்பத்தில் எட்டுப்பேரை காத்துவைத்த

**215. இராகம் (ஆனீரோ பாலகனே ஆதிபனே) (158)**

**திரியேகா மரியோவா கருணை செய்வாய் காக்கவா**
இருடெனையே இடர் செய்யுதே இருகரம் கொடுத்தெனை
ஈடேற்றவா

2. நிலையாத இப்பூதலத்தில் தொலையாத கவலை
கொண்டேன்
நிலையான ஏசையனே மலைக்க விடாமலென்னை
ரட்சிக்கவா

3. பரமாளும் பார்த்திபனே நரராளும் நாயகனே
சுரர்பணியும் ஜோதிடனே சரணமுந்தாளடி பணிந்தேன்

4. பேய்தானும் புரளிபண்ண காய்மகாரம் கொள்ளுதே
தீக்கிடங்கில் தள்ளிவிடா திடன்பெலன் அளித்தென்னை
ரட்சிக்கவா

5. பத்தாவே பரிசுத்தாவே கர்த்தாவே காரையா
சுத்தாதி சுத்தாவே துதிபுகழனவரதமுமுமக்கே

**216. இராகம் தெம்பாங்கு (159)**

**சரணம் சரணமையா சருவேசா உந்தனுக்கு**
சரணம் சரணமையா

1. இரவும் பகலுமாக மறவேனே முச்சுடரே
வரம்பெறவே வேணுமையா உன்தயவை அணிந்தவரே
வந்திடுவாயே வரம் தந்திடுவாயே சபைகொண்டிடுவாயே

2. சிங்கக் குகைதனிலே சேதமின்றித் தானியேலை
பங்கப்படாமல் காத்த பக்தியுள்ள என் தகப்பா
பாதம் கெஞ்சுகிறேன் பலநாளும் தேடுகிறேன் பரிவாக
எண்ணாமல்

3. அந்த மணப் பந்தலிலே ஆறுகுடம் தண்ணீரை
அதிரசமாகச் செய்த அருமையுள்ள என் தகப்பா
ஆசை கொள்ளுகிறேன் என்னை ஆளவாராயோ மனம்
வாடி நிற்காமல்

4. சாத்ராக்கு மேஷாக்கு ஆபேத்து நேகோவைப்போல்
ஆதரிக்க வேணுமையா அடியேனுன்னைக் கெஞ்சுகிறேன்
ஆசை கொள்ளுகிறேன் எனை ஆளவாராயோ மனம்
வாடி நிற்கிறேன்

**217. காமாஸ்** **ஆதி தாளம் (160)**

**பல்லவி**

**சுய அதிகாரா சுந்தரக் குமாரா**

**அனுபல்லவி**

சொந்த உலகந்தனைத் துறந்தமரி மைந்தனான - சுய

1. அகிலத்தை ஒரு சொல்லில் அமைத்தனையே
அதை ஒரு பம்பரம்போ லிமைத்தனையே
துயில்போ லாகாயமதை லகுவாய் சமைத்ததிலே
ஜோதி பலமாதிரியாய்த் தூக்கி அங்கிலங்க வைத்த - சுய

2. கரைமதகற்ற குளம் புவியிலுண்டோ
கடலுக் கவர் சொல்லின்றிக் கரைகளுண்டோ
திரை திரையாக ஜலம் மலைபோல் குவிந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மாதயவாய் பாதுகாக்கும் - சுய

3. நரர் பலர் கூடி ஒரு மனை முடிக்க
நாளெல்லாம் உழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே
மரமுயிர் தாது இன்னும் வான் புவியனைத்தையுமோர்
வார்த்தையால் க்ஷணப்பொழுதில் நேர்த்தியா
யுண்டாக்கி வைத்த - சுய

4. பாவமனுவோர் முகத்தைப் பார்த்தாயே
பாவப்பிணி தோள் சுமந்து தீர்த்தாயே
சுவாமியும்மைப் பற்றும் சுவாமி தாசருக்கிரங்க வேணும்
தஞ்சம் தஞ்சம் ஓடி வந்தேன் கெஞ்ச மனுகேட்டருள்
வாய் – சுய

**218. இராகம் இங்கிலீஷ்** **(161)**

**பல்லவி**

**எப்போதும் நாதனைத் தோத்திரி**

**அனுபல்லவி**

நாள் தப்பாமல் ஆண்டவன் பொற்பாதத்தை பணிந்து

1. இப்பூதலத்தில் நீர் மனு ஜென்மமாயினீர்
ஏதுக்கள் உள்ளத்தில் எண்ணிக்கையாயினீர்
அப்பா என் அப்பா என்றழைக்கப் பிறந்தனை – எப்

2. சண்டாள ராயினீர் என் காயம் நீங்கவே
விண்டலம் விட்டு இம்மண்டலம் வந்தீரே
பரமண்டலம் விண்டவ என்னைக்கை தாங்கவே – எப்

3. கிறிஸ்தேசு நாயகன் கிருபைஉன் பூரணம்
கெம்பீர மாகநீ சொல்வா யுச்சாடணம்
பரிச்சேதம் சாலம்வேண்டாம் தாழ்மைமுதற் காரணம்– எப்

4. துன்பங்கள் மூடினும் துக்கங்கள் ஆளினும்
சிற்றின்பம் அறிகிலேன் இன்றே நீர் தாவினும்
கண்பஞ்சடைய சாவுக்கென்றேதும் வரினும் – எப்

5. வீட்டிலும் காட்டிலும் வெளியிலும் செழிப்பிலும்
பாட்டிலும் படிப்பிலும் கேட்டிலும் செழிப்பிலும்
நாட்டிலம் நகரிலும் ஞான முயற்சியிலும் – எப்

**219. இராகம் நொண்டிச்சிந்து** **(162)**

**பல்லவி**

**ஆலயமே தஞ்சம்; என் ஏசு பொற்**
பாதம் பணிவதே என் தஞ்சம்

1. வேலையில்லா வேளையிலும் – எந்த
வேலை நெருக்கத்தின் மத்தியிலும் – ஆலயமே

2. என்னவேலை யிருந்தாலும் – என்
ஏசு பொற்பாதம் பணிவதே முதல் வேலை – ஆலயமே

3. பாடம் படிக்குமுன்னும் – நாம்
பாடம் படித்து முடித்த பின்னும் – ஆலயமே

4. விடுமுறை காலத்திலும் – நாம்
விளையாடிக் களிக்கும் நேரத்திலும் – ஆலயமே

**220. ரியாகு** **ஏக தாளம்** **(163)**

**சந்ததம் சந்ததம் வாருமையா எங்கள்**
சங்கடம் யாவையும் தீருமையா
தீருமையா தீருமையா தீயனென் பாவத்தைத் தீருமையா

2. வானமன்னாவதைப் பெய்யுமையா
வண்டருக்கு கிருபை செய்யுமையா
செய்யுமையா செய்யுமையா ஜென்மபாவங்களைக்
களையுமையா

3. கர்த்தர் என் பொக்கிஷம் பொக்கிஷமே
கன்மி என் பொக்கிஷம் பொக்கிஷமே
பொக்கிஷமே பொக்கிஷமே பொந்தகிருபை என்
பொக்கிஷமே

4. ஏழைப்பங்காளனே தாரகம் நீ ஏழைக் கைம்பெண்களின்
தாரகம் நீ
தாரகம் நீ தாரகம் நீ தாரகம் வேறில்லை தற்பரனே

5. தந்தையும் தாயும் நீ வந்தருளேன்
சங்கடம் யாவையும் கண்டருளேன்
கண்டருளேன் கண்டருளேன் கண்டனம் பண்டனம்
கொண்டருளேன்

**221. இராகம் (ஆதாரம் நீ தானையா) (164)**

**பல்லவி**

**பாவவினை தீருமையா ஏசையா**
என் மாவவினை தீருமையா
என் சுவாமி பாவவினை தீருமையா

1. பாவம் மிகுந்தே சாவும் பிடித்தே
பாவி நான் என்ன செய்வேன் என் சுவாமி – ஏசையா

2. துணிந்த மாபாவி துன்மார்க்கனாகி
தூரமகன்று விட்டேன் என் சுவாமி – ஏசையா

3. கெட்டேன் கெட்டேனே கட்டளை விட்டேனே
கேடுகெட்ட தோஷியானேன் என் சுவாமி – ஏசையா

4. பேய்பாவமுலகம் பெலத்துப் போராடுதே
பேதை புலம்பலானேன் என் சுவாமி – ஏசையா

5. எத்தனையோ தரம் எத்தன் நான் செய்த பிழை
அத்தனையும் பொறுத்தீர் என் சுவாமி – ஏசையா

6. ஐயோ மாபாவி ஆகிலும் தேவாவி
அடியேனுக்கீந் தருள்வாய் என் சுவாமி – ஏசையா

**222.** **(165)**

**பல்லவி**

**போவோம் பரநகர்க்கு ஜல்தி, புறப்படுங்கள்**

**அனுபல்லவி**

போவோம் புகழ்ச்சியுடன்
போவோம் மகிழ்ச்சியுடன்

1. வச்சிரமான நல்ல வண்டி – வாணாள் குறுகி
அச்சு முறியும் சகசண்டி – வாவென்றிழுத்தால்
நச்சென்று போட்டுட்காரும் வண்டி – இதை அடுத்து
ரட்சிப்படைய மாட்டாய் ஒண்டி – இதை அறிந்து
இன்றே மனம் திரும்பி மின் சாரதி எழும்பி – போவோம்

2. இங்கே நாலைந்து மெத்தை வீடு – நாளை இறந்தால்
எங்கேயிருக்கும் இந்தக்கூடு – கிடைக்கும் பலன்
அங்கும் தனிமை இடுகாடு – நான் சொன்னேன்
சொன்னேன்
மறந்தால் நஷ்டமது உன்பாடு – இதையறிந்து
இன்றே மனம் திரும்பி மின்சாரதி எழும்பி – போவோம்

3. மாயாபுரியுடனே கூட்டு – உறவு வேண்டாம்
மாயானின் பாணங்களைத்தீட்டு – தூளாய் நொறுக்கி
யாவும் காற்றின் தூசியிலோட்டு – வேதம் படித்து
தூய சுத்தாவியனல் மூட்டு – மூட்டி பக்தியாய்
இன்றே மனந்திரும்பி மின்சாரதி எழும்பி – போவோம்

**223. சங்கராபரணம்** **ஆதி தாளம் (166)**

**பல்லவி**

**அடைக்கலம் அடைக்கலமே ஏசுநாதா உன்**
அடைக்கலம் அடைக்கலமே

**அனுபல்லவி**

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்றமும் ஏழைக்கு

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே
அன்புள்ள பிதாவுனை விட்டகன்று பிரிந்தேனே
மோசமதையே அலால்மற்றொன்றையும் காணாமலே என்
தோஷமொடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்தருள்–அடை

2. கட்டுப்படாக் காயமதின் கெட்ட ரணம்போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்
கெட்டவனே போவெனக்கிளத்தினும் நியாயமே
கிட்டி வந்தழும் ஏழைக்கெஞ்சுதல் கேளய்யனே! –அடை

3. சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துருகெனது மனச்சஞ்சலமகற்றிடும்
பஞ்சமா பாவியினது கெஞ்சிடும் கரத்தினை
எந்தவிதமும் தள்ளாமல் இரங்கிடுமையனே! – அடை

4. பெருவெள்ளத்துக்குத் தப்ப பேருதவி நீயல்லோ
பருதி தருவெயிற்குப் பரமசகாயமே
குருதி சிந்தி உயிர்த்த கோதில்லாத நாயனே
நெருக்கப்படுமெனக்கு நீ உதவி அல்லவோ? – அடை

5. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதனில் எனக்கும் பங்கில்லையோ
அன்றுனது பக்கமதில் ஆயிருந்த கள்ளனுக்கு
இன்று பரதீசி லிருப்பா யென்றுரைத்தாயல்லவோ –அடை

**224. இராகம் அருள் ஏராளமாய் பெய்யும் (167)**

**வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்தில்**

வந்து நின் சுந்தரக்கையால் தந்திடும் நன்மையெல்லாம்

1. இராப்பகலெங்களைக் காரும் போக்குவரத்திலெல்லாம்
கூப்பிடும் போதெல்லாம் கேட்டுக் கொண்டணைத்தன்பு
செய்வாய்

2. உன்னடியாரெங்கள் வம்சம் உம்மை அடைந்திடவே
உச்சித ரட்சண்ய வேலை ஊக்கமாய்ச் செய்திடவே

3. கல்வாரி ராயரின் புண்யம் கன்மிகள் எங்களுக்கே
அல்லேலூயா சொல்லும் நாங்கள் ஐயனின்
பொன்னடிக்கே

4. ஏசையனும்மையல்லாமல் எங்களுக்காருமில்லை
நீசரென்றெம்மை விடாதே நின்னடி தஞ்சமையா

5. வந்தனம் வந்தனம் ராஜா சந்ததம் எங்களைக்கார்
வல்லபம் தந்திடை கட்டிவானகரின் வழிசேர்

**225.** **(168)**

**ஏசு நாமம் நினை** **(8 தடவை)**

2. ஓசன்னா அவர்க்கே (8 தடவை)

3. போற்றுவாய் அவரை (8 தடவை)

4. தேற்றுவார் உன்னையே (8 தடவை)

5. அண்டுவாய் அவரை (8 தடவை)

6. ரட்சிப்பார் உன்னையே (8 தடவை)

7. அமலாதிபனே (8 தடவை)

8. ஆமென் அல்லேலூயா (8 தடவை)

**226. இராகம் இங்கிலீஷ் (169)**

**எல்லா ஜாதிக்காரரே ஏகபரனைத் துதியுங்கள்**
எல்லா ஜனக்கூட்டமே என்றுமவரைப் புகழுங்கள்

2. கர்த்தர் சேனை கர்த்தரே சுத்தர் சுத்தர் பரிசுத்தர்
முற்றுமிந்தப் பூமியை மூடுமவரின் மகிமையே

3. வானோகம் பூலோகம் யாவையும் வகுத்த பராபரனையே
வரிசையுடன் கூடியே வாழ்த்துங்கள் சபையோர்களே

4. இந்த ஓய்வு நாளிலே ஏற்றிய துதி தோத்திரம்
தூபமான காணிக்கை தோன்றுதே கிருபாசனம்

5. ஆசனத்திருக்கும் சுவாமிக்கும் ஆட்டுக்குட்டிக்கும் என்றைக்கும்
நேசதோத்திர வல்லமை நித்தநித்த முண்டாகவே

6. கர்த்தர் கிருபை நமது மேல் வல்லபமாயிருக்குதே
கர்த்தர் இரக்கம் நமது மேல் என்றென்றைக்கும் நிற்குமே

7. ஆமென் ஆமென் சபையாரே ஆமென் ஆமென் தோழரே
ஆமென் ஆமென் கீர்த்தனம் ஆர்ப்பரியுங்கள் தூதரே

**227. (170)**

**பரலோக தேவா நரலோக மக்களும்**
சருவ வல்லமை காண வரமருள்வாய் ஐயா

2. கிறிஸ்து மெய்தேவா மரித்தெழுந்தோனே
விரித்தேனுமது வேதம் வரமருள்வாய் ஐயா

3. தேற்றரவாளா மாற்றமில்லானே
தூற்றினேன் உந்தன் சாட்சி வரமருள்வாய் ஐயா

4. தோத்திரம் தேவா துதியுமக்கையா
பாத்திரமாக வந்து காத்துக்கொள்வாய் ஐயா

**228. இராகம் (தேவாநீரெங்கள் அடைக்கலமே) (171)**

**பல்லவி**

**ஐங்காயத்தினடைக்கலம் காவே**

ஐயா கிறிஸ்தே உன்னருள் தாவே

1. சொர்க்கத்தில் வந்துதித்த துரையரசே
ஜோதிப் பிரகாச முடி அணி சிரசே

2. தேவ கோபமென்னைத் தொடராமல்
சிங்கப்பசாசுவந்து அடராமல்

3. பாவ உளையினில் கால் பதியாமல்
பரலோக வாஞ்சை எனில் குறையாமல்

4. உலகமொரு புறத்தில் நெருக்காமல்
உமது நல்லாவி என்னை வெறுக்காமல்

5. தாசன் சற்குணன் சொல் கவி சிறக்க
சகல நரர்களுமுன்னடி துதிக்க

**229. ஆனந்த பைரவி ஆதி தாளம் (172)**

**பல்லவி**

**வாவா ஜெகதீசா வரந்தரவே வாவா ஜெகதீசா**

இது சமயம் வாவா ஜெகதீசா

உன் மகிமையை யார் யார் யார் அறிவார்?

1. இரண்டு மூன்று பேர் கூடி தொண்டுபுரியும் வேளை
அண்டையில் வருவேனென்றீரே அட்டி சொல்லாதே
\- வாவா

2. பன்னிரு சீஷர்களும் பரிசுத்த ஆவிபெற
பற்பல பாஷை பேசினார் பிரசங்கம் செய்ய – வாவா

3. காவில் கனி புசித்த ஏவையின் மக்களுக்காய்
பூவில் கன்னி பாலுண்டவா, புகல் சொல்லாதே – வாவா

4. மோசே முதலாயுள்ள தீர்க்கர் முனிவர்கட்கும்
ஆசீர்வாதம் கொடுத்தவா அருள் புரிய – வாவா

**230. இராகம் (அம்மா, மகராசி) (173)**

**பல்லவி**

**ஐயா கிறிஸ்தையா அருளையா மேசையா**

**அனுபல்லவி**

ஓ ஐயா சரண் ஐயா உனை அல்லால் உலகுய்யா
ஆ! துய்யா இது பொய்யா அருள் பெய்யா மெய்யா

1. வான்புவி சேனைகள் வணங்கியே போற்றியே
மாவல தேவ மைந்தாவே மாவளமாய் வரந்தாவே
என் தேவே என்னைக்காவே யேகோவாவே கோவே– ஐயா

2. தினம் தினம் உம்மையே தொழுது நான் போற்றுவேன்
எனதாசைப் பெருமானே எனக்கான உயிர்தானே
என்தேனே உனை நனே பணிவேனே கோனே – ஐயா

3. சங்கீத வாத்தியம் இங்கிதம் கேட்குதே
சங்கைமிகும் என் நாதா சாமி ஏசு பொற்பாதா
திருவேதா குருநாதா அருள் தாதா தாதா – ஐயா

**231. இராகம் இங்கிலீஷ் (174)**

**பல்லவி**

**மகராஜாவே பேரொளி வீசாயோ**

**அனுபல்லவி**

ஜெகதீசாவே நரர் பவ நாசாவே

1. சிந்தையில் நொந்தென் கண்களிலெங்கும்
சிங்கனே மிகு பங்கம் பங்கம்
நிந்தை பவங்கள் தொலைத்திடுவாயிதோ
இங்கே எழுந்து நீ வந்திடுவாய் - மகராஜாவே

2. அண்டமடங்கலும் எண்டிசையோனே
மண்டலமதிலுள்ள மானிடர் கோனே
பண்டு முனக்கு நான் தொண்டு செய்வேனே
பண்டது போலினி நொண்டேனே - மகராஜாவே

3. வேத வினோத சங்கீத பொற்பாதா
வேதவியாக்கினியானருள் போதா
வேதியனே யான் பாவியென்றோதி
சேதமொன்றின்றி அரவணை செய் - மகராஜாவே

**232. இராகம் (கொண்டுபோ கொண்டுபோடா) (175)**

**பல்லவி**

**இந்த வேஷம் உதவாதையா கிறிஸ்தவர்க்கு**

1. சத்தம் யாக்கோபின் சத்தம் கைகள் ஏசாவின் கைகள் - இந்த
சத்தம் கையிருவிதமா-யிருக்கின்றன

2. நாவிலே கிறிஸ்தவர் நடக்கையில் உலகத்தார்
நாதனுக்கிதொக்குமோ-சொல்லுங்களேன்

3. இரண்டெஜமான்களுக்கு ஒருவர் ஊழியஞ்செய்ய
ஏலா தென்றாரே ஏசையா- எம்பெருமான்

4. இரு நினைவற்றோர் தம்வழிகளில் நிலையற்றோர்
இச்சக உதடாகா – வேதத்தைப் பாரும்

5. ஊண் உடை மாற்றினாலும் உலகத்தைப்பற்றி நிற்கும்
உள்ளத்தை மாற்றாதவர் – கிறிஸ்தவரோ

6. இச்சை அடக்கம் அன்பு இரக்கம் தாழ்மை பொறுமை
இதல்லோ ஏசுவின் சிந்தை – அதைப் பிடியும்

7. ஜாதி வர்ம பத்தம் சகலருக்கும் ஒன்றே ரத்தம்
சுவாமியின் மார்க்கமிதுவே – கிறிஸ்து மார்க்கம் – இந்த

**233. கௌசிகை (இயேசுவின் நாமமே திருநாமம்) ஆதி தாளம் (176)**

**பல்லவி**

**ஆனந்தபரனைத் துதி செய்தால் வரும் ஆனந்தம் பரமானந்தம்**

1. தம்பா துங்கா தயாபரா சம்பூரணா

2. ஓம் சதா தயைபுரி பாலா ஒரு பரகுருவே அனுகூலா

3. அரு உருஒரு பரமகாதேவா பாவிகள் கவனம் தாஜீவா

4. ஜெப ஜெப ஜெப ஜெப மந்திரனே சிங்காரமனுவேல்
சுந்தரனே

**234. (எக்காலக் கண்ணிகள்) (177)**

**இராக்காலம் கர்த்தருட நல் வீட்டில் நிற்குமவர்**
தாக்கான ஊழியரே சகலபேரும் கும்பிடுங்கள்

2. கர்த்தருக்கே உங்களுட கைகளையிங்கே றெடுத்து
சுத்த ஸ்தலம் நோக்கியுங்கள் ஸ்தோத்திரத்தை
செய்திடுங்கள்

3. தீராத எங்களுட பாவம்தனைத் தீர்த்து
காத்தருளும் உம்முடைய கரத்திலடைக்கலமே

4. பெற்றார் நீர் எங்களுக்கு பிறவிதுணை நிரெங்களுக்கு
வல்லா நீரெங்களுக்கு வாய்த்த பரப்பொருளே

5. வானம் புவிபடைத்த மட்டில்லா வல்லபரன்
ஞானசீயோன் நகரினின்று நன்மை நமக்குத்தரக்கடவர்

**235. நாட்டைக்குறிஞ்சி** **சாப்பு தாளம் (181)**

**பல்லவி**

**கண்ணையா கண்ணீர் பாரேன்**

**அனுபல்லவி**

உனைத்தான் துணையாகக் கொண்டேன் ஐயனே
எனக்கானவனே எனக்கானவனே - கண்ணையா

1. ஓடிவா நெஞ்சம் வாடிடுமோ கெடுமோ
உலகைத்தேடுமோ உலகைத்தேடுமோ - கண்ணையா

2. என்னைப்போல் பாவி யாருமில்லை ஒப்பில்லை
உன்னை நான் விடல்லை உன்னை நான் விடல்லை
- கண்ணையா

3. புண்பட்டேன் நோகுதே என் செய்வேன் ஐயனே
பொங்குதே பொங்குதே பொங்குதே பொங்குதே
- கண்ணையா

4. ராஜப்பா நேசப்பா ஏசப்பா பேசுப்பா
லட்சம் தோத்திரமப்பா லட்சம் தோத்திரமப்பா
- கண்ணையா

5. ரட்சகா நம்பினேன் நீ கதி நீ கதி
நயமாம் சுகம் நீ நயமாம் சுகம் நீ - கண்ணையா

6. ராஜியே பரதேசி ரத்னம் நிதியே
நாளெல்லாம் உன் பிள்ளை நாளெல்லாம் உன் பிள்ளை
- கண்ணையா

**236. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (182)**

**பல்லவி**

**தேவ கிருபை ஆசீர்வாதம் தினமும் எங்களில் பெருகிட**

1. ஆவலாயும தோய்வு நாளில் ஆலயந்தனில் பணிந்து புகழ
பாவ அறிக்கை செய்யும் சபையார் பரனின் கிருபை பெற்று மகிழ

2. ஆவலா யெங்கள் ஆண் குழந்தைகள் அழகான இளமரங்கள் போலவும்
பாவையர்களாம் பெண் குழந்தைகள் பலத்த சித்திர அரண்கள் போலவும்

3. ஆலயந்தனிலுமது வசனம் அறிவிக்கும் போதக ரனைவருக்குள்ளும்
வேலை ஒய்ந்து பணியும் சபையார் விரும்பிப் படிக்கும் சகலருக்குள்ளும்

4. எங்கள் பண்டகசாலை சகல இன்ப வஸ்துக்கள் நிறைந்திருக்கவும்
எங்கள் ஆடுகள் கிராமங்களிலே லட்சம் கோடியாய்ப் பெருகிப்போகவும்

5. எங்கள் மாடுகள் பலத்திருக்கவும் இடுக்கணுள்ளே வராதிருக்கவும்
பங்கவலசை பணியும் கூக்குரல் பதிவில் தெரிவில்லாதிருக்கவும்

6. இத்தன்மையுடனிருக்கும் ஜனங்கள் இவர்கள் தாமென உலகம் சொல்லவும்
கர்த்தர் தெய்வமென்றிருக்கும் பாக்கியம் கண்ட ஜனமென்றெம்மைச் சொல்லவும்

7. இந்த வீட்டுக்குச் சமாதானம் நல் இன்ப சுகங்கள்
அனைத்துண்டாகவும்
சந்ததியாய் நீடூழி உம்மையும் சபை அனைவரும்
துதித்திப்பாடிட

8. உன்னதங்களிலிருக்கும் தெய்வத்தின் உயர்ந்த நாமம்
மகிமைப்படவும்
இந்நிலம் சமாதானம் பெற்றிட இஷ்டம் மானிடர்
மேலுண்டாகவும்

9. இந்த நற்சபை கூட்டத்தின் ஜனங்கள் நாளடைவிலே
பெருகி வரவும்
இந்த நற்சபைக்கூட்டத்தின் மத்தியில் இருந்துவாரும்
எங்கள் ஏசுவே

**237.** **(183)**

**பல்லவி**

**எனதுள்ளமே உகந்த வரைத்தேடு**
உதவி பெற நாடு உண்மையுடன்
மன்றாடு எனதுள்ளமே

1. வள்ளல் தாவீதின் குலத்தில் மாதிடமுதித்தவரிவர்
உள்ளவினை தீர்க்கவந்தவர், இவர் - எனதுள்ளமே

2. வானம் புவி யாவையும் வாரியும் வல்லுயிர்களையும்
ஞானமாய் படைத்தளித்தவர், இவர் - எனதுள்ளமே

3. கோத்திரப் பிதாக்கள் தொழும் கோதில்லா நாதனார்
சாஸ்திர முழுதும் சார்ந்தவர், இவர் - எனதுள்ளமே

4. வெல்லைமலை தன்னிலே புல்லணையில் மீதிலே
வேதபரனாக வந்தவர், இவர் - எனதுள்ளமே

5. சொந்தக்கலிலேயாவில் விந்தையுடனந்த மணப்
பந்தலில் ரசம் பொழிந்தவர் இவர் – எனதுள்ளமே

6. ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரம் பேர்களுக்கு
பந்தி போஜனம் அளித்தவர், இவர் – எனதுள்ளமே

7. காக்கையைக்கொண்டு மெளிய கைம்பெண்ணைக்
கொண்டு மெலியா
ஏக்கமறப் பசி தீர்த்தவர், இவர் – எனதுள்ளமே

8. தக்க சிங்கப்பற்களுள்ள தானியேலை அன்புடனே
தற்காத்து ரட்சை செய்தவர், இவர் – எனதுள்ளமே

9. ஏராளமான பாவங்கள் தாராளமாய் நீங்குதற்கு
ஏரோது முன்சென்று வந்தவர், இவர் – எனதுள்ளமே

10. சாபத்தால் நிறைந்த உந்தன் பாவத்தை அகற்றுதற்கு
தாகந்தணிந்திரந்தவர், இவர் – எனதுள்ளமே

11. தேவகோபத்தீயினில் வெந்துருகும் போதினில்
ஆவி ஊற்றி ஆதரித்தவர், இவர் – எனதுள்ளமே

**238.** **(190)**

**பல்லவி**

**தேவா மகாதேவா உந்தன் திருநாமத்தை புகழ்வோம்**

1. ஜீவா எமைக்காவா – தினம்
ஜெபத்தாவியை அளித்தான் மனம் – தேவா

2. பேய் மாமிசம் உலகோர் – கரம்
பெலத்தாடுது மிகத்தா திறம் – தேவா

3. நேசா மணவாளா – இருள்
நீக்கிமருள் போக்கியருள் – தேவா

4. அல்பா ஒமேகாகவே – சரண்
அப்பா எமைக்காவா அரண் – தேவா

5. பாட்டாலுனைப் பஜிப்பேன் – சுகம்
பார்த்தால் வரவழைப்பேன் அகம் – தேவா

**239. சங்கராபரணம் ஆதி தாளம் (191)**

**பல்லவி**

**எருசாலேம் குமாரியப்பெண்ணே**
ஏசு சுவாமியை தேடிவா கண்ணே

**அனுபல்லவி**

வாலிபப்பிராயத்தில் சுவாமியுன தண்டை
வந்து தமதுடநந்தவனந்தனில்
காலையிலுந்தனை கூலி பொருந்தியும்
கண்மூடிக்கொண்டு பின்னை ஏன் பார்க்கிறாய் – எருசா

1. நந்தவனம் மெத்தத்தூரம் – என்று
நாணி நில்லாதே இந்நேரம் – சாலமன்
கந்தவர்க்கப்பரிமளம் – மனக்
காட்சிக்குரிய சிங்காரம்

சந்ததம் காதுக்கினிதாகவே கேட்க வெண்
சாமரைக்குஞ்ச விருஷங்கள் வீசுது
பந்தங்கள் போலதன் பக்கத்தில் தோன்று து
பார்க்கப் பார்க்கப் பளிங்காகவே மின்னுது –எருசா

2. சென்னல் சிங்காதிபன் தோட்டம் – அங்கே
ஜீவநதிப்பெருக்கோட்டம் – நல்ல
கன்னிப்பூங்கோதையராட்டம் – உனை
காணவருவர் கூட்டம்

நன்னயமாயுன தன்ன நடைகளை
மன்னவன் கண்டு வழிபார்த்து நிற்கிறார்
சன்னைபோட்டுக்கொண்டு பின்னே ஏன் பார்க்கிறாய்
தந்தப்பல்லாக்கதோ உந்தன் முன் தோணுது - எருசா

3. தேவியர் சாலையில் கூடு - அதோ
செழுமலர்க்காவின் மேடு - தலை
சீவியே கூந்தலைப்போடு - ரோஜா
செண்பக முல்லைப்பூச்சூடு

கோடிச் சித்திர ஆடை நெய்துடுத்து மணக்
கோலத்துக்கேற்ற நல்லாளா சிறப்புடன்
கூடிக்கூடிப் பதம பாடிப்பாடிக் குதித்
தாடியாடிக்கிட்ட நாடியோடி வாடி - எருசா

## 240. தேவாரம் (சத்தாய் நிஷ்களமாய்) (192)

**பல்லவி**

**தோத்திரம் தோத்திரமே ஏசுசுவாமிக்குத் தோத்திரமே**

**அனுபல்லவி**

தோஷி எனை இரட்சித்த பரிசுத்தர்க்கு தோத்திரமே

1. கோடாகோடி தூதர்கள் சபைகூடி நடனமாடி
பாடி உமைத்துதிக்க பாவியானும் உமைத்துதிப்பேன்

2. கேருபீன் சேராபீன்கள் உடல் செட்டைகளால் மூடி
நேராய் உமைத்துதிக்க நீசன் யானும் உமைத்துதிப்பேன்

3. கன்னியர் கீதம் பாடி ஏசுகர்த்தனையே போற்றி
உன்னித்துதித்திடவே பாவியானும் உமைத்துதிப்பேன்

4. பரிசுத்தவான்கள் சங்கம் எங்கள் பார்த்திபன் ஏசுவையே
தரிசித்துப் போற்றிடவே தாசன் யானும் உமைத் துதிப்பேன்

5. மூப்பர் சுற்றி நின்று எங்கள் முன்னவன் ஏசுவையே
ஆர்ப்பரித்துத்துதிக்க அடியானும் உமைத்துதிப்பேன்

6. வானத்தின் ஜோதி எலலாம் தேவமைந்தனையே போற்றி
ஞாலத்திலே துதிக்கப்பாவி யானும் உமைத்துதிப்பேன்

7. பூமியின் தாவரங்கள் புஷ்பம் பூத்துத் துளிர் மலர்ந்து
சாமி உமைத்துதிக்கத் தாசன் யானும் உமைத்துதிப்பேன்

8. தாழ்த்தித் தலை குனிந்து ரத்த சாட்சிகள் கூட்டமெல்லாம்
வாழ்த்தி உமைத்துதிக்க பாவி யானும் உமைத் துதிப்பேன்

**241. பிலஹம்சா** **ஏக தாளம் (193)**

**பல்லவி**

**தோழரே சேர்ந்து வாருங்கள்**
தேவனைப் புகழ்ந்து பாடுங்கள்
சேனையின் தேவன் நல்லவர்
தேவன் நல்லவர் தேவன் நல்லவர்
என்றல்லேலூயா சொல்லி ஆடுங்கள்

1. காவலர் தளர்ந்து போய்ப் பெலசாலிகள் கூனிப்
போமுன்னும்
கிண்ணிகள் நசுங்கிப் போமுனும் கேட்பவர் குன்றிப்
போமுனும்
பார்ப்பவர் மறைந்து போமுனும்
ஆதரவான ஏசுநாதரை வாலிபத்தினில் நீர் நினைத்திடும்
- தோழரே

2. கடைசி நாள் வரும்போது பரிசுத்தராய் ஆர்பரிக்கவும்
பேரிகை தொனிக்கக் கேட்கவும் தேவனைத்
தரிசித்தாளவும்
வாலவயதில் ஜீவநதியில் தாகந்தீர்த்து உம்பாவம் நீக்கிடும்
- தோழரே

3. மைந்தனார் பதத்தைப் போற்றி நல்விந்தையாய் சிறந்து நல்வேத
மந்தையில் சேர்த்திடும் திருவேந்தனை வணங்கிடும் பரி
சுத்தனைப் போற்றிடும் மறு
லோகமதினில் தூதசேனையோடேகி மாமகிழாகி வாழலாம்
– தோழரே

## 242. இராகம் ஆனந்தப் பண்டிகையை ஆசரிப்போம் (194)

**பல்லவி**

**சந்ததம் உந்தனையே எந்தனிருதயத்தில் வைக்க**

**அனுபல்லவி**

எந்தனிருதயத்தில் வைக்க எந்தனிருதயத்தில் வைக்க

1. எந்தனின் சிந்தையது உந்தனையே தேடுதையா
தேடுதையா தேடுதையா உந்தனையே தேடுதையா
தேடியே நாடியுந்தன் பாதமடிபணிந்தேனையா – சந்ததம்

2. சீர்மிகும் இச்சபையில் செந்தமிழைச் சொல்வதற்கு
சொல்லி வெகு இனிமையுடன் பாடிவரும் பாவலர்க்கு
ரட்சண்ய பாதைதனையே திறந்து காட்டுமையா – சந்ததம்

3. பிடில் மிர்தங்கமுடன் பேசுதே கைத்தாளங்களும்
நாதங்களைத் தானிழந்து நாதரேசுவைப் பணிந்து
நன்றியைக் காட்டுமுந்தன் நண்பரோடு வாருமையா
–சந்ததம்

**243. இராகம் பைரவி** **ரூபகதாளம் (195)**

**(தேவன் மனிதனான விந்தையை)**

**பல்லவி**

**தருணத்தில் எனக்குதவி செய்யுமேன்**
தற்பரா ஏசுதேவா

**அனுபல்லவி**

மரணத்தருவாய் மயங்கித் தியங்கிய
வஞ்சகம் நிறைந்த வலபாரிசக்கள்ளன்
தேறுதலற்று நின் அன்புள்ள பாதத்தை
சேர்ந்திடக் கைதூக்கி ஏந்தினாற்போல் சுவாமி

1. வாய்பேசா மாந்தற் செவிடர் முடவர்க்கோர் வாக்கில்
சுகமளித்தோனே – சிறு
நாயினூர்க்கைம்பெண் தன் சேய்பின் கண்ணீர் விட
நன்மை அளித்த சீமானே
தாய்தந்தை நேசர் உலக சம்பாத்தியம்
சற்றுநேரம் கண்டறுந்துபோம் வாத்தியம்
நோய்கொண் டொடுங்கிய பாவிக்குன தருள்
நோக்கி எனின் குறை நீக்கிடாயோ சுவாமி – தருணத்தில்

2. ஐந்தப்பம் இரண்டு மீன்கொண்டு ஐயாயிரம் ஆட்களைப்
போஷிப்பித்தீரே – மனம்
நைந்தசீடருக் கின்னரத்தேரியில் நல்ல மீன் சிக்கச்
செய்தீரே
மைந்தர் தமக்கேதும் வேண்டிய வேளை
மனுவேலே நின்பாதம் தாவி இறைஞ்சி
அமைந்து பணியக் கருணை புரிந்த என்
ஆத்ம சரீரத்துக்கானவை ஈந்திந்த – தருணத்தில்

3. கங்குல் பகலும் கலக்கம் துயர் மிஞ்சி கரிகறுத்தேனே
கோவே எனைப்
பங்கப்படுத்தும் சங்கடத்துட்பட்டு பரிதபித்தேனே தேவே
அற்பா செய் தீவினையால் மனம் வேகுது
தங்க உனதைந்து காயம் அடைக்கலம்
தந்து தனியனைத் தற்காத்திடும் சுவாமி – தருணத்தில்

**244. சகானா** **ஆதி தாளம் (195)**

**பல்லவி**

**ஆதாரம் நீதானையா என்துரையே**
ஆதாரம் நீதானையா

**அனுபல்லவி**

சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில்

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா
எளியன்மேல் மற்றோர்க்குப் பற்றேதையா – எளியனுக்கு

2. நான்தானெனும் பல நரர் துணை தழுவ
நட்டாற்றில் விட்டாரையா
தனியனை நட்டாற்றில் விட்டாரையா – தனியனுக்கு

3. கற்றோர் பெருமையே மற்றோர் அருமையே
வற்றாக்கிருபை நதியே
என்பதியே வற்றாக் கிருபை நதியே – என் மதியே

4. சோதனை அடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கமிகு வேளையில்
என் சுகிர்தமே துக்கமிகு வேளையில் – உன் தாசனுக்கு

5. சஞ்சலச் சடலம் வஞ்சகப்படலம் பஞ்சாமிர்தக்கடலே
என்னுடலுக்காதாரம் நீதானையா – நின் தாசனுக்கு

**245. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (197)**

**பல்லவி**

**பாவப்பிணி தீர்க்கும் பண்டிதனான**
பரன் சுதனின் மருந்து

**அனுபல்லவி**

தேவ திருத்துவ வார்த்தை மருந்து
தீர்க்கர் முனிவருரைத்த மருந்து

1. வார்த்தையதாகவே வானத்திருந்த மகத்துவ
தற்பரனார் ஒரு
வார்த்தையினாலே கடலின் உக்கிரம் வாய்மூடி
நின்றதுவோம் –ஒரு
வார்த்தை சொல்லச் சொல்லி செஞ்சின சேர்வையில்
மனுவில் ஒன்றதுவாம்
வார்த்தையினாலே அநேக நோயர் கலி தீர்த்தவராம் கதி
சேர்த்தவாரம் – எனின்

2. பெத்தலேகேமெனும் தாவீதின் ஊர் மாட்டுக் கொட்டிலில்
உற்றவராம் – அந்த
பேர் பெற்ற திருக்கலிலே நகர் நாசரேத் ஊர் தனில்
வாழ்ந்தவராம் – மகிழ்
உற்ற எருசலே மீதினிற் பாடுபட்டுயிர் விடுத்தவராம்
எத்திசையோர்களும் முக்திதனைப்பெற வெற்றிக்கொடி
கொண்டுயிர்த்தவராம் – எனில்

3. கள்ளத்தனம் செய்த பெரும்பாடுள்ள பெண் கவலை
தீர்த்ததுண்டு – மிக
கலங்கி அழுத நாயின் விதவையின் கண்ணீர் துடைத்த
துண்டு – புவி
உள்ளே அடங்குண்டு மரித்த லாசருக்குயிர் அளித்ததுண்டு
வள்ளலே உந்தனை வேண்டிடும் பேர்களுக்கன்புடனே
வரந்தரவாக்கொன்றுண்டு – எனின்

4. கொடிய குருசில் அறையுண்டிருந்த குருவே உன்னை
அல்லால் – எந்தன்
குற்றம் பொறுத்தென்னை ரட்சிக்க வேறாரால் கூடுமோ
நின்னையல்லால்
வடிய குருதி சிலுவையில் சொன்ன முதன்மையான
சொல்லால்
அடியர்க்கு ஞான ஆகாரம் ஈந்திடும் அற்புதனே கடைக்
கண்ணால் பார்த்திடும் – எனின்

**246. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (198)**

**பல்லவி**

**வேதவசன விதைகளைப் புவியில்**
விதைப்பில் தெளிப்பில் வெகு நல்ல பாடம்

**அனுபல்லவி**

பாடுபட்டு விதைக்கும் பக்தனருள்வேதம்
பக்தர்களைச் சேர்க்கும் சுத்தனருள் பாதம்

1. அதிசய வசனமிந்திய கரையில்
செடியாய் மரமாய் நடப்பட்டு வருதே
நடப்பட்டு வருதே நலமிக்கத்தருதே
பெரும்பாவியிடத்தில் பேர்பெற்று வருதே –வேதவசன

2. தீயராம் பாவிகள் துன்புறும் வேளையில்
தூணாய் துணையாய் துலங்கிடும் வசனம்
இந்தியர் மனதில் இறுக வேர்ப்போட
ஈசனின் கிருபை இலங்கிடச் செய்யும் – வேதவசன

3. நால்வகைத் தாளமேளங்கள் கொட்ட
ஆடப்பாட சபைமிகக்கூட
சபைமிகக்கூட சங்கீதங்கள் பாட
சாமி வந்து சேர சந்தோஷங் கொண்டாட – வேதவசன

**247. கமாசு** **ஆதி தாளம் (199)**

**பல்லவி**

**பட்டபாடு போதாதோடா – பேயே**

**அனுபல்லவி**

இட்டனேசு கட்டியுன்னைச் சுட்ட சூடுன் மேலிருக்க

1. கல்லை அப்பமாக்கிடச் சொன்னாய் – ஏசுவை
புல்லறிவினால் சருவ வல்லவரை வெல்லவந்தாய்
– பட்டபாடு

2. வார் சிகரமேல் நிறுத்தினாய் – ஏசுவை
யார் உனக்கிக்கேடு புத்தி போதிப்பித்தார் பாருனக்கு
– பட்டபாடு

3. உப்பரிக்கை மேல் நிறுத்தினாய் – ஏசுவை
மப்புனக்கு அப்பொழுது எப்படியுண்டான தடா – பட்டபாடு

4. இங்குமுண்டோ பேயாட்டுடா – பேயே
சங்குனில் மிதித்துணையான் எங்கெறிவேன் தெரியுமா
– பட்டபாடு

**248. இராகம் (ஐயனே ஏசையனே மாதுய்யனே)** **(203)**

**பல்லவி**

**ஏசு நாமம் தேவ நாமம் இன்ப நாமமே – கன**
நேசர் நாமம் ரட்சண்ய நாதர் நாமமே

1. பாவியையும் கோபியையும் தள்ளிவிடாரே அன்பாய்
கூவி அழைத்தோர் அழைப்பைக் கேட்டோர் கேட்பாரே

2. போத்திப்பாரரண்மனையில் யோசேப்பைக் காத்தார் – ஆ
அதிசயமாய் மூவரையும் சூளையிற்காத்தார்

3. பாவப்பாரத்தால் வருந்தும் பாவியே வாராய் – ஏசு
பார்த்திபனாரழைக்கிறார் ஓடிவா சீராய்

**249. கமாசு** **ரூபக தாளம் (204)**

**பல்லவி**

**லோகநாதா லோகநாதா**
தியாக னுன்மேல் சோகமே
ஏகமாயுன தாகமிஞ்சி வாடுகிறேன்

**அனுபல்லவி**

சாகவோ நான் வேகவோ நான் போகவோ ஜோடாகவோ

1. ராஜபாலா ராஜபாலா ராஜஞானலோகனே
ஆசையுன்மேல் ஏசுபாலா நீசலோகம் சஞ்சலம்
ஈசனே நீர் மோசஞ் செய்தால் நீசப்பூச்சி நாசமே

2. நீயும் நானும் ஜோடியானோம் நேச இன்பமாயினோம்
தாயும் சேயும் போலிருக்க தயவுசெய்யும் நாயகா
மாயலோகம் காயம் போனால் ராயனுன்னைக்காணுமே

3. பெண்டு பிள்ளை பந்துலோகம் கண்டுகொண்டு தள்ளுவேன்
ஒண்டியான உன்சகியென் உற்றதோழன் நீயாக
கொண்ட தோழன் நீ மணாளன் மண்டலத்தில் யாரையா

சத்யஜோதி வங்ஷராய ரத்ன கீத ரஞ்சிதம்
நீதா ஜீவா மக்தி வாழ்வு சித்தருக்கருள்வாயே
பக்திசெய்வேன் வெற்றி நீயே சக்தி நீயேஜாலமே

**250. கும்மிப்பாட்டு** **(205)**

**வாடி அம்மா வாடி ஒரு ஞானப்பாட்டைப் பாடி**
தேவசுதனைத்தேடி நித்ய ஜீவ பாதையில் வாடி

2. ஓடு அம்மா ஓடு ஒரு சாலை வழியே ஓடு
மோட்ச வழியைத்தேடு உனக்கங்கே இருக்குது வீடு

3. கட்டு அம்மா கட்டு சத்திய கச்சையைக்கட்டு
பரிசுத்த புடவையைக்கட்கு அது தான் உனக்குப் பட்டு

4. முத்து நல்ல முத்து வேத வசனக்கொத்து
வேத நெறிகள் பத்து அதுவே உன்சம்பத்து

5. அன்பு நல்ல அன்பு ஆண்டவர் பேரிலன்பு
ஒருவரிலொருவர் அன்பு மற்றதெல்லாம் வம்பு

6. சண்டையடி சண்டை இரண்டு பெண்கள் சண்டை
தீர்ந்ததடி சண்டை சாலோமோனினண்டை

7. கொண்டையடி கொண்டை அப்சலோமின்கொண்டை
தொங்குதடி கொண்டை கர்வாலி மரத்தண்டை

8. கள்ளியடி கள்ளி விக்கிரகக்கள்ளி
ராகேலல்லோ கள்ளி லாபான் மனம் தள்ளி

9. தீனாளடி தீனாள் தெருவுலாத்தித்தீனாள்
சீகேமுக்குப்போனாள் சீரழிந்துபோனாள்

10. அன்னாளடி அன்னாள் பிள்ளையற்ற அன்னாள்
அவர் பேரைச் சொன்னாள் பிள்ளை பெற்றாள் அன்னாள்

11. கூழு அடி கூழு கொம்மடிக்காய் கூழு
கூழுக்குள்ளே சாவு கூப்பிட்டார் எலிசாவை

12. வேசியடி வேசி ராகாப் என்ற வேசி
வேசி விசுவாசி எபிரேயர் வாசி

13. பாதை அம்மா பாதை இயேசுக்கிறிஸ்துவே பாதை
நித்திய ஜீவனாம் பாதை அதை சேராவிடில் வாதை

251. (206)

**புத்தியில்லாக் கன்னியரே நீங்கள் போறவழி சோரவழி**
சத்தியத்தின் பாதைவிட்டு நீங்கள் சாய்வதும் சஞ்சலமே

2. ஆலயத்தில் கேட்ட சொல்லை பொல்லா ஆகாயப் பறவை தின்றால்
கோலிழந்த அந்தகன்போல் பலகோரணிக்குள்ளாவீரே

3. ஓடிஓடிப் பணம் தேடி சுத்த ஓய்வுநாளை மீறுகிறீர்
கூடுமென்று எண்ணாதேயும் தேவகோபம் வரும் சாபம் வரும்

4. ஏழுநாளைத் தந்தவர்தான் அந்த எழிலொன்றைக் கேட்டுவந்தால்
கேள்வியுண்டோ கொடுப்பதற்கு நீரும் கேலிசெய்தால் தப்புவீரோ

5. நன்றியற்ற மாந்தர்களே தேவன் நன்மை செய்ய நீர் தீமை செய்தால்
ஒன்றுமுமக்கில்லாமலே தேவன் ஊதிவிட்டால் என்ன செய்வீர்

6. செல்வம் நிலை எனவே நீங்கள் தெளிவுமிகக்கொள்ளுகிறீர்
எல்லாமிழந்து விட்டு உப்பாய் எரிந்தாளே லோத்தின் பெண்டு

7. இத்தலத்தில் வீடு கட்ட நீங்கள் இடம் பார்த்து நாள் பார்த்தீர்கள்
நித்தியத்தில் வீடு கட்ட நீங்கள் ஒன்றும் செய்யலையே

**252.** **(207)**

**பல்லவி**

**என்ன செய்வேன் சுவாமி என்ன செய்வேன் – சுவாமி**
நின்னையல்லால் யாரெனக்கு என்ன செய்வேன்

**அனுபல்லவி**

என் சுவாமி என் துரையே என் கணவா என் குருவே – என்ன

1. மண்ணாசை கொண்டு மனம் புண்ணானேன் பாவிநானும்
உன்னாசை கொண்டேனிப்போ நின்னருமை தெரியுதையா
– என்ன

2. ஏசையா என் கணவனென்று கூசாமல் தேசமெங்கும்
ஆசையோடு சொல்லும் எனை மோசம் செய்ய
வாசிதானோ – என்ன

3. கிட்டி உனையானெருக்க எட்டி எட்டிப் போகின்றாயே
இஷ்டமோ எனைத்தவிர்க்க வைத்திட உன் சித்தம்
தானோ – என்ன

4. வாக்குத்தத்தம் தந்தவனே போக்குச்சொல்ல ஏதுவுண்டோ
ஏக்கத்தையும் என் இதய வீக்கத்தையும் சற்றேயாராய்
– என்ன

**253.** **(208)**

**பாவப் பாசக்கயிற்றால் பாவி கட்டப் பட்டேனே**
பாவி என் கட்டவிழ்க்க பாதகன்போல் கட்டுண்டீர்
கட்டவிழும் ஏசையா – என் கட்டவிழும் ஏசையா

2. அன்பின் கயிற்றினாலே என்னைச் சுற்றிக் கட்டுமேன்
என்றுமுந்தன் அன்பினாலே என்னை இழுத்திடுமேன்
என்னை இழும் ஏசையா என்னை இழும் ஏசையா

**254.** **பல்லவி**

**கிருபை வேண்டும் நாதா – இயேசுவே உம் திவ்விய**
கிருபை வேண்டும் நாதா – இவ்வாராதனையில்

1. உம் கிருபை தான் வேண்டும் சொர்லோக ராஜாவே
உம் கிருபை அல்லாது எங்களாலாகாது

2. ஏழு பிசாசுகள் ஓட்டியே ஏசுவே
மரியாளை நேசித்து அன்பால் நிரப்பிய

3. இருவராம் சீஷரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய் பேசின

4. பாபத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரீக்கு நேசமாய் கூறின

5. பெந்தேகொஸ்தே நாளில் அன்பராம் சீஷர்மேல்
உந்தன் வஸ்திரங்களை மாரிபோல் பொழிந்தே

6. தாசனாம் ஸ்தேவானின் சாயலை மாற்றின
நேசமாம் கிருபையை எம்மேலும் ஊற்றிடும்

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்தநேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வதித்திட

8. அடியாராம் ஏழைகள் உம்மைச் சந்தித்திட
முடிவுவரைக்குமே காத்திடும் கிருபையால்

**255. இராகம் தன்யாசி (எத்தனை திரள் என் பாவம்)** (210)

**கருணாகரனே பதமே சரணம்**
கடைவிழி பார் ஐயனே

**அனுபல்லவி**

திருவானொளி பிரகாச சொரூபி
சித்தமிரங்கித் தயை வைத்தருள்வாயே

1. ஆதத்தினாலடர்ந்த மாசறுத்திடவந்த
அருணோதயம் நீயே
பாதகரான அடியார் பிழை போக்கி
பரமசுதந்திர பாக்கியமருள்வாய்

2. உலகமுடலலகை யிடர்கள் செய்யுதே
உனதக மெனைவையே
நிலைவரமாயுன தாவியை ஈந்து
நிதமுமுனை மறவா நெஞ்சையுமருள்வாய்

3. பாவ விஷமகற்றும் பண்டிதனீயே
பலபல தேவர் பொய்யே
சாவழித்தே நித்ய ஜீவனளித்திடும்
சகராஜா ஏசுமகாராஜா சுவாமி

4. சற்குண தாசனும் சபைகளுங்கூடி
சங்கீத ராகம் பாடி
பொற்புறுமுன் திருச் சேவடி போற்றி
புகழ்ந்தோம் மகிழ்ந்தோம் பொன்னகர் கிறையே

**256. ஆனந்த பைரவி** **ஆதி தாளம் (211)**

**பல்லவி**

**அமரர் எக்காள மூதினார்**
அமலாதியோனுக்கே – அமரர்

**அனுபல்லவி**

அலகைதனை ஜெயித்து அல்லேலூயா பாடிக்கொண்டு

1. பொற்கிரீடம் தரித்து புகழ்பெறும் ஆசனத்தில்
நற்கொலுவில் வீற்றிருக்கும் ராஜாவை வாழ்த்திக் கொண்டு

2. காத்திரமான மிகாவேல் காபிரியேல் தூதர்களும்
தோத்திரப் பதம் படித்து துந்துமியும் போட்டுக் கொண்டு

**257. பியாகு** **ஆதி தாளம் (213)**

**பல்லவி**

**ஏதேன் வனத்தோட்டம் என்ன சிங்காரம் ஐயா**

1. ஆதாம் ஏவாளை அன்பாகப் படைத்துவாழ வைத்த
தோட்டமது ஆ! ஆ!

2. காயும் கனியுமாய் கால்வாய்கள் ஓரமாய் சாலை
மரங்களுண்டு ஆ! ஆ!

3. பைசோன் கீகோன் இதெக்கேல் ஐப்பிராத் என்ற
நதிகளுண்டு ஆ! ஆ!

4. சுடரொளிப் பட்டயம் வாசலிருபுறம் சூரியகாந்திகள் போல்
ஆ! ஆ!

5. அரூபியாய் நின்று ஆசீர்வதிக்கிறார் ஆசை மகா தேவன்
ஆ! ஆ!

**258. இராகம் (இன்னும் வரக்காணோனடி)** **(214)**

**பாவவினை நீக்குமையா காவின்வினை போக்குமையா**
ஆவி மிக நோகுதையா அலகை வலை வீசுதையா

2. கவலை மிகத் தோணுதையா அலகை வலை வீசுதையா
உலகை வென்ற ஏசுநாதா பெலன் கொடுக்க வேணுமையா

3. பாவி மனம் கலங்குதையா ஆவிவரம் குறையுதையா
கோபம் என்னை விட்டகற்றி குறைவை நிறைவாக்குமையா

4. என் தாயால் வந்த ஜென்மப் பாவம் இப்பாவி செய்த கன்மப்பாவம்
என் ஆவி செய்த அகந்தைப் பாவம் அத்தனையும் தீருமையா

5. பாவியை நீரழைக்காவிட்டால் தேவா உன்முன் யார் வரலாம்
திவ்யவாக்கை நம்பி வாறேனையா மனக்கவலை தீருமையா

6. இருதயத்தை இளகச் செய்து திருவசனம் முறைகிளம்பி
பெருவிருக்ஷமாய் வளர்ந்த கனிகொடுக்கச் செய்யுமையா

7. கன்னி சீயோன் மகளே கேளாய் மன்னன் வரக்காலமாச்சே
சொன்னகுறி நடக்குதம்மா தூங்கவேண்டாம் தூங்கவேண்டாம்

8. ஏதோ ஒரு இரைச்சலம்மா ஏசுவாராரென்ற சத்தம்
என் காதில் கேட்டவுடன் மனம் கலங்குதடி பாங்கியரே

9. கலங்கவேண்டாம் கலங்கவேண்டாம் நம் கருணைநாதன் கிருபைச் சத்தம்
அலகைச்சாத்தான் நடுங்கும் சத்தம் அன்பர் துதி பாடும் சத்தம்

10. அன்பு என்னில் பெருகவேணும் அச்சம் பயம் நீங்கவேணும்
துன்பந்துயர் போகவேணும் துர்க்குணத்தை நீங்கவேணும்

11. சொப்பனத்திலும்மைக்காண தற்பரனே கிருபை செய்யும்
அற்பமான உலகவாழ்வை குப்பை என வெறுக்கச் செய்யும்

12. ஏசுவே உம்சாயல் காண தாசன் யானும் விரும்புகிறேன்
நீசனுக்குக் காட்சிதந்து தோஷம் என்னை விட்டகற்றும்

13. வானோர் புகழ்மகிமை நாதா இம்மானிலத்தோர் துதிக்கும் நாதா
கோனே எந்தன் ஏசுநாதா குற்றம் பொறுத்தாளுமையா

14. சுந்தரப்பிதாக்குமாரன் ஜோதி பரிசுத்தாவிக்கும்
சந்ததமும் தோத்திரமே தாசன் யானும் சொல்லுகிறேன்

**259. இராகம் (அன்னமே நீ தூது)** (215)

**பல்லவி**

**நேசமே எழுந்து ஏசுராஜனை அழைத்து வாவேன்**

**அனுபல்லவி**

பாசத்தால் பரிசம்போட்ட ஆசைமணவாள நேசா

1. மாய உலகத்தில் நின்று வாடுகிறேன் என்று சொல்லு
பேயும் கெட்ட நெஞ்சும் எனை ஏய்க்குதே அதையும் சொல்லு

2. தட்டித் தட்டி எழுப்பியும் பட்டமரம் போலிருந்தேன்
மட்டில்லாத ஞான மணவாளரைப் பொறுக்கச் சொல்லு

3. சீக்கிரம் வருவேனென்ற வாக்கு நெடுங்காலமாச்சே
சீயோனாம் மனைவி சற்றே தூங்குகிறாளென்று சொல்லு

4. பொன்முடி அரசர் தந்த அங்கியிற் கறை பிடித்து
சென்னிறமா முற்றைத்தேடி ஓடுகிறாள் என்று சொல்லு

5. வர்ணமணி ராஜர் தந்த பொன்னாரங்களிற் சிலதை
அண்டர்கோன் முகத்தைப் பார்க்க ஆசிக்கிறாள் என்று சொல்லு

6. ஒண்டியாய்ப் புலம்பும் பரமண்டலப் பிதாமகனாம்
அண்டர்கோன் முகத்தைப் பார்க்க ஆசிக்கிறாள் என்று சொல்லு

7. ஆறுதலுமில்லை சாத்தான் சீறுதலதிகமம்மா
தேறுதல் செய்யுமாவியைத் தாரும் தாரும் என்று கேளு

8. சத்துருக்கள் மூன்றுபேரால் மெத்தவும் கலக்கமம்மா
உத்தம சமாதானத்தை தாரும் தாரும் என்று கேளு

9. ஆவியில் குளிரதிகம் பாவத்தில் வெறுப்புமில்லை
தாவித்தாவிக் கொஞ்சமனல் தாரும் தாரும் என்று கேளு

10. சிந்தை எல்லாம் சீயோன் மேலே விந்தை மனுவேலருக்கு
ஐந்து காயம் காட்டி நின்று தேடுகிறார் என்று சொல்லு

**260. இராகம் (நேசமே எழுந்து ஏசுராஜனை) (217)**

**பல்லவி**

**அன்னமே நீ தூது போயேன் மன்னனை அழைத்து வாவேன்**

**அனுபல்லவி**

கன்னல் மொழி சீயோனெனின் காதலையவர்க்குச் சொல்லி

1. வர்ணமணி மார்பழகன் வானவர் பணியும் இச்சை
இன்னமேதா வரக்காணோம் இக்ஷணமென்மேல் தயவாய்

2. பத்தினி எனைக்கெடுக்க பதிலிருக்குதே இச்சை
பாதகப்பசா சகல பங்கம் வந்தணுகிடாமல்

3. நித்ய வாசஸ்தலமொன்று எத்தனம் செய்து திரும்ப
இத்தரை வருவேனென்றார் இன்னம் வரக்காணேனடி

4. இத்தனையும் கேட்டாலவர் இக்ஷணமே வந்திடுவார்
சத்தியம் சத்தியம் ஞான சிகாமணியும் சொல்லுகிறேன்
– அன்னமே

**261. தன்யாசி ஆதி தாளம் (218)**

**அன்னமே சீயோனே எந்தன்**
சொர்ணமே உன் நேசரிதோ
வாசலண்டை கூவி நிற்கிறார்!!
பிரியமே உன் ஆசைகொண்டுலாவி நிற்கிறார்!! என்
துத்திமியே மகா பத்தினியே
உனதத்தனிதோ பனிமத்தியில் நிற்கிறார்
ஓடிவந்தென்முகம் பாராயோ
உள்ளே அழைத்துன் நேசரிடம் ஓர் சொல் கூறாயோ

2. வஸ்திரங் கழற்றி இப்போ
நித்திரை செய்கின்ற என்னை
வா வா வென்றழைக்கிறவர் யார்?
மகாத்திரமாய் ராவே வந்தழைக்கிறவர் யார் – இங்கு
செப்பமதாகவே நித்திரை செய்கையில்
சொப்பனமோ இது மெய்ப்பொருளோ
சோதிக்க என்னால் கூடுதில்லை
ஐயோ எனக்குப் பாதிக்கண்ணுறக்கயில்லையே

3. நித்திரை மயக்கத்தாலுன்
அத்தனை மறந்துவிட்டநேசமணி லீலி புஷ்பம்
எங்குமணக்கும் ஆசையுள்ள
ரோஜா புஷ்பமே – இங்கே
அத்தி மரங்களும் பூத்தது காய்த்தது
கொத்துத் திராட்சைக் குலைகளிலிலங்குது
கோதையே என்னோடெழுந்து வா
நேரமாகுது தாவியே எழுந்து ஓடிவா

4. என்னினிய தோழியரே
எந்தன் சகோதரிகளே என்னருமை நேசர் சாயலை
நானென்ன சொல்வேன் பொன்னகரிலுள்ளோர் அவரே
பதினாயிரம் பேரில் சிறந்தவராம்
தலைமேவிய தங்கமும் தாவிய அங்கமும்
இந்திர நீல ரத்தினங்களாம்
இழைத்த பிரகாசமான யானைத் தந்தமாம்

5. எந்தனுட தோழிகளே எருசலேமின் மக்களே
என்னருமை நேசரெங்கம்மா
ஐயோ பாவி நான் இனி என்ன செய்குவேன் சும்மா
என் நாயகனார் தலை வாசலிலே மலை
வாகவே நின்றெனைக் கூவியழைக்கையில்
நானுமங்கே வந்தேனில்லையே
பிறகு வந்தால் நேசரங்கு தானுமில்லையே

6. நேசரின் ரூபவதியே உந்தன் நேசர் எங்கே போனார்
உன்னோடு கூடவே நாங்களும்
வழி பிடித்து மன்னனைத் தேடுவோம் வாருங்கள்
இவரத்தனார் ஏசு மகத்வனார் நம்மையே
முக்திலோகத்தினில் சேர்ப்பதற்காகவே
இத்தனை தூரமே தாழ்த்தினார்
வாருங்கள் சென்று கர்த்தனைக் கண்டங்கு வாழ்த்தலாம்

**262. இராகம் இங்கிலீஷ் (219)**

**பல்லவி**

**எப்போதும் இன்ப வாழ்வே**
ஏசையா என்னோடிருப்பதாலே

1. எப்பொருளும் குப்பை போன்றனவே – மாந்தர்
எவ்வரும் ஓர் நாளில் தூசிதானே
என்னருமை நேசர் ஏசு நாதர்
எனக்கெல்லாம் அவர் பின்னே ஏது குறை

2. மாதா பிதா உற்றார் மாண்டிட்டாலும் – பின்னும்
மற்றுள்ள இஷ்டர் மறைந்திட்டாலும்
மன்னன் கிறிஸ்தேசு மங்கா நேசர்
எனக்கென்ன குறை எனக்கேது பீடை

3. காவற்காரர் ஏசு கண்ணுறங்கார் என்மேல்
ஆவல் மிகுந்தோர் அன்பு மிகுந்தோர்
பட்டயத்தால் பக்கத்தாயிரம் சாயினும்
பயந்திடேன் சற்றுமயர்ந்திடேன்

4. தங்குமிடம் பூமி சத்திரமே – விண்ணின்
தங்கவீட்டின் வாழ்வு நித்தியமே
மங்கா வாழ்வு எனக்கங்கேயுண்டு பின்னே
இங்கே எதை எந்தன் பங்கென்னுவேன்

5. எத்தனையாய் மாந்தர் தூசித்தாலும் – பின்னும்
இகழ்ந்தென் பேரைக் கெடுத்திட்டாலும்
ஏதும் சொல்லேன் நாவெழும்பவிடேன்
கிறிஸ்தேசையர் போலவர்க்கிரங்கிடுவேன்

6. என்ன நஷ்டம் தொல்லை துன்பம்வந்தும் – சாத்தான்
ஏக படையாய் எனைச்சூழ்ந்தாலும்
என்ன பயம் அதால் ஏதபாயம்
எனக்கேசு துணை சேனா வீரரவர்

7. சஞ்சலப்படுத்தும் நோய்ப்பிடித்தும் – பின்னும்
சாவின் மந்தாரம் எனைக்கவிந்தும்
கொஞ்சப்பாடு எந்தன் அஞ்சல் முடிவாகும்
செஞ்சுடரைக் கண்ணால் கண்டிடுவேன்

8. ஆதரவானோர் அருமையானோர் – இந்தப்
பூதலம் விட்டோடிப் போனாலுமே
ஆதரவாய் ஏசை அண்டிச்சேர
ஆவலாகுமதால் எனக்கப்போதுமே

9. நிற்பேன் என்நேசர் கரம் பிடிப்பேன் – சாத்தான்
நிற்காதோட மறைவாள் பிடிப்பேன்
விற்பிடிப்பேன் ஜெயவெற்றி கொள்வேன்
சேனாவீரர் பலத்தாலே தீரனாவேன்

**263. இராகம் (காலமே தேவனைத்தேடு) (220)**

**பல்லவி**

**தேவா நீ கோபம் வைக்காதே – உந்தன்**
சிறு மந்தை கண்ணோக்கி திரும்பும் இப்போதே

**அனுபல்லவி**

பாவிகளானோம் உன் பாதம் தான் நீங்கி
பட்சம் வைத்திரங்குமுன் கிருபையால் தாங்கி

1. மூவுலகாளும் ஏகோவா – எங்கள்
முன்னொனபிராம் ஈசாக் யாக்கோபின் தேவா
ஓய்வுநாளை மீறி உன்மறை கடந்து
பாவிகளானோம் கைவிடாதேயும் நெகிழ்ந்த

2. இரட்சகா ரட்சியுமிந்த வேளை – எனக்
கிரங்குமிரங்குமெனக் கெஞ்சுகிறேன் தாழ
பட்சம் வைத்தெங்களின் பாவம் பொறையா
பகர்ந்த உன் தீங்கை நீ தவிருமேனையா

3. கோபம் கொள்ளேல் எங்கள் சுவாமி – நீ
கோபம்வைத்தால் அதைத் தாங்குமோ பூமி
ஜீவபாதை மறந்து தீங்குக்குள்ளானோம்
பாவிகளானோம் நீ பாதுகாரையா

4. அல்பா ஒமேகாவும் நீயே – எமை
ஆதரிக்கும் எங்கள் அடைக்கலம் நீயே
வல்வினை அகற்றியே மாபாவம் தீரும்
சகலவித கெட்ட சாத்தானைப் பீறும்

5. இரக்கத்தின் கொம்புதான் நீயே – எமை
ரட்சிக்கும் சாலேமின் ராஜாவும் நீயே
உருக்கமாயிரங்கி உன் மந்தையைக் காரும்
உரைத்த தீங்ககற்ற நீர் ஜல்தியாய் வாரும்

6. கண்ணீரை அப்பமாய் கொடாதே – எங்கள்
கர்த்தாவே நீயதைப்பான மாயீயாதே
அண்ணன் இசரேலை ஆதரித்தாற்போல்
அழிவுக்குக்கோரின் நினிவைக்காத்தாற்போல்

7. பாவிகள் மீட்பரும் நீரே – எங்கள்
பாவமகற்ற ரத்தம் சிந்தினோர் நீரே
தாவி உம்மந்தையை சுவாமி நீர் காரும்
சாலேமின் ராஜாவே இவ்வேளை வாரும்

**264. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (221)**

**பல்லவி**

**நேசமணி வாசமணி ஈசனென்னும் ஏசுமாமணி**

**அனுபல்லவி**

பாசமாக இவ்வுலகில் நேசமாய் தற்காத்துவரும்

1. எங்கே ஓடிப்போனாயப்பா ஏழைமனம் கலங்குதப்பா
தாழ அன்றி மீள ஒருநாளும் என்னால் கூடாது

2. இஷ்டனென்ற ஏசையனே பவக்குஷ்டமறக்கார் மெய்யனே
பக்தனே கர்த்தனே நித்தனே நிச்சயமாய்

3. சூட்சமான மீட்சிபெற காட்சி கொடு மாட்சிபெற
மீட்டு ரட்சித்த பத்தா கூட்டுறவான சித்தா

4. வாருமையா காருமையா பொற்கரத்தில் சேருமையா
நாதா பொற்பாதா நின்பாதம் பணிவேனேசு

5. அஞ்சாத கல் நெஞ்சுருக அஞ்சல் செய்யும் மனம் நொறுங்க
அன்பனே நண்பனே இன்பனே செம்பொன்னே

6. நின்னையல்லால் எங்கேபோவேன் நீசனான பாவியானேன்
உன்னையல்லால் இந்நிலத்தில் என்னை ஆதரிப்பாரில்லை

7. என் ஜெபங்கேள் என் பாவந்தீர் என்னாசை தீர உன்னாசிகூர்
மன்னவனே பொன்னகரை உண்மையாகச் சொன்னவனே

**265. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (222)**

**பல்லவி**

**போதாது நீ போதுமென்று எண்ணுவது போதாது**

1. காலையிலும் மாலையிலும் வேலையில்லா வேளையிலும்
ஆலயவாராதனைக்குப் போகிறது மாத்திரமே – போதாது

2. சத்திய வேதாகமத்தை பத்திரமாய் வைத்து வைத்து
மற்றவர்கள் கேட்கவதை வாசிப்பது மாத்திரமே– போதாது

3. தற்பரனை நோக்கியொரு ஐக்கிய ஜெபம் செய்கையில்
சொற்களை எடுத்தடுக்கி ஜெபிப்பது மாத்திரமே – போதாது

4. அச்சயன் தனது நாளை ஆசரிக்கச் சொன்னதினால்
அச்சமொடு பக்தியாக ஆசரித்தல் மாத்திரமே – போதாது

5. ரத்தம் சிந்திப் பாடுபட்டு முக்தி சம்பாதித்த நம
தத்தன்அருள் நற்கருணைசேருவது மாத்திரமே – போதாது

6. ஞானபரனான ஏசுநாதனுக்குப் பிரீதியாக
வேணவிதம் செய்துவரும் தானதர்மம் மாத்திரமே–போதாது

7. பண்ணின பவங்களுக்காய் பலபல வேளைகளில்
அன்னபானமின்றி தபசிருப்பது மாத்திரமே – போதாது

8. எங்கும் நிறை வியாபகற்கு ஏற்ற சங்கக்காணிக்கையை
தங்களைக் கேட்காமுனம் தருவது மாத்திரமே – போதாது

9. உள்ள சுத்தம் உண்மைமொழியோடு கற்பு நன்னடக்கை
நல்லவிசுவாசமன்பு நாதன் மேலிருந்தாலன்றி – போதாது

**266. இராகம் (சாலோமின் ராஜா)** **(223)**

**உத்தமியே மனம் மெத்தவும் வாடுது ஓபிரியமே வா துரிதமாய்**
ஓடிவந்து கபாடமே திற ஒ சகோதரியே

2. அத்தி மரங்கள் காய் காய்த்து மதுரம் மெத்த மலருதே
ஆத்துமநேசியே
அதிக சோகம் அனுசரிப்பதால் அருகல் வா பெண்ணே

3. மாரி நாள் சென்றது மழையும் ஓய்ந்த மகிழ்ந்து பேசன்னமே
மயங்குதே மனமே
மலர்கள் காணுது குருவி பாடுது மனைவியெ வருக

4. மலை வெடிப்பினில் அலையும் என்னுடமனதுக்கேற்ற
பெண்ணே உனது ரூபைச் சற்றே
வந்து காண்பியுன் இன்ப ஓசையும் மயங்குதே மனமே

5. கண்களால் சரப்பளியினாலெனைக்கவர்ந்த கொண்டாயே
காதல் மிஞ்சுதே
கந்தவர்க்க வாசந்தருகுதே கன்னியே சீயோனே

6. தேனொழுகுது அமுது மிஞ்சுது சித்ரரூபியே உன்
வஸ்திரவாசனை
சிறந்த லீபனோன் பொருந்திய எந்தன் செல்வியே கண்ணே

7. தலை பனியினால் நனையுதே எருசாலே மன்னமே
சமயமின்னமோ
தாமதமுனக்கேது சொல்லுவாய் சமயமீதல்லோ

8. சற்குண தாசனும் கீதம்பாடிய சத்தம் கேட்குதே
சந்தோஷமாகுதே
சபை எனும் மணவாளியே எனைச்சார்ந்து கொள்வாயே

**267. இராகம் (ஐயா கிறிஸ்தையா அருளையா) (224)**

**பல்லவி**

**சஞ்சலப்புவனமீது ரஞ்சித லோகமே**

**அனுபல்லவி**

இந்தச் சகடவாழ்வில் மூழ்கிமிகு அகடம் செய்கிறாயே
என்னவிகிடம் இதுகபடம் அறி சபதம் சென்னேனே

1. மறந்திறந்தபின் திரும்புமோ ஜீவன் தான் – நீ
மயங்கிக்கெடுவாயோ இதன் வாழ்வு செழித்தேனோ
எமன் வருமுன் குழி புகுமுன்
பண்படுமுன் பண்பா கேள் – சஞ்சலப்

2. வம்புலகை எளிதில் நம்பினோர் கோடிப்பேர் – ஓ
மகுடமுடி ராஜா மரசுகிர்த கவிராஜா
தேவதாசா பிராண நேசா
நீசர் யாரும் தூசியாம் – சஞ்சலப்

3. கூளியைச் சேர்ந்து உன் நாளெல்லாம் போச்சுதே – உன்
குறும்பு மிஞ்சப்போச்சே தெய்வம் விரும்பினதும் போச்சே
பயம் ஆச்சே ஜெபம் போச்சே
கடைமூச்சும் வந்தாச்சே – சஞ்சலப்

4. ஏக தெய்வமுண்டு இன்பலோகமுண்டு – நீயோ
இடும்புசெய்தால் தோஷி, கொஞ்சம் இதயம் தனில் யோசி
வேதம் வாசி போதம் நேசி ஏசை ஆசி விசுவாசி – சஞ்சலப்

**268. பியாகு ஆதி தாளம் (225)**

**பல்லவி**

**பாலா பாலனே சிறுபாலா பாலனே கண்ணே**

பாலா பாலனைப்பெற்று வளர்ந்தேனே பாலா பாலனே உன்னை
நைல் ஆற்றினில் நான் போட்டிடவும் நாளும் வந்ததுவோ

1. காலா காலமோ கண்ணே கர்த்தரின் செயலாமோ ஓகோ
சீலா சிறுவ சுதனைப்பிரியக்காலம் வந்ததுவோ

2. அன்னக்கிளியரசே உந்தன் அழுகுரலோசைதனையாரும்
அறியாதடக்கி ஆளுவதருமை ஐயோ என்செய்வேன்

3. நெஞ்சம் அஞ்சாமல் மகனே நீரில் விட்டெரிய ஓகோ
கொற்றவன் கொடியவன் கொலையவன் சதியால்
கொடுந்துயர் பெறலானேன்

4. நாணற் புற்பெட்டி மகனே நல்ல புல்பெட்டி நானும்
தோணிக்கிசையை கீலும் பிசினும் துரையே பூசினேன்

5. அக்காள் உன்பக்கம் மகனே ஆண்டவர் எப்பக்கம்
பார்வோன்
மக்கள் வருகிற பக்கமாய் நதியில் மகனே உனை
வைத்தேன் - பாலா

**269. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (226)**

**பல்லவி**

**பல்லறங்க கனக சபை பானுவேலனே**
பைங்கிளி நான் பறந்து போக பாக்கிய ஜீவனே

2. அல்லேலூயா ஓசியன்னா அல்பா ஒமேகா
ஆசைகொண்டு நேசமிஞ்சி வந்தீர் எனக்காய்

3. அழுகையின் பள்ளத்தாக்கைக் கடப்பதென்னாளோ
ஆனந்த சுகமடைந்து சுகிப்பதென்னாலோ

4. கூடுவிட்டு வீடுதொட்டு குலாவி வாழவே
கொஞ்சு கிளியாக நானுன் கரத்தில் வாழவே

5. பாடு துக்கம் கண்ணீர் எப்போ பங்கமாகுமோ
பரமசுகமிஞ்சி எப்போ ரஞ்சிதமாமோ

6. ரத்னப்பரதேசி கீதம் முக்தி காட்டவே
நாளடைவில் உனது காதல் என்னை வாட்டுதே

**270. ஆனந்தபைரவி** **ஆதி தாளம் (227)**

**பல்லவி**

**இந்தவேளை வரவேணும் என் ஏசுநாதையா**

**அனுபல்லவி**

இந்த வேளை வரவேணும் இந்த வேளை வரவேணும்
சிந்தை காட்சி தரவேணும் சீயோன் மலை ஏசு நாதா

1. மெத்தவே துயரமாகிறேன் வெயிலைக் கண்ட
மெழுகுபோலே உருகி வாடுகிறேன்
கர்த்தனே கடாட்சம் வைத்துக் காட்சிதர வாருமையா
சித்தம் வைத்துக் காத்தருளும் சீயோன்மலை ஏசுநாதா

2. பத்துத்தலை கோபுரங்களாம் பொன்னாலே செய்த பளிங்கு
மாமணி மண்டபங்களாம்
அத்தனையும் விட்டிறங்கி ஆதரிக்க வாருமையா
செத்த பாவியை எழுப்பும் சீயோன் மலை ஏசு நாதா

3. கூவியழும் பாவிகட்கெல்லாம் உமது வல்ல ஆவியை
அருளும் இரட்சகா
பாவியின் இருதயத்தில் ஆவியின் கனி பழுக்க
தேவநதியால் செய்யும் சீயோன்மலை ஏசு நாதா

**271. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (228)**

**பல்லவி**

**பயமேது நமக்குப் பயமேது**

**அனுபல்லவி**

ஜெயமிகும் தேவனுக்கு சேயர்களாய் நாமிருக்க

1. ஆறுநாளி லண்டமெல்லாம் அற்புதமாய் படைத்து
சீருடன் பூசிங்காரித்த தேவனும் நம்மோடிருக்க

2. சத்துருக்களைச் சிவந்த சமுத்திரத்தினுள் ளமிழ்த்தி
வெற்றியுடனிஸ்ரவேலை மீட்டு ரட்சித்தோனிருக்க

3. பஞ்சத்தில் எலியாவுக்குப் பட்சிகளால் அன்னமிட்டு
மிஞ்சும் தயவால் ரட்சித்த மேலோனும் நம்மோடிருக்க

4. மூழும் சூளையில் கிடந்த மூவருடனே உலாவி
தோழரைத் துன்பின்றிக்காத்த துய்யனும் நம்மோடிருக்க

5. சிங்கக் குகையிற் கிடந்த சீலன் தானியேல் பக்தனை
யங்கமேதுமின்றிக் காத்த பக்தனும் நம்மோடிருக்க

6. பாடையிலெடுத்துப்போன வாலிபனைத் தொட்டெழுப்பி
வாடும் தாயைத் தேற்றி வைத்து வல்லோனும்
நம்மோடிருக்க

7. நாலு நாளாய் கல்லறைக்குள் நாறி ஊனெல்லாம் கழிந்த
சீலன் லாசரு உயிர்க்கச் செய்தோனும் நம்மோடிருக்க

8. ஐந்தப்பமிருமீன் கொண்டு ஐயாயிரம் பேர்களுக்கு
விந்தையாய் போஜனமிட்ட விண்ணவர் நம்மோடிருக்க

9. தந்தையும் தாயுமுந்தனை தாரணியில் மறந்திட்டாலும்
உந்தனை மறவேனென்ற உன்னதன் நம்மோடிருக்க

அட்டவணை

**272. பியாகு** **ஆதி தாளம் (229)**

**பல்லவி**

**குருநாதா நீ ஆதரி என் குண மாதாவே**
தினமுன்னவா கைகூப்பினேன் குறி

**அனுபல்லவி**

குருவே சரணம் சரணம் சரணம்

1. பாவியில் பாவி சண்டாளன் நான் பாவி
உன் பட்சம் என் ரட்சண்யமே – ஆ
உன் பாதாரவிந்தம் தராதோ நற்கதி
மணிந்தேனுன் காருண்யமே – குருநாதா

2. அறிவாலும் அறியாமலும் அகவஞ்சத் துணிவாலும்
அடியேன் செய்பவமிச்சமே – இவ்
வண்டங்கொள்ளாதென்றாலுமதை எல்லா
மகற்றுமுன் புண்ய சூட்சமே – குருநாதா

3. மேசியா தாசன் பரதேசி ரத்னன் கவி
விஸ்தாரம் உன் பெருக்கே – நீ
பேசிப்பழகி நல்லாசி ஆளிக்க
பிரயாணம் உன்னூருக்கே – குருநாதா

**273. ஆனந்தபைரவி** **ஆதி தாளம் (230)**

**பல்லவி**

**இனி நமக்கென்ன பயமேது**
ஏசு நாதனருளிருக்கும்போது

**அனுபல்லவி**

மனித வடிவாய் இந்த மானிலம் வந்த ஏசு
அனுதினம் நமதுடனருகிலிருக்கும் போது – இனி

1. வழிதனில் பிறவிக்குருடன்
வருவோரிடம் பிச்சை கேட்டு இருக்க
ஒளி போலிலங்கும் ஏசு உன் மேலிரங்கி வந்து
விழிகள் திறந்து மனங்களிக்கச் செய்தோனிருக்க – இனி

2. பெரும்பாடுகொண்ட ஒரு மாது
ஐயன்பேணி வஸ்திரம் தொடும்போது
ஒருவருமறியாமலுடனே உதிரம் நீங்க
வருவார் மனமகிழ்ச்சி மகிழ்ச்சி செய்தோனிருக்க – இனி

3. குஷ்ட வியாதி கொண்ட ஒருவன்
குளக்கரையில் அனுதினமிருக்க
அஷ்டதிசை புகழும் ஆயனார் அங்கு வந்து
கிட்டஅவனைத்தொட்டு கிருபை செய்தோனிருக்க – இனி

**274.**

**சிங்கார ஓரேப் சார்பில் மங்கா தீச்சுவாலை இதோ**
எரியுதுபார் முட்செடிதனிலே

2. அக்கினி மூண்டெறிந்தும் முட்செடி வேகாதென்ன
அதிசயமே பேரதிசயமே

3. கிட்டமுட்செடி மோசே எட்டி நடக்கையிலே
இடிமுழக்கம் பேரிடிமுழக்கம்

4. மோசே மோசே உனக்கு மோசம் வரும் கிட்டாதே
முனிபர் பூமி இது மகிபர் பூமி

5. கழற்று உன் பாதரட்சை கர்த்தாவாம் முற்பிதாக்கள்
கவனமாய்கேள் இது கடவுளினில்

6. உன் ஜனக்கூக்குரலும் என் முன்னே எட்டினதால்
உனை அழைத்தேன் உயர்பதி கொடுத்தேன்

7. ஐயா நான் திக்குவாயன் ஆகாதென்னாலே சுவாமி
ஆளனுப்பும் வேறாளனுப்பும்

8. ஆரோன் உன் அண்ணனல்லோ அவன் உன்னைச் சந்திப்பானே
அவனே உன் வாய் இனி அலட்டாதே போ

9. என்னவென்றாலும் சுவாமி என்னாலே கூடாதையா
என் குலம் கீழ் எகிப்பத்தினிலே

10. சுவாமி நின் நாமமென்ன ஜாதிகள் கேட்பாரென்னை
சாற்றிடுவீர் சபை கூட்டிடுவீர்

11. ஏகோவா என்ற நாமம் இதுமுதல் உண்டுமோசே
எகிப்தின் நேரே ஏகி நீ சேர்

12. அல்ல மோசே உனக்கு அடையாளம் தாரேனிப்போ
அதோ உன்கோல் அருளடையுது பார்

**275. இராகம் (ஆனந்தமே பேரானந்தமே)**

**பல்லவி**

**நேசரைக் காணாமல் என்முகம் வாடுதே**
நேரிழையே நகர் பார் குழலே

1. ஆசை மன்னரைத்தேடி வாசலிலே நின்று
அங்கம் உருகினேனே ஏங்கினேனே
பாசமதால் பரவசமானேன் இப்போ
பாதகியான் நகர் கோதையரே

2. நித்திரை செய்கையில் உத்தமி என்றொரு
சத்தம் கேட்டேன் காதல்மெத்த உற்றேன்
கபாடந் திறந்தேன் கணவன் தனைக்காணேன்
கண்டதுண்டோ இங்கு நின்றதுண்டோ

3. பதினாயிரம் பேருள் என் கணவன் தனை
பகிர்ந்திடலாம் யாரும் தெரிந்திடலாம்
அதியழகன் குணமிங்கித தயாளன்
அன்பனைக் காணோமே என் பவமோ

4. சங்கை உயர் ராஜன் இங்கித நேசன்
சர்வ வல்லமை மிகுந்த ஈசன்
சத்தியவாசகன் கவி சூடிக்கொண்டாடி
சந்ததம் பரம ஆசன வாசன்

**276.** **(233)**

**பல்லவி**

**ஏசையா நாங்களிப்போ இன்பமாக இங்குகூடி**
ஏற்றிப் போற்றித் தொழுதிடவந்தோமே

**அனுபல்லவி**

ஆசையாயும் தாசர்களை சீர்வதிக்கவாருமையா ராஜா
ஆசீர்வதிக்க வாருமையா

1. கேட்டால் கொடுப்பேனென்று கிருபையாய் வாக்களித்த
கிறிஸ்துவே உம்மை நாங்கள் கெஞ்சுகிறோம்
தேடினால் கண்டடைவீரென்று
திருவாக்களித்த ராஜனே ராஜா திருவாக்களித்த ராஜனே

2. தட்டினால் திறப்பேனென்று தயவாக வாக்களித்த
தயாபரா உம்மை நாங்கள் கெஞ்சுகிறோம்
தாசர் கேட்கும் மன்றாட்டை
தயவுடன் ஏற்றுக்கொள்ளுமையா ராஜா தயவுடன்
ஏற்றுக்கொள்ளுமையா

3. ஒரு மனதுடன் ஓர் இடத்தில் கூடினதால்
அருமையாய் ஆசீர்வதித்திடுமேன்
ஒரு மனதுடன் உம்மை கூடித் துதிக்க
உண்மை ஆவி தாருமையா, ராஜா உண்மை ஆவியைத்
தாருமையா

**277. இராகம் (ஐயா கிறிஸ்து மகராஜா)**

**பல்லவி**

**ஐயா கொல்கொதா மலை நாதா**
எனக்கார் துணை சொல்லனுகூலா

**அனுபல்லவி**

மெய்யா இதுதருணம் வா வா
இச்சிறியோன் முகத்தைப் பார்க்க வா வா

1. பாறைக்குள் தேரை போலானேன் நான்
பல துயர் பட்டவனானேன்
ஆலைக்குள் கரும்பு போலானேன் இந்த
அகதிக்குன் முகம் காட்ட வாரும்

2. பலரும் பலதுசொல்லி ஏய்த்து எனை
அலைவாய் துரும்புபோல் ஆய்ந்து
தொலையாத கவலைக்குள் மாய்த்து எனைத்
துரத்திவிட்ட கதியைப் பார்த்து

3. பெற்றோர் எனைக்கைவிட்டபோதும் என்
பிறவிகள் மறந்திட்டபோதும்
மற்றோர்கள் இரங்காதபோதும் என்னை
மறவா என் நேசா நீர் பாரும்

4. தாகம் மிகுந்தவரே வாரும் நல்
அமர்ந்த தண்ணீரண்டை சேரும்
பணமும் விலையுமில்லாமல் நான்
பருகிடத் தாகத்தைத் தீரும்

5. தூங்கா இஸ்ரவேலின் தேவா ஏழை
துயர் நீக்கும் மகிமை ஏகோவா
மங்காத வாக்குரைத்த தேவா உனை
மறக்கவே மாட்டேன் என் தேவா

**278. இராகம் இங்கிலீஷ்** **(236)**

**சாவெனக்காதாயம் ஜல்தி விளைக்கும்**
சுவாமி ஏசு ஜீவன் தாசனெனக்கே
பூவெனக்குச் சத்ரம்போன்ற வீடாமே
போவேன் பொன்னகர் நோக்கி

**பல்லவி**

போவேன் வாழ்வேனே பொன்னகரில்
சாவாம் யோர்தானைத் தாண்டி வாழ்வே
சாவெனக்காதயம் ஜல்தி விளைக்கும்
சுவாமி ஏசு நாதரால்

2. தொல்லை மிகு லோக துயர் முடியும்
வல்லவரின் கை என் வாட்டம் தீர்த்திடும்
தொல்லைமிகும் சாத்தான் தொடர்ந்து வரான்
எல்லை கடரான நாடே

3. மீட்ட நாதரின் பொன்மேனியைக் காண்பேன்
ஆட்டுக்குட்டியின் வெண் ஆசனம் காண்பேன்
கூட்ட தூதரோடு கூடிப் போற்றுவேன்
குரல் கம்மாதென்றுமே

4. என் முன்னதாய் சென்ற இஷ்டர் உற்றாரை
மன்னன் வீடாம் மோட்ச வாசலில் காண்பேன்
சொர் வாசல் கோட்டை ஜோதியிற் காண்பேன்
சொந்தமாம் சுரர் நாடே

5. பாழ்புரியிலெங்கும் பயம் தங்கிடும்
பகைஞன் தான் வீழப் பண்ணுவானென்றோ
வீழ்வதில்லை சாவு வெற்றிமுடியும்
மேல் வீட்டில் இனி வாழ்வேன்

6. வானத்தின் கீழ்வாழ்வு மாய்கையானதே
மானிடரின் கண்ணீர் வருத்தும் மெய்யே
வானவரின் நாட்டின் வாழ்வு சதமே
மரணமதின் வாசலே

7. வெண்ணங்கி தரித்து மேல் வீட்டில் வாழ்வேன்
வெற்றி பெற்றோர்க்குள் என்வீதம் பெறுவேன்
கண்ணீர் துடைப்பார் தம் கரத்தாலேசு
கவலை தீர என்றும்

8. ஓட்ட முடிவாகும் உறக்கமாகும்
சூட்டக்கிரீடம் என் சொந்தமாகிடும்
நாட்டமாய் மீட்பர் நேர் நடத்தினோரை
நான் கண்டு மகிழுவேன்

9. தேகம் விட்ட என்னை செங்கரத்தேந்தி
வேகமாக தூதர் மேல் வீடேகுவார்
ஏக க்ஷணப்பொழுதில் இயேசு மடியில்
என்னைக் கொண்டு சேர்ப்பார் ஆமென்

### 279. இராகம் (தேவசேயின் பால்ய சேனையர் நாமே) (237)

**பல்லவி**

**பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும்**
பாடி ஏசு நாமம் பணிந்து போற்றும்

**அனுபல்லவி**

தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீதிறங்கி வந்த சுவாமி ஏசு அன்பை எண்ணி

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்
பாலர் நேசர் பதம் பணியக்கற்றோம்
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்
ஊரில் எங்கும் கார்ட் பஞ்சாங்கம் ஓதும் பாலியர் நேசன் கண்டோம்

2. தேடி வந்தலையும் தேசிகருண்டு
பாடி ஆர்ப்பரிக்க பாலர் பாட்டுண்டு
கூடி வந்து ஆனந்திக்கக் கூட்டப்பண்டிகையுமுண்டு
நாடி மீட்பர் பாதம் பாலர் தேட எல்லா ஏதுமுண்டு

3. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே
இன்னும் நித்யமும் பாதுகாப்பாரே
அன்பின் சங்கம் இதைக் கொண்டு ஆத்ம நேசர் செய்துவரும்
எண்ணிமுடியா நன்மையை ஏகமாக எண்ணிக்கொண்டு

4. பெற்ற தாய்மாரே நீர் உற்றுக் கேளீரோ
சற்று எங்கள் சங்கம் நோக்கிப்பாரீரோ
உங்கள் மேலுள்ள பொறுப்பைத் தங்கள் மேலே தாங்கி வரும்
எங்கள் அன்பின் சங்கம் என்றும் ஏகன் அன்பால் செழித்தோங்க

5. குட்டிபேணிடாத கோனார் தானுண்டோ
நட்டி வருமென்று நன்குணராரோ
பட்சமுள்ள மேய்ப்பர்களே இஷ்டரான மெம்பர்களே
ரட்சகரின் கட்டளையை செய்யும் மேன்மை சங்கத்தை

6. வேண்டும் நன்மை செய்யும் மேன்மை சங்கத்தை
தூண்டும் உந்தன் ஜெப தூபமதினால்
மீண்டும் மிக்க ஆசையுடன் மின்னும் வெள்ளி பொன் எடுத்து
ஆண்டவரின் பாதம் வந்து அன்பதாய் படைப்பீராக

**280. சங்கராபரணம் ஆதி தாளம் (238)**

**ஆத்தும நேசர் ஆவலாய் ஓடி**
அலைகிறார் உனைத்தேடி – என் மானே
அண்டைவராயோ தொண்டு செய்யாயோ
அகல நிற்பதேன் மானே

2. தண்ணீர்க்குப்போன சமாரியப்பெண்ணைத்
தவனமுடனே நாடி – என் மானே
சந்தித்தவரிதோ வந்தழைத்தால் வர
தாமதமுனக்கேனோ

3. கள்ளன் கதியடைய உள்ளம் உருகினவர்
காதல் கொள்கிறாருன்மேல் – என் மானே
கலங்கி நில்லாதே, புலம்பி வாடாதே
காலமே வரலாதோ

4. சின்னக்கடலில் வலைவீசி மீன்பிடித்த
செம்படவரைத் தேடி – என் மானே
சீஷர்களாக்கி ஆதரித்தவர் பின்னே
சொல்லொண்ணாதோ மானே

5. வெட்ட வெளியில் நின்ற நெட்டை மரத்திலொரு
குட்டயன் முகம் பார்க்க – என் மானே
திட்டமாய் பன்னிரு சீடர்கள் சூழ
திரள் கும்பொடு சென்ற

6. கல்லறை பார்த்து வந்து கதறி அழுத மரி
கவலையகற்றவென்ற – என் மானே
கண்ணிமைப்பொழுதே கண்டு துயர் தவிர்த்த
கருணாகரனென்றும்

7. மானே உன்னை நான் மறந்திருப்பேனோ
மயங்காதே சொன்னேன் – என் மானே
மாடம் புறாவே மாதுளங்கனியே
வந்திடுவாய் துரிதம்

**281. கமாஸ்** **ஆதி தாளம் (239)**

**பல்லவி**

**மனமயங்காதே என் மானே மனமயங்காதே**

**அனுபல்லவி**

நான் வான் போய் வருவேன் திகையாதே
கனமே எருசலையில் வாழன்னமே கண்ணே கலங்காதே

1. மனுவேல் தம்பிரானே என் பிராணா
வானாசனத்திலிருப்போனே
அநியாயப் பாழுலகில் கொடிதாய்
அவதியுத்திரிப்பேனோ என் நாதா

2. உத்தரிப்பாயன்னமே சீயோனே
உலகம் பகையே செய்யும் தினமே
சத்திய வேத விரோதிகளை
சங்கரிக்க வருவேனினிமேல் என் மானே

3. இனிமேல் வருவோனே என் நாதா
என் ஆத்தும நேசர் என் பெருமானே
மனமே சகியேனே உனைப்பிரிய
மாலாய் மலைவேனே என் நாதா

4. மலைவானேன் பெண்ணே சீயோனே
என் வாஞ்சைக்கினிதாகிய கண்ணே
நிலையாம் வாசஸ்தலமாயத்தம்
நீடி வருவேன் விண்ணே என் மானே

5. விண்ணுலகத்தேறி என் சுவாமி
வீற்றிருந்துனதருள் உரை கூறி
மண்ணுலகில் திரும்பா முன வருமே
மருளலகைகள் சீறி என் பிராணா

6. சீரும் திகையாதே என் கண்ணே
திருவருள் உண்டென் பிரிய மாதே
ஈராந்த காலமட்டும் உன்னோடிருப்போம்
முப்போதே என் மானே

7. போதுமிருப்பேனே என் நாதா
பூமானே என் கோமானே
வேதநாயகன் ஓதிய பாடலை
மேவிய சீமானை என் பிராணா

**282.** **(240)**

**பல்லவி**

**கை நிறைந்த கருவேலமே**
கண்டு களிக்கலாம் முத்தேலமே – என்

1. அண்டபுவனமதில் அரிய ஓர் ஆணிமுத்து
பண்டுலகோர் தேடிப்பார்த்தடையா வானமுத்து
ரண்டு மூன்று என்று சொல்ல ஞாயமில்லை ஏகமுத்து
கண்டவர்கள் வாங்கிடாமல் கண்டடையா யோகமுத்து

2. ஆதிமுத்து ஜோதிமுத்து அந்தரங்கமான முத்து
ஆருக்குங்கிட்டாது அன்பருக்கமைந்த முத்து
நீதிமுத்து வேதமுத்து நேசமுத்து ராஜமுத்து
நிமிஷத்துக்கோர் வருணம் நேர்ந்திலங்கும் ஜீவமுத்து

3. அம்பரத்தில் ஆனமுத்து அலங்காரமான முத்து
அஞ்சுரண்டை ஒன்றதாக்கி அறிபவர்க்கேற்ற முத்து
கொஞ்சுமுத்து பஞ்சகுணம் குடிகொண்ட யாகமுத்து
கோடி கோடியே கொடுக்கும் தோடார்க்கெட்டாத முத்து

4. சச்சிதானந்த முத்து சுவாமி கிறிஸ்தான முத்து
சத்துருவை வசப்படுத்துமுத்து சாந்தமுத்து
கெர்ச்சனையாய்த்திரியும் கெடுகூளியோட்டுமுத்து
கிருபைக்கடிமை ரத்னம் கெஞ்சுமுத்து தஞ்சமுத்து

**283. சங்கராபரணம்** **ஆதி தாளம் (241)**

**இராகம் (ஏசுநாயகாவந்தாளிம்)**

**பல்லவி**

**ஜீவனுள்ள மட்டும் எனது தெய்வத்தைப் புகழ்வேன்**

1. சாவின் நரக இடுக்கம் சஞ்சலமும் தவிப்பும்
தாவி என்னைப்பிடித்தும் சுவாமி தயவாய், சகாயம் பெற்றேன்

2. கர்த்தாவே என் ஆத்துமாவைக் காத்தருளுமென்று
கர்த்தர் நாமம் நோக்கிக்கூப்பிட்டேன் நான் காத்துக்கொண்டார்

3. நமது கர்த்தர் மனதினுருக்கம் நம்மை நீதியுள்ளோர்
அவனிதனில் கபடற்றோரைக் காத்தே ஆதரிப்பார்

4. மெலிந்துபோன உன்னைச்சுவாமி மீட்டு ரட்சை செய்து
நலிந்த உனக்கிளைப்பாறுதல்தந்து, தப்புவித்தார்

5. ஜீவனுள்ளோர் தேசத்திலென் தெய்வத்தின் முன் நடப்பேன்
தேவனையே நம்பி இதை நானே, திடமாகச் சொல்வேன்

6. தேவன் எனக்குச் செய்த எல்லாத்திரளாம் நன்மைக்காக
பாவியான நானவர்க்கிங்கென்ன பதிலீடு செய்வேன்

7. மீட்பின் பாத்ரம் வாங்கிச் சுவாமி மேன்மை நாமம் சொல்லி
ஆர்ப்பரிப்பாய் அவரின் சபைமுன் கொடுப்பேன் நேர்த்திப் பொருளை

8. தேவசபை முன் ஜெபத்தின் வீட்டில் ஜெருசலேமின் நடுவில்
நாவினால் நான் சொன்ன நேர்த்திக்கடனை, நானே செலுத்தி

**284. இராகம் (உன் புரு யிருக்குதடா)** **(242)**

**செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**நேசிக்கும் பிள்ளையை நான் நித்தம் அடித்தே வளர்ப்பேன்**

**அனுபல்லவி**

சாதனை செய்பவரை தண்டித்தே நான் வளர்ப்பேன்

1. தாசியின் பிள்ளைகளைத் தண்டனை செய்வாரில்லை
வேசியின் பிள்ளைகளை விரும்புவார் யாருமில்லை

2. பாவத்தை நீ செய்கையிலே பட்சமுள்ள கையினாலே
சாபத்தை நீக்குதற்கு சாடையாய் நானடிப்பேன்

3. இப்பொழுதுந்தனக்கு இஷ்டமில்லாதிருக்கும்
அப்புறம் தோன்றுமப்பா ஆனந்த சந்தோஷ பலன்

4. தளர்ந்த உன் கால்களையே சரியாக வைத்துமேதான்
நெகிழ்ந்த உன் கரங்களையே நேராக நீட்டுதற்கு

5. சொற்பமாய் சிட்சையினால் சோர்ந்து போகாதேயப்பா
அற்பமாய் மதியாமல் அடங்குவாய் என் புதல்வா

6. நேருள்ள பாதையில் நிமிர்ந்து நடப்பதற்கு
சீரற்ற பாதைகளை செவ்வையாக்கு மகனே

**285. இராகம் (மணே ஸணே இன்னே நினதருள் புரி) (243)**

**பல்லவி**

**அன்னே கண்ணே மின்னே – எனை அறியாதிருப்பதேன்**

1. பாடுபட்டவனானல்லோ அதைப்
பாராயொ தாகம் தீராயோ
பார்த்தாளே கண்ணீர் வார்த்தாளெ அந்த
மார்த்தாள் மகதலனாள் மரியாள்
பாவி நீயும் ஓடிவா – அன்னே

2. பாவிக்கொதுக்கிடம் நானல்லோ அதை
மேவி என்னிடம் வாராயோ
பட்சம் தினம் தினம் லட்சம் உன்மேல்
மிச்சமாகுது பாவியே
தாவி நடந்தோடிவா – அன்னே

3. என்னை மறந்தெங்கே போவாய்கதி
ஏதுமிலாப் பாவியே நீ
அன்னையும் நான் தான் துணையும் நான் தான்
மனையும் நான் தான் மறைவிடமும்
ஆசைகொண்டிங்கேகி வா – அன்னே

4. மண்ணின் மாந்தரை நம்பாதே உன்
மதியை மயக்கிப் போடுவாரே
எண்ணம் என்மேல் வைக்காமல் நீ
திண்ணம் கொண்டு திரியாதே
மண்ணே விண்ணை நோக்கிப்பார் – அன்னே

5. கதியே எந்தனை நோக்கு உன்
கதிநான் தான் என்றென வாக்க
சுதி கூட்டிய சுரர் சுரலோக முன்
மதியை மயக்குதே கண்ணோக்கு
குதித்தலகையைத் தாக்கு – அன்னே

286. (244)

**பல்லவி**

**காலில்லாத பந்தலை நான் காணக்காண வினோதமே**
காட்சியே காட்சியே காட்சியே காட்சியே – வானம்

2. செடியில்லாத புஷ்பம் தொங்குது
திருகக் கெரய்யக் கூடுதில்லை, செப்புங்கோ
–நட்சத்திரங்கள்

3. ஜெந்திடாத முட்டைகளதோ சக்கரமிட்டாடுதே
ஜாலமோ ஜாலமோ ஜாலமோ ஜாலமோ – சூரிய சந்திரர்

4. ரூபம் சிறகில்லாத பறவை சூழ ஓடித் திரிந்து
நுவலுங்கோ நுவலுங்கோ நுவலுங்கோ நுவலுங்கோ–மேகம்

5. மண்ணைச் சூழப்படுத்தியங்குது வாலில்லாமல் முழங்குது
மாயமோ மாயமோ மாயமோ மாயமோ – மின்னல் முழக்கம்

6. காலில்லாத கரும்புரவிகள் கடிவாளமின்றிப் பறக்குது
கரையுது மறையுது திரையுது உரையுது – மழை மேகம்

7. பளிச்சென்கிறத இரை விழுங்குது பார்த்திருக்கவே
காணலை
பாருங்கோ வாருங்கோ கூறுங்கோ ஓதுங்கோ – மின்னல்

8. ஓடுது மலம்பாம்பூர்நடுவே ஓட ஒன்றதை விழுங்குது
உண்மையே உண்மையே உண்மையே உண்மையே – ஆறு

9. ஜீவனின்றிப் படுத்திருக்குது சீறிக்கண்ணீர் வடிக்குது
தீட்டுங்கோ தீட்டுங்கோ தீட்டுங்கோ தீட்டுங்கோ – மேகம்

10. கால் உடலில்லை வால் தெரியுது கர்ச்சிப்பதையும் கேளுங்கள்
சப்தங்கேள் சப்தங்கேள் சப்தங்கேள் சப்தங்கேள்
– இடி முழக்கம்

11. மடுவில்லாமல் பால் கறக்குது வருணமில்லை மண்டலம்
மாயமோ மாயமோ மாயமோ மாயமோ – மழை

**287. பியாகு** **ஆதி தாளம் (245)**

**பல்லவி**

**என் கண்ணே எனக்கென்னேரமும் நின் ஞாபகமே**

**அனுபல்லவி**

காடு மேடு வீடு நாடோடிடு முன்னோடு தானும்

1. உன்னாசை மிஞ்சி மனமுருகி நிதம் கெஞ்சி – குரு
மன்னா உனைக் கொஞ்சி நானும் மகிழுகேறேன் ரஞ்சி

2. லோகம் பகைத்தாலும் மா ஈனர் தூஷித்தாலும் – கொடும்
நாகம் புரண்டாலும் உனின் நாட்டமே எந்நேரம்

3. ஜீவன் முக்தி காண வகை செப்பினாயே தோண – தேவ
பக்தி மிகப்பூண அருள்செய்வீர் நானும் காண

4. பரமகுருமூர்த்தி உனின் பாதமே என் பூர்த்தி – ஞான
தருமநேசன் கீர்த்தி அதன் சங்கீதத்தின் நேர்த்தி

5. ரத்னப்பரதேசி உனின் நயந்த விசுவாசி – உன்
சத்திய அரள் வீசி மனோ தயை செய் விசுவாசி

**288. இராகம் (ஐயா கொல்கதாமலைநாதா) (246)**

**பல்லவி**

**ஐயா கிறிஸ்து மகராஜா எனை ஆதரித்தருள் சருவேசா**

**அனுபல்லவி**

மெய்யாய் உலகில் வந்த ஈசா – இந்த
மேதினி முழுவதும் வாசா

1. ஐயா கொல்கதா மலைநாதா
எனக்கார் துணை சொல்லனு கூலா
துய்யா பன்னிருகையாலே உனைத்
தோத்தரித்தேன் வெகுநாளாய்

2. எங்கும் நிறைந்த பரஞ்ஜோதி இந்த
இகபரமிரண்டுக்கும் நீதி
கங்குல் பகலெனக்கு ஞானி இந்தக்
கடந்த சொல்லாளி என்னும் நீதி

3. அன்னை கருவிலுதித்தென்னை மிக
ஆண்டு வந்தீரோ எந்தன் கண்ணே
சன்னை பாவி எனக்குச் சொன்னீர் உம்மை
சாஷ்டாங்கம் செய்தேன் நானும்மை

4. ஐயா சபையார் நாங்கள் கூடி இங்கே
ஆனந்தம் கொண்டாடச் செய்தீர்
இங்கிதமாகவே வந்து நீர்
பங்கயம்போல் தழைக்கச் செய்வீர் – ஐயா

**289. இராகம் (ஐங்காயத்தின் அடைக்கலம் காவே) (247)**

**பல்லவி**

**தேவா நீரெங்கள் அடைக்கலமே – ஏசு**
தேவா நீரெங்கள் அடைக்கலமே
நாங்கள் செய்யும் துதி பெறப் பாத்திரமே

**அனுபல்லவி**

நாவாலுரைக்கொணாத நன்மைக் கிருபாநிதியே
நரர் வடிவாய் சிறந்த ஞான குணாநிதியே

1. பருவதம் தோன்றும் முன்னும் பூமியுண்டாகுமுன்னும்
பத்ராசனத்திருக்கும் நித்ய சுயாதிபதி

2. ஆயிரமாண்டுன் பார்வைக்கன்று கழிந்த நாளாம்
ஆண்டவா முடியாத ஆண்டுகள் உன்னதாகும்

3. புல்லோடு நித்திரையும் பூமலர் வெள்ளமொப்பாய்
பூலோக மாந்தர் ஜீவன் போகுது பாவத்தாலே

4. கதையைப்போலாண்டுகளைக் கழித்து விட்டோமே நாங்கள்
இதயத்துனைப்புகழ்திவ்வாண்ட கண்டோமே எங்கள்

5. ஞான இருதயத்தை நாங்கள் அடையும்படி
நாட்களை எண்ணுதற்கு நாதா நற்போதம் தாதா

6. எங்கள் வாழ்நாளெல்லாம் இதய மகிழ்வதற்கு
தங்கும் கிருபையாலெ சம்பூரணம் செய்காலை

7. ஆண்டவா உன் பிரியம் அடியார் மேலாவதாக
அவரவர் செய்கிரியை அங்கங்குறுதியாக

8. மோசே முனி உரைத்த முக்ய கீதம் தொண்ணூறை
தாசன் சற்குணர் கவி சாற்றித் துதிக்கவாராய்

**290. இராகம், தெம்மாங்கு** **(248)**

**வண்டி நல்ல வண்டி இது அன்னமே**
வர்ணமிட்ட சூட்ச வண்டி அன்னமே
எண்டிசையும் புகழும் வண்டி அன்னமே
ஏசுதச்சன் செய்த வண்டி அன்னமே

| | | |
|---|---|---|
| 2. | ஒன்பது ஜன்னல்களாம் | அன்னமே |
| | உள்ளரங்க மெத்தவுண்டாம் | அன்னமே |
| | முன்னோடும் பின்னோடுமாம் | அன்னமே |
| | மூவருட சாயல் வண்டி | அன்னமே |
| 3. | காற்றாலே ஓடுதுபார் | அன்னமே |
| | கண்ட கண்ட தேசமெல்லாம் | அன்னமே |
| | கூற்றன் வந்தால் ஓட்டமில்லை | அன்னமே |
| | கோலமிட்ட சித்ரவண்டி | அன்னமே |
| 4. | உருளை இரண்டு சேர்ந்த வண்டி | அன்னமே |
| | ஒரு நொடிக்குள் சாயும் வண்டி | அன்னமே |
| | ஒருவன் வரும் கூலி வண்டி | அன்னமே |
| | உடையவனுக்கேற்ற வண்டி | அன்னமே |
| 5. | பட்டுப்பணியுடனே | அன்னமே |
| | பலசரக்குமுள்ள வண்டி | அன்னமே |
| | கட்டுமுட்டாய் உள்ள வண்டி | அன்னமே |
| | கங்காளஞ் சேர்ந்த வண்டி | அன்னமே |
| 6. | பாதை தெரியாமலே | அன்னமே |
| | பக்கமாய் ஓடுதடி | அன்னமே |
| | தீதை அறியாமலே | அன்னமே |
| | திண்டுமுண்டாய் ஓடுதடி | அன்னமே |
| 7. | நேராம் நெருக்கு வழி | அன்னமே |
| | நீ தெரிந்து கொள்ளடியே | அன்னமே |
| | பாராயோ சத்ய வழி | அன்னமே |
| | பாதை நல்ல பாதை இது | அன்னமே |

8. சற்றே குடங்கிவிட்டால் அன்னமே
சாற்றிவைக்கும் வண்டி இது அன்னமே
சற்குணன் பாடும் வண்டி அன்னமே
சங்கீதப் பெட்டி வண்டி அன்னமே

**291.** **(261)**

**பல்லவி**

**ஐயோ, கோ! நான் என்ன செய்வேன்**
வியாகுலவாள் ஊடுருவுதே

1. வையத்து மாய்கையினால்
மாபாவஞ் செய்தேனையா தேவா - ஐயோ

2. தூயவா, உனைமறந்து
தோஷத் துரோகஞ் செய்தேனே! தேவா - ஐயோ

3. கண்ணினால் கண்ட பாவம்
கணக்கிலடங்காதே, தேவா - ஐயோ

4. வாயினால் சொன்ன பாவம்
எண்ணத்தொலையாதே, தேவா - ஐயோ

5. ஏசுக்கிறிஸ்தரசே
ஏழைப்பாவிக் கிரங்காய், தேவா - ஐயோ

**292. இராகம் (தேவா இவ் வீட்டில் இன்றே)** **(271)**

**பல்லவி**

**வாது செய்யாதே சீயோன் மாது மயக்கமேது**
கூடிவந்தால் நலமிப்போது

1. ஆதி மனுடர் செய்த தீதின் பெருந்துரோகம்
அந்தகார வல்லமை போக
மாதுவித்தினில் நரனாக பிறந்து சாக

வந்தேனுற்சாகமாக – புவி
மைந்தர் சந்ததி வாழ்க இனி சந்தேகமோ ஓ ஓ
ஓதாயெனது மொழி சூதாய் பிரிய சிநேக அதி உத்தமி
என்னுடன் வாழ்க

2. கோடாகோடி தூதர்கள் கூடி நடனமாடி
கொண்டாடிச் சங்கீதம்பாடி
நிதநீடிய காயமதை முடியடர்ந்து சாடி நித்திய கிரீடம் சூடி
குதித்தானந்தமானாரே அறிவானந்தமானாரே
பேடே மயிலன்னமே நாடும் புறாவன்னமே சற்று கூடி
எழுந்தவாவே

3. ஆட்டம் பரமசேனை கூட்டத்திருந்து நானே
கன அற்புத அற்புதந்தானே
ஒரு மாட்டுக்கொட்டிலில் பிறந்தானெ கானகத்திலங்கு
முன்னே
என்னாட்டத்துக்குரிய மானே கொண்டாட்டத்துக்குரிய
தேனே
பாட்டுக்கும் யூதர் குற்றச் சாட்டுக்கும் உங்கள்
திருப்பாட்டுக்கும் குமாரனே
ஏனை மீட்டு ரட்சித்தகோனே

4. அந்தத்தினில் சிறந்த விந்தை சீயோன் குமாரி
அழகான நடைச் சிங்காரி
சந்திரவதனமதில் சுந்தரமிலங்கொய்யாரி – தரும
சற்குணமென் பாரி உனைச் சந்தித்தேன் அனுசாரி
எந்தவிதமுமுன்னை நந்த மணம் புரிய சிந்தினேனே என்
சோரி
பெருஞ் சொல்லை அனுசாரிகரி சந்த நெல்லையா
னொப்பாரி

**293. இராகம் (சத்திய வேதத்தை தினம் தியானி) (272)**

**பரமண்டலங்களிலிருக்கும் எங்கள்**
பரமபிதாவே நின் கிருபை
சனமது நேரில் பாவி வந்து
பணிந்துன் பாதம் வணங்கி நின்றேன் – ஆமென் சுவாமி

2. ஆ! தேவனின் பேர் நாமமெல்லாம்
மாமேன்மையதாய் மகிமைப்பட
தமியோர் நின் மறைப்படி நடக்க
பணிவோடும்மைப் பணிந்து நின்றேன்

3. ஆ! உம்முடைய ராட்சியமும் வர
அலகை அதிகாரமுமொழிய
மனமோ உமதருளால் நிறைய
பணிவாய் பாதம் வணங்கி நின்றேன்

4. விண்ணதிலெங்கும் உமது சித்தம்
வெகு பூரணமாய் நடப்பது போல்
மண்ணுலகெங்கும் செய்யப்பட
மன்னா பாதம் வணங்கி நின்றேன்

5. அன்றன்று வேண்டிய அப்பமதை
அமலா என்றும் அளித்திடுவீர்
என்றும் திருப்தியோடிருக்க
ஏகனே பாதம் வணங்கி நின்றேன்

6. பிறருக்கு நாங்கள் அவர் குறையை
பிரிய மானதாய் மன்னிக்க
அடியார் பிழையை நீர் பொறுக்க
பணிவாய் பாதம் வணங்கி நின்றேன்

7. சருவ ஜீவ தயாபரனே
சகல சத்துருக்கள் வினையால்
சோதனைக்குட்படாதிருக்க
வேதனே உம்மை வேண்டி நின்றேன்

8. அடியாரை எத்தீமை நின்றும்
அன்பாய் விலக்கித் தந்தருளும்
நல்லாறுதலை எமக்கருள்
வல்லா உம்மை வணங்கி நின்றேன்

9. அடியார் கேட்கும் வேண்டல்களை
சரியாயுந்தன் சித்தப்படி
தருவாயென்று நம்பி வந்து
குருவே உம்மைப் போற்றி நின்றேன்

10. ராஜ்யம் வல்லமை மகிமையும்
ராஜாதி ராஜாவே உமக்கு
தாட்சியில்லாமலே என்றென்றுமே
சதா காலங்களிலும் ஆமென் – ஆமென் சுவாமி

**294. பிலஹரி** **செம்படைதாளம் (273)**

**இராகம் (இந்தக் குழந்தையை நீர்)**

**பல்லவி**

**பாவப்பிணி அகல ஜீவமருந்தீயுமேன்**

**அனுபல்லவி**

சாவின் கூரை ஒடித்த ஜீவநாதா பர்த்தாவே!

1. அன்னை வயிற்றிலே உற்றிந்நாள் வரையிலும் நான்
தின்மை தனக்கல்லால் வேறென்ன நன்மைக்காளானேன்

2. ஜென்ம பாவத்தினோடு கன்ம பாவமும் கூடி
நின்னை அடையாப்படிக் கென்னை அகற்றினவே

3. ஞானவரங்கள் முதலான நன்மைகளைத்தீ
தானவைகள் என்றெண்ணி, யானை அழிவுறாமல்

4. ஐயா, நின் மார்பில் உற்ற துய்யன் யோவான்தனைப் போல்
மெய்யால் நின் நேசத்தை யான் உய்யும் விதம் அடைய

**295. பியாகு** **ஆதி தாளம் (274)**

**பல்லவி**

**ஆத்ம நாதன் திருவடியே நமக்காதாரம்**
சிலுவைக் கொடியே

**அனுபல்லவி**

தோத்திரம் புகழ் துதியே சங்கீர்த்தனம்
பண்பதம் பாடியே – ஆத்தும

1. புத்தியுள்ள கன்னியரே பரிசுத்தராய் விளங்கினரே
நித்திரை மிகச் செய்தவரே – பின்
கத்திக் கத்திப் புலம்பினரே – ஆத்தும

2. ஐங்காயத்தின் அடைக்கலமே, நம்மை ஆதரிப்பதும்
அவர் கரமே, நங்கூரமில்லா மரக்கலமே
நாற்றிசையும் ஓடி அழிந்திடுமே – ஆத்தும

3. ஏன் கலங்குகிறாய் நெஞ்சமே, கிறிஸ்தேசுவானவர்
உன் தஞ்சமே மானிலமுழுதும் பஞ்சமே
இம்மாயை யாவும் பிரபஞ்சமே – ஆத்தும

4. இயேசு கிறிஸ்துவை விசுவாசி, எப்போதுமே
அவரை நேசி, வேதபுத்தகம் தினம் வாசி
அதை வேண்டாம் என்றவர் மாதோஷி – ஆத்தும

**296.** **(275)**

**பல்லவி**

**கருணாலய பீடா – எமைக்**
காராயா மா ஜீவா கீரீடா

**அனுபல்லவி**

காரணா சம்பூரணா விஸ்தீரணா உதாரணா – கருணாலய

1. எரிதழ லதிநெளி கிருமியதாய்
பொரிபடு சிறியனின் புகலிடமாய்
குருஜெப தரிசனமருள் தயவாய்
சரி சரி யொருபர நவமணியாய்
மரிசுதனுனைவிட மறு துணை இலை இலை
மனமகிழ்ந்தெனையொரு மகவெனப்பிடி – கருணாலய

2. அரவின் கடியால் தேரையுமானேன்
அகலஎறி தாமரை நிகரானேன்
பரவுங்கடலில் திரணமுமானேன்
பலரும் வசையாய் பகரவுமானேன்
தருவின் கனியால் பெரும் பாரமிது
தலைமேல் சுமர சதைந்தேன் பிடி – கருணாலய

3. வேதநாயகமே பரம
தாதையே அணைசோதரமே
ஆதரை நராஸ்தரமே
நீதமே செய்கிரு பாகரமே
ஓதரத்தினம் கீதமுன் புகழ்
நாதனே எனைப் பாதுகார் – கருணாலய

**297. பியாகு** **ஆதி தாளம் (276)**

**பல்லவி**

**துரை மகராஜனே ஜேசே**
துரை மகராஜனே சுவாமி

**அனுபல்லவி**

தூரஸ்தலம் போனதாலே மாறிப்போயிற்றோ உன் அன்பெங்கே

1. என் கணவனே குணாளா இன்பமே ரஞ்சித மணாளா
பைங்கிளி என்றன் குணாளாசுகந்த போளகந்தபோளம்

2. தத்தம் அதைத் தந்தாயே இத்தரையிலே வந்தாயே
ரத்தம் சிந்தித் தெத்தெடுத்து சுத்தம்பண்ணி முக்தி தந்தவா

3. செங்கோலும் திருமுடியும் தங்கச் சிலுவைக்கொடியும்
துங்கா உனில் தேவாலங்கிர்தமும் கண்டு அங்கு
வாழுவேன்

4. இந்தோ ஜல்தி வாறேனென்றாய் இந்தளவெங்கிருந்து
கொண்டாய்
சிந்தையுங்கலங்குதே, தியங்குதே மயங்குதே என்

5. விண்ணான ஜோதியிலே கண்ணாடி வீதியிலே
என் ஆவல் தீரப்பாடி உன்முன் ஆடி நின்னை நாடுவேன்

6. பொல்லாத லோகத்திலே நில்லேனிவ்வயதிலே
எல்லாமறிந்த மானே, தொல்லை தீரும் தொல்லைதீரையா

7. பரதேசி ரத்னம் பாவே பரனே சாரோன் லீலிப்பூவே
அரதேசிக்குள்பரிசமீந்து கருணைகூர்ந்த திருமணஞ்செய்ய

**298. இராகம் கரகரப்பிரிய** **ஆதி தாளம் (277)**

**பல்லவி**

**கண்ணையா கண்ணையா உறவாலே தானே**
மனம் சோர்ந்தோன் கனிந்தொரு முத்தி தா

1. கனவோ ராஜையா கண்டேன் கண்டேன் மேசையா
கங்குல் பகலுந்தனின் காதல் கொண்டேன் மேசையா
கண் மயக்கம் காட்டினையே என் உள்ளத்தின் ஏக்கம்
பொய்யே

2. எனக்கோர் வாக்குரை எழுதிக்கொடுத்தவா
எஜமான் நீ எனக்கிருக்கும் போதென்னகுறை
இப்படி எப்படிப் புகழ் செப்பென்னாதென் ஆயுள்வரை

3. நடனமாயாடுவார் ரஞ்சிதமாய் பாடுவார்
நயந்தே கூடுவார் ஞானப்பூ சூடுவார்
நன்றியுடன் நானதைத் தின்று ருசி கொண்டாடுவேன்

**299. பூபாளம் ஆதி தாளம் (278)**

**பல்லவி**

**காலமே தேவு பஜி – அருணோதய**
காலமே தேவு பஜி

1. காலமே நீ எழுந்து கடவுளைத்துதி நன்று
காலதாமதம் நன்றன்று கருத்துடனே

2. சிச்சுக்கிச்சென்று சிட்டு கிளைகளில் கூவுது
கீக்கோ குருவி கத்துது, கருத்துடனே

3. வானம்பாடியருக்கன் வருகையைக் கூறுது
வாசமலர் மலருது, கருத்துடனே

4. மிஞெள மிஞெள வெனத் தம்பூர் மீட்டி மத்தளம்
மேசையனேசுவைக் கிட்டி, கருத்துடனே

**300. ஆனந்தபைரவி** **ரூபக தாளம் (279)**

**பல்லவி**

**தெய்வமே நீர் என் தெய்வமே – தெய்வமே**
நான் அதிகாலையில் தேடி நிற்கிறேனே உம்மை

1. வற்றியே தண்ணீர் அற்றதாய் – அற்றதாய்
வறண்ட இந்த ஆரணிய பூமியிலே

2. உம்மிலே தாகம் கும்முதே – கும்முதே
என் ஆத்துமம் கூறும் உம்மில் வாஞ்சை கொண்டு

3. உம்முடைய மகிமை வல்லமை – கண்முன்
உமதாதுவத்தில் காணத்தேட்டமெனக்கதிகம்

4. தெய்வமே நீரென் தெய்வமே – தெய்வமே
இங்குமது கிருபை ஜீவனிலும் நவம் நவமே

5. தோத்திரம் உமக்குச் செய்திடும் – செய்திடுமே
என் உதடுஜீவனுள்ள நாளெல்லாம்

6. உம்முடைய நாமம் சொல்லியே – செம்மை
என் கையைக் குவித்து சேவித்து ஸ்தோத்தரிப்பேன்

**301. சங்கராபரணம் (மாற்றீரென்கவலை)** **ஆதி தாளம் (280)**

**ஐயரே நீர் தங்கும் என்னுடன்**

ஐயரே நீர் தங்கும் – இப்போ
தந்தி நேரப் பொழிதஸ்தமித்தாச்சே
ஐயரே நீர் தங்கும்

2. பகல் முழுவதும் காத்தீர் – சென்ற
பகல் முழுவதும் காத்தீர் – தோத்திரம்
பரமனே இந்த இரவிலும் காரும்
பாவியை நீர் காரும்

3. நீர் தங்கும் வீட்டில் ஏசுவே
நீர் தங்கும் வீட்டில் – எல்லாம்
நிறைவே அன்றி குறையாமோ கர்த்தா?
நின்னை விடமாட்டேன்

4. எனக்கும் நீர் காவல் ஏசுவே
எனக்கும் நீர் காவல் – எந்தன்
இனத்தார் ஜனத்தார் எளியார் வலியார்
எல்லார்க்கும் நீர் காவல்

5. உம்மோடே தங்குவேன் ஏசுவே
உம்மோடே தங்குவேன் – இரவில்
உம்மோடயர்வேன் சேதமில்லாமல்
உம்மோடெழுந்திருப்பேன்

6. மரணம் ஜெயித்தோர் நீர் மெய்யாய்
மரணம் ஜெயித்தோர் நீர் – உம்மால்
மரணமே கூரெங்கே? நரகே நின்வலு
ஜெயமெங்கே என்பேன்

**302. இராகம் (ஜெயம் ஜெயம் அல்லேலூயா) (281)**

**பாலர்களின் நேசர் ஏசைப்பாடி துதி சொல்வோமே**
சாலவே ஆலயஞ் சென்று சாற்றிப் புகழ் சொல்வோமே

2. எங்கள் மலை எங்கள் கோட்டை எங்கள் மீட்பர் ஏசுவே
எங்கள் ஜெப தியானங்களை ஏற்றுக்கொள்ளும் ஏசுவே

3. ஒன்றாகவே ஆண்டிருக்கும் பிதா சுதனாவிக்கும்
இன்றுமென்று மெய்ப்போதுமே தோத்திரமுண்டாகவும்

4. பரமதில் உம்மையல்லால் யாரெமக்குண்டேசுவே
பூவுலகில் எங்கள் நாட்டம் நீரல்லால் வேறில்லையே

**303. இராகம் (மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்) (282)**

**பல்லவி**

**ஏசுவுக்கோசன்னா பாடிப்புகழ்ந்திட**
ஏகமாய் கூடுங்கள் தோழரே

**அனுபல்லவி**

ஏசுவே பாவநாசர் ஏசு தயை நாடுங்கள்
ஏசுவே பாலர் நேசர் எக்களிப்பாய்ப் பாடுங்கள்

1. பாவிகள் நீர் சண்டை பாசாங்கோடக்கிரமம் பண்ணினீர்
தூஷணம் பொய் சொன்னீர் – பாலர் நீர்
செய்த பாவப்பரிகாரனாய் பாடுபட்டாரேசு பாருங்கள்
பாவத்தின் நாசர் ஏசு பாடுபட்டார் உனக்காய்
பாலரின் நேசரிப்போ பாலர் வந்தால் தள்ளாரே

2. ஏதும் நீதியற்ற பாதகன் நானையா
என்றறிக்கையிடுவாயானால்
ஏதும் விலையின்றி ஈவார் மீட்பு சுத்தம்
இன்பம் இதயத்தில் என்றென்றும்
ஏசுவின் ரத்தத்தால் ஏதும் பறந்துபோம்
ஏசுவில் அன்புற்று பெறுவாய் ஜெயமென்றும்

3. சிங்கம்போல் கெர்ச்சிக்கும் சீர் கெட்ட சாத்தான் சீறல்
கேட்டேன் செய்வேனென்றாரெ – சிக்கிட சத்துரு
செய்திடும் கண்ணியில் சிக்குண்ணும் தன்மையதுள்ளோரே
ஏசுவே யூதாசிங்கம் என்னால் ஒன்றிலையென்று
ஏசுவினண்டை தங்கும் ஈவார் ஜெயம் என்றென்றும்

4. தம்மிடத்தில் விசுவாசம் வைப்போர் என்றும் தங்கி
மகிழ்பட மோட்சத்தில் – தங்கவீடாயத்தம்
பண்ணியுனக்கதைத்தாறேன் வா என்றார் நம் மீட்பர்
தாமதம் செய்திடாமல் சகோதரா ஓடி வா
சந்தோஷமாகப்பாடு சதாகாலம் ஓசன்னா

**304. சகானா** **ஆதி தாளம் (284)**

**பல்லவி**

**ஆண்டவர் வேதம் குறைவற்றதினால் ஆத்துமமுயிரடையும்**

1. ஆண்டவர் சாட்சி சத்தியமே அதனால் பேதையும்
நல்ஞானி–நமதாண்டவர் கற்பனை செம்மை நல்லிதய
ஆண்ட
ஆனந்தமாகிடுமே அருளானந்தமாமே – ஆண்டவர்

2. ஏகோவா கற்பனை துய்ய வெள்ளை இருட்கண் தனக்கது
வெளிச்சமுமாம்
நமதெகோவாவுக் கஞ்சுதல் பரிசுத்தம்தானே
என்றென்றும் அதுவே நிற்கும் இன்பநிலையுள்ளதாமே
– ஆண்டவர்

3. ஏகோவா ஞாயங்கள் உண்மையதாகும் எல்லாம் அதுகள்
நீதியுமாம்–பின்னும், வெகுவாம் அபரஞ்சிப் பொன்னிலும்
அதுகள்
விரும்பிடத் தக்கதுகள்; வெகு இனிமையுமாமே – ஆண்ட

4. தேன் கூண்டொழுதல் தேனிலுமதுகள் திகட்ட
மதுரமதாயிருக்கும்
பின்னும், நானுமதடியேன் தானுமதினால் நல்
எச்சரிப்படைவேன்
இனிமை எச்சரிப்பாமே – ஆண்டவர்

5. அதுகளைக் கைக்கொண்டு வருவதினால் அநேக
பலனுண்டாகிறதே
ஆகா, அதுகளால் தன் பிழை உணர்ந்தறிந்திடுவோர் ஆர்
இந்தப்
பூமியிலே; அருள் தெளிவின் கண்ணாடி – ஆண்டவர்

6. மறைவாம் பாவப்பிழைகளாலடியேன் மடியாப்படிக் கதை
விலக்கிடுமே–பின்னும், அறிவின் துணிகரப்
பாவமுமென்னை
அளாப்படிவிலக்கும்; அறிவு காட்டிய விளக்கே
– ஆண்டவர்

7. அப்பொழுதடியே னிருதய உண்மை அடைந்தவனாக
இருப்பேனே
பின்னும் தப்பிதம் பெரிய பாதகத்திரட்குஞ் சாய்வின்றி
நீங்கிடுவேன்; சருவ சத்திய நிலையே – ஆண்டவர்

8. என் கன்மலையும் மீட்பருமான ஏகோவாவே உமக்கு முன்
உமக்கேற்க; இப்போ என் வாய் சொற்களும் இருதய
நினைவும்
இன்பமாயிருக்கட்டுமே; இன்ப இருதய நிலையே– ஆண்ட

**305. இராகம் (தேவப்பிதா என்தன் மேய்ப்பனல்லோ) (285)**

**பல்லவி**

**திருமுதலொரு பொருளாம் பரனே**

வருவாய் ஆசி தருவாயே

**அனுபல்லவி**

இருவரோ மூவரோ என் பெயரால்
இசைந்திருந்தாலிடை வருவேனேன்ற

1. காதினில் தொனிக்கும் நல்லுன துரையை
கருத்துடனே யகத்திருத்தி வைத்து
வேதனே எம் நடக்கையில் விளக்க
வேண்டுமுன்னருள் புரிவினை நாசா – திரிமுதலொரு

2. நன்னில மதில் விழுவிதை எனவே
நாதனே யுன் வசனம் பலித்தே
ஒன்று நூறாய் பலன் தந்திடவே
உதவி செய்வாய் பர உபகாரா – திரிமுதலொரு

3. பறவைகள் விதைகளைப் பொறுக்காமல்
படருமுள் முளைகளை நெருக்காமல்
அறுப்புக்குத் தகுமணி மிகப்பயக்க
அருள் மழை பொழிந்து நற்பயிர் வளர – திரிமுதலொரு

4. பேசும் நின் தாசர்க்கு வாக்குடனே
பேர்வரம் ஆவியும் ஈந்திடுவாய்
நீசர் மன்றாட்டினை ஏற்றருள்வாய்
நிறை தயை சாகா தாரகமே – திரிமுதலொரு

**306. இராகம் (ஆரிவராராரோ) (286)**

**பல்லவி**

**ஓய்வுநாள் இது சபையே – தேவன்**
உவந்துனக்கருளினாரே

**அனுபல்லவி**

ஆதலால் அவர் திரு ஆலயம் ஏகுவோம்
வா திருச்சபையோரே

1. புவி வான் உயிர் படைத்து – தேவன்
புகழோடு தொழில் முடித்து
ஆறுதினம் சென்றேழில் அமர்ந்தனர்
ஆ! திருச்சபையோரே – ஓய்வு

2. வேலை ஜோலிகள் நிறுத்தி – நமது
தேவனை முன்னிறுத்தி
காலை மாலை தவறாது தேவாலயம்
வா திருச்சபையோரே – ஓய்வு

3. நாள் இதை நினை மனமே – நமது
நாதன் உயிர்த்ததினமே
வானிருந்திறங்கின வலுதிரு ஆவியின்
நாள் திருச்சபையோரே – ஓய்வு

4. கர்த்தர் வசனம் கேட்டு – அதை
பத்திரம் அகம்வைத்து
கற்பனை நான்கினில் கர்த்தருரைப்படி
காதிருச்சபையோரே – ஓய்வு

**307. இராகம் (ஜீவ நாயகரிதொ சிசுவாக) (287)**

**பல்லவி**

**பூசத்ரபதி கல்யாணி சபாமணி சிரசே – ஓ**
நித்திய மங்களம் பாடிக்கிரஹணம் செய்யரசே

**அனுபல்லவி**

தாமத மென்ன சுவாமி தாகமாகிறேனே

1. பக்தி மலர்கள் வாடி பங்கமாகிறதே – ஜெய
புஷ்பமும் சிறைமீறி பளிங்காய் காணுதே

2. எப்போ எந்தனைக்கூட்டி இன்ப வீடு சேர்ப்பாய்
அப்பனே மணாளா என் ஆசைப்பாடு தீர்ப்பாய்

3. நாமோக்ஷ கணங்கள் கூவும் நாதம் கேட்கலையோ
அத்தனே மணாளா ஆசைப்பாட்டில்லையோ

4. தம்பூர் பிற்றில் மிர்தங்கம் ஜாரங்கி முழங்க
சதா கிருபாநிதி சாரம் மேகம் போலிலங்க

5. ரத்தினப்பரதேசி நாவலப்பதனே – எனை
நித்தம் நித்தமும் நேசி நேசி சிநேகிதனே

**308. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (288)**

**பல்லவி**

**இவராலேயல்லோ பரதேசியாகினேனையா**
இனந்தானே சகியுன் மனங்கல்லோ என்னோடுவாசும்மா

**அனுபல்லவி**

ஏகாம்பரஜோதி பரனிவர் என்மேல் தயாபரராம்

1. இனமும் ஜனமும் பணமும் கனமும் எனக்கோ பெரிதல்ல– இவர்
குணமும் மனவிற்பனமும் பிரியாவனமும் என் சொல்ல

2. சுந்தர சுந்தர கந்த நிறைந்தவர் எந்தனை புரந்தனராம் – எனை
அப்புறம் இப்புறம் எப்புறமும் சுமந்தாண்ட சுமந்தனராம்

3. சோலையில் வந்தவர் சாலையில்லாவழி கால் கடவே நடந்தார் – கொடும்
தோஷியே ஆறு சீர் மாசற்ற எத்தனை சோபனமாய் மணந்தார்

4. சொல்லலம் சொல் சொல் இல்லை இலை இலை நல்லம்பல குன்றாம் – ஜல்
திம் திம் திம் திமி ஜெந்திரி கிடவன் திரு நட எம்பலனாம்

5. எத்தனை பாக்கியம் எத்தனை இன்பம் எனக்கிதே யானந்தம் –ராஜ
ரத்தினம் கவியைக் கற்கண்டதாக இவர் கண்டதாலே சொந்தம்

**309. மலையாமி** **திரசு தாளம் (290)**

**பல்லவி**

**ஆ! நேசம் தனை அற்றவன் ஏன் பிறந்தான்?**
மாதோஷம் அவன் வாழ்க்கை நிலையாதே
ஓ மோசம் அவன் ஊதியம் தான் அவமே

1. கண்ட சகோதரன் மேல் அன்பு கூராத
கன்னெஞ்சனானவன் தான் – காணா
அண்டர் கோமனை அறிந்தவரில் அன்
படைகுவதெப்படியோ

2. உற்ற சகோதரன் தன்னைப் பகைத்தவன்
ஓர் கொலைகாரன் என்றே – வேதம
குற்றி உரைப்பதினால் அவனைப் பழி
கூடத்தொடர்ந்திடுமே

3. கூடிக்குலாவி இருக்கும் சகோதரர்
கொள்ளும் இனிமையதை – பகை
மூடிப்பிரிந்து கலகம் புரிகின்ற
மூர்க்கன் உணரானே

4. ஆறுதலில்லை அமைதலுமில்லை அன்
பற்றவன் உள்ளமதில் – மிகு
தாறுமாறாக பல பல எண்ணங்கள்
தாக்கி உலைத்திடுமே

5. சாவு வரையில் பகையில் நிலைக்கும்
தருகணன் பேர் கெடுமே – அவன்
ஆவி பிரிந்த பிற்பாடும் எரி நர
காக்கினை சூழ்ந்திடுமே

6. இப்படி நேசமிலான் நிருவாகம்
இருக்க முயற்சியுடன் – அன்பு
துப்புரவும் மாயம் அற்றதுமாகத்
துலங்க வகை பாரும்

7. பூரண நேசம் பயத்தைச் சரிவர
போக்கடிக்கும் அதனை – சற்று
நேரம் அல்ல நீர் எந்நேரமுமுற்று
நிலைக்க வகை பாரும்

8. வேதம் முழுவதும் ஓதும் அன்பானதில்
வீற்றிருக்கின்றதினால் – அதை
நாதனுக்கேற்க அடைந்துறவாகில் எந்
நாளும் சுகிப்பீரே

9. இன்புடன் யாவரும் கலந்து குலாவிட
ஏற்ற வகை தேடும் – அதற்
கன்பின் விருந்தை அறிகுறியாக
அமைந்தங்கனல் மூட்டும்

10. தேவ வசனப்படியே இவ்வாறிங்கு
செய்ய மனமிணங்கி – அன்பை
ஆவலுடன் குறைவின்றி அடைந்திடில்
ஆனந்த பாக்கியமே – ஆ! நேசம்

**310. செஞ்சுருட்டி** **சாப்பு தாளம் (297)**

**பல்லவி**

**விச்சித்திரமென் குறியம்மே – பன்னிரு**
நட்சத்திரம் பூண்ட நராதிபப் பெண்ணே

**அனுபல்லவி**

அச்சய தேசமதான – யோர்தா
னாறோடுங்கானானு தேசமதெங்கும்
நிச்சயமாய் குறி சொல்லி – நான் பெற்ற
நேரான விருதுகள் பாராய் நீ அம்மே – விச்சித்

1. முன்னாளி லெகிபத்துத் தேயந் – தன்னை
முக்கியமாயாண்ட பார்வோனு வென்ற
மன்னோனிடத்திற் சென்று – அவன்
மந்திரியாக விருந்து கொண்டன்று
தென்னாரும் யாக்கோபுத் தீர்க்க – னருளிய
தேசிகனாகிய யோசேப்பு சிங்கன்
சொன்ன குறியதினாலே – பெற்ற
சுந்தரமோதிர மிந்தா பாரம்மே – விச்சித்

2. அன்பாக நேபுதாத் நேச்சா – ரென்ற
அண்ணலுல கினையாண்டரும் நாளில்
வன்பாக சாஸ்திரிமார்கள் – சொன்ன
மாறாட்டக்குறி மெத்தப் போராட்டமென்று
தென்பாக அவர்களை வெட்ட – அந்தச்
செய்தியைக் கேட்டெங்கள் தானியேல் தீர்க்கன்
நண்பாக மெய்க்குறி சொல்லிப் – பெற்ற
ரத்தின சரப்பளி மெத்தவுண்டம்மே – விச்சித்

3. எலியாசுத்தீர்க்கனினாளி – லுல
கெங்கேயும் கடும்பஞ்ச முண்டானபோது
தொலையாத கவலையினாலே – காட்டிற்
சுள்ளியொடிக்க வந்த கைம்பெண்டீரண்டை
மலையாதே எண்ணையுமாவு – மினி
வற்றாது என்றவனுத்தாரம் சொல்லப்
பலகாரம் தோசைகள் சுட்டு – அவன்
படைத்துப் படைத்துக் குறி கேட்கலையோ அம்மே–விச்சித்

4. நூற்றுயிருபதாண்டாக – எங்கள்
நோவாவுத்தீர்க்கனும் வாகாகச் சொன்ன
தேற்றுதலாங்குறி கேட்டுத் – தவஞ்
செய்யாத பாவிகள் தண்ணீரில் மாள
மாற்றமில்லாதவன் விட்ட – கன
மாரியிலே மகா வீரியமாக
ஏற்றத்திலே தப்பிப்போன – அந்த
எட்டுப்பேரெங்களுக்குக் கிட்டத்தானம்மே – விச்சித்

5. வானோனும் நினிவை மாநகரை – யொரு
மண்டல நாற்பத நாளைக்குள்ளாகத்
தானாக அறிவுறச் செய்வோ – மதைச்
சாற்றுவாய் நீ என்று யோனாவுக்கோத
ஆனாலும் நானம்பமாட்டே–னென்
றப்பாலே யோடியோர் கப்பற்குள்ளேக
மீனாலே அவன் தனைப்பிடித்துப் – பின்னும்
வீட்டுக்குறி சொன்ன மேன்மை பாரம்மே – விச்சித்

6. ஏசையா எரேமியாத் தீர்க்கன் – மறை
எசேக்கி யேலுடன் தானியேல் தீர்க்கன்
ஓசையா மல்கியா தீர்க்க – னுயர்
யோவேல் செப்பனியா சகரியா தீர்க்கன்
மோசேசு எலியாசு தீர்க்க–னந்த
முக்கிய சாமுவேல் தாவீதுத் தீர்க்கன்
மேசியாத் தீர்க்கனின் மேலே – சொன்ன
மெய்யான குறியிப்போ கைமேற் பாரம்மே – விச்சித்

**311.** **(302)**

**பல்லவி**

**இலவசமாய் கிடைக்கும் இன்ப சதானந்த சுகம்**
இலவசமாய் கிடைக்கும்

1. பாவவிமோசனமும் பரம சிம்மாசனமும்
தேவ ராப்போஜனமும் – இலவசமாய்

2. கிரியையினால் அல்ல சுத்தகிருபையினால் மெத்த மெத்த
பரம சகாயங்களெல்லாம் – இலவசமாய்

3. புத்திர சுவிகாரருக்கு புனர் ஜென்மத்தோர்களுக்கு
சித்திர விசுவாசிகட்கு – இலவசமாய்

312.

**எங்கே தேடுவேன் – நான்**
எங்கே தேடுவேன்
என் நேச யேசுவை – நான்
எங்கே தேடுவேன்

1. உன்னத ராஜனே ஆ... என்
உத்தம நேசரே
உந்தன் அன்பாலே – எந்தன்
உள்ளம் உருகுதே – எங்கே

2. மலையின் நடுவிலோ – நேசரை
மல்லிகை வனத்திலோ
மாடி மேடையிலோ – எந்தன்
மன்னவன் மத்தியிலே – எங்கே

3. அழகாய் மான்போல – நேசர்
அலைந்து வாராரே
ஆசை குமாரருள் ஆ என்
அன்பர் ஒருவரே – எங்கே

4. காட்டு மரங்களுள் – நேசர்
கிச்சிலி மரம்போலும்
கமழும் மலருள் – நேசர்க்
கீந்த ஜீவியம் – எங்கே

5. அழகாய் வந்தவர் – நேசர்
அன்பு மிகுந்தவர்
அறிவு மிகுந்தவர்
அனைத்தும் அறிபவர் – எங்கே

6. காலையில் தேடுவேன் – நேசரை
கண்டு மகிழுவேன்
கருத்தாய் பாடுவேன் – நேசரின்
காதலை நாடுவேன் – எங்கே

313.

**பல்லவி**

**சகி, நாதகீதராணி; னோரஞ்சித பூரணி – தேவ**
நன்மை கொண்டு வருங்காரணி, ரணபிணி சூரணி
சுகி ஞான மனோன்மணி

1. துன்ப உலகிது தாண்டி சோருவதேன் சகிமானடி
உம்பலமாகுதடி சகி உம்பலமாகுதடி – சும்மா
அம்பலச்சித் தம் முன் கும்மியடி ஆனந்தம், இங்கே
கொஞ்ச துன்பம் அப்புறம் இன்பமடி – சகி

2. இனத்தை ஜனத்தைப் பார்ப்பதேன் தனத்தைக் கனத்தைச் சேர்ப்பதேன்
எத்தன்மை வாழ்விதடி புகைய த்தன்மையானதே – ஐயோ
ஏன் இந்த அற்பத்திலாசையடி, இங்கித பொங்கி
இதயம் இலங்க சுகந்தப்பொடி – சகி

3. பாவாரங்களைச் சூட்டடி தேவாரங்களைப் பூட்டடி
ஜீவானந்தமடி சகி வேவானந்தம் பாடி – மனோ
தாவர வீணையோடுகூடி, நாதனடி பாடியாடி
ரத்னத் தாளத்தோடு கூடி – சகி

**314. இராகம் (ஆனந்தமே பேரானந்தமே)**

**வாருமையா போதகரே, வந்தெம்மிடம் தங்கியிரும்**
சேருமையா பந்தியினில், சிறியவராம் எங்களிடம்

2. ஒளி மங்கி இருளாச்சே உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம் காதலனே கருணை செய்வாய்

3. ஆதரையிலெம் ஆறுதலே, அன்பருக்கு சதா உறவே
பேதையர்க்குப் பேரறிவே, பாதைமெய் ஜீவ சற்குருவே

4. நாமிருப்போம் நடுவிலென்றீர், நாயனுன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய, தற்பரனே நலம் தருவாம்

5. உந்தன் மனை திருச்சபையை, வையமெங்கும் வளர்த்திடுவாய்
பந்த மற பரிகரித்தே, பாக்கியமளித்தாண்டருள்வாய்

6. பாடும் தேவநாயகன் கவி, பாரினில் கேட்டனுதினமும்
தேடும் தொண்டர் துலங்கவுந்தன், திவ்ய ஆவி தந்தருள்வாய்

**315.** **(250)**

**பல்லவி**

**மங்களம் ஜெய மங்களம் கிருபாம்பர தேவர்க்கே**
வாழி கனம் ஊழி ஊழி வல்ல தேவர்க்கே

1. தேவதா பிதா சுதா சுத்தாவி யேகத்தா
திரியோகாம்பர திரிலோகாதி திரிலோகாதியா

2. தம்பூர் பிடில் மிர்தங்கம் வீணை சரப்தசாரங்கி
ஜாலா டிக்ரி கன்செர்ட்டினா நாதத்தோடிலங்க

3. வானசுர சேனையோடு மானிடர் நாமும்
ஞானக்கியான தியான கீர்த்தனம் பாடு ஜமாஜம்

4. ரத்னப்பரதேசி சக்தி முக்தி நீதானே
மோனசுந்தர தானதர்ம ஞான பூமானே

5. இங்கு வந்திருக்கும் எல்லாரும் வாழ்கவே
இங்குகூடி பாட்டுப்பாடும் பாடகர் வாழவே

6. இந்த சபையார் இந்த வீட்டார் என்றும் வாழவே
எங்கள் ஏசு மகாராஜர் என்றும் வாழவே

**316. பியாகு** **ஆதி தாளம் (298)**

**பல்லவி**

**அந்தரபானு சுந்தர ஜோதி அம்பரமே மங்களம்**

**அனுபல்லவி**

அன்றுமின்றென்றும் அனாதி நீர்தாமே
அடைக்கலமளித்திடும் அனுக்கிரமே

1. தோத்ரபலி சுகிர்தபலி சுகந்த உன் பிரீது பலி
சொல்லுவோம் லாலி அதுவே எம் ஜோலி
சகா சலா பலாபலன் கொடுத்தம் சலி

2. தம்பூர் சுரமண்டலம் ஜரங்கி மிர்தங்கம் தாளம் வீணைதயாளா
ஜம் ஜம் ஜம் மென்றும் கிண் கிண் கிண்ன்றும்
தளாம் பளாம் ஜலீர் கிலீர் ஜலீரெனவே

3. ரத்தின ராஜன் சித்தனென்றோடி நாடிவந்து கூடி
ஞானப்பூ குடி நல்லுறவாடி
நயம் கொடுத்திதம் புரிந்துளங்களிப்பாய்

**317. செஞ்சுருட்டி** **ஆதி தாளம் (299)**

**பல்லவி**

**மங்களம் சுபமையா பூமாது மணவாளா**

**அனுபல்லவி**

மங்கையனே மரிபால, சீராளா பரமதயா குணாளா– பூமாது

1. சுந்தரமிகும் பரஜோதிக் கண்ணாடி
வந்தனம் அனந்தங்கோடி – பூமாது

2. பரமபிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும்
நரர் குருவே உமக்கும் – பூமாது

3. அன்புடனே எமை அழைத்து வந்தீரே
இன்ப கரம் கொடுப்பீரே – பூமாது

**318. இராகம் (நேசமணி வாசமணி)** **(300)**

**பல்லவி**

**மங்களங்கள் பாடிடுவோம் சங்கீத தியானத்தோடு**
இங்கிதமாயிங்கு கூடி சங்கை திரியேகர்க்கு

1. அண்ட சராசரங்களெல்லாம் எண்ணமுடனே வகுத்த
தொண்டர்களின் நாயகனுக்குத் தொண்டனிட்டுத்
தெண்டனிட்டு - மங்களங்கள்

2. வானலோகத்தை விட்டு ஈனப்பாவியை யிட்டு
தானமாக உயிரீந்து தீனரெமை மீட்டவர்க்கு - மங்களங்கள்

3. சத்திய நெறியிலேற பக்தியில் தினமும் தேற
புத்தியதை நித்த நித்தம் தந்துவரும் சுத்தாவிக்கு-மங்களங்

4. எல்லாம் படைத்தவர்க்கு பொல்லாரை மீட்டவர்க்கு
நல்வரங்கள் நமக்கீயும் வல்ல பரிசுத்தாவிக்கு-மங்களங்கள்

**319.** **(309)**

**ஜீவ சுந்தர விலாசா மங்களம்**
ஜெயாசனம் கிருபாசனம்
சித்சபா சின்மயா தியாகராஜ மோசையா
சீர்மிகும் பேரின்ப நாமமீது மங்களம்
ஞானக்கியான தியான மோன சிந்தர மங்களம்

2. வீணை தம்பூர் கிண் கிண் ஜாலர் தொனிக்க
மிருதங்கமும் திம் திம் மென்றொலிக்க
மீட்டுடன் சாப்புடன் பாடகர் நடனிக்க
தேவசித் சதானந்த சபையில் மங்களம்
மேலுலக ரத்னபுரி விலாச மங்களம்

320.

**பல்லவி**

**போற்றுவோம் ஏசுவுக்கே துதி சாற்றுவோம் சரணம்**

1. ஏற்ற தருணம் ஊற்றுவோம் இதயம்
தேற்றிடற்கு ஏற்ற நாதனை ஏற்றியே புகழ்வோம் – போற்று

2. கருணாகரப் பரமா காதல் எம்மில் கொண்டோ
தாரணியில் தாசனாக தாழ்மையானீரோ – போற்று

3. புற ஜாதியோனோரைப் புறம்பாக்க எண்ணாதே
உறவாடுதற்கு உன்னதத்தில் உரிமையீந்தீரே – போற்று

4. ஆசீர்வாதங்கள் ஆசையோடெம்மில்
கூசிடாமல் ஈசனீந்த நேசமுணர்ந்த – போற்று

5. பறக்கும் அம்புகள் எம்மை வதைத்திடாமலே
உறங்கிடாது ஊக்கமுடன் எகந்தணைத்தாரே – போற்று

6. ஆவியின் அருளீந்து தாவி எமைச் சேர்ந்து
பாவிகளெமை அன்பிலொன்றாய் ஆகுமருளீந்தார்
– போற்று

**321. பியாகு (நீதியாமோ நீர் சொல்லும்) ஆதி தாளம்**

**பல்லவி**

**இவரே பெருமான், மற்றப்பேர்**
அலவே பூமான், – இவரே பெருமான்

1. கவலைக்கிடங் கொடுத் தறியார், – வேறு
பவவினை யாதுமே தெரியார், – இப்
புவனமீது நமக்குரியார் – இவரே

2. குருடர்களுக் குதவும் விழியாம், – பவக்
கருமஇருளை நீக்கும் ஒளியாம் – தெய்வம்
இருக்குந் தலஞ்சல் வாசல் வழியாம் – இவரே

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, – சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி, – எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி – இவரே

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், – கொடு
மறம் விடு பவர்க்கருள் முத்தன், – இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன் – இவரே

5. அலகைதனை ஜெயித்த வீரன், – பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன், – விண்
ணுலகு வாழ்தேவ குமாரன் – இவரே

6. பொன்னுலகத் தனில்வாழ் யோகன், – அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன், – நம்பால்
தன்னையளித்த ஓர் தியாகன். – இவரே

**322. இராகம் பியாகு** **ஏக தாளம்**

**பல்லவி**

**ஏசு ராஜா இதென்ன கோலம் – நீர்**
ஏழையாய் வந்த காலம்

1. சொந்தத் திருமகனார் – நமை
மந்தையிற் சேர்ப்பதற்காய் – மகா
நிந்தைக்குள்ளான ரல்லோ – ஏசு

2. ஞானக் களஞ்சியத்தை – பொய்
யான மனுடர் கூடி – அவ
மானப் படுத்தினாரே – ஏசு

3. வெண்ணங்கி நானுடுத்த – கொடும்
முண் முடி செவ்வங்கியோ – என்
அண்ணலே நீரணிந்தீர் – ஏசு

4. எல்லா உலகத்தையும் – ஒரு
சொல்லால் படைத்தீரல்லோ – உம்
வல்லபம் எங்கே ஐயா – ஏசு

**323. கோதாரகௌளம் ஆதி தாளம்**

**பல்லவி**

**கொலைக்காவனம் போறார், அன்னமே – ஆதாம்**
கொடிய பாவத்தால், இதோ முனன்மே

**அனுபல்லவி**

வலமைச் சதா நித்திய
தலைமைத் தேவாதி பத்திய
வஸ்தனாதி திருச் சேயன்
உத்தம கிறிஸ்து நாயன்
மனுடர்களுட பிணையாளி மத்யஸ்தன்
எனுட பிரிய மணவாள சிரேஷ்டன்
வங்கண விங்கித லங்கிர்த நேசன்
சங்கமுழங்கிய சங்கையின் ராசன்
மருகிய துயரொடு குருசினில் மடிய
திருவுளமாய் நமதேகவுங் கொடிய – கொலை

1. பொந்தியுப்பிலாத் துவின் கீழாக – நின்று
புண்ணியனார் பாடுப்பட்டுச் சாக
பூரியர் ஆரியர் வீரியமாயடர்
காரிர வேசெய் கொடூரமலாதினம் – பொந்தியு
புடவிக்கிருளே விடியற் பொழுதே
படிறுக் கொடியோர் இடு கட்டுடனே யிரண
போரினா ரவாரமாக மனுடகு
மாரான் மீத கோரமாக முறையிடப் – பொந்தியு

2. சிந்தை நடுங்கச் செய்யும் லோக ஞாயத்
தீர்ப்பின் உபாயமெல்லாம் போக
புந்திக்கடாத மாயம் போடிச் சம்பிரதாயம்
பொய்மை மனதான நேயம், பொற்புப் பேச்சா
லென்னாதாயம்
போதகராகிய காதகர் கூறவும் யூதர்களாம் வலுபாதகர்
சீறவும் – பொந்தியு

**324.**

**எருசலேமே (4 தடவை) என் பிரிய சாலேமே**
விரும்பி வந்தேன் பார்! இதோ பார், இதோ பார்!

2. கனியைக் காணேன் (4 தடவை) கனிந்துருகியே
தனியே யான் வந்து, தவிக்கிறேன், தவிக்கிறேன்

3. இந்த நாளாயினும் (4 தடவை) இணங்க மனமோ
எந்தனிடம் பெறச் சமாதானம், சமாதானம்.

4. சுவாமி ஏசு (4 தடவை) சந்திக்கும் காலமோ
சாய்ந்து போகுதையோ, பரிதாபம் பரிதாபம்

5. கண்கள் இல்லையோ (4 தடவை) கர்த்தனுன் ராஜாவை
கண்டானந்தித்துமே, களிகூர, களிகூர

**325.**

**பல்லவி**

**எந்தன் பூமானைக் காண சிந்தை பெருகுதையோ**
என்றைக்குக் காண்பேனோ! – ஓ! ஓ!

1. சுந்தரத்தில் மிகுந்து அந்தரத்திலிருக்கும்
எந்தன் பூமானைக் காண – அழகுடைய
அண்ணல் இயேசுவைக் காண – எந்தன்

2. விண்ணிலிருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர் – லாசருக்காக
கண்ணீரை விட்டழுதவர் – எந்தன்

3. இன்னும் வர என்ன தாமதம் சொல்லுமோ
சொன்ன வாக்கை நினைத்து – அடியேனுந்தன்
பாதம் பணிந்து வந்தேன் – எந்தன்

4. பொல்லாதோரை இரட்சிக்க வல்லபராபரன்
என்னதுய ரடைந்தார் – அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை – எந்தன்

5. கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும்வேளை
என்னை நினைத்தீரே நீர் – அதை நினைத்தால்
உம்மை மறப்பேனோ? நான் – எந்தன்

### 326. இராகம் (இங்கிலீஷ்) ஏக தாளம்

**பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி**
பாடி மகிழ்ந்தாடி யங்கே கூடிட
பரமானந்த கீதமங்கெழும்ப
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

2. ஆட்டுக்குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினோரெவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

3. பேதுரு பவுலும் யோவானு மங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்தச் சாட்சிகளும் திரளாய்க் கூட
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

4. ஜெகத்தில் சிலுவை சுமந்தோ ரெல்லாம்
திருமுடி யணிந்திலங்கிடவும்
தேவசேயர்களா யெல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

5. சோதனைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லைதனை சகித்தவரும்
ஜோதி ரூபமாய் சொர்லோகில் ஜொலிக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

6. கன்னிகையைப் போல் கர்த்தன் சபையன்று
மன்னர் மணாளனேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நிலைருசிக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

### 327. இராகம் (வாருமையா போதகரே)

**இந்துதேச மாதர் நாமும், எழுந்திடுவோம் ஏசுவுக்காய்**
சுந்தரமைந்தன் துணையால், ஜோதி எங்கும் வீசிடுவோம்

2. இருள் நிறைந்த புவியிலெமக், கேசுவொளிகாட்டின் போல்
அருளின்றி தவித்திடுவோர்க், காதரவே புரிந்திடுவோம்

3. காலையில் நாம் எழுந்திடுவோம், காத்தன் முகம் கண்ட பின்னே
வேலையில் நாம், தரித்திடுவோம், விளக்கொளிபோல் விளங்கிடுவோம்

4. அன்புடன் பொறுமை தினம், ஆபரணமாக்கிடுவோம்
இன்பமிகும் குடும்பஜெபம், என்றுமே கைவிடாதிருப்போம்

5. நாம் வளர்ப்போம் நம்சிசுவை, நலமிகுந்த பாதைகளில்
சாமுவேலைப்பொலனுதினமும், ஸ்வாமி தரிசனமடைய

6. காட்டிடுவோம் வீட்டிலன்பை, கண்டிடுவோர் மகிழந்திடவே
வீட்டிலில்லா வெளிச்சடங்கை, வேஷமென்று
விலக்கிடுவோம்

7. ஆலயம் நாம் ஏகிடுவோம், அன்பர் கூடி தொழுதிடவே
சாலவுமே மாதர் சங்கம், தழைத்திடவே உழைத்திடுவோம்

8. ஏசுவென்னும் சுந்தரனை இதயமதில் இருத்திடுவோம்
காசினியில் கதிபெறவே, ஆசிபுரிபவரவரே

**328. இராகம் பியாகு** **சாப்பு தாளம்**

**பல்லவி**

**கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்

**அனுபல்லவி**

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
எண்ணில்லா ஒத்தாசை என்றனுக்கே வரும் – கண்களை

1. காலைத் தள்ளாடவொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாடவொட்டார்,
வேலையில் நின்றிஸ்ரவேலரைக் காப்பவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் – கண்களை

2. பக்தர் நிழல் அவரே – என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலைமையில் எனைச்சேதப்படுத்தாது
அக்கோலம் கொண்டோனை அக்காலம் பரியவே
– கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்கு வரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்களை

**329.**

**ஆதியும் அந்தமும் இல்லா சரணம்**

அதுமுன் அதுமுன் அதுமுன் சரணம்
அல்பா ஒமேகாவே சரணம்
அடியார் நடுவே முடிவே சரணம்

2. மாதர்கள் மைந்தர்களில்லா சரணம்
மானுடவதார குமார சரணம்
மாசில்லாத மணியே சரணம்
மன்னா பொன்னா மின்னா சரணம்

3. ஜாதி ஜனங்களில்லா சரணம்
நன்னா வானா ஞானா சரணம்
சர்வ வியாபி சர்வ வல்லபனே
சரணம் சர்வேசுரனே சரணம்

4. ஏதேன் ஏதும் இல்லா சரணம்
இறையே நிறையே மறையே சரணம்
என்னாண்டவனே எனை மீண்டவனே
ஏசுநாதா சரணம் சரணம்

**330. இராகம் (மாட்சி மிகும் மோட்ச நகர்)**

**நாதனேசு நலமிந்த திறவுகோலாமே – இந்த**
வேதமென்னும் மாளிகையை திறந்திடுவோமே

2. எத்தியோப்பா மந்திரியும் ஏற்றுக்கொண்டானே – அவன்
நித்தியமாய் ஜீவ வழி தேடிக்கொண்டானே

3. தங்கமான திறவுகோலை நாம் பெறுவோமே – அதோ
பொங்குமகிழ் தேரேறி பறந்திடுவோமே

**331.**

**பல்லவி**

**என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்**
என்ன சந்தோஷம் என்ன சந்தோஷம்

**அனுபல்லவி**

மணவாட்டியின் பாட்டைக் கேட்டால் என்ன சந்தோஷமே

1. என்ன வினோதமே அண்டி வந்து பாருமே
அண்ணலுக்குகந்ததோர் கன்னிகையின் ரூபமே
மின்னல் போலிலங்கிடுதே விண்ணிலழகுடனே – என்ன

2. மன்னனோடு மகிழுவோம் மனையிலேறி வாழுவோம்
கன்னியர்கள் யாவரும் காதலனைக் காணுவோம்
அன்னையோடு அனந்தகாலம் அழிவில்லாதிருப்போம்
– என்ன

3. பெருகுதே பேரின்பமே பேதை கட்கு இன்றுமே
பேருலகில் யாவுமே வீணதாகத் தோணுதே
மேலுலகில் உண் டெமக்கு என்ன பேரின்பமே – என்ன

4. ஆகா இது அதிசயம் அளவில்லாத பரவசம்
சாவில்லாத நித்தியம் நாமுமரசாளுவோம்
பாவமணுகாத பாலன் சாயலணந்திடுவோம் – என்ன

332.

**கண்ணுக்கு காணும் பூவுமல்ல – அது**
மண்ணில் முளைத்திடும் பூவுமல்ல – இந்த
மாதர்கள் அணிந்திடும் பூவுமல்ல – அது 'அன்பு'

2. பலபூக்களில் எழும்பும் வாசமல்ல – அது
பன்னீரால் உண்டாகும் வாசமல்ல – இந்த
பாவையர்கள் தெளித்திடும் வாசமல்ல – அது 'விசுவாசம்'

3. காகிதத்தில் எழுதும் மையுமல்ல – அது
கண்ணுக்கழகிடும் மையுமல்ல – இந்த
காதலரை மயக்கிடும் மையுமல்ல – அது 'பொறுமை'

4. சாஸ்திரத்தில் எழுதும் தானமல்ல – அது
சண்டைக்கு முந்திடும் தானமல்ல – அது
சிறப்புடன் செய்திடும் தானமல்ல – அது 'சமதானம்'

5. ஜாதி வினையால் வரும் தோஷமல்ல – அது
சாத்தானால் உண்டாகும் தோஷமல்ல – அது
சகலரால் உண்டாகும் தோஷமல்ல – அது 'சந்தோஷம்'

333.

**பல்லவி**

**காணக்கிடைக்காத தங்கம் – இவர்**
மானுவேலாய் வந்தவதரித்தார் – துங்கம்

1. கண்களினால் காணக்கிடையாத காட்சி
கண்டோம் நாங்கள் களிகொண்டோ மின்று மாட்சி – காண

2. மட்டில்லா கிருபையால் மனுக்களை மீட்க
கொட்டிலில் இவரோர் குழந்தை வடிவானார் – காண

3. வானதூதன் சொன்ன ஞான தேசிகரை
ஊனக்கண்ணால் கண்டு உள்ளம் மகிழ்வோமே – காண

4. பாலும் தயிர் வெண்ணெய் பாகும் படைத்து நாம்
பாதம் பணிந்து பண்பாடி துதி செய்வோம் – காண

**334.**

**பல்லவி**

**மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே**

1. மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
அத்தனுக்கத்தனாய் ஆபிராம் தேவ நீ – மங்கள

2. மணமகன் ..............................
மாது ..................................
மானுவேலர்க்கும் மகானுபவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே உனைத்
துத்தியம் செய்திடும் சத்தியவேதர்க்கும் – மங்களம்

3. சங்கை நித்திய நாதனும் நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
இத்தரை இத்திரு மணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே
–மங்களம்

**335.**

**ஏசு சீக்கிரம் வரப்போகிறார்**
மாசில்லாதோர் ஆகாயத்தில் மறைந்தே போவார்

2. கிரியைகளுக்கோ கிரீடங்களே
மரியின் கைந்தனுக்கோ மகுடமாமே

3. அடக்க மாயோடினோர்க் கழியாக்கிரீடம்
ஜீவனை கொடுத்தவர்க்கு ஜீவ கிரீடம்

4. ஆத்துமாதாயஞ் செய்தோர்க்கு ஆனந்த கிரீடம்
மந்தை மேய்த்தவர்களுக்கோ மகிமைக் கிரீடம்

5. பிரசன்னத்தை வாஞ்சிப்போர்க்கு நீதியின் கிரீடம்
பின்னால் விடப்படுவோர்க்கு நித்திய தண்டனை

6. அன்று போன இயேசு இன்று வந்தாலோ
நன்று என்று ஒன்று மின்றியே ஏகுவாயோ

7. அவரை ரட்சகராய் ஏற்றுக்கொண்டாலோ
அல்லேலூயா பாடிக்கொண்டே ஏகிடுவாயே

**336.**

**ஏசு ராஜன் வருவார் தூதரோடும் வருவார்**
பக்தரை வானத்தில் சேர்த்திடவே – நான்
ஜோதியாய் அவர் முகம் கண்டிடுவேன் – பின்னும்
ஜெய கெம்பீரம் கொண்டுளம் பொங்கிடுமே – ஏசு

2. மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய் கவி சாற்றிடுமே அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் – அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம் – ஏசு

3. முத்திரையிட்ட சுத்தர்கள் வெள்ளை அங்கி தரித்து
கர்த்தர் சமூகத்தில் நின்றிடுவார் – அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் – அன்று
பொற்கிரீடம் தரித்தாடிடுவேன் – ஏசு

4. காதலித்தேன் நான் காசினியின் இன்பம் விட்டு
கர்த்தரோடென்று முறவாடிட – அங்கு
கனக மணவறை ஜொலித்திடுமே – அப்போ
கர்த்தரால் யேசுவில் சுகிப்போம் – ஏசு

5. வானத்தின் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் – அப்போ
அத்தனின் கலியாண விருந்ததிலே – நாமும்
நித்தம் அவரோடார்ப்பரிப்போமே – ஏசு

337.

**பல்லவி**

**மேக மீதில் ஏசு சுவாமி வேகம் வாராரே**

**அனுபல்லவி**

ஆயத்தமுள்ளோரை ஆகாயஞ்சேர்க்க
அவர் வாராரே

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வாராரே
மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார் – மேக மீதில்

2. கிறிஸ்துவுக்குள் மரித்தோ ரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்த ரெல்லாம்
மறைந்தே போவாரே – மேக மீதில்

3. பாடுபட்டோருக்கு பலனளிப்பாரே
பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனையே
கூவியே கொடுத்திடுவார் – மேக மீதில்

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே
அவர் வரும் வேளையை எவருமறியார்
ஆண்டவரேயறிவார் – மேக மீதில்

5. ஆயிரவருஷம் ஆளுகை செய்வார்
ஆண்டவர் ஏசு தாமே
நீதி சமாதானம் நிறைந்தேயிருக்கும்
ஜோதியின் ஆளுகையில் – மேக மீதில்

6. அல்லேலூயா கீதமே பாடி
அகமகிழ்ந்தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையுமிதோ
மெல்லவே நெருங்கிற்றே – மேக மீதில்

**338.**

**பல்லவி**

**எந்தன் ஆத்ம நேசர் எங்கே**

**அனுபல்லவி**

அவர் எங்கே – எவர் எங்கே
அவர் எங்கே, எங்கே எங்கே – எந்தன்

1. நகரத்தின் தெருவீதி சென்று
நான் நலமுடன் தேடினேன் நின்று
ஐயோ தேடியும் காணாமல் நின்று
முகம் வாடி மயங்குகிறேன் நின்று – எந்தன்

2. காட்டு மரங்களில் தானும்
நல்ல கிச்சிலி மரம் போல தோணும்
நல்ல குமாரருக்குள்ளே இவர் தானும்
குடியிருப்பது போலவே தோணும் – எந்தன்

3. பதினாயிரம் பேரில் சிறந்தோர்
அதி வெண்மை சிவப்பு நிறமானோர்
தலை பொன்மயமாய் விளங்கிடுமே
மயிர் சுருள் சுருளாய் இருப்பவரே – எந்தன்

4. லீபனோன் போலவர் ரூபம்
மிக மதுரமவர்வாயின் வசனம்
லீலிபுஷ்பங்கள் போன்ற வருதட்டில்
நின்று வாசனை, வெள்ளைப்போளம் விடியும் – எந்தன்

5. இடது கை என் தலைகீழ் வைத்து
அவர் வலது கையா லரவணைத்து
என்னை மனதாய் அணைத்துக்கொள்வதாலே
நான் சோகமடையேன் நேசத்தாலே – எந்தன்

339.

**தொண்டு செய்வேன் என்றும்**

தொண்டு செய்வேன் என்றும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

**அனுபல்லவி**

அவர் அழைப்பை அனுசரித்து
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே

1. வீடானாலும், காடானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

2. கந்தையானாலும், நிந்தையானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

3. அடியானாலும், மிதியானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

4. மழையானாலும், வெயிலானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

5. துன்பமானாலும் இன்பமானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

6. தனித்தானாலும் கூட்டமானாலும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே – தொண்டு

340.

**பல்லவி**

**தோத்திரம் பாடிப் போற்றுவேன்**
தோத்திரம் ஏசு ராஜனுக்கே
ஆதியும் அந்தமுமில்லோனே
அரூபனே உமக்கென்றும் தோத்திரம்

**அனுபல்லவி**

அல்லேலூயா அல்லேலூயா
பொற்கரனே ஒமேகாவே

1. பொன்னகர் மன்னன் புவி வந்தாரே
புல்லணை மீதிலே ஸ்தோத்திரம்
பட்சமுற்ற எந்தன் பாவந்தீர்த்த
பெத்தலே வாசனே தோத்திரம் - அல்லேலூயா

3. மாயமாம் உலகை மறந்த நானும்
மன்னவா உன் அன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர் தாரணியில்
மனுவான அன்புக்காய் தோத்திரம் - அல்லேலூயா

4. மங்களமே சீயோன் மணாளா
மாறாத பூரண சீராளா
மங்கிடா நித்திய வாசனே
மாசற்ற அன்புக்காய் தோத்திரம் - அல்லேலூயா

5. அமரர் போற்றும் அழகுள்ளோனே
அரூபியே சொரூபியே தோத்திரம்
அளியும் ஆதி அன்பையே
வழியில் விரைந்து செல்லவே - அல்லேலூயா

**341.**

**பல்லவி**

**தேவாதி தேவனுக்கும் தேவ குமாரனுக்கும்**
தேவாவியானவர்க்கும் மங்களம்

**அனுபல்லவி**

பாடுவோம் துதி பாடுவோம் என்தன்

1. திரிலோக நாதனுக்கும் ஜெக பரிபாலனுக்கும்
தேற்றர வாளனுக்கும் மங்களம் – பாடுவோம்

2. வானாதி வானனுக்கும் வல்ல கிறிஸ்துவுக்கும்
வரம் அருள் சுத்தாவியர்க்கும் மங்களம் – பாடுவோம்

3. திரியேக தேவனுக்கும் தேவ திருசேயனுக்கும்
தேவாவியானவர்க்கும் மங்களம் – பாடுவோம்

4. ஆதி அந்தமில்லானுக்கும் ஆட்டுக்குட்டியானவர்க்கும்
அசரீரியானவர்க்கும் மங்களம் – பாடுவோம்

5. ஆட்டுக்குட்டியாமவர்க்கும் அருமைப்பிதாவானவர்க்கும்
அன்பருள் வசிப்பவர்க்கும் மங்களம் – பாடுவோம்

**342.**

**பல்லவி**

**தொழுகிறோம் எங்கள் பிதாவே**
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

**அனுபல்லவி**

பரிசுத்த அலங்காரத்துடனே,
தரிசிப்பதினால் சரணம் சரணம்

1. வெண்மையும் சிவப்புமானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் – தொழுகிறோம்

2. தலை தங்கமயமானவர்
தலைமயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினாயிரமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

3. கண்கள் புறாக் கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்ததாலே
எண்ணில்லாத சரணம் சரணம் - தொழுகிறோம்

4. கரங்கள் பொன்வளையல்கள் போல
நிறங்களும் தந்தத்தைப்போல
கால்களும் கல் தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் - தொழுகிறோம்

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதானம் எம்மூலைக்கல்லே
ஏராளமாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடிவந்த எம் அலங்காரம்
கோடாகோடியாம் சரணம் சரணம் - தொழுகிறோம்

7. பார்த்திபனே கனதோத்திரம்
கீர்த்தனம் மங்களம் தோத்திரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென், ஆமென் - தொழுகிறோம்

**343. இராகம் கம்போதி** **சாப்பு தாளம்**

**பல்லவி**

**அத்தனே உன் திருநாமத்துக் கொத்தருசிவேறதுண்டோ**
எத்துணையேனும் எனக்கு ஈவாய்

**அனுபல்லவி**

நித்தம் நித்தம் தூதர் திரள் துத்தியம் செய்தே பணியும்
சுத்தனே சுயாதிபா நல் கர்த்தனே என் ஆவல் தீர

1. நேச விசுவாசிகளின் பேசவரிதான இன்பம்
யேசுவென்ற பேரல்லலால் வேறெது
தாசன் தாவீதாசையோ தேடி ருசி பார்க்கச் சொன்னான்
தேசமெங்கும் அந்த நாம தேயத்ததைப்போல் நாமமில்லை
– அத்தனே

2. ஆரமது மணமுமிஞ்சி நாறுமே ஓர் வேளை நஞ்சே
ஆகுமோ தின் நாமம் ருசி ஆகா
தேனுமது சுவை ருசியை செப்பிடினுமதற்கொப்பாமோ
சேவடி தாழ்ந்தேனுனது சித்தமிரங்காயென் மீது – அத்தனே

3. தப்பிதந்தான் பல செய்யினும் அப்புறம் தள்ளாமலெனை
ஒப்பமாய் நின் கிருபையினால் சேர்த்தாய்
இப்பேர் ஜீவபானம் அப்பமும் அருள்வேனென்று நீரே
செப்பினதைக் கேட்டு மனமற்றிருப்ப தெனதுமப்போ
– அத்தனே

4. வருத்தமுற்ற பாவியே உன் பெருத்த பாவச் சுமையை
என்னில்
வைத்து இளைப்பாறி வசி என்றார்
பெருத்த உந்தன் கருணைக்கேதுசெயத் தகுந்தோன்
பேதைமீது
உருத்துள்ளவா ஆருயிரைக் கொடுத்தருளினாயாதலாலே
– அத்தனே

**344.**

**பல்லவி**

**கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி**
கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

### அனுபல்லவி

சேற்றிலிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக்கொண்டாரே தேவசுதன்

1. பாவியை மீட்க பரன் சித்தங்கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ் வேழையைத் தேடிவந்தாரே
பாதம் பணிந்தேன் பதில் ஏது முண்டோ? – பூவுலகில்

2. தேவனின் சித்தம் செய்யும்படியாய்
தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங்கொண்டாலும்
தம்மைப் பலியாய் தத்தம் செய்தாரே – எந்தனுக்காய்

3. ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடு வராது காக்கும் நம் மீட்பர்
இன்று மென்மேலே வைத்த நேசத்தால்
என்றென்றும் நன்றி கூறித் துதிப்பேன் – இறையவனை

4. தாவீது கோத்திர சிங்கமாய்வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்துக்கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக் குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் – நித்தியமாய்

5. குயவனின் கையில் களிமண்ணைப்போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக்
காத்துக்கொள்ளும்படி கருணைகூர் ஐயா–ஏழையென்னை

345.

**பல்லவி**

**வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி**

வாழ்த்துகிறேன் இக்காலையிலே

**அனுபல்லவி**

அற்புதமாய் இராமுழுவதும் அடியேனைக் காத்தீரே – வாழ்

1. உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இராமுழுவதும்
உமது கரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும் –வாழ்

2. நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர் –வாழ்

3. பலவிதமாம் சோதனைகள் எமைச் சூழ வந்திருந்தும்
ஒன்றும் எமை அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர் –வாழ்

4. சந்திப்பீரே இக்காலைதனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் பகல் முழுதும் ஆவிக்குள் யான் பிழைக்க –வாழ்

5. தந்திடுவீர் அபிஷேகம் புதிதாக இப்புது நாளில்
நடத்திடுவீர் ஆவியினால் உமது திருச்சித்தமதில் –வாழ்

6. பாவமென்றும் அணுகிடாமல் பரிசுத்தமாம் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும் ஜெப ஆவியுடன் –வாழ்

7. படைக்கிறேன் என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும் கையும் காலுமாக –வாழ்

8. செய்வேன்யான் எப்பொழுதும் உம்சித்தமே ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண் வார்த்தை பேசிடுவேன் உம்வாக்கை–வாழ்

9. எனைக் காண்போர் உம்மைக்காண உம்சாயல் எனில் வேண்டும்
தந்திடுவீர் தாழ்மையும் பொறுமையுடன் அன்புமாக –வாழ்

10. நேசரே உம்திரு வருகை இந்நாளிலிருந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் வைத்துக்கொள்ளும்–வாழ்

346.

**இன்பக்கானானுக்குள் ஏழை செல்ல**
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்

2. பரம சுகங்களின் இனியரசம்
பரமேசனொடுயான் பானம் செய்வேன்

3. பரமபிதா வெந்தன் கண்ணினின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்

4. சத்துருசேனைகள் அங்கே இல்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே

5. தேவாட்டுக்குட்டியின் திருமனைவி
சிறப்புடனிலங்கிடும் தேசமது

6. கேரூபின் சேராபின் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே

7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்கலோக நாட்டுக்கோர் இணையில்லையே

8. பரிசுத்த ஆவியின் பளிங்குநதி
பளபவென்றொழுகிடும் தேசமது

9. ஜீவவிருட்சமங்காற்றருகில்
மாதந்தோறும் புதுக்கனித் தருமே

10. நவரத்ன நிர்மிதபட்டணத்தில்
இராப்பகல் சூரியன் யேசுதானே

347.

**பல்லவி**

**ஜெகமதிலுதித்த ஜெய ஜோதியே – நரர்**
சேயர்கள் துதித்திடும் திருவடியே

**அனுபல்லவி**

பாரில் பரனாக நீயே; பாவிகட்காய் பரிவானாய்
அன்பால் எம்மை ஆட்கொண்டோனே – அதிரூப
சுந்தரனே

1. பாவ இருள் நீக்கப்பாரினிலே – பரன்
பாவிகள் பவம்போக்க பலியானீரோ?
சாபத்தை முற்றும் தொலைத்திடவே சக்தியாக
உயிர்த்திட்டீரோ
அரூபா, சொரூபா அற்புதனே, ஆனந்த பொற்பரனே
– ஜெக

2. எந்தனின் நீதியெல்லாம் கந்தை அல்லோ – நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே
அன்பே ஆனந்தப்பேரொளியே, ஆதியந்தம் இல்லாப்
பரனே
கதியே, நிதியே, கருணாகரா, காத்திடும் புகலிடமே – ஜெக

3. ஏழை என்னில் தாகம் கொண்டதாலே – எழில்
ஏகனே எனக்குத் திவ்ய ஆதாரமே
சோகமிஞ்சி வாடுறேனையா தாகமானேன்
இத்தரணிதனில்
காசினியில் நேசரைப்போல் காணுவேனோ, கன்னியரின்
காதலரே – ஜெக

4. எப்போ உம்மைக்கண்டு மகிழ்ந்திடுவேன் – அண்ணல்
ஏசுவே இன்பமான மணாளனே
கண்மலை வெடிப்பில் தங்குமென் உத்தமியே
என்றழைக்கும் சத்தம்
கேட்கும் கீதம் ஆ இன்பமே, கூறிடாயோ அன்பரே – ஜெக

348.

**பல்லவி**

**ஆனந்தமே பரமானந்தமே – இயேசு**
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

1. இந்தப்புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டு துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் – ஆனந்தமே

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்யகோட்டையே
காரணமின்றி கலங்கேனேயான்
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே – ஆனந்தமே

3. என்னுள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்?
கண்ணீரின் பள்ளத்தாக்கல்லோ இது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்று நாம்
ஜெயகீதம்பாடி மகிழ்ந்திடலாம் – ஆனந்தமே

4. கூடார வாசிகளான நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ – ஆனந்தமே

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை
தொண்டர் எமை அண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையை
துன்பத்தினூடே அனுப்பிடுவார் – ஆனந்தமே

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய் கலங்குகிறேனே
என் நேசர் தன் முக ஜோதியே யல்லாமல்
இன்பம் தரும் பொருள் ஏதுமில்லை – ஆனந்தமே

349.

**பல்லவி**

**உன்னத வீட்டை சீக்கிரம் சென்று**
அன்பரைச் சேர்ந்திடுவேன் ஆ ஆ
இயேசு ரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்திடுவார்

2. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட
தேவனைப் போற்றிடுவேன் ஆ ஆ
கமிழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் அயர்ந்திடுவேன்

3. வானோர்கள் பல பல ஊழியம் செய்ய
ஏழையும் சேர்ந்துகொள்வேன் ஆ ஆ
என் ஏசுவின் துதியை நாவினால் பாடிட
நேசரால் அகமகிழ்வேன்

4. பளிங்கு நதியின் ஓரங்களில் நான்
ஓடி உலாவிடுவேன் ஆ ஆ
பொன் வீதியில் நானும் அன்பருடனே
கவியுடன் அடியெடுப்பேன்

5. மிதமிஞ்சி சோதனை எதிரிட்டு வந்தாலும்
ஒன்றுக்கும் அஞ்சமாட்டேன் ஆ ஆ
சிங்கம் புதரினின் றேகியே எதிர்க்கினும்
அத்தனையும் ஜெயித்திடுவேன்

6. பறவைகள் அதிகம் விருட்சங்கள் அதிகம்
நானும் அங்கே உண்டு ஆ ஆ
பாராபரன் தாமே எனக்காகச் சேர்த்த
பொருட்களும் மெத்த உண்டு

7. பேதுரு யோவான் பவுலும் கூட
அங்கே ஓய்ந்திருப்பார் ஆ ஆ
என் ஏசுவின் வீட்டில் மகாபெரும் இன்பம்
ஆ ஆ ஆனந்தம்

8. ஆறுநாள் உலகை அழகாய் படைத்து
ஏழினில் ஓய்ந்திருந்தார் ஆ ஆ
ஆறுவேன் தேறுவேன் ஆர்ப்பரிப்புடனே
அன்பரில் அகமகிழ்வேன்

**350.**

**பல்லவி**

**அல்லேலூயா தேவனை அவருடைய**
பரிசுத்த ஆலயத்தில் அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள், என்றும் அவரைத் துதியுங்கள்

**அனுபல்லவி**

வல்லமை விளங்கும் வானத்தைப் பார்த்து
வல்லமை நிறைந்த கிரியைகளுக்காக
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அவரைத் துதியுங்கள் – என்றும் அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள்

2. மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காய்
எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள் என்றும் அவரைத் துதியுங்கள்

வீணை சுரமண்டலம் தம்புரு நடனத்தோடும்
யாழோடும், குழலோடும் ஏக தாளத்தோடும்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அவரைத் துதியுங்கள்; என்றும் அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள்

skrajann@gmail.com